# மனித நற்பண்புகள் வளர்ப்பு



## IMCTF PATRON

**Pujya Swami Dayananda Saraswati**
Founder, Arsha Vidya Gurukulam

## IMCTF ADVISORY COMMITTEE

Chairperson

**Sri. S. Gurumurthy,** FCA
Original Thinker, Well-known writer, Corporate Advisor,
Visiting faculty IIT, Bombay, Distinguished Professor, SASTRA University.

Vice Chairpersons

**Dr. Selvi Padma Subrahmanyam**
Scholar & Artiste

**Dr. Sri. T.K. Parthasarathy**
Pro-Chancellor, SRMC University,
President, Bharateeya Vidya Bhavan,

Members

**Dr. Smt. Y.G.Parthasarathy**
Dean, Padma Seshadri Group of Schools

**Dr. Sri. Vaidhyasubramaniam**
Vice Chancellor, SASTRA University

**Dr. Sri. M.D.Srinivas,**
Director, Centre for Policy Studies

**Sri. Kailashmull Dugar,**
President, Sri Jain Medical society

**N.C. Sridharan,**
Correspondent, R.M.Jain Vidyashram, Thiruvallur

**Sri. Gopal Srinivasan**
Managing Director, TVS Group

**Dr. Smt. Jaya Venugopal**
Educationist

**Dr. Sri. S.Muthukumaran,**
Former Vice Chancellor, Bharati Dasan University

**Dr. Sri. A. Kanakaraj,**
Founder Chairman, Jaya Group of Educational Institutions

**Prof. K.Varadarajan,**
Economist, Director, Centre for Civilisation Studies

**Sri. Jayadev**
General Secretary, Tamilnadu Arya Samaj Educational Society

**Sri. P. Haridas**
Senior Advocate

## IMCTF TRUSTEES

Chairman

**Sri. Rajesh Malhotra**
Business, Secretary, Punjab Association Group of Schools

Managing Trustee

**Smt. R. Rajalakshmi**
Business, Trustee, Hindu Spiritual Service Foundation

Secretary

**Sri. K. Prabhakar,** FCA

Trustees

**Dr. Smt. Thangam Meganathan**
Chairperson, Rajalakshmi Educational Institutions

**Sri. T. Chakravarthy**
Secretary, Vivekananda Educational Society, President, Vidya Bharathi

**Dr. Sri. Nandakumar R Dave**
Sanskrit Scholar & Educationist

**Sri. S.Varadarajan**
Correspondent & Secretary, Dayananda Anglo Vedic Schools

**Smt. Arthi Ganesh**
Pro Chancellor, Vels University

**Sri. M.Namasivayam**
Senior Principal, Maharishi Group of Schools

**Sri. S. Viswanathan**
Secretary, Sankara Eye Hospital, Pammal

**Sri. P. Ganapathy**
Business

பண்பு மற்றும் கலாச்சார
பயிற்சி முனைவு அறக்கட்டளை [IMCTF]

# மனித நற்பண்புகள் வளர்ப்பு

## Personality Development

# விவரப்பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மனித நற்பண்புகள் வளர்ப்பு |
| பதிப்பு | : | 2015 |
| பக்கங்கள் | : | 232 |
| நூல் வடிவம் | : | டெம்மி 1/8 |
| வெளியீடு | : | **பண்பு மற்றும் கலாச்சார பயிற்சி முனைவு அறக்கட்டளை**<br>தலைமை அலுவலகம் :<br>4வது மாடி, கனேஷ் டவர்ஸ்,<br>152, லஸ் சர்ச் ரோடு,<br>மைலாப்பூர், சென்னை - 600 004<br><br>நிர்வாக அலுவலகம் :<br>2வது மாடி, “கார்கி”,<br>புதிய எண் : 6 (பழைய எண்: 20)<br>பாலையா அவென்யு, மைலாப்பூர்,<br>சென்னை-600 004 |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ்<br>சென்னை-83 |

# மனித நற்பண்புகள் வளர்ப்பு
## Personality Development

பொருளடக்கம்

வகுப்பு - I

1. ஆத்திசூடி ............ 15
2. நீதி நூல்கள் ............ 15
3. ஔவைக் குறள் ............ 15
4. திருக்குறள் ............ 15
5. மாதங்கள் பெயர்கள் ............ 16
6. வாரங்கள் பெயர்கள ............ 16
7. கதை ............ 16
8. வாகனங்கள் ............ 17
9. பழமொழிகள் ............ 155
10. விடுகதைகள் ............ 175

வகுப்பு - II

1. ஆத்திசூடி ............ 18
2. திருக்குறள் ............ 19
3. ராசிகள் ............ 19
4. நட்சத்திரங்கள் பெயர்கள் ............ 19
5. விலங்குகள் பெயர்கள் ............ 20
6. வாகனங்கள் ............ 20
7. பசு பற்றி 50 தகவல்கள் ............ 23
8. பழமொழிகள் ............ 156
9. விடுகதைகள் ............ 178

வகுப்பு - III

1. நீதி நூல்கள் ............ 27
2. திருக்குறள் ............ 27
3. மரங்கள் பெயர்கள் ............ 27
4. தாவரங்கள் பெயர்கள் ............ 28
5. பறவைகள் பெயர்கள் ............ 29
6. வாகனங்கள் - ............ 30
7. பழமொழிகள் ............ 158
8. விடுகதைகள் ............ 184

வகுப்பு - IV

1. நீதி நூல்கள் ............ 33
2. திருக்குறள் ............ 33
3. பாரதியார் கவிதைகள் ............ 34

4. உலக நீதி ........ 35
5. பஞ்ச பூதங்கள் ........ 35
6. ஆறுகள் ........ 35
7. கதை ........ 36
8. வாகனங்கள் ........ 36
9. பழமொழிகள் ........ 159
10. விடுகதைகள் ........ 190

வகுப்பு - V

1. நீதி நூல்கள் ........ 38
2. திருக்குறள் ........ 38
3. உலக நீதி ........ 38
4. பாரதியார் பாடல்கள் ........ 39
5. பூக்கள் பெயர்கள் ........ 40
6. பழங்கள் பெயர்கள் ........ 42
7. மூதுரை அல்லது வாக்குண்டாம் ........ 42
8. கதை ........ 42
9. வாகனங்கள் ........ 43
10. பழமொழிகள் ........ 161
11. விடுகதைகள் ........ 199

வகுப்பு - VI

1. ஆத்திசூடி ........ 45
2. நீதி நூல்கள் ........ 45
3. ஐம்பெருங்காப்பியங்கள் ........ 45
4. பாரதியார் கவிதைகள் ........ 45
5. பாரதிதாசன் கவிதைகள் ........ 47
6. திருக்குறள் ........ 47
7. வேதங்கள் ........ 48
8. மூதுரை அல்லது வாக்குண்டாம் ........ 48
9. வாகனங்கள் ........ 48
10. பழமொழிகள் ........ 163
11. விடுகதைகள் ........ 202

வகுப்பு - VII

1. நீதி நூல்கள் ........ 50
2. ஐம்பெருங்காப்பியங்கள் ........ 50
3. பதினெண் கீழ்க்கணக்கு ........ 51
4. திருக்குறள் ........ 51
5. பாரதியார் பாடல்கள் ........ 53
6. எட்டுத்தொகை ........ 55

7. மூதுரை அல்லது வாக்குண்டாம் ........ 58
8. சிரஞ்சீவிகள் ........ 58
9. கதை ........ 59
10. வாகனங்கள் ........ 62
11. பழமொழிகள் ........ 163
12. விடுகதைகள் ........ 204

வகுப்பு - VIII

1. ஐஞ்சிறுங் காப்பியங்கள் ........ 64
2. திருக்குறள் ........ 65
3. கலிங்கத்துப் பரணி ........ 66
4. அரிச்சந்திரபுராணம் ........ 67
5. பத்துப்பாட்டு ........ 67
6. ஐம்பெருங்காப்பியங்கள் ........ 68
7. பாரதியார் பாடல்கள் ........ 70
8. எட்டுத்தொகை ........ 72
9. முத்தொள்ளாயிரம் ........ 74
10. நவரத்தினம் (நவமணிகள்) ........ 74
11. மூதுரை அல்லது வாக்குண்டாம் ........ 74
12. கதை ........ 74
13. வாகனங்கள் ........ 87
14. பழமொழிகள் ........ 166
15. விடுகதைகள் ........ 205

வகுப்பு - IX

1. கலிங்கத்துப் பரணி ........ 97
2. திருக்குறள் ........ 97
3. ஐம்பெருங்காப்பியங்கள் ........ 98
4. அரிச்சந்திரபுராணம் ........ 98
5. ஐஞ்சிறுங் காப்பியங்கள் ........ 98
6. பதினெண் கீழ்க்கணக்கு ........ 100
7. பத்துப்பாட்டு ........ 100
8. எட்டுத்தொகை ........ 102
9. பாரதியார் கவிதைகள் ........ 105
10. மூதுரை அல்லது வாக்குண்டாம் ........ 111
11. வாகனங்கள் ........ 111
12. பழமொழிகள் ........ 169
13. விடுகதைகள் ........ 209

வகுப்பு - X


1. ஐஞ்சிறுங் காப்பியங்கள் ........ 114
2. கலிங்கத்துப் பரணி ........ 115
3. திருக்குறள் ........ 115
4. ஐம்பெருங்காப்பியங்கள் ........ 116
5. பத்துப்பாட்டு ........ 117
6. பாரதியார் கவிதைகள் ........ 122
7. எட்டுத்தொகை ........ 126
8. நன்னெறி ........ 129
9. வெற்றிவேற்கை ........ 129
10. மூதுரை அல்லது வாக்குண்டாம் ........ 129
11. கதை ........ 130
12. வாகனங்கள் ........ 132
13. பழமொழிகள் ........ 170
14. விடுகதைகள் ........ 213


வகுப்பு - XI


1. ஐஞ்சிறுங் காப்பியங்கள் ........ 134
2. நீதி நூல்கள் ........ 135
3. ஐம்பெருங்காப்பியங்கள் ........ 135
4. பதினெண் கீழ்க்கணக்கு ........ 136
5. எட்டுத்தொகை ........ 136
6. மங்கையர்க்கரசியார் புராணம் ........ 137
7. பாரதியார் கவிதைகள் ........ 138
8. திருக்குறள் ........ 139
9. சப்தமாதர் ........ 140
10. கதை ........ 141
11. வாகனங்கள் ........ 143
12. பழமொழிகள் ........ 172
13. விடுகதைகள் ........ 221


வகுப்பு - XII


1. ஐஞ்சிறுங் காப்பியங்கள் ........ 145
2. கலிங்கத்துப் பரணி ........ 145
3. நீதி நூல்கள் ........ 146
4. பாரதியார் கவிதைகள் ........ 146
5. எட்டுத்தொகை ........ 148
6. திருக்குறள் ........ 149
7. 63 நாயன்மார்கள் ........ 151
8. ஆழ்வார்கள் ........ 153
9. வாகனங்கள் ........ 153
10. பழமொழிகள் ........ 174
11. விடுகதைகள் ........ 226

# நன்றி! நன்றி!! நன்றி!!

நம் பாரத நாட்டின் புராதன ஆன்மிக கலாச்சார நூல்களிலிருந்து வனம் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாத்தல், ஜீவராசிகளைப் பேணுதல். சுற்றுச்சூழலைப் பராமரித்தல், பெற்றோர் ஆசிரியர் மற்றும் பெரியோர்களை வணங்குதல். பெண்மையைப் போற்றுதல், நாட்டுப்பற்றை வளர்த்தல் போன்ற ஆறு அருங்குணங்களை அடிப்படையாகக் கொண்டு பண்புப் பயிற்சியளிக்கும் போட்டிகளையும் விளையாட்டுகளையும், தன்னலமில்லால், தானாகவே முன்வந்து, திரட்டித் தயாரித்தளித்த பண்பு மற்றும் கலாச்சார முனைவு மைய அறக்கட்டளை [IMCTF] அறங்காவலர்கள், மேலும் அறக்கட்டளையின் அமைப்புக் குழு உறுப்பினர்களுக்கும், கல்விக் கூடங்களுக்கும், ஆசிரியர்களுக்கும், வித்வான்களுக்கும் அறக்கட்டளை தன்னுடைய மனமார்ந்த நன்றியைப் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறது. இந்த புத்தகங்கள் எட்டு பாகங்களைக் கொண்டது.

இந்த எட்டு பகுதிகளுடனும், IMCTF அமைப்பின் ஆறு அறுங்குணங்களை விளக்கும் ஆறு புத்தகங்களையும் அமைப்பின் ஆலோசனைக் குழு மறு தயாரிப்பு செய்து புதுப் பதிவு செய்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்ளுகிறோம்.

அந்த ஆறு அருங்குணங்களை மாணவர்கள் விளையாட்டின் மூலமாகவும், போட்டிகளின் மூலமாகவும் மாணவ மாணவிகள் மனிதில் ஆழ்ந்து பதிவு செய்ய, அவர்கள் வாழ்க்கை முறையின் அங்கமாக்க, நம்முடைய பாரம்பர்ய நூல்கள், இதிகாசங்கள், பண்டைய வாழ்கை முறையில் பொதிந்து கிடக்கும் கருத்துக்கள், கதைகள், முன்னுதாரணங்கள் எல்லேவற்றையும் திரட்டி எடுத்து விளையாட்டுகளையும் போட்டிகளையும் அமைத்து அதை எப்படி நடத்துவது என்பதை வடிவமைத்துக் கொடுப்பதற்கு தன்னுடைய அரங்காவலர்கள், அமைப்புக் குழு உறுப்பினர்கள், கல்விக்கூடங்கள், ஆசிரியர்கள் மற்றும் அறத்தில் நாட்டம் கொண்ட ஆன்றோர்கள் சான்றோர்களை நாடியது IMCTF அமைப்பு.

அவர்களுடைய ஒத்துழைப்பின் மூலமாக படைக்கப்பட்ட

1. தமிழிலும், 'ஹிந்தி-சம்ஸ்க்ருதத்திலும் இரு பாகங்களாக "**பக்தி**" என்கிற தலைப்பில் இரண்டு புத்தகங்கள்.
2. தமிழிலும், ஹிந்தியிலும், சம்ஸ்க்ருதத்திலும் '**மனித நற்பண்புகள் வளர்ப்பு**' என்கிற தலைப்பில் மூன்று புத்தகங்கள்.
3. ஆங்கிலத்தில் "**கலை மற்றும் கைத்திறன்**" என்கிற தலைப்பில் ஒரு புத்தகம்
4. தமிழிலும் ஆங்கிலத்திலும் "**கலாச்சாரம் மற்றும் நுண்கலை**" என்கிற இரண்டு புத்தகங்கள்.
5. ஆங்கிலத்தில் "**பாரம்பர்ய விளையாட்டுகள்**" என்கிற தலைப்பில் ஒரு புத்தகம்.

ஆகிய இந்த எட்டு புத்தகங்களை உபயோகித்து, நூற்றுக்கணக்கான கல்வி கூடங்களில், லட்சக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும் உபயோகித்து போட்டிகளிலும் விளையாட்டுகளிலும் பங்கேற்க வேண்டும், பயனடைய வேண்டும், குறிப்பாக 2016 ம் ஆண்டு நடக்கவிருக்கும் 'ஹிந்து ஆன்மிக சேவைக் கண்காட்சியில் நடக்கும் போட்டிகளிலும் விளயட்டுகளிலும் பங்கேற்க வேண்டும் எனபதே குறிக்கோள்.

அறிஞர்களையும், கலைஞர்களையும், ஆசிரியர்களையும் கொண்ட குழுவின் சலிப்பற்ற முயற்சியால் உருவானவை தான் நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட இந்த எட்டு புத்தகங்கள். அவர்கள் பல நாட்கள் உழைத்தும், நூற்றுக்கணக்கான நூல்களையும். பல ஞானிகள் மற்றும் சித்தர்களின் பாடல்களையும், படித்தும் மற்றும் கண்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்த்தியான விவரங்கள் இந்த புத்தகங்களில் அடங்கியிருக்கின்றன.

நாங்கள் எல்லொரும் அறிந்த தமிழ் அறிஞர் திரு பரசுராம் அவர்களுடைய பெரும் பங்களிப்புக்கு, குறிப்பாக "மனித நற்பண்புகள் வளர்ப்பு' என்கிற பாகத்துக்கு அவர் கொடுத்த மெருகுக்கு, நாங்கள் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

இந்த மாபெரும் பணிக்காக தங்களுடைய திறம் மிக்க ஆசிரியர்களையும் மற்றவர்களையம் அனுப்பி இந்த பணியை நல்லபடியாகவும் திறம்படவும் செய்ய உதவிய கல்விக் கூடங்களுக்கும் நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

கடைசியில், நாங்கள் இந்த பணிக்காக தங்களை அர்பணித்துக்கொண்டு தங்களுடைய எல்லா பணிகளையும் ஒதுக்கி வைத்து இந்த வேலையை நாங்கள் சிரம் சாய்க்கும்படியாக செய்து கொடுத்த கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்குழுவுக்கு நாங்கள் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது குறைவே.

1. Komala.P - Smt. Narbada Devi J. Agarwal Vivekananda Vidyalaya Junior College
2. Kanchana.V- Dayananda Anglo Vedic Group of Institutions
3. Mahalakshmi.C- Anna Adarsh Matriculation Higher Secondary School
4. Mekala- Kulapathi Dr. S. Balakrishna Joshi Gurrukulam Matriculation Hr. Sec. School
5. Muthulakshmi.K- Smt. Kasturba Nimchand Shah P. Muthyalu Chetty Vivekananda Vidyalaya Junior College
6. Padmavathi.P- Dayananda Anglo Vedic Group of Institutions

7. Prasannakumari.P- Smt. Narbada Devi J Agarwal Vivekananda Vidyalaya Junior College
8. Renukadevi - Sri Sankara Vidyalaya Matriculation Higher Secondary School
9. Sasikala.A- Dayananda Anglo Vedic Group of Institutions
10. Srikanth.T - Kulapathi Dr. S. Balakrishna Joshi Gurrukulam Matriculation Hr. Sec. School
11. Vijayalakshmi.S.S-Anna Adarsh Matriculation Higher Secondary School

IMCTF அமைப்பின் அலுவலகத்தில் பணிபுரியும்

1. K.S. Venkateswaran
2. A.V. Swamy
3. Nethravathi .G
4. Sowmiya .J

ஆகியோருக்கும் இந்த புத்தகங்களுக்கு கணினி மூலாமாக வடிவமைத்துக் கொடுத்த திரு.பிரேம்குமார் மற்றும் திரு.சிவகுமார் அவர்களுக்கும் எங்களுடைய நன்றி.

**ஆர் ராஜலக்ஷ்மி**
நிர்வாக அறங்காவலர்
IMCTF

## கருத்து சார்ந்த நற்பண்புகள் வளர்க்கும் பயிற்சி
## [thematic personality development]

வெளிப்புறத்தில் பழகும் முறையையும் [manners] உள்ளடங்கிய நற்பண்புகளாலும்

நல்ல குணங்களாலும் கனிந்த மனத்தையும் [character] ஒன்றாகப் பார்க்கும் பழக்கம் நம் நாட்டில் ஆங்கிலேய கலாச்சாரம் பரவியதால் தான் ஏற்பட்டது. மேற்கத்திய நாகரிகத்தின் காரணமாக வெளிப்புறத் தோற்றத்துக்கு மிக அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அதுவே நற்பண்புகளுக்கு அடையாளம் என்கிற அளவுக்கு வக்கிரமான சிந்தனை நம்மிடையேயும் வளர்ந்துவிட்டிருக்கிறது.

இவை இரண்டுக்கும் பெரிய அளவில் வித்தியாசம் இருக்கிறது.

முதலாவது [manners] நடை, உடை, பாவனை என்கிற வெளித் தோற்றத்தின் அடிப்படையில் அமைவது. ஒருவர் எப்படி உடை அணிகிறார்; பேசுகிறார்; நடக்கிறார்; அமர்கிறார்; உண்கிறார் -- இது போல வெளிப்பழக்கங்கள் எப்படி அமையவேண்டும் அல்லது அமைத்துக் கொள்ள வேண்டும் என்கிற கலை வெளிப்புற தோற்றத்தை மட்டுமே அடிப்பிடையாகக் கொண்டது.

அடுத்தது [character] பண்பால் வளர்ந்த, ஆழ்ந்த, மனிதனுக்குள் ளடங்கிய நற்குணங்களை அடிப்படையாகக் கொண்டது. இது ஆழ்ந்த பயிற்சியின் [samskaram] மூலமாக வளரும் பண்புகளால் மனிதனுக்குள் அமையும் தன்மை

வெளிப்புறத் தோற்றத்துக்கும், மனங்கனித்த தன்மைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ வெளிப்புறப் பழகும் கலைக்கும் [manners] உள்ளடங்கிய நற்பண்புகளுக்கும் [character] அவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. ஒருவர் நல்லவராகத் தோன்றுகிறார் என்பதற்கும் ஒருவர் நல்லவர் என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் இவை இரண்டுக்கும் இருக்கிறது.

பெரிய ஞானிகள், சித்தர்கள், பண்பாளர்கள் தோற்றத்தில் "வெளிப்புறப் பழகும் கலையில்" மாறுபட்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் நடை, உடை, பாவனை மற்றவர்களால் ஏற்கமுடியாதவையாகக் கூட இருக்கும்.

ஆனால் அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதில் யாருக்கும் சந்தேகமே இருக்க முடியாது. மாறாக பலர் வெளித் தோற்றத்தில் ஏற்கத் தகுந்தவர்களாக மட்டுமல்லாமல், அவர்களை மற்றவர்கள் பின்பற்றவேண்டும் என்றும் கூட தோன்றுகிற படியும் அவர்கள் நடப்பார்கள். அவர்களைப் பண்பாளர்கள் என்று தோற்றத்தின் அடிப்படையில் ஏற்பது தவறு. பண்பட்டவர்கள் தான் பண்பாளர்கள். பண்புப்பதிவு தான் பண்பாளர்களை உருவாக்கும். இதை மட்டுமே நற்பண்புகள் வளர்க்கும் பயிற்சி [personality development] என்று கூறலாம். நல்ல நடை உடை பாவனை அவசியம் இல்லை என்று அர்த்தம் இல்லை. ஆனால் அது வெளிதொற்றதுடன் நின்றுவிடகூடாது. அப்படி நிற்கக் கூடாது என்பதால் தான் பண்புப்பதிவுகள் ஏற்பட பயிற்சி தேவையாகிறது.

இந்த வித்தியாசம் அறியாமல் இரண்டும் ஒன்றுபோலக் கருதப்பட்டு அதன் காரணமமாக குறிப்பாக கல்வித்துறையில் பெருங்குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. வெளிப்புறத் தோற்றமே முக்கியம் என்பதும் கடந்து, வெளிப்புறத்தோற்றம் மட்டும் போதும், மற்றவர்கள் ஏற்கும் வகையில் பழகினால் போதும் என்கிற ஒரு நிலை ஏற்பட்டு அதையே பண்புப் பயிற்சியாக கல்விக்கூடங்களில் பயிற்ருவிக்கிறார்கள். இதனால் பண்புப்பதிவுகள் ஏற்பட வாய்ப்பு குறைவாகிறது.

நல்ல பண்புகள் உள்ள ஒரு குழந்தையை, ஒரு மாணவனை, மாணவியை உருவாக்குவதை மையக்கருத்தாகக் கொண்டு பண்பு மட்டும் கலாச்சாரப் பயிற்சி முனைவு மையம் [Initiative for moral and cultural Foundation] பண்புகளை வளர்க்க ஆறு வகையான அடிப்படை கருப்பொருள்களை [Theme] ஆதாரமாக வைத்து, பெரும் ஆராய்ச்சிக்குப் பிறகு, வகுத்துத் தொகுத்து வழங்குகிறது. அப்படி ஆறு வகையான கருப்பொருள்களை மையமாகக் கொண்ட பண்புகள் வளர என்னென்னெ பயிற்சிகள் தேவை என்கிற விவரம் கீழே அளிக்கப்பட்டிருக்கிறது.

## கருப் பொருள் சார்ந்த பண்புகள் அவைகளை அடையும் பயிற்சிகள்

1. **வனம்/வன விலங்குகளை பாதுகாத்தல்**
   "மரத்தை வழிபடுவது / நாக வழிபாடு
2. **ஜீவராசிகளைப் பேணுதல்**
   "பசு""யானை""துளசி" வழிபாடு
3. **சுற்றுச்சூழலைப் பராமரித்தல்**
   "கங்கை வழிபடு" "பூமி" வழிபாடு
4. **பெற்றோர்/ஆசிரியர்களை வணங்குதல்**
   "தாய்" "தந்தை" "ஆசிரியர்" வழிபாடு
5. **பெண்மையைப் போற்றுதல்**
   "கன்னி" "பெண்மை" வழிபாடு
6. **நாட்டுப்பற்றை உணர்த்துதல்**
   "பாரத மாதா" "ராணுவ வீரர்" வழிபாடு

இந்த ஆறு கருப்பொருள்கள் சார்ந்த பண்புகள் தற்காலத்துக்கேற்றவை, தேவை, என் அவசியமும் கூட. ஆனால் இந்த பண்புகளை வளர்க்க மனத்தை கனிய வைக்கும் பண்புப் பயிற்சிகள் தேவை. பாட புத்தகங்களைப் படிப்பதாலோ, உயர்ந்த பலருடைய பேருரைகளை கேட்பதலோ பண்புகள் ஏற்படாது. அறிவளவிலும் மனதளவிலும் ஏற்கப்படுவது மனிதனின் அந்தராத்மாவைத்தொடாது. மனிதனுடைய ஆன்மாவைத் தொட ஆழ்ந்த பயிற்சி தேவை. அதனை "சம்ஸ்காரம்' என்று பாரத நாட்டின் ஆன்மிக பாரம்பர்யத்தில் வழங்குவர்.

உதாரணமாக மரத்தை தெய்வமாக வணங்கும் பயிற்சியான விருக்ஷ வந்தனம் –

மரத்துக்கும் மனிதனுக்கும் ஆழ்ந்த உறவை அவனுடைய ஆன்ம அளவில் உணர்த்தி மனிதனை மரத்தை தன்னுடைய அங்கமாக பாவிக்க, கருத வைக்கிறது. ஒரு மரத்தை அழிப்பது என்பது காட்டை அழிப்பது போல என்று அவனை உணரவைத்து அவனை மரத்தை அழிப்பதை ஏற்காமல்

செய்கிறது. மரம் வளர்ப்பதை புண்ணிய செயலாக மட்டுமல்லாமல் அதை தெய்வத்தைப் போற்றும் சடங்காகவும், சமுதாயத்துக்குச் செய்யும் பணியாகவும் மாற்றுகிறது. அவன் மரத்தை மரமாகப் பார்க்காமல் தெய்வமாகவே பார்க்கும் மன நிலைக்குச் செல்கிறான்.

இது போலத் தான் பசுவாக இருந்தாலும், துளசி செடியாக இருந்தாலும், பாம்பாக இருந்தாலும், யானையாக இருந்தாலும், கங்கை நதியாக இருந்தாலும், பூமியாக இருந்தாலும், அன்னை, பிதா, ஆசிரியராக இருந்தாலும், கன்னிப்பெண்ணாக இருந்தாலும், தாய்மை அடைந்த பெண்ணாக இருந்தாலும், அது தாய் நாடக இருந்தாலும் அந்த நாட்டுக்காக உயிர் நீத்த வீரர்களாக இருந்தாலும் அவர்களை தெய்வமாக வழிபடுவதன் மூலமாக கருப் பொருள்களைச் சார்ந்த பண்புகளை ஆழ்ந்த மனதில் பதிய வைக்கிறது.

இவை எல்லாம் நவீன காலத்துக்குத்தேவையான அவசியமான பண்புகள். ஆனால் நவீன சிந்தனை முறைகளால் இந்த பண்புகள் ஏற்படாது, ஒரு மனிதனின் அந்தராத்மவுக்குள் ஊடுருவாது. இதற்கு நம்முடய ஆன்மிக நீதி நூல்கள் வழிகாட்டுகின்றன. அந்த நூல்களில் எப்படி இந்த பண்புகள் விளக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த புத்தகத்தில் தொகுத்து வழங்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த நூல்களிலிருந்தும் மற்ற மூலத்திளிருந்தும் இந்த புத்தகத்தில் தொகுக்கப்படிருக்கிறது என்பதை கீழே பார்க்கலாம்

1. ஆத்திசூடி
2. நீதி நூல்கள்
3. ஔவைக் குறள்
4. திருக்குறள்
5. பாரதியார் கவிதைகள்
6. உலக நீதி
7. மூதுரை அல்லது வாக்குண்டாம்
8. ஐம்பெருங்காப்பியங்கள்
9. பதினெண் கீழ்க்கணக்கு
10. பாரதியார் பாடல்கள்
11. எட்டுத்தொகை
12. ஐஞ்சிறுங் காப்பியங்கள்
13. கலிங்கத்துப் பரணி
14. அரிச்சந்திரபுராணம்
15. பத்துப்பாட்டு
16. முத்தொள்ளாயிரம்
17. நன்னெறி
18. வெற்றிவேற்கை
19. மங்கையர்க்கரசியார் புராணம்
20. விடுகதைகள்

21. பழமொழிகள்

22. ராமாயணம்

23. மகாபாரதம்

24 ஹிந்து மகா சமுத்திரம்

25. வாகனங்கள் – https://ta.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AE%B0%E0%AE%9A%E0%AF%81%E0%AE%B5%E0%AE%A4%E0%AE%BF

http://hinduism.about.com/od/godsgoddesses/a/vehiclesofgods.htm

26. விலங்குகள் பெயர்கள்

http://www.languagereef.com/flashcards.php?lang=Tamil&list=flashcards&vocablist=animals

http://www.tamildiction.org/subject_dictionary/general_words.php?subject=Animals&category=15

27. மரங்கள் பெயர்கள்

http://singaporeplants.blogspot.in/

http://tamilcube.com/glossaries/indian-herbs.aspx

28. தாவரங்கள் பெயர்கள்

http://alaiyallasunami.blogspot.com/2011/09/blog-post_3104.html

29. பறவைகள் பெயர்கள்

http://tamilcube.com/glossaries/indian-birds.aspx

30. பூக்கள் பெயர்கள்

http://karkanirka.org/2009/04/23/99tamilflowers_1_10/

31. பழங்கள் பெயர்கள்

http://www.aangilam.org/2008/09/list-of-fruits.html

http://www.valaitamil.com/fruits-tamil-name_2793.html

32. சிரஞ்சீவிகள்

https://drdayalan.wordpress.com/2015/07/18/hre-19-

33. கதை

https://shanthiraju.wordpress.com/2012/07/02/sri-ayyaval/

# வகுப்பு-I

## 1. ஆத்திசூடி

- பெரியாரைத் துணைக் கொள்
- தந்தை தாய்ப் பேண்

## 2. நீதி நூல்கள்

### அ. கொன்றை வேந்தன்

- தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
  தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை
- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
- மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.
- விருந்து இலோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்.
- ஏவாமக்கள் மூவா மருந்து.
- கீழோர் ஆயினும் தாழ உரை.
- மருந்தே யாயினும் விருந்தோ டுண்.

## 3. ஔவைக் குறள்

உடம்பினைப் பெற்ற பயனாவது எல்லா
உடம்பினில் உத்தமனைக் காண்

## 4. திருக்குறள்

### பொருட்பால்

### பெரியாரைத் துணைக்கோடல்

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

## மக்கட்பேறு

மகன் தந்தைக்குஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

## பெரியாரைப் பிழையாமை

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்

# 5. மாதங்கள் பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சித்திரை | 5. | ஆவணி | 9. | மார்கழி |
| 2. | வைகாசி | 6. | புரட்டாசி | 10. | தை |
| 3. | ஆனி | 7. | ஐப்பசி | 11. | மாசி |
| 4. | ஆடி | 8. | கார்த்திகை | 12. | பங்குனி |

# 6. வாரங்கள் பெயர்கள்

1. ஞாயிற்றுக் கிழமை
2. திங்கட் கிழமை
3. செவ்வாய்க் கிழமை
4. புதன் கிழமை
5. வியாழக் கிழமை
6. வெள்ளிக் கிழமை
7. சனிக் கிழமை

# 7. கதை

## குருவிடம் சீடன் பின்பற்ற வேண்டிய முறை

ப்ரம்மச்சர்யம், கிருஹஸ்தாச்ரமம், வானப்பிரஸ்தம், ஸந்யாஸம் – ஆகிய நான்கு நிலைகளில் ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்கள் பற்றி விவரித்தார் நாரதர். 'ப்ரம்மச்சாரி, தனது குருவுடன் வசித்துக் கொண்டு,

அவருக்குப் பணிவிடை செய்து வர வேண்டும். உரிய நேரங்களில் காயத்ரி மந்தரத்தை ஜபிக்க வேண்டும். குரு அழைக்கிற போது, அவரிடம் சென்று வேதங்களைக் கற்க வேண்டும். காலையிலும், மாலையிலும் பிக்ஷை எடுத்து, அதை குருவிடம் தெரிவித்து, அவர் அனுமதித்தால், அதைச் சாப்பிடலாம். குருவின் அனுமதி கிட்டாத வேளைகளில் அவன் உபவாஸம் இருக்க வேண்டும். அநாவசியமாக பெண்களுடன் பேசக் கூடாது. அழிக்கும் தன்மையை உடைய இந்த்ரியங்கள், தவ சீலர்களின் மனதைக் கூடக் கெடுக்கக் கூடியவை என்பதால், ப்ரம்மச்சாரிகள் இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

'மேலும் ப்ரம்மச்சாரி, உடலுக்கு எண்ணெய் தேய்த்துக் கொள்வது, உடலைப் பிடித்து விட்டுக் கொள்வது, மாமிசம் உண்பது, சந்தனம் பூசிக் கொள்வது, மாலை அணிந்து கொள்வது, அலங்காரம் செய்து கொள்வது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். வேதங்களைக் கற்று, அதன் அர்த்தத்தை நன்றாக உணர்ந்து, குருவிற்குத் தன்னால் இயன்ற காணிக்கையை செலுத்தி, அவரால் அனுமதிக்கப்பட்டு, அவன் இல்லறத்தை மேற்கொள்ளலாம் அல்லது வானப்ரஸ்தம், ஸந்யாஸம் ஆகிய நிலைகளையும் மேற்கொள்ளலாம்.

## 8. வாகனங்கள்

### விநாயகர் (பிள்ளையார்) – மூஞ்சூறு எலி

இசைக்கடவுளில் ஒருவரானவர் சுவர்க்க லோக கிரௌஞ்சர், ஒரு நாள் இந்திரசபையில் நுழைந்தபோது தற்செயலாக அங்கிருந்த முனி சிரேஷ்டரான முனி வாம தேவரின் பாதத்தை இடறியதால் அவர் இட்ட சாபத்தால் மூஞ்சூறாக மாறினார். கிரௌஞ்சர் தான் போகிற வழியில் தென்பட்ட பெரிய மலைகளை சேதப்படுத்திக் கொண்டு சென்றார். ஒரு சமயம் மகரிஷி பராசரர் தங்கியிருந்த ஆசிரமத்தையும் சேதப்படுத்தினார். உடன் அங்கிருந்த விநாயகர் அவருக்கு தகுந்த பாடத்தை நடத்தி, அவருக்கு ஒரு பதவியும் கொடுத்து தன் காலுக்கு கீழ் இருக்கும் ஒரு வாகனமாக அவரைப் படைத்தார். ஒரு கால கட்டத்தில் விநாயகரின் பாரம் தாங்காமல் கிரௌஞ்சர் முறையிடவே விநாயகர் தனது உடலின் பாரத்தை சுருக்கி கிரௌஞ்சரை தனது மூஞ்சூறு வாகனமாக ஏற்றுக் கொண்டார் என்பது வரலாறு.

❖❖❖❖

# வகுப்பு-II

## 1.ஆத்திசூடி

- அரவ மாட்டேல்
- காப்பது விரதம்

## 2. திருக்குறள்

### அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்? ஆர்வலர்
புன்கனீர் பூசல் தரும்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

## 3. ராசிகள்

1. மேஷம்
2. ரிஷபம்
3. மிதுனம்
4. கடகம்
5. சிம்மம்
6. கன்னி
7. துலாம்
8. விருச்சிகம்
9. தனுசு
10. மகரம்
11. கும்பம்
12. மீனம்

## 4. நட்சத்திரங்கள் பெயர்கள்

1. அசுவினி
2. பரணி
3. கார்த்திகை
4. ரோகிணி
5. மிருகசீரிஷம்
6. திருவாதிரை
7. புனர்பூசம்
8. பூசம்
9. ஆயில்யம்
10. மகம்
11. பூரம்
12. உத்திரம்
13. அஸ்தம்
14. சித்திரை
15. சுவாதி
16. விசாகம்
17. அனுஷம்
18. கேட்டை
19. மூலம்
20. பூராடம்
21. உத்திராடம்
22. திருவோணம்
23. அவிட்டம்
24. சதயம்
25. பூரட்டாதி
26. உத்திரட்டாதி
27. ரேவதி

## 5. விலங்குகள் பெயர்கள்

1. நாய்
2. செம்மறியாடு
3. பன்றி
4. ஆடு
5. மாடு
6. பூனை
7. கழுதை
8. எருமை மாடு
9. குதிரை
10. ஒட்டகம்
11. மான்
12. புலி
13. முதலை
14. யானை
15. முயல்
16. சிங்கம்
17. ஓநாய்
18. வரிக்குதிரை
19. ஆமை
20. ஒட்டகச்சிவிங்கி
21. கரடி
22. குரங்கு
23. நீர் யானை
24. குள்ளநரி
25. கீரிப்பிள்ளை
26. சிறுத்தைப்புலி
27. நரி
28. தவளை
29. எலி
30. எருது
31. பாம்பு
32. அணில்
33. காண்டாமிருகம்
34. மனிதக் குரங்கு
35. நீர்நாய்

## 6. வாகனங்கள்

### இந்த்ராணி - வெள்ளை யானை

இந்து சாஸ்திரப்படி சாச்சி என்பவள் இந்திரன் மனைவி என்ற இந்த்ராணி ஆவாள். இவள் ஸப்த மாதர்களில் ஒருவர். இவள் ரொம்ப அழகாகவும் நல்ல அழகுள்ள கண்ணோடு அமைந்தவள். இவளுடன் சிங்கங்கள், யானைகள் இருந்தன. புராணங்களில் இவளை எல்லையில்லா அழகுடையவள் என்று சொல்லப்படுகிறது. ஸப்த மாதர்களில் ஒருவரான சாச்சி என்ற இந்த்ராணி இந்து கலாச்சாரத்தின்படி தெய்விகம் பொருந்திய ஸப்த மாதர்களில் தலைசிறந்தவராக போற்றப்படுகிறார். தேவேந்திரனுடைய வெள்ளை யானையே இவருக்கும் வாகனமாகும்.

ஆடி மாதத்தில் நவராத்திரியில் இந்த்ராணி பூஜை செய்வதுண்டு. தன்னை அண்டியவருக்கு உதவுவதோடு அவர்களின் பொறாமை குணத்தை அழிக்கிறாள். வேத – இலக்கியம் மற்றும் புராணங்களில் அறிவை வளர்க்கும் சக்தியாகவும் பெண்களில் ஓர் உதாரணமாகவும் சர்வ வல்லமை பலம் பொருந்தியவளாகவும் சொல்லப்படுகிறாள். பெண் கடவுளின் மூல சக்தியாகிய பார்வதி அல்லது காளி தேவியாக நிறைய தருணங்களில் தோன்றியதாக புராணங்களில் பல இடங்களில் சொல்லப்படுகிறது. ரிக்வேதத்தில் இவள் அழகாக இருந்ததாக கூறப்படுகிறது. மற்ற கடவுளுடன் வேறுபட்டு தனி பாத்திரமாக இருந்தவள். புராணத்திலுள்ள பெண் கடவுள் பெரும்பாலோர் தங்கள் கணவன்மார்களால் அறியப்படுகிறார்கள், உதாரணம் ருத்ராணி, வருணி ஆகியோர் வருணின் மனைவிகள் ஆவர். சூரியனின் மனைவி சரண்யா என்றும். இதில் இந்திரனின் மனைவி மட்டும் இவர்களிலிருந்து வேறுபட்டு சாச்சிபடி என்றும், மூலாதார சக்தி என்றும் அழைக்கப்படுகிறாள். ரிக்வேதத்தில் சாச்சி அதிர்ஷ்டம், பெரும்புகழ் கூடிய பெண்ணாக அறியப்படுகிறாள். மற்ற எல்லா கடவுளிடம் இல்லாத ஓர் ஈர்ப்பு சக்தி தன்மை சாச்சி – இந்த்ராணியிடம் சொல்லப்படுகிறது. மற்றபடி சாச்சி பற்றிய வழிபாடு தனியாக சொல்லப்படாமல் சப்த மாதர்களில் ஒருவராக எண்ணப்படுகிறார்.

## யமன் – எருமை

புராணங்களில் எமதர்மன் ஒரு நல்ல அதிகாரம் படைத்தவர், ஆயினும் பிரம்மாவை தவிர்த்து பகவான் விஷ்ணு, சிவன் கீழ் அடிபணிந்து இருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் மார்க்கண்டேயன் ஆயுள் முடிகிற சமயத்தில் காலனாகிய எமன் அவனை நெருங்கும்பொழுது மார்க்கண்டேயன் சிவனை சரணடைந்து அதன் மூலம் எமதர்மன் மார்கண்டேயனை விட்டுவிடுகிறார். மேலும், பாகவத புராணத்தில் நடந்த ஒரு சம்பவத்தில் பகவான் மஹாவிஷ்ணுவின் வாக்குக்கு கட்டுப்பட்டவர் என்ற செய்தி தெரியவருகிறது. அஜாமிளன் என்ற மனிதன் தன் மனைவி குழந்தைகளை கைவிட்டு ஒரு தாசியுடன் வாழ்ந்து வந்தான். அவனுடைய அந்திமகாலத்தில் அவனுடைய வாய் ‘நாராயணா’ என்று முணுமுணுத்ததால் எமதூதர்களிடமிருந்து காப்பற்றப்பட்டு மோட்சம் அடைந்ததாக வரலாறு. அஜாமிளன் இறுதிக்காலத்தில் தற்செயலாக தன்

இளைய மகன் நாராயணன் பெயரைச் சொல்லி உயிர் பிரிந்ததால் அந்தப் பெயரை உச்சரித்ததற்கு இந்த பலன் கிடைத்தது. எமதர்மன் உருவத்தில் நீல நிறமாகவும், சிவப்பு உடை அணிந்தும் தன் வாகனமான எருமைமாடு மேல் அமர்ந்தும் தன் இடக்கையில் ஒரு கருப்பு நிறமுள்ள பாசக்கயிறு மூலம் உயிரை இழுத்து செல்வார். இவர் மற்ற வேறு அவதாரங்களில், உதாரணமாக மஹாபாரதத்தில், இவர் யுதிஷ்டிரர் என்பவராகவும், திருதராஷ்டிரன் தம்பி விதுரராகவும் அவதார புருஷனாக வலம் வந்தார் என்பது வரலாற்று உண்மை.

## சனி – காக்கை

சனி பகவான் பிறந்தவுடன் முதன்முதலாக தன் கண்ணை விழித்து சூரிய பகவானை பார்த்தபொழுது அதன் பாதிப்பாக சூரிய கிரகணம் ஏற்பட்டது என்பது எடுத்துக்காட்டு. ஜோதிட சாஸ்திரப்படி சனி ஒரு முக்கியமான கிரஹம் என்று சொல்லப்படுகிறது. நேர்மையான, நியாயமானவர்களுக்கு இவர் சிறந்த ஆசான். அதே சமயத்தில் தீய எண்ணத்துடன் செயல்படுபவர்களை பழிவாங்குவதில் தயங்கமாட்டார். ஒருவரின் ஜாதகத்தில் சனி சரியான இடத்தில் இருந்தால் அவருக்கு நல்ல புகழும், பெயரும் ஏற்படுவதை யாரும் தடுக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் ஜோதிட சாஸ்திரப்படி ஜாதகத்தில் சனி அவருடைய ஆயுளில் 3 தடவை வலம் வரும். சனி பகவானின் ஒரு கால் சற்று ஊனமாக இருக்கும். இவர் கறுப்பு உடை அணிந்தும், இருபுறம் கூர்மையான வாளை கையிலும் கூடிய நிலையில் காக்கை வாகனத்தில் அமர்ந்திருப்பார்.

# 7. பசு பற்றி 50 தகவல்கள்
# (பலர் கூறிய தகவல்கள்...)

1. இந்தியாவில் ...................... மாநிலத்தில்தான் பசுவதைத் தடை சட்டம் மிகத் தீவிரமாக அமல்படுத்தப்பட்டுள்ளது (குஜராத்)
2. ...................... நாட்டில் பசுவை கவுரவிக்கும் வகையில் அதை அந்த நாட்டின் தேசிய விலங்காக அறிவித்துள்ளனர். (நேபாளம்)
3. பகவான் ...................... மிக, மிக பிடித்தது பசுதான். எனவேதான் அவர் தன்னை கோபாலகிருஷ்ணன் என்று அழைக்கும்படி கூறினார். (கண்ணபிரானுக்கு)
4. கோபூஜை நடத்தும் போது கண்டிப்பாக பசுவுடன் அதன் ......................இருக்க வேண்டும்.( கன்றும்)
5. பசுவின் ......................கலிதேவதை இருப்பதால்தான் பசு முன் பகுதியில் பூஜை செய்யப்படுவது இல்லை.(வாயில்)
6. சஷ்டியப்பூர்த்தி, சதாபிஷேகம் போன்ற நாட்களில் ...................... தானம் செய்தால் கூடுதல் புண்ணியம் கிடைக்கும். (பசு)
7. ஒருபசுமுதல்கன்றுபிரசவித்ததும்,அதை......................என்பார்கள். (தேனு)
8. ஒரு பசு இரண்டாவது கன்று பிரசவித்ததும் அதற்கு ...................... என்றழைப்பார்கள் (கோ)
9. .................... பசு மூவுலகிற்கும் தாயாக கருதப்படுகிறது. (காமதேனு)
10. பசுவின் .................. நம் மீது படுவது கங்கையில் புனித நீராடலுக்கு சமம் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. (கால் தூசி)
11. பசுவுக்கு தினமும் பூஜை செய்வது என்பது ......................பூஜை செய்வதற்கு சமமாகும். (பராசக்திக்கு)
12. பசுவின்உடலில்......................நாற்பத்துஎண்ணாயிரம்ரிஷிகளும், ஆட்சி செய்கின்றனர். (முப்பத்து முக்கோடி தேவர்களும்,)
13. கோபூஜை செய்வதால் கிடைக்கும் உடனடி நன்மை என்ன தெரியுமா? ...................... நீங்கும். (பணக் கஷ்டம்)

14. பசுவுக்கு அகத்திக்கீரை கொடுக்க இயலாவிட்டால் ...................... வாங்கிக் கொடுக்கலாம். (வாழைப்பழம்)

15. வீட்டில் பசு வளர்ப்பது ............... உண்டாக்கும். (செல்வ செழிப்பை)

16. பசுக்களை அடிக்கடி நீர் நிலைகளில் ...................... வைப்பது நல்லது. (நீந்தி குளிக்க)

17. பசுவின் ...................... அதிகமான நன்மை பயக்கும் நுண் உயிர்கள் வாழ்கிறது. (கோசலத்தில்)

18. பசுக்கள் இறந்தால், அவற்றுக்கு உரிய முறையில் ...................... செய்யப்பட வேண்டும்.( இறுதிச் சடங்குகள்)

19. பசுவையும் ...................... பிரிக்கும் பாவத்தை ஒரு போதும் செய்யக் கூடாது (கன்றையும்)

20. பசுவானது ...................... நிலையில் இருக்கும் போது தானம் செய்வதுதான் மிக சிறந்த தானமாகும். (பால் கறக்கும்)

21. சிலர் பசுவுடன் ...................... சேர்த்து தானம் அளிப்பார்கள். இந்த தானம் கூடுதல் பலன் தருவதாகும். (காளையையும்)

22. ஒரு காரியம் வெற்றி அடைய வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அதற்காக ...................... செய்து பாருங்கள். நிச்சயம் வெற்றி உண்டாகும். (கோ தானம்)

23. பசு தானம் வாங்குபவர்கள் ...................... தடவை காயத்ரி மந்திரம் சொன்னால் சுமை குறையும். (லட்சம்)

24. ஏதாவது ...................... நடக்கும்போது பசுதானம் செய்தால், அதற்குரிய நன்மை கிடைக்கும். (மங்கல நிகழ்ச்சி)

25. பசு தானம் கொடுக்கும் போது ...................... இன பசுக்களை தானம் வழங்கக் கூடாது (ஜெர்சி)

26. பசு தானம் கொடுக்கும் போது ...................... பசுவையே தானமாக கொடுக்க வேண்டும் (நாட்டு)

27. ............... காராம்பசு தானம் கொடுப்பது நல்லது (சனீஸ்வரனுக்கு)

28. ................. பலம் பெற விரும்புபவர்கள் சிவப்பு நிற பசுவை தானமாக கொடுக்க வேண்டும். (சூரிய)

29. பசுவை மாடு என்று அழைக்காமல் ......................, ...................... என்று அழைத்தால் சொர்க்கத்தில் இடம் கிடைக்கும். (பசுத்தாய், கோமாதா)

30. நன்றாக பால் கறக்கும் பசுக்களை ...................... தானம் செய்தால், அவர்களது 7 தலைமுறை பலன் அடையும். (காசியில்)

31. ராமேசுவரத்தில் காராம் பசு தானம் செய்தால் ...................... கிடைக்க வாய்ப்புள்ளது. (ஆண் வாரிசு)

32. ஒரு பசுவை ...................... மட்டுமே தானமாக கொடுக்க வேண்டும் (ஒருவருக்கு)

33. ...................... இருக்கும் ஒருவர், அவரது பாவங்கள் நீங்கி நற்கதி அடைய பசு தானம் செய்வதை நம் முன்னோர்கள் வழக்கமாக வைத்திருந்தனர். (மரணப்படுக்கையில்)

34. ...................... பூஜை செய்யும் போது பசு தானம் கொடுப்பது மிகுந்த நன்மை தரும். (பித்ரு)

35. ஒரு பெண் ருதுவானதும் தோஷங்கள் நீங்க ...................... தானம் செய்யலாம். (பசுக்களை)

36. கோவில்களில் விளக்கேற்ற பசுக்களை குறிப்பிட்ட ...................... தானம் செய்வதை ஆதி தமிழர்கள் வழக்கத்தில் வைத்திருந்தனர். (எண்ணிக்கையில்)

37. பசு தானம் அடிக்கடி செய்வது ...................... உறுதி செய்யும் என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது (வம்ச விருத்தியை)

38. பசுவையும் கன்றையும் யார் ஒருவர் நன்கு பராமரிப்பு செய்கிறாரோ, அவரது ........... தலைமுறைக்கு நற்கதி உண்டாகும். (இருபத்தோரு)

39. கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ...................... நிற பசுவை தானம் செய்தால் பரிகாரம் உண்டாகும். (கறுப்பு)

40. திருவண்ணாமலை ...................... பாதையில் நிறைய பேர் பசுவுக்கு அகத்திகீரை வாங்கிக் கொடுப்பதை பார்த்து இருப்பீர்கள் (கிரிவல)

41. பசுவுக்கு ஒரு தடவை அகத்தி கீரை கொடுத்தாலே, ...................... பாவம் விலகும் என்பது ஐதீகம். (பிறவி)

42. நம் வீட்டில் பசு வளர்க்க வாய்ப்பு இல்லை யெனில் பசு வைத்திருப் பவர்களுக்கு நாமாக ...................... வேண்டும். (உதவ)

43. வெளிப்புறம் மேயும் பசுக்களுக்கு நம் வீட்டின் அல்லது தோட்டத்தின் வெளிப்புறம் ...................... அமைக்கலாம். (தண்ணீர் தொட்டி)

44. பசுக்கள் தொழுவத்தில் கட்டிப் போடப்பட்டிருக்கும் வரை ...................... கோசலத்தையும் அவ்வப்போது அப்புறப்படுத்தி தொழுவத்தைக் கழுவிவிட வேண்டும். (சாணத்தையும்)

45. விளை நிலங்களில் சிறு பகுதியையாவது வருடந்தோறும் மாறி மாறித் ...................... விடுவது நிலங்களுக்கு நல்லது. (தரிசாக)

46. வசதியுள்ளவர்கள் வழிப்போக்கு மாடுகளுக்காக சிறிதளவு ...................... போட்டு வைக்க வேண்டும். (வைக்கோல்)

47. பசுங்கன்று பால் மணம் மாறும் முன்பே சினைப்படுத்தி, ...................... ஈனச் செய்து பால் கறப்பது முறையல்ல. (கன்று)

48. நமக்கு வருவாய் அளிக்க இயலாத ...................... பசு மாடுகளை, பசுக்களை பராமரிக்கும் பசு மடங்களிலும் தொழுவங்களிலும் சேர்ப்பிக்க வேண்டும். (நலிந்த)

49. நமக்கு வருவாய் அளிக்க இயலாத ...................... பசு மாடுகளை, பசுக்களை பராமரிக்கும் பசு மடங்களிலும் தொழுவங்களிலும் சேர்ப்பிக்க வேண்டும். (நலிந்த)

50. பசுக்கள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை கேட்க முடியாது. ஏனவே ...................... பசுக்களுக்கு உதவ வேண்டும். (குறிப்பறிந்து)

❖❖❖❖

# வகுப்பு-III

## 1. நீதி நூல்கள்

### கொன்றை வேந்தன்

நோன்பென் பதுவே கொன்று தின்னாமை
புலையுங் கொலையுங் களவுந் தவிர்

## 2. திருக்குறள்

### கொல்லாமை

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

## 3. மரங்கள் பெயர்கள்

1. அரசமரம்
2. ஆலமரம்
3. அத்திமரம்
4. புளியமரம்
5. நொச்சி (ஐந்திலை)
6. கொடுக்காய்ப் புளி

7. மகிழ மரம்
8. மாமரம்
9. கறுவேப்பிலை
10. தென்னை மரம்
11. வில்வ மரம்
12. கொய்யமரம்
13. வேப்பமரம்
14. வாழைமரம்
15. ஆரஞ்சு மரம்
16. புங்கை மரம்
17. சப்பாத்தி கள்ளி
18. சப்போட்டா மரம்
19. சவுக்கு மரம்
20. தேக்கு மரம்
21. கற்பூரத் தைலமரம்
22. பப்பாளி மரம்
23. பனை மரம்
24. முருங்கை மரம்
25. மகாகனி மரம்
26. கம் அரபு மரம்
27. குடை அல்லது பூவரச மரம்
28. பீரங்கி பந்து மரம்
29. பலாப்பழ மரம்
30. புனித அத்தி மரம்
31. நெல்லிக்காய் மரம்
32. முந்திரி மரம்
33. ஜாவா பிளம்
34. ரெட் சந்தனம் மரம்
35. பாக்கு மரம்

## 4. தாவரங்கள் பெயர்கள்

1. நெய்ச்சிட்டி
2. நாழல்
3. கற்றாழை
4. காய்வள்ளிக் கொடி
5. பெருங்கள்ளி
6. ரோஜா செடி
7. முல்லை செடி
8. நித்தியமல்லி செடி
9. புதினா செடி
10. கத்திரிக்காய் செடி
11. கோவைக்காய் செடி
12. செம்பருத்தி
13. துளசி
14. தூதுவிளை
15. நார்த்தங்காய்
16. பாகற்காய்
17. மணித்தக்காளி
18. மிளகாய்
19. முசுமுசுக்கை
20. முளைக்கீரை
21. வெண்டைக்காய்
22. செண்பகம்
23. தக்காளி செடி
24. மல்லி செடி
25. சூரிய காந்தி செடி

# 5. பறவைகள் பெயர்கள்

1. சேவல்
2. கொக்கு, நாரை
3. காகம், காக்கா, காக்கை
4. குயில்
5. புறா
6. வாத்து
7. கழுகு, கருடன்
8. கோழி
9. மீன்கொத்தி
10. பருந்து
11. மைனா
12. தீக்கோழி
13. ஆந்தை
14. கிளி
15. மயில்
16. வானம்பாடி
17. சிட்டுக்குருவி
18. அன்னப் பறவை
19. வான்கோழி
20. மரங்கொத்தி
21. செங்குருகு
22. மஞ்சள் சிட்டு
23. சிவப்பு வல்லூறு
24. சிட்டு
25. கடற்புறா
26. ஓணான்கொத்திக் கழுகு
27. சின்னத் தேன்சிட்டு
28. குட்டைக்கிளி
29. தண்ணீர்க் கோழி
30. கருங்கோட்டுக் கதிர்க்குருவி
31. மஞ்சள் குருகு
32. பச்சைப்புறா
33. காட்டுப் பஞ்சுருட்டான்
34. காடை
35. மாங்குயில்
36. மாடப் புறா

| வ.எண் | நட்சத்திரங்கள் | விருட்சங்கள் |
|---|---|---|
| 1 | அசுவினி | எட்டி |
| 2 | பரணி | பெருநெல்லி |
| 3 | கார்த்திகை | அத்தி |
| 4 | ரோகிணி | நாவல் |
| 5 | மிருகசீரிஷம் | கருங்காலி |
| 6 | திருவாதிரை | செங்கருங்காலி |
| 7 | புனர்பூசம் | மூங்கில் |
| 8 | பூசம் | அரசமரம் |

| | | |
|---|---|---|
| 9 | ஆயில்யம் | புன்னை |
| 10 | மகம் | ஆலமரம் |
| 11 | பூரம் | பலாசு |
| 12 | உத்திரம் | அலரி |
| 13 | அஸ்தம் | அத்தி |
| 14 | சித்திரை | வில்வம் |
| 15 | சுவாதி | மருதம் |
| 16 | விசாகம் | விளா |
| 17 | அனுஷம் | மகிழம் |
| 18 | கேட்டை | பிராய் |
| 19 | மூலம் | மரா |
| 20 | பூராடம் | வஞ்சிக்கொடி |
| 21 | உத்திராடம் | பலா |
| 22 | திருவோணம் | எருக்கு |
| 23 | அவிட்டம் | வன்னி |
| 24 | சதயம் | கடம்பு |
| 25 | பூரட்டாதி | மாமரம் |
| 26 | உத்திரட்டாதி | வேம்பு |
| 27 | ரேவதி | இலுப்பை |

## 6. வாகனங்கள்

### பைரவர் – நாய்

பைரவர் சிவபெருமானின் அறுபத்து நான்கு திருமேனிகளுள் ஒருவராவார். இவர் வைரவர் என்றும் அறியப்படுகிறார். பைரவரின் வாகனமாக நாய் குறிப்பிடப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டில் நாய்களை பைரவர் என்ற சொல்லும் பொதுப் பெயரும் வழக்கத்தில் இருக்கிறது. பைரவரை சொர்ண ஆகர்ஷண பைரவர், யோக பைரவர், ஆதி பைரவர், கால பைரவர், உக்ர பைரவர் என்றெல்லாம் அழைக்கின்றார்கள்.

கால பைரவர், சிவ பெருமானின் ருத்திர ரூபமாக சொல்லப்படுபவர்; சிவன் கோவிலின் வட கிழக்குப் பகுதியில் நின்ற கோலத்தில் காட்சி

தருபவர்; ஆடைகள் எதுவுமில்லாமல் பன்னிரு கைகளுடன் நாகத்தை பூணூலாகவும், சந்திரனைத் தலையில் வைத்தும், சூலாயுதம், பாசக் கயிறு, அங்குசம் ஆகிய ஆயுதங்களைத் தாங்கியும் பிறந்த மேனியாக காட்சி தருபவர். கால பைரவர் சனியின் குருவாகவும், பன்னிரண்டு ராசிகள், எட்டு திசைகள், பஞ்ச பூதங்கள், நவகிரகங்களையும், காலத்தையும் கட்டுப்படுத்துபவராகவும் கூறப்படுகிறார்.

எல்லா சிவ ஆலயங்களிலும் பிரகாரம் சுற்றி வரும்பொழுது பைரவர் ஸ்வாமி தெற்கு நோக்கி இருப்பதை காணலாம். பைரவரை தெளிவாக உற்று பார்த்தால் இரு காதில் பெரிய குண்டலம், கையில் ஒரு காப்பு வடிவில் கங்கணம் இரு காலிலும் தண்டையும் நான்கு கரமும் கொண்ட அமைப்பால் இருப்பார். ஒரு கையில் சூலாயுதம் மற்றொரு கையில் பாம்பும் மற்றொரு கையில் கதையும் வாகனமான நாயுடன் கூடிய அமைப்பில் தோற்றம் அளிப்பார். சனி கிரகத்திற்கு செய்ய வேண்டிய பரிகாரத்தை பைரவருக்கு செய்து நல்ல பலனை பெறலாம். கிராமங்களில் பைரவரை எல்லைக் காவலர் என்று சொல்லப்படுகிறது. இந்தியாவில் உள்ள வாரணாசியின் (காசி) முழுப்பாதுகாப்பும் பைரவர் வசம் உள்ளது.

## அனுமன் – குரங்கு

அனுமன் ஒரு இந்துக் கடவுளாக வணங்கப்படுகிறார். வைணவ ஆலயங்களில் இவரது உருவச்சிலையைப் பார்க்கலாம். இராமாயணத்தில் மிக முக்கியமானதொரு பாத்திரமாக வானரப் படையில் இடம் பெறுகிறார். அனுமனுக்கு மாருதி, ஆஞ்சநேயன் போன்ற பெயர்களும் வழங்கப்படுகின்றன. அனுமனின் தாய் அஞ்சனாதேவி, தந்தை வாயு (பஞ்சபூதங்களில் ஒன்று) ஆவார். இராமாயணம் தவிர மகாபாரதம் மற்றும் புராணங்களிலும் அனுமனைப் பற்றிய குறிப்புகள் உண்டு. அனுமன் இராமன் மீது கொண்ட அளவற்ற பக்தியால் இராமனின் தொண்டனாக விளங்கியவர். அனுமன் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தவர். பிற்காலத்தில் வட இந்தியாவில் அனுமனை சிவனின் அவதாரமாகவும் கருதுபவர்கள் உண்டு.

இராமாயணத்தைப்போல மகாபாரதத்தில் அனுமனுக்கு முக்கிய கதைப்பாத்திரம் இல்லை. ஆனால் பாண்டவர்களில் ஒருவனான பீமனுக்கு ஒரு வகையில் அண்ணன் உறவு வருகிறது. பாண்டவர்கள் வனவாசத்தில் இருக்கும்போது, காட்டு வழியே பீமன் பயணிக்கும்போது அங்கே வயோதிக குரங்கு ஒன்று படுத்துக் கொண்டிருக்க, அதன் வால் நீண்டு பீமன் நடந்து செல்லும் பாதையை அடைத்துக் கொண்டிருந்தது. பீமன் அதன் வாலை தள்ளி வைத்து விட்டு செல்லலாம் என எண்ணி, வாலைத் தூக்க முயற்சித்தான். ஆனால் சிறந்த பலசாலி எனப்பெயர் பெற்ற பீமனாலேயே அக்குரங்கின் வாலினை அப்புறப்படுத்த இயலவில்லை. பின்னர் பீமன், அது சாதாரணக் குரங்கில்லை என உணர்ந்து, அக்குரங்கிடம் மிகுந்த மரியாதையுடன் யாரென வினவிட, அனுமன் தான் யாரென்பதை பீமன் அறியச் செய்கிறார்.

❖❖❖❖

# வகுப்பு-IV

## 1. நீதி நூல்கள்

### கொன்றை வேந்தன்

- சீரைத் தேடின் ஏரைத் தேடு.
- தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
- நாடெங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை.
- நீர் அகம் பொருந்திய ஊர் அகத்து இரு.
- பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
- மாரி அல்லது காரியம் இல்லை
- மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
- மேழிச் செல்வம் கோழை படாது.
- வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.

## 2. திருக்குறள்

### வான் சிறப்பு

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

நீர்இன்று அமையாது உலகுஎனின், யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
தான்நல்காது ஆகி விடின்.

## 3. பாரதியார் கவிதைகள்

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் அங்கு
தூணில் அழகியதாய் – நல் மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்
காணி நிலத்தின் இடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்குக்
கேணி அருகினிலே – தென்னைமரம்
கீற்றும் இள நீரும்
பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும் – நல்ல
முத்துச் சுடர்போல் – நிலவொளி
முன்பு வரவேணும் – அங்கு
கத்தும் குயிலோசை – சற்றே வந்து
காதில் படவேணும் – என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாய் இளம்
தென்றல் வரவேணும்
பாட்டுக் கலந்திடவே – அங்கே ஒரு
பத்தினிப் பெண்வேணும் – எங்கள்
கூட்டுக் களியினிலே – கவிதைகள்
கொண்டுதர வேணும் – அந்தக்
காட்டு வெளியினிலே – அம்மா நின்றன்
காவல் உறவு வேணும் – என்றன்
பாட்டுத் திறத்தாலே – இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

# 4. உலக நீதி

மண்ணின்று மண்ஓரம் சொல்ல வேண்டாம்
மனம்சலித்துச் சிலுகிட்டுத் திரிய வேண்டாம்
கண்அழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக்கட் டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
மண்அளந்தான் தங்கைஉமை மைந்தன் எங்கோன்
மயில்ஏறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

# 5. பஞ்சபூதங்கள்

1. நிலம்
2. நெருப்பு
3. நீர்
4. ஆகாயம்
5. காற்று

# 6. ஆறுகள்

1. பவானி ஆறு
2. காவேரி ஆறு
3. நோயில் ஆறு
4. செய்யார் ஆறு
5. பால் ஆறு
6. தாமிரபரணி ஆறு
7. சித்தர் ஆறு
8. சொ்வலர் ஆறு
9. பொன்னையர் ஆறு
10. கெடிலம் ஆறு
11. வைகை ஆறு

# 7. கதை

## கங்கா வந்தனம்

வருடா வருடம் கார்த்திகை அமாவாசையன்று கும்பகோணம் அருகிலுள்ள திருவிசைநல்லூரில் உள்ள ஸ்ரீதர அய்யாவாள் வீட்டிலுள்ள கிணற்றில் கங்கை வருவதாக ஐதீகம்.

இதை முன்னிட்டு அந்தக் கிணற்றில் நீராட தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி ஆகிய மாநிலத்திலிருந்து ஏராளமானோர் வந்து செல்கிறார்கள்.

தற்சமயம் ஸ்ரீதர அய்யாவாள் வீடு மடமாக உள்ளது. அதில்தான் அந்த கிணறு உள்ளது. ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் இவர் (ஸ்ரீதர அய்யாவாள்) தன் இறந்து போன தகப்பனாருக்கு திதி கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட உணவை பசியினால் வாடி வந்த ஒரு ஏழைக்கு கொடுத்ததாக வரலாறு. இந்த விஷயம் திதி பண்ண வந்த புரோகிதர்களுக்கு தெரிந்த பின்னர் அவர்கள் ஸ்ரீதர அய்யாவாள் கங்கையில் மூழ்கிவந்தால் தான் தாங்கள் திதி பண்ணி வைப்போம் என்று ஆணித்தரமாக கூறினார்கள். உடனே ஸ்ரீதர அய்யாவாள் அன்றைய சூழலில் காசி சென்று கங்கையில் மூழ்கி வர மூன்று மாத கால அவகாசம் ஆகும் என்பதை உணர்ந்து, உடனே கங்கையை துதித்து வேதப் பொருளை கூறலானார். உடனே பகீரதனுக்கு கங்கை வந்தது போல் ஸ்ரீதர அய்யாவாள் வீட்டில் கங்கை பொங்கி வழிய ஆரம்பித்தது. இது நடந்தது ஒரு கார்த்திகை அமாவாசையன்று.

இதை கருத்தில் கொண்டு கங்கையில் நீராடும் எண்ணத்துடன் வருடாவருடம் கார்த்திகை அமாவாசையன்று ஏராளமானோர் திருவிசைநல்லூர் வந்து ஸ்ரீதர அய்யாவாள் மடத்திலுள்ள கிணற்று நீரில் குளித்து புனிதமடைகீறார்கள்.

# 8. வாகனங்கள்

## அக்னி – ஆடு

அக்னி தேவன் இந்துக்களால் வணங்கப்படும் தெய்வம். இவர் தேவர்களின் புரோகிதராக ரிக் வேதத்தில் குறிப்பிடப்படுகிறார். அக்னி

தேவனுக்கு மூன்று உருவங்கள் உண்டு: நெருப்பு, மின்னல், சூரியன். சூரியனின் ஆற்றலாக அக்னி தேவன் விளங்குகிறார்.

இவர் வேதங்களில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றார். நெருப்பின் அதிபதியான இவர் நெருப்பில் இடப்படும் நிவேதனங்களை ஏற்றுக்கொள்ப வராக உள்ளார். வேள்விகளில் இடப்படும் நிவேதனங்களை மற்ற தெய்வங்களுக்கு அக்னி தேவனே எடுத்துச்செல்கிறார். அக்னி மற்ற தேவர்களைப் போல என்றும் இளமை உடையவராக கருதப்படுகிறார்.

இவர் தானாக பிறந்ததை குறிக்கும் வகையில், குச்சிகளை ஒன்றின் மீது ஒன்று வைத்து கடைந்து நெருப்பை உருவாக்கும் அக்னிமர்த்தனம் சில இந்து சடங்குகளில் மேற்கொள்ளப்படுகிறது.

அக்னி தேவன் பொதுவாக மற்ற தேவர்களை போல் சாதாரணமாக சித்தரிக்கப்பட்டாலும், அவருடைய உண்மையான உருவம் பின்வாறாக இருக்கிறது. அக்னி ஏழு கைகளும் இரண்டு தலைகளும், மூன்று கால்களும் கொண்டவராக உள்ளார். இவருடைய திருவாயிலிருந்து அவருடைய நாக்கு தீப்பிழம்பாக வெளி வருகிறது. இவருடைய வாகனம் ஆடு. இவருடைய உடலில் இருந்து ஏழு வித ஒளிக்கிரணங்கள் உதிக்கின்றது. அக்னியின் நிறம் சிவப்பாகும்.

அக்னி மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் இடையில் தூதுவராக கருதப்படு கிறார். ஏனெனில் இவரே யாகப் பொருட்களை மற்ற தேவர்களிடம் சேர்க்கின்றார். இவர் சடங்குகளை நடத்துபவராக குறிக்கப்பெறுகிறார். இவரோடு தொடர்புடைய வேத சடங்குகள் அக்னிசயனம் மற்றும் அக்னி ஹோத்திரம் ஆகும்.

ரிக்வேதத்தில் பல இடங்களில் அக்னி நீரிலிருந்து எழுபவராகவும், நீரில் உறைபவராகவும் கூறப்படுகிறார். தண்ணீரிலிருந்து தீப்பிழம்பாக வெளிவரும் இயற்கை எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் போன்றவற்றை இது குறிப்பிடலாம் எனக் கருதப்படுகிறது.

ரிக் வேதத்தில் உள்ள 1028 சுலோகங்களில் இந்திரனுக்கு அடுத்து 218 சுலோகங்கள் அக்னியை குறித்து உள்ளன. இவரது துணையாக சுவாகா தேவி கருதப்படுகிறார்.

❖❖❖❖

# வகுப்பு-V

## 1. நீதி நூல்கள்

### கொன்றை வேந்தன்

- காவல் தானே பாவையர்க்கு அழகு
- இல்லறம் அல்லது நல்லறம் அன்று

## 2. திருக்குறள்

### வாழ்க்கைத் துணைநலம்

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இல்லாதுஎன் இல்லவள் மாண்பானால்? உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை?

## 3. உலக நீதி

### பெண்மையைப் போற்றுதல்

வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்லவேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்

வெஞ்சமரில் புறங்கொடுத்து மீளவேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாகும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

## 4. பாரதியார் பாடல்கள்

### பெண்கள் வாழ்க!

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!
தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும்.

அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்.
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்.
துன்பம் தீர்வது பெண்மையி னாலடா!
சூரப் பிள்ளைகள் தாயென் றும் போற்றுவோம்.

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலிய ழிப்பது பெண்க ளறமடா!
கைகள் கோர்த்துக் களிப்பதுநின் றாடுவோம்.

பெண்ண றத்தின ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை;
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா!

சக்தி யென்ற மதுவையுண் போமடா!
தாளங் கொட்டித் திசைகள் அதிரவே,
ஒத்தி யல்வதொர் பாட்டும் குழல்களும்
ஊர்வி யக்கக் கவித்துநின் றாடுவோம்.

உயிரைக் காக்கும்,உயிரினைச் சேர்த்திடும்;
உயிரினுக் குயிராய் இன்ப மாகிடும்;
உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா!
ஊது கொம்புகள்,ஆடு களிகொண்டே

'போற்றி தாய்' என்று தோள்கொட்டி யாடுவீர்
புகழ்ச்சி கூறுவிர் காதற் கிளிகட்கே,
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணி டைப்பெண் ணொருத்தி பணியிலே.

'போற்றி தாய்' என்று தாளங்கள் கொட்டடா!
'போற்றி தாய் என்று பொற்குழ லூதடா!
காற்றி லேறியவ விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே

அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்;
கன்னத் தேமுத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப் பாடுவோம்.

## 5. பூக்கள் பெயர்கள்

1. அலரி
2. வாடாமல்லி
3. அத்திப்பூ
4. கார்த்திகைப்பூ
5. செம்பருத்தி
6. அல்லி
7. ஆம்பல்
8. குண்டு மல்லி

9. நாகப்பூ
10. சம்பங்கி
11. கனகாம்பரம்
12. காந்தள்
13. அனிச்சம்
14. குவளை
15. குறிஞ்சி
16. வெட்சி
17. செங்கொடுவேரி
18. தேமாம்பூ
19. மணிச்சிகை
20. உந்தூழ்
21. கூவிளம்
22. எறுழம்பூ
23. அரளிப்பூ
24. கூவிரம்
25. புழகு
26. நெய்தல்
27. செருவிளை
28. கருவிளம்
29. பாலை
30. முல்லை
31. தாமரை
32. கொகுடி
33. செம்மல்
34. நந்தி

## 6. பழங்கள் பெயர்கள்

1. ஆப்பிள் பழம்
2. அத்திப்பழம்
3. வாழைப் பழம்
4. சீதாப் பழம்
5. பேரீட்சம்பழம்
6. திராட்சைப் பழம்
7. கொய்யாப்பழம்
8. பலாப்பழம்
9. நார்த்தம்பழம்
10. எலுமிச்சம்பழம்
11. லிச்சிப் பழம்
12. மாம்பழம்
13. கமலாப்பழம்
14. பப்பாளிப் பழம்
15. பேரிக்காய்
16. அன்னாசிப் பழம்
17. மாதுளம் பழம்
18. சப்போட்டாப் பழம்
19. சாத்துக்குடி
20. தர்ப்பூசணி
21. நாகப்பழம்
22. முந்திரிப்பழம்
23. சேலாப்பழம்
24. பசலிப்பழம்
25. விளச்சிப்பழம்
26. வெள்ளரிப்பழம்
27. விளாம்பழம்
28. தேனரத்தம்பழம்
29. உலர்த்தியப் பழம்
30. முசுக்கட்டைப்பழம்

## 7. மூதுரை அல்லது வாக்குண்டாம்

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் – இல்லாள்
வலிகிடந்த மாற்றமும் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறுஆய் விடும்.

## 8. கதை

### பெண்மையை உயர்வாகப் பேசும்

பெண்கள், உலகிற்கே தாய் போன்றவர்கள். கடல்களும், காடுகளும், மலைகளும், மனிதர்களும் நிரம்பிய இந்தப் பூமியைத் தாங்குவது அப்படிப்பட்ட பெண்கள்தான். அவர்கள் பூஜைக்கு உரியவர்கள்.

உலகம் அவர்களால்தான் வாழ்கிறது. ஆகையால், நல்ல பெண்களைக் கௌரவித்துப் பாராட்ட வேண்டும். எந்த இல்லத்தில் பெண்கள் கௌரவிக்கப்படுகிறார்களோ, அங்கே தேவர்கள் மகிழ்வடைகிறார்கள். எந்த இல்லத்தில் பெண்கள் கௌரவிக்கப்பட வில்லையோ, அங்கே செய்யப்படும் புண்ணிய காரியங்கள் எல்லாம் வீணாகின்றன. பெண்களால் சபிக்கப்படுகிற வீடு, பேயினால் பீடிக்கப்படுகிறது.

பீஷ்மர் மேலும் சொன்னார்: ‘‘பெண்களைப் பற்றி மனு கூறியதைச் சொல்கிறேன் கேள். ‘பெண்கள் பொறாமை உள்ளவர்கள்தான்; ஆனால் கௌரவத்தை விரும்புகிறவர்கள். பெண்கள் கோபமுடையவர்கள்தான்; ஆனால் அன்பும் பாராட்டுகிறவர்கள். பெண்கள் எளிதில் வசப்படுத்தப்படக் கூடியவர்கள்தான்; ஆனால் நல்ல மனமும் உள்ளவர்கள்.

ஆகையால் மொத்தத்தில் பெண்களை கௌரவப்படுத்துவதே நல்லது. பெண்கள் இல்லாமல் ஆண்களுக்குத் தர்மம் இல்லை. வம்சத்தை விருத்தி செய்வது பெண்கள் இல்லாமல் நடக்காது. உலக வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுவதும் பெண்கள் இல்லாமல் நடக்காது. ஆகையால் அவர்களை நன்றாக நடத்துவது அவசியம். அன்பு காட்டப்பட்டு, கௌரவிக்கப்படுகிற பெண், லட்சுமியாக இருந்து பயனளிக்கிறாள்.’’

# 9. வாகனங்கள்

## லஷ்மி - யானை, ஆந்தை

ஒரு சிலையின் வடிவமைப்பை வைத்து இது லஷ்மி சிலை (அ) விக்ரகம் என்று அளவிட்டு சொல்லலாம். இது சம்ஸ்கிருத மொழியிலிருந்து மருவி, ஸ்தூலமானது என்று கூட சொல்லலாம். லஷ்மியின் நான்கு திருக்கரங்களும் மனிதனுக்கு நான்கு அருள்குணங்களை வெளிப்படுத்தும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

## லஷ்மி விக்ரகத்தின் அமைப்பு

சாதாரணமாக தாமரை பூவில் அமர்ந்திருப்பது போலவும், இரண்டு கையில் தாமரை பூவை தாங்கிய வண்ணமும் இருக்கும் கோலம். இந்துக்களின் கலாச்சாரத்தை பிரதிபலிப்பதாக அமையப்பட்டுள்ளது. மேலும், இந்து தர்மத்தின் அடிப்படை சித்தாந்தமான கருத்துக்களை தன்னிச்சையாக உணருதல் போன்ற கருத்துக்களை ஸஹஸ்ர நாமத்தில் தெளிவுபடுத்துகிறது. தாமரைப்பூ சுத்தமான அல்லது தெளிவில்லாத தண்ணீரில் பூக்கிறது. எந்த சூழ்நிலையிலும் அது வெண்மையாக, பூ வருகிறது என்பதிலிருந்து நாம் எந்த நிலையிலும் தூய்மையாக இருக்க அது உணர்த்துகிறது. மேலும், சில லஷ்மி விக்ரகங்களில் ஒரு யானை அல்லது இரு யானை அமைப்புடன் ஓர் ஆந்தையும் சேர்ந்து இருக்கும். இந்தியாவின் கிழக்கு பிராந்தியத்தில் ஆந்தையை பீசக்கா என்று அழைப்பதுண்டு. அதன் சிறப்பு குணம் பகலில் அதற்கு கண் தெரியாது, இரவில் மட்டும்தான் கண் தெரியும். லஷ்மியின் ஒரு திருக்கரத்தில் இடைவிடாது செல்வம் கிடைக்கிற மாதிரியும், சில விக்ரகத்தில் ஒரு ஜாடியில் செல்வத்தை பிடித்த மாதிரி இருக்கும். இந்த குறியீடு பல அர்த்தங்களைத் தெரிவிக்கிறது. லஷ்மியின் முகம் மற்றும் கைகள் காட்டும் முத்திரை மற்றவர்களுக்கு ஆதரவு தருவது போல் இயல்பாக அமைந்துள்ளது. லஷ்மியின் உடைகள் சிவப்பு அல்லது பச்சை நிறத்துடன் எல்லாவகை செல்வங்களையும் அணிந்த நிலையில் அழகாக வடிவமைக்கப்பட்டிருக்கும். தன் கணவனான ஸ்ரீ மஹா விஷ்ணுவின் மார்பில் குடியிருந்தபடி மனித வாழ்க்கைக்கு தேவையான, அறம், பொருள், அமைதி, நியாயம் எப்பொழுதும் கிடைக்க அருள் புரிந்து கொண்டு இருப்பாள்.

## துர்கா – சிங்கம்

துர்கை இந்து சமயப் பெண் கடவுள் ஆவார். இவர் சிவபெருமானின் மனைவியான சக்தியின் வடிவமாக கருதப்படுகிறார். துர்கை என்றால் தீய எண்ணத்தினை அழிப்பவள் என்று பொருளாகும். எருமை வடிவம் கொண்ட மகிஷாசுரன் என்ற அரக்கனை அழித்தமையால், 'மகிஷாசுரமர்த்தினி' என்றும் துர்கைக்குப் பெயருண்டு.

துர்காதேவி பக்தர்களுக்கு இனிமையானவள். துன்பத்தையெல்லாம் துடைக்கும் துணையானவள். சகல செல்வங்களை அள்ளித்தரும் வள்ளல்.

துர்காதேவிக்கு சண்டிகை என்று மற்றொரு பெயர் உண்டு. அந்த சண்டிகாதேவியே இந்த பிரபஞ்சத்திற்கு ஆதிநாயகி. ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதத்தில் கொண்டாடப்படும் பண்டிகை நவராத்திரி. ஒன்பது நாட்களும் வீடுகளில் கொலு வைத்து கொண்டாடப்படும். ஒன்பது நாட்களில் ஒவ்வொரு தினமும் ஒரு பெயரில் வலம் வருவாள். துர்கா, பத்ரகாளி, அம்பாள் அல்லது ஜகதம்பா, அன்னபூர்ணா, சர்வமங்களா, பைரவி, சண்டி அல்லது சண்டிகா, பவானி மற்றும் மூகாம்பிகா என்ற பெயருடன் வலம் வருகிறாள். இவர்கள் அனைவருக்கும் வாகனம் சிம்மம் தான்.

❖❖❖❖

# வகுப்பு-VI

## 1. ஆத்திசூடி

தேசத்தோடு ஒத்துவாழ்
பூமி திருத்தி உண்

## 2. நீதி நூல்கள்

### அ. கொன்றை வேந்தன்

அரும்படைத் தானை அமர்வேட்டுக் கலித்த
பெரும் படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்துப்
பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி
வாய்வாள் நெடுந்தகை மணிமுடிக்கு அணிந்து

## 3. ஐம்பெருங்காப்பியங்கள்

### அ. குண்டலகேசி

நாடாளும் மன்னனைப் போற்றுதல்

## 4. பாரதியார் கவிதைகள்

### பாரததேசம்

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் ; அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்
சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்,

## தேசப்பக்திப்பாடல் (சுதந்திரப் பெருமை)

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் – பின்னர்
    வேறொன்று கொள்வாரோ ? – என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
    அறிவைச் செலுத்து வாரோ ?

புகழு நல்லறமுமே யன்றியெல்லாம் வெறும்
    பொய்யென்று கண்டாரேல் – அவர்
இகழுறும் ஈனத்தொண்டியற்றியும் வாழ்வதற்கு
    இச்சையுற்றிருப்பாரோ ?

பிறந்தவர் யாவரும் இறப்பதுறதியெனும்
    பெற்றியை அறிந்தாரேல் – மானம்
துறந்தறம் மறந்தும்பின் உயிர் கொண்டுவாழ்வது
    சுகமென்று மதிப்பாரோ ?

மானுட ஜென்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல் – அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ!

## சத்ரபதி சிவாஜி

பாரதப்பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
வானக முட்டும் இமயமால் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரை கடலும்
காத்திடு நாடு, கங்கையும் சிந்துவும்
தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!

# 5. பாரதிதாசன் கவிதைகள்

## ஜன்ம பூமியின் சிறப்பு - பூமி வந்தனம்

தேர்நின்ற வீதிச் செயபேரிகை முழங்கப்
போர்நின்ற வீரர் குலம் பூத்தநிலம் - பார்நின்று
அடல் வளர்த்தும் பாரதநற் புத்திரன் நான் ஆக
உடல் வளர்த்த நாடு என் உயிர்.

# 6. திருக்குறள்

## நாடு

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு

ஆழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

## அரண்

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

சிறுகாப்பிற் பேரிடத்தது ஆகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

கொளற்குஅரிதாய்க், கொண்டகூழ்த்தாகி, அகத்தார்
நிலைக்குளளிதாம் நீரது அரண்.

## படைச்செருக்கு

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

# 7. வேதங்கள்

1. ரிக் வேதம்
2. யஜுர் வேதம்
3. சாம வேதம்
4. அதர்வண வேதம்

# 8. மூதுரை அல்லது வாக்குண்டாம்

## அரசனும் புலவனும்

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்
தன்தேச மல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு.

# 9. வாகனங்கள்

## முருகர் – மயில்

கார்த்திகேய கடவுளின் ஆயுதங்கள் தெய்வீகத்தன்மை பொருந்திய சக்தியிடம் பெறப்பட்ட வேல் மற்றும் வாகனமாகிய மயில் மீது அமர்ந்த வண்ணம் இருக்கிறார். சில சமயங்களில் வாள், இலேசான ஈட்டி ஆயுதம் அல்லது சக்தி கொடுத்த வெற்றிவேலுடன் இருப்பதாக தெளிவாக சொல்லப்படுகிறது. இவரின் லேசான ஈட்டி ஆயுதம். மற்றவர்களைப் பாதுகாப்பதோடு, உண்மையின் எண்ணத்தோடு உள்ளவர்களின் துன்பத்தையும் விலக்குகிறது. மேலும், சூரனை வதம் பண்ணியவுடன்,

சூரன் சேவல்கொடியாக மாறி கார்த்திகேய கடவுளிடம் அடைக்கலமானான். இவருடைய ஆறுமுகம் ஆறுசித்திகளை உள்ளடக்கிய புனிதத்தை உணர்த்துகிறது. இவரது முகம் சித்திகள் என்ற உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும் உதாரணமாக உள்ளது.

❖❖❖❖

# வகுப்பு - VII

## 1. நீதி நூல்கள்

### கொன்றை வேந்தன்

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
வேந்தன் சீரின் ஆம் துணை இல்லை

## 2. ஐம்பெருங்காப்பியங்கள்

### அ. மணிமேகலை

எழுந்தெதிர் சென்றாங்கு, இணைவளைக் கையால்
தொழுந்தகை மாதவள் துணியடி வணங்க,
அறிவுண் டாகவென் றாங்கவன் கூறலும்

### திருவடி விளக்கம்

இணைவளை நல்லாள் இராசமா தேவி
அருந்தவர்க் கமைந்த ஆசனம் காட்டித்
திருந்தடி விளக்கிச் சிறப்புச் செய்தபின்
யாண்டுபல புக்கநும் இணையடி வகுத்தஎன்
காண்டகு நல்வினை நம்மைஈங்கு அழைத்தது

### ஆ. வளையாபதி

### துறவியர் வாழ்த்து

துக்கம் துடைக்கும் துகளது காட்சிய
நிக்கந்த வேடத்து இருடி கணங்களை
ஒக்கஅடி வீழ்ந்து உலகியல் செய்தபின்
அக்கதை யாழ்கொண்டு அமைவரப் பண்ணி

# 3. பதினெண் கீழ்க்கணக்கு

## அ. முதுமொழிக் காஞ்சி

கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று
இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலொடு இன்ன – குடிபிறந்தார்
குன்றா ஒழுக்கமாகக் கொண்டார், கயவரோடு
ஒன்றா உணரல்பாற்று அன்று

## ஆ. சிறுபஞ்ச மூலம்

தான் பிறந்த இல் நினைந்து தன்னைக் கடைப்பித்துத்
தான் பிறநூல் கருதல் பாடுணர்ந்து – தான் பிறரால்
சாவ என் வாழான் சான்றோரால் பல்யாண்டும்
வாழ்க என வாழ்தல் நன்று.

## இ. இனியவை நாற்பது

மன்றின் முதுமக்கள் வாழும் பதி இனிதே
தந்திரத்தின் வாழும் தவசிகன் மாண்பினிரே
எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டெழுதல் காலை இனிது.

# 4. திருக்குறள்

## வாய்மை

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்

உள்ளத்ததால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரில் தலை.

## பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வண்மையு ளெல்லாந் தலை

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

## பெரியாரைப் பிழையாமை

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

# 5. பாரதியார் பாடல்கள்

## கடமை அறிவோம்

கடமை புரிவார் இன்புறுவார்
என்னும் பண்டைக் கதை பேணோம்;
கடமை அறியோம் தொழிலறி யோம்;
கட்டென் பதனை வெட்டென் போம்;
மடமை சிறுமை துன்பம் பொய்
வருத்தம் நோவு மற்றிவை போல்
கடமை நினைவும் தொலைத் திங்கு
களிஉற் றென்றும் வாழ்குவமே.

## புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்.
இளைத்தல் இகழ்ச்சி
ஈகை திறன்
உடலினை உறுதிசெய்
ஊண்மிக விரும்பு
எண்ணுவது உயர்வு
ஏறுபோல் நட
ஐம்பொறி ஆட்சிகொள்
ஒற்றுமை வலிமையாம்.
ஓய்தல் ஒழி.
ஔடதம் குறை.
கற்றது ஒழுகு.
காலம் அழியேல்.
கிளைபல தாங்கேல்.
கீழோர்க்கு அஞ்சேல்.
குன்றென நிமர்ந்து நில்.
கூடித் தொழில் செய்.
கெடுப்பது சோர்வு
கேட்டிலும் துணிந்து நில்.
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்.
கோல்கைக் கொண்டுவாழ்
கவ்வியதை விடேல்.
சரித்திரத் தேர்ச்சி கொள்
சாவதற்கு அஞ்சேல்
சிதையா நெஞ்சு கொள்.
சீறுவோர்ச் சீறு.
சுமையினுக்கு இளைத்திடேல்.
சூரரைப் போற்று

செய்வது துணிந்து செய்
சேர்க்கை அழியேல்.
சைகையில் பொருள் உணர்.
சொல்வது தெளிந்து சொல்
சோதிடம் தனை இகழ்.
சௌரியம் தவறேல்.
ஞமலிபோல் வாழேல்.
ஞாயிறு போற்று
ஞிமறு என இன்புறு.
ஞெகிழ்வது அருளின்.
ஞேயம் காத்தல்செய்.
தன்மை இழவேல்.
தாழ்ந்து நடவேல்.
திருவினை வென்று வாழ்.
தீயோர்க்கு அஞ்சேல்.
துன்பம் மறந்திடு
தூற்றுதல் ஒழி.
தெய்வம் நீ என் றுணர்.
தேசத்தைக் காத்தல் செய்.
தையலை உணர்வு செய்.
தொன்மைக்கு அஞ்சேல்.
தோல்வியில் கலங்கேல்.
தவத்தினை நிதம் புரி.
நன்று கருது.
நாளெலாம் வினை செய்;
நினைப்பது முடியும்
நீதிநூல் பயில்.
நுனியளவு செல்.
நூலினைப் பகுத்துணர்.
நெற்றி சுருக்கிடேல்.
நேர்படப் பேசு.
நையப் புடை.
நொந்தது சாகும்.
நோற்பது கைவிடேல்.
பணத்தினைப் பெருக்கு.
பாட்டினில் அன்பு செய்.
பிணத்தினைப் போற்றேல்.
பீழைக்கு இடம்கொடேல்.
புதியன விரும்பு.
பூமி இழந்திடேல்.
பெரிதினும் பெரிது கேள்.
பேய்களுக்கு அஞ்சேல்.
பொய்மை இகழ்.
போர்த் தொழில் பழகு.
மந்திரம் வலிமை.
மானம் போற்று.
மிடிமையில் அழிந்திடேல்.
மீளுமாறு உணர்ந்துகொள்.
முனையிலே முகத்து நில்.
மூப்பினுக்கு இடம் கொடேல்.
மெல்லத் தெரிந்து சொல்.
மேழி போற்று.
மொய்ம்புறத் தவம் செய்.
மோனம் போற்று.

மௌட்டியந் தனைக் கொல்.

யவனர்போல் முயற்சிகொள்.

யாரையும் மதித்து வாழ்.

யௌவனம் காத்தல் செய்.

ரஸத்திலே தேர்ச்சிகொள்.

ராஜஸம் பயில்.

ரீதி தவறேல்.

ருசிபல வென்றுஉணர்.

ரூபம் செம்மை செய்.

ரேகையில் கனி கொள்.

ரோதனம் தவிர்.

ரௌத்திரம் பழகு.

லவம் பல வெள்ளமாம்.

லாகவம் பயிற்சி செய்.

லீலை இவ் உலகு.

(உ)லோக நூல் கற்றுஉணர்.

லௌகிகம் ஆற்று.

வருவதை மகிழ்ந்துண்.

வான நூல் பயிற்சி கொள்.

விதையினைத் தெரிந்திடு.

வீரியம் பெருக்கு

வெடிப்புறப் பேசு.

வேதம் புதுமை செய்.

வையத் தலைமை கொள்.

வௌவுதல் நீக்கு.

## 6. எட்டுத்தொகை

### அ. பதிற்றுப்பத்து

"தீதுகே ளிகந்து நன்று மிகப்புரிந்து
கடலுங் கானமும் பலபயம் உதவப்
பிறர் பிறர் நலையாது வேற்றுப்பொருள் வஃகாது
மையில் அறிவினர் செவ்விதின் நடந்து தம்
அமர்துணைப் பிரியாபது பாத்துண்டு மாக்கன்
மூத்த யாக்கையோடு விணியின்றி கழிய"

"இனியவை பெறினே தனித்தனி நுகர்கேம்
தருகென விழையாத் தாவில் நெஞ்சத்து
பகுத்தூண் தொகுத்த ஆண்மைப்"

## ஆ. புறநானூறு

“ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்
பொன் போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எமனம்பு கடிவிடுது  நும் அரண் சேர்மின்”

## கடவுள் வாழ்த்து

கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பில் தாரும் கொன்றை
ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப
கறைமிடறு அணியறும் அணிந்தன்று அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் காக்கினும் காக்கும்
பிறைநுதல் வண்ணம் ஆகின்று அப்பிறை
பதினெண் கண்ணும் ஏத்தவும் படுமே
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீர்அறவு அறியாக் கரகத்துத்
தாழ் சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே.

–பாரதம் பாடிய பெருந்தேவனார்.

## பஞ்சபூதங்கள் போன்றவன்

அலங்குகளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாறு கொடுத்தோய்; ;

## சொற் பிறழாமை வேண்டும்

உலவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற
ஏம முரசம் இழுமென முழங்க
நேமி உய்த்த நேய நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக !

## ஞாயிறு, திங்கள் போன்றவள்

பரிசின் மாக்கட்குவரிசையின் நல்கிப்
பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே!
இறைஞ்சுக, பெரும, நின்சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!

வாடுக இறைவநின் கண்ணி ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே!
செலிஇயர் அத்தை, நின்வெகுளி, வால் இழை
மங்கையர் துனித்த வாள்முகத்து எதிரே
ஆங்க, வென்றி எல்லாம் வென்று அகத்து அடக்கிய
தண்டாஈகைத் தகைமாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னுக பெரும! நீநிலமிசை யானே!

## தமிழ் புரந்த புலவன்

மாசற விசித் வார்புஉறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்

மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது எறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாறும்நற் றமிழ்முழுது அறிதல்

அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே; வியலிடம் கமழ,
இவண்இசை உடையோர்க்கு அல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை

விளங்கக்கேட்ட மாறுகொல்
வலம்படு குருசில்நீ ஈங்குஇது செயலே.

## 7. மூதுரை அல்லது வாக்குண்டாம்

## தன்நிலையில் தாழ்ந்தாலும் சான்றோர்களே சிறந்தவர்

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

## 8. சிரஞ்சீவிகள்

1. அசுவத்தாமன்
2. மகாபலி சக்கரவர்த்தி
3. அனுமன்
4. கிருபர்
5. பரசுராமர்
6. விபீடணன்
7. வியாசர்
8. மார்க்கண்டேய

# 9. கதை

## அதிதியை உபசரிப்பது

யாகத்திற்கான காரியங்கள் விரைவாக நடந்தன. தேவ ரிஷிகள் அங்கே நிறைந்திருந்தார்கள். கந்தர்வக் கூட்டங்கள் வந்திருந்தன. பெரும் தானங்கள் செய்யப்பட்டன. எல்லோரும் திருப்தி செய்யப்பட்டனர். அப்போது அந்த இடத்தில், உடலில் ஒரு பகுதி மட்டும் தங்கமயமாக இருந்த ஒரு கீரி வெளிப்பட்டது. இது பெரும் சப்தமிட்டு விட்டு, அங்கே கூடி இருந்தவர்களைப் பார்த்து, ‘‘குருக்ஷேத்திரத்தில் வசிக்கும் ஒரு அந்தணன் ஒரு பிடி மாவைத் தானம் செய்தான். நீங்கள் நடத்திய இந்த மாபெரும் யாகம் அந்த தானத்திற்கு ஈடாகாது. ஆகையால் பெரிய யாகம் நடத்தி விட்டதாகக் கர்வம் கொள்ளாதீர்கள்’’ என்று கூறியது. மனிதர்கள் பேசுவது போல கீரி பேசுவது கண்டு எல்லோரும் வியப்புற்றார்கள்.

அங்கு வந்திருந்த பண்டிதர்கள் அந்தக் கீரியைப் பார்த்து, ‘‘எதை ஆதாரமாகக் கொண்டு நீ இப்படிப் பேசுகிறாய்? இந்த யாகத்தில் முறைப்படி எல்லாம் செய்விக்கப்பட்டன. பலவிதமான தானங்கள் எல்லோருக்கும் அளிக்கப்பட்டன. வந்தவர்கள் அனைவரும் திருப்தியோடு திரும்பியிருக்கிறார்கள். அப்படியிருக்க, ஓர் அந்தணன் தானம் செய்த ஒரு பிடி மாவுக்கு இது ஈடாகாது என்று நீ எப்படி சொல்கிறாய்?’’ என்று கேட்டனர்.

யாகத்தை இழித்துப் பேசிய அந்தக் கீரி, ‘‘பிச்சை எடுத்துப் பிழைக்கும் அந்தணன் ஒருவன் குருக்ஷேத்திரத்தில் இருக்கிறான். அவன் தன் மனைவி, மகன், மருமகள் ஆகியோருடன் வசிக்கிறான். அவனுடைய தர்மத்தின் காரணமாக என் உடலில் ஒரு பகுதி தங்க மயமாக்கப்பட்டது. அந்த வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள். மனைவி, மகன், மருமகளோடு வசிக்கும் அந்த அந்தணன்’, அடுத்த வேளைக்கு வேண்டுமே என்பதற்காகத் தானியத்தைக் கூட சேர்த்து வைத்துக் கொள்ளும் பழக்கம் இல்லாதவன். இந்திரியங்களை வென்றவன். அவனுடைய இல்லத்திற்கு ஒருமுறை ஒரு முனிவர் வந்தார். அப்போது அந்த அந்தணனிடம் அன்று பிச்சையாகச் சேகரிக்கப்பட்ட ஒரு பிடி மாவு மட்டுமே இருந்தது. அந்தக் குடும்பத்தினர் அன்றைய உணவிற்காக, அதைத் தங்கள் நால்வருக்கும்

போதுமான அளவில், நான்காகப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் விருந்தாளி வந்து விட்டதால், அந்தணன் தனது பாகத்துக்கான மாவை அந்த முனிவருக்குக் கொடுத்து உபசரித்தான். அவருடைய பசி அடங்கியதாகத் தெரியவில்லை. அந்தணனுடைய மனைவி தன் பாகத்தைக் கொடுத்தாள். அதன் பின்னரும் விருந்தாளியாக வந்த முனிவர் போதும் என்று சொல்லாததால், மகனும், மருமகளும் தங்களுடைய பாகங்களையும் அவருக்குக் கொடுத்து விட்டனர்.

“அடுத்த தினத்திற்கு என்று உணவுப் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்ளாத அந்தக் குடும்பத்தில் நடந்த உபசரிப்பைக் கண்டதும், அந்த அந்தணரைச் சோதிக்க நினைத்து அங்கே முனிவர் உருவத்தில் வந்திருந்த தர்மதேவதை கூறியது: ‘சக்திக்குத் தக்கவாறு முழுமையாக கொடுத்து விட்ட அந்தணரே! உம்முடைய தானத்தால் நான் சந்தோஷம் அடைந்தேன். நீர் குடும்பத்துடன் சொர்க்கத்திற்கு செல்வீர். பசியானது அறிவை அழிக்கும்; தர்மத்தில் நாட்டம் கொள்ளும் புத்தியைக் கெடுக்கும்; பசியினால் பற்றப்பட்டவன், தைரியத்தையும் இழப்பான்; ஆகையால் எவன் பசியை வெல்கிறானோ அவன் மேன்மையைப் பெறுவான். தானம் செய்யும் புத்தியைக் கொள்வது கடினம்; அதிலும் உண்மையான ஆர்வத்துடன் தானம் செய்வது என்பது,’ மிகவும் அரிது. அப்படிப் பட்ட குணத்தை நீர் பெற்றிருக்கிறீர். ஆயிரம் கொடுக்க சக்தி இருக்கும்பொழுது, நூறு கொடுப்பவன்; நூறு கொடுக்க சக்தி இருக்கும்பொழுது, பத்து கொடுப்பவன் சக்திக்கு தக்கபடி தன்னிடம் இருப்தைக் கொடுப்பவன் – ஆகியோரில் தன்னிடம் இருப்பதைக் கொடுப்பவனே மேலானவன். ராஜசூய யாகங்களை நடத்துபவனும், அஸ்வமேத யாகங்களைச் செய்பவனும் கூட உமக்கு ஈடாக மாட்டான். ஒரு பிடி மாவினால் மேல் உலகத்தையே நீர் வென்றீர்.’ இவ்வாறு தர்மதேவதை கூறிய பிறகு, வான் உலகிலிருந்து ஒரு விமானம் வந்து, அந்தக் குடும்பத்தினர் எல்லோரையும் ஏற்றிச் சென்றது.”

கீரி மேலும் தொடர்ந்தது, “அப்போது அங்கே சென்ற என் மீது அங்கு நிறைந்திருந்த வாசனை, அங்கே வீழ்ந்திருந்த மாவுத்துகள், அங்கே சிந்தியிருந்த நீர் ஆகியவை என் மேல் பட்டன. இப்படி ஏற்பட்ட தொடர்பின் காரணமாக என் உடலில் ஒரு பகுதி தங்கமயமாகி விட்டது. உடலில் மீதியிருக்கும் பகுதிகளும் தங்கமயமாகாதா என்ற ஆசையின் காரணமாக நானும் பல தபோவனங்களில் சஞ்சரிக்கிறேன், யாக சாலைகளை அணுகுகிறேன். இங்கே தர்மபுத்திரர்

யாகம் செய்வதைக் கேள்விப்பட்டு இங்கு வந்தாலாவது என்னுடைய உடலின் மற்ற பகுதிகள் தங்கமயமாகாதா என்று முயற்சி செய்தேன். ஆனால் என் உடலின் பகுதிகள் தங்கமயமாகவில்லை. ஆகையால், உங்களுடைய யாகம் அந்த அந்தணனின் ஒருபிடி மாவுக்குச் சமமானது அல்ல.''

(இதன் பின்னர் மிருகங்களைக் கொல்லக் கூடிய யாகங்களை நடத்து வதை விட, கொல்லாமை நிறைந்த தர்மமே மேலானது என்று பாரதத் தில் வலியுறுத்தப்படுகிறது. தர்மபுத்திரரின் யாகத்தை நிந்தித்துப் பேசிய கீரி, ஏற்கனவே சபிக்கப்பட்ட, 'கோபம்' என்ற சக்தியே என்றும், அந்த யாகத்தை நிந்தித்து பேசியதால், அது அங்கேயே மறைந்தது என்ற குறிப்பும் பாரதத்தில் வருகிறது.)

## சுவாமி மலை

பிரம்ம தேவர், சிவபெருமானைத் தரிசிப்பதற்காகக் கைலாயத்திற்குச் சென்றார். அப்போது அங்கே முருகப் பெருமான், விரபாகு முதலானவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்த பிரம்மதேவர், அலட்சியப்படுத்திவிட்டு, மேலே சென்று சிவதரிசனம் முடித்துத் திரும்பினார். இப்போதும் பிரம்மதேவர் முருகனை லட்சியம் செய்யவில்லை, வணங்கவும் இல்லை. பார்த்தார் முருகப்பெருமான். இந்த பிரம்மதேவர் சிவதரிசனம் செய்யப் போகும் அலட்சியமாக ஆவணமாகப் போனதில் தவறில்லை. ஆனால் தெய்வதரிசனம் முடித்தும் ஆணவம் நீங்கவில்லை என்றால், அது என்ன நியாயம்? என்று எண்ணிய முருகன் பிரம்மதேவரை அழைத்தார்.

பிரம்மதேவர் வந்ததும் "நீங்கள் யார் என்ன தொழில் செய்கிறீர்கள்"? எனக் கேட்டார். "நான் பிரம்மதேவர், படைப்புத் தொழிலைச் செய்து வருகிறேன்" எனப் பதில் கூறினார் பிரம்மதேவர்.

முருகன், "படைப்புத் தொழிலை எவ்வாறு செய்கிறீர்கள்?" எனக் கேட்டார்.

பிரம்மா, "வேதங்களை ஓதிச் செய்கிறேன்" என்றார்.

"அப்படியானால் வேதங்களை ஓதிக் காட்டுங்கள்" என்றார் முருகன்.

பிரம்மா ஓம் எனத் தொடங்கினார்.

அப்போது முருகன், “இப்போது நீங்கள் சொன்ன ஓம் என்பதற்கு என்ன பொருள்?” அதைச் சொல்லுங்கள் என்றார்.

பிரம்மதேவர் விழித்தார். உடனே முருகப் பெருமான், பிரணவத்தின் பொருள் தெரியாத நீங்கள் ஆவணப்படலாமா? என்று சொல்லி பிரம்மாவின் தலையில் குட்டி, அவரைச் சிறையில் அடைத்தார்.

இத்தகவலைச் சொல்லி, பிரம்மாவை விடுவிக்கும்படி தேவர்கள் எல்லாம் சிவனிடம் வேண்டினார்கள். சிவனே நேரில் வந்து முருகனிடம் விசாரித்தார்.

பிரணவப் பொருளை அறியாமல் ஆணவ வசப்பட்டிருந்த பிரம்மனைச் சிறையிட்டேன் எனத் தந்தையை வணங்கி நடந்ததை கூறினார் முருகன்.

சிவபெருமான், “அப்படியானால், பிரணவப் பொருள் உனக்குத் தெரியுமா?” எனக் கேட்டார் சிவபெருமான். முருகன், தெரியும் என்றார்.

சொல் எனக்கு என சிவபெருமான் கேட்டார். முருகன், முறைப்படி இருந்து கேட்டால் சொல்வேன் என்றார். அதன்டி சிவபெருமான் சீடனாக இருந்து முறைப்படி கேட்க, முருகப் பெருமான் அவருக்குப் பிரணவப் பொருள் கூறினார். தந்தைக்கு இவ்வாறு உபதேசம் செய்ததால் தான் முருகனை தகப்பன் சாமி என அழைக்கிறோம். இந்த உபதேசம் நடந்த திருத்தலம் – சுவாமி மலை.

## 10. வாகனங்கள்

### பிரம்மா – அன்னம்

ஒருமுறை படைக்கும் கடவுள் பிரம்மாவிற்கும் காக்கும் கடவுள் மஹாவிஷ்ணுவிற்கும் இடையே ஒரு விவாதம் எழுந்தது. இருவரில் யார் பெரியவன் என்று, பிரம்மா இந்த பிரபஞ்சத்தில் எல்லா ஜீவராசிகளையும், மனிதர்களையும் நானே படைக்கிறேன் என்று பெருமிதத்துடன் கூறினார். உடனே மஹாவிஷ்ணு படைத்தல் மட்டும் போதாது அவை அத்தனையும் காக்கும் கடவுளாக இருந்து நானே செயல்படுகிறேன் என்றார். விவாதம் இறுதியில் பகவான் பரமேஸ்வரனிடம் சென்றது. அப்போது பரும்

ஜோதியாகத் தோன்றினார் சிவபெருமான். உடனே மஹாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து சிவனின் அடியை காண பாதாளம் வரை சென்றும் அவரால் பார்க்க முடியவில்லை என்ற வருத்தத்துடன் வந்தார். ஆனால் பிரம்மாவோ அன்னப் பறவை வடிவுடன் சென்று சிவனின் தலைபாகத்தை காண மேலே சென்றார். கடைசிவரை அவரால் காண முடியவில்லை அந்த சமயம் சிவபெருமான் திருமுடியிலிருந்து ஒரு தாழம்பூ கீழ்நோக்கி வந்து கொண்டிருந்தது. பிரம்மா அத் தாழம்பூவிடம் தனக்காக பொய் சொல்ல சாட்சியாக இருக்கும்படி சொன்னார். பிரம்மா சிவபெருமானின் தலையை பார்த்ததாக தாழம்பூவும் பொய் சாட்சி சொன்னது. இதையறிந்த சிவபெருமான் அன்று முதல் தனக்கு தாழம்பூவை அணிவிக்கக்கூடாது என்று சொன்னார். இதன் காரணமாகவே பிரம்மாவிற்கு மொத்தமே 14 கோவில்கள் உள்ளன. ஆனால் மஹாவிஷ்ணு, சிவனுக்கு எண்ண முடியாத அளவிற்கு கோவில்கள் இருக்கின்றன.

❖❖❖❖

# வகுப்பு - VIII

## 1. ஐஞ்சிறுங் காப்பியங்கள்

### அ. சூளாமணி

தோற்றமும் சுடரொளி வடிவு முன்னொவா
வேற்றுமை உடையவாய் விரிந்து தோன்றின
மாற்றம தொழிந்தனன் மதனித்த னன்மையைத்
தேற்றினன் திருமகிழ் தெய்வக் காளையே.

## கோ வந்தனம்

தேறினேன் தெய்வ மென்றே தீண்டிலே னாயினுய்யேன்
சீறடி பரவ வந்தே னருளெனத் தொழுது சேர்ந்து
நாறிருங் குழலி னாளை நாகனை விடையிற் புல்லிக்
கோ றொடுத் தாங்கன் எய்யக் குழைந்து தார் திவண்ட தன்றே

உற்ற உறுபிணி நோய்கள்
உமக்கு ஒன்று சொல்லுகேன், கேண்மின்
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார்
பேணும் திருக்கோயில்கள் கண்டீர்
அற்றம் உரைக்கின்றேன் இன்னம்
ஆழ் வினைகாள்! உமக்கு இங்கு ஓர்
பற்றில்லை கண்டீர் நடமின்
பண்டன்று பட்டினங் காப்பே

# 2. திருக்குறள்

## புலால் மறுத்தல்

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்டான்
எங்ஙனம் ஆளும் அருள்?

அருள்அல்லது யாதெனின் கொல்லாமை, கோறல்
பொருள்அல்லது அவ்வூன் தினல்.

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின்.

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

## அருளுடைமை

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

## அன்புடைமை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது.

# 3. கலிங்கத்துப் பரணி

கடற்கலிங்கம் எறிந்துசயத் தம்பம் நாட்டி
கடக்கரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்ப்படைவாள் அபயனடி அருளி னோடும்
சூடினான் வண்டையர் கோன் தொண்டைமானே.

யானைமேல் இளம்பிடியின் மேல் நிரைத்து
இடையறாது போம் எறிகடற்(கு) இளை
சேனை மாகடற்(கு) அபயன் இம்முறைச்
சேது பந்தனம் செய்தது ஒக்கவே.

## 4. அரிச்சந்திரபுராணம்

முறியுமாறுந் தருவும் முதல்கெட
முறியு மாறுந்தி முற்றி நல்மான்மத
வெறியுமாறு அடியுங் கொடு வேகமும்
வெறியுமாறிலா வெங் களிறொத்ததே

ஆடு மாசுரை யாவிடை யாழ நீர்
ஆடு மாசுரை யாவிடை யோடவே
கோடு குத்திக் கொன்றையின்
கோடு குத்திக் குலைத்துணர் வாரியே

## 5. பத்துப்பாட்டு

### அ. பொருநராற்றுப்படை

ஒல்லெனத்
திரை பிறழிய இரும் பௌத்துக்
கரை சூழ்ந்த அகன் கிடக்கை
மா மாவின் வயின் வயின் நெல்
தாழ் தாழைத் தண் தண்டலைக்
கூடு கெழீஇய குடிவயினான்
செஞ்சோற்ற பலி மாந்திய
கருங்காக்கை கவவு முனையின்
மனை நொச்சி நிழல் ஆங்கண்
ஈற்று யாமை தன் பார்ப்பு ஓம்பவும்
இளையோர் வண்டல் அயரவும் முதியோர்
அவை புகு போழுதில் தம் பகை முரண் செலவும்
முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயில் ஆல
பைம் பாகற் பழம் துணரிய
செஞ்சுளைய கனி மாந்தி
அறைக் கரும்பின் அரி நெல்லின்

இனக் களமர் இசை பெருக
வறள் அடும்பின் இவர் பகன்றைத்
தளிர்ப் புன்கின் தாழ் காவின்
நனை ஞாழலொடு மரம் குழீஇய
அவண் முனையின் அகன்று மாறி
அவிழ் தளவின் அகன் தோன்றி
நகு முல்லை உரு தேறு வீ
பொன் கொன்றை மணிக் காயா
நற்புறவின் நடை முனையின்
சுற வழங்கும் இரும் பௌவத்து
இறவு அருந்திய இன நாரை
பூம் புன்னைச் சினைச் சேப்பின்

## 6. ஐம்பெரும்காப்பியங்கள்

## அ. மணிமேகலை

### பசு வந்தனம்

### ஆதி புத்திரன் திறம் அறிவித்த காதை

தாய் இல் தூவாக் குழவித் துயர் கேட்டு ஓர்
ஆ வந்து அணைந்து ஆங்கு அதன் துயர் தீ
நாவான் நக்கி நன் பால் ஊட்டி
போகாது எழு-நாள் புறங்காத்து ஓம்ப -
வணனங்கோட்டில் ஓர் மறை ஒம்பாளன்

### பஞ்ச பூதங்கள் வந்தனம்
### (கடவுள்கந்திற் பாவை வருவது உரைத்த காதை)

"தன் உரு இல்லோன் பிற உருப் படைப்போன்
அன்னோன் இறைவன் ஆகும்" என்போர்களும்
"துன்ப நோன்பு இத்தொடர்ப்பாடு அறுத்து ஆங்

இன்ப உலகு உச்சி இருந்தும்" என்போர்களும்
"பூத விகாரப் புணர்ப்பு" என்போர்களும்
பல்வேறு சமயப் படிற்று உரை எல்லாம்

## ஆ. வளையாபதி

### ஊன் உண்பதன் தீமை

பிறவிக் கடலகத்து ஆராய்ந்து உணரின்
தெறுவதில் குற்றம் இலார்களும் இல்லை
அறவகை ஓரா விடக்கு மிசை வோர்
குறைவின்றித் தம்சுற்றம் தின்றனர் ஆவா.

### மருதநிலத்தின் வளம்

செந்நெல் கரும்பினொடு இகலும் தீஞ்சுவைக்
கன்னல்அம் கரும்புதான் கழுகைக் காய்ந்தெழும்
இன்னவை காண்கிலன் என்று பூகமும்
முன்னிய முகில்காளன் முகம்பு தைக்குமே.

### மருதநிலத்தின் வளம்

"கரும்பல்ல நெல் என்னக்
கமுகல்ல கரும்பென்னச்
சுரம்பல்லி குடைநீலத்
துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன
அமுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங் கடைசி
மடந்தையர்கள் வயல் எல்லாம்."

# 7. பாரதியார் பாடல்கள்

## புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்.
இளைத்தல் இகழ்ச்சி
ஈகை திறன்
உடலினை உறுதிசெய்
ஊண்மிக விரும்பு
எண்ணுவது உயர்வு
ஏறுபோல் நட
ஐம்பொறி ஆட்சிகொள்
ஒற்றுமை வலிமையாம்.
ஓய்தல் ஒழி.
ஔடதம் குறை.
கற்றது ஒழுகு.
காலம் அழியேல்.
கிளைபல தாங்கேல்.
கீழோர்க்கு அஞ்சேல்.
குன்றென நிமர்ந்து நில்.
கூடித் தொழில் செய்.
கெடுப்பது சோர்வு
கேட்டிலும் துணிந்து நில்.
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்.
கோல்கைக் கொண்டுவாழ்
கவ்வியதை விடேல்.
சரித்திரத் தேர்ச்சி கொள்
சாவதற்கு அஞ்சேல்
சிதையா நெஞ்சு கொள்.
சீறுவோர்ச் சீறு.
சுமையினுக்கு இளைத்திடேல்.
சூரரைப் போற்று
செய்வது துணிந்து செய்
சேர்க்கை அழியேல்.
சைகையில் பொருள் உணர்.
சொல்வது தெளிந்து சொல்
சோதிடம் தனை இகழ்.
சௌரியம் தவறேல்.
ஞமலிபோல் வாழேல்.
ஞாயிறு போற்று
ஞிமறு என இன்புறு.
ஞெகிழ்வது அருளின்.
ஞேயம் காத்தல்செய்.
தன்மை இழவேல்.
தாழ்ந்து நடவேல்.
திருவினை வென்று வாழ்.
தீயோர்க்கு அஞ்சேல்.
துன்பம் மறந்திடு
தூற்றுதல் ஒழி.
தெய்வம் நீ என் றுணர்.

தேசத்தைக் காத்தல் செய்.
தையலை உணர்வு செய்.
தொன்மைக்கு அஞ்சேல்.
தோல்வியில் கலங்கேல்.
தவத்தினை நிதம் புரி.
நன்று கருது.
நாளெலாம் வினை செய்;
நினைப்பது முடியும்
நீதிநூல் பயில்.
நுனியளவு செல்.
நூலினைப் பகுத்துணர்.
நெற்றி சுருக்கிடேல்.
நேர்படப் பேசு.
நையப் புடை.
நொந்தது சாகும்.
நோற்பது கைவிடேல்.
பணத்தினைப் பெருக்கு.
பாட்டினில் அன்பு செய்.
பிணத்தினைப் போற்றேல்.
பீழைக்கு இடம்கொடேல்.
புதியன விரும்பு.
பூமி இழந்திடேல்.
பெரிதினும் பெரிது கேள்.
பேய்களுக்கு அஞ்சேல்.
பொய்மை இகழ்.
போர்த் தொழில் பழகு.
மந்திரம் வலிமை.
மானம் போற்று.
மிடிமையில் அழிந்திடேல்.
மீளுமாறு உணர்ந்துகொள்.
முனையிலே முகத்து நில்.
மூப்பினுக்கு இடம் கொடேல்.
மெல்லத் தெரிந்து சொல்.
மேழி போற்று.
மொய்ம்புறத் தவம் செய்.
மோனம் போற்று.
மௌட்டியந் தனைக் கொல்.
யவனர்போல் முயற்சிகொள்.
யாரையும் மதித்து வாழ்.
யௌவனம் காத்தல் செய்.
ரஸத்திலே தேர்ச்சிகொள்.
ராஜஸம் பயில்.
ரீதி தவறேல்.
ருசிபல வென்றுஉணர்.
ரூபம் செம்மை செய்.
ரேகையில் கனி கொள்.
ரோதனம் தவிர்.
ரௌத்திரம் பழகு.
லவம் பல வெள்ளமாம்.
லாகவம் பயிற்சி செய்.
லீலை இவ் உலகு.
(உ)லோக நூல் கற்றுஉணர்.
லௌகிகம் ஆற்று.
வருவதை மகிழ்ந்துண்.

வான நூல் பயிற்சி கொள்.

விதையினைத் தெரிந்திடு.

வீரியம் பெருக்கு

வெடிப்புறப் பேசு.

வேதம் புதுமை செய்.

வையத் தலைமை கொள்.

வௌவுதல் நீக்கு.

## 8. எட்டுத்தொகை

## அ. புறநானூறு

### அறவழிப் போர் !

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என

### நீர் வளம் பெருக்குக

பெருமைத்து ஆகநின் ஆயுள் தானே!
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்காதூஉம் இனவாளை
நுண்ஆரல் பருவரால்
குரூஉக்கெடிற்ற குண்டுஅகழி;

### ஊனம் குறையன்று

புறஞ்சிறை மாக்கட்கு அறம்குறித்து அகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்
ஆடுகளம் கடுக்கும் அகநாட் டையே;
அதனால், அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்

## பொன் விளையும் பூமி

யாமேநின் இகழ் பாடுவோர் எருத்தடங்கப்
புகழ்பாடுவோர் பொலிவுதோன்ற
இன்று கண்டாங்குக் காண்குவம்; என்றும்
இன்சொல் என்பதத்தை ஆகுமுதி, பெரும!
ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே!

## உழவர் தரும் விருந்து

புலிபுறங் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி அரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையும் உழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையும் அறைநர்
கரும்பிற் கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிக்கு வருவிருந்து அயரம்
மென்புல வைப்பின் நன்நாட்டுப் பொருந!

மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்நோக் கினரே,
நீயே, மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றுஇரு வேந்தர் மண்நோக்கி கினையே.

## அன்னப் பறவைகள்

பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசிர்
ஆந்தை அடியுறை எனினே மாண்டநின்
இன்புறு பேடை அணியத்தன்
நன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே.

## 9. முத்தொள்ளாயிரம்

சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்ந்திட் டுயர்துரைதான் ஏறினான் - நேர்ந்த
கொடைவீர மோமெய் நிறைகுறையா வன்கட்
படைவீர மோ சென்னி பண்பு

## 10. நவரத்தினம் (நவமணிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வைரம் | 4. | மரகதம் | 7. | புட்பராகம் |
| 2. | வைடூரியம் | 5. | மாணிக்கம் | 8. | கோமேதகம் |
| 3. | முத்து | 6. | பவளம் | 9. | நீலம் |

## 11. மூதுரை அல்லது வாக்குண்டாம்

### பயனை எதிர்பார்க்காமல் நற்செயல்களைச் செய்யுங்கள்

நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

## 12. கதை

### நாகவந்தனம்

பீஷ்மர் சொன்ன கதை இது: ‘‘கோபம், ஆசை எல்லாவற்றையும் வென்றுவிட்ட ‘கௌதமி’ என்ற வயதான ஒரு பெண்மணி இருந்தாள். சிறுவனாகிய அவளுடைய மகன் ஒரு பாம்பினால் கடிக்கப்பட்டு இறந்து போய் விட்டான். இந்தக் காட்சியைக் கண்ட ‘அர்ஜுனகன்’ என்ற வேடனுக்குப் பெரும் கோபம் வந்தது. அவன் அந்தப் பாம்பைப் பிடித்துக் கொண்டு, கௌதமியிடம் வந்தான்.

‘‘மகனை இழந்து நின்ற கௌதமியைப் பார்த்து அந்த வேடன், ‘புண்ணியவதியே! உன் மகனைக் கடித்துக் கொன்ற இந்தப் பாம்பை எந்த வகையாக நான் கொல்ல வேண்டும் என்று நீ நினைக்கிறாய்? தீயில் போட்டு விடட்டுமா? துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்யட்டுமா? என்று கேட்டான்.

கௌதமி, “அர்ஜுனகா! இந்த பாம்பு நம்மால் கொல்லப் படத்தக்கது அல்ல. இதை விட்டு விடு. விதியை விட நம்மைப் பெரியவர்களாக நினைத்துக் கொண்டால், அது நாம் செய்யும் தவறாகும். புண்ணியம் செய்த மனிதன் தண்ணீரில் ஓடம் மிதப்பது போல் இந்த உலகில் வாழ்கிறான்; பாவம் செய்த மனிதன், தாங்க முடியாத சுமையினால் படகு நீரில் அமிழ்ந்து விடுவது போல் இவ்வுலகில் அழிந்து போகிறான். இயற்கையின் இந்த நியதிக்கு நாம் எல்லோரும் கட்டுப்பட்டவர்களே. இப்போது இந்தப் பாம்பைக் கொன்று விடுவதால் என் மகன் உயிரோடு திரும்பி வரப்போவதில்லை. ஆகையால், இதைக் கொன்று விடும் எண்ணத்தைக் கை விட்டு விடு” என்று கூறினாள்.

கௌதமியின் பேச்சைக் கேட்டு வேடனின் கோபம் தணிந்து விடவில்லை. “பெண்மணியே! உன்னைப் போன்ற பெரியோர்களைப் பற்றி எனக்குத் தெரியும். நீங்கள் எல்லாம் சொர்க்கத்தைப் பற்றி அறிந்த அளவுக்கு இந்தப் பூவுலகைப் பற்றி அறியவில்லை. இங்கே நடக்கும் தீமைகளையும், கொடுமைகளையும் நீங்கள் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. ஆகையால் செய்ய வேண்டிய காரியத்தையும் தவற விட்டு விடுகிறீர்கள். ஆனால், என்னைப் போன்றவர்களோ செய்ய வேண்டிய காரியத்தை உடனடியாகச் செய்து, அதன் மூலம் துயரை விலக்கிக் கொள்கிறோம். இப்பொழுது இந்தப் பாம்பைக் கொன்று அதன் மூலம் உன்னுடைய துயரை நான் அழிக்கப் போகிறேன்” என்று கூறினான்.

பாம்பைக் கொல்வதினால் பெரும் பாவம் உண்டாகும் என்றும், பழிக்குப் பழி வாங்குவதால் எந்த நன்மையும் கிட்டப் போவதில்லை என்றும் கௌதமி எவ்வளவோ எடுத்துக் கூறியும், வேடன் அவளுடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காமல் பாம்பைக் கொன்று விடுவது என்ற எண்ணத்தில் மாற்றமில்லாதவனாக இருந்தான்.

அப்போது வேடனின் கையில் சிக்கிக் கொண்டிருந்த அந்தப் பாம்பு பெருமூச்சு விட்டுக் கொண்டு, சில வார்த்தைகளைக் கூறத் தொடங்கியது. ‘‘அர்ஜுனகா! குழந்தை இறந்த விஷயத்தில் என் மீது என்ன குற்றம் இருக்கிறது? எமனின் உத்தரவு இல்லாமல் இந்த உலகில் எந்த ஜீவராசியாவது அழிந்து விடுமா? எனக்குப் பசி ஆற வேண்டும் என்பதற்காக இந்த சிறுவனை நான் கடித்திருந்தால், நீ என் மீது குற்றம் கூறலாம். ஆனால், எனக்கு இந்தச் சிறுவன் மீது எந்த விரோதமும் கிடையாது; பசியின் காரணமாகவும் நான் அவனை கடிக்கவில்லை. எமனின் கட்டளைதான் என்னை இவ்வாறு செய்யத் தூண்டியிருக்கிறது. ஆகையால் இவ்விஷயத்தில் ஏதாவது பாவம் இருக்க வேண்டுமென்றால் அது எமனைச் சாரவேண்டுமே தவிர, என்னை அல்ல.”

பாம்பின் பேச்சைக் கேட்ட அர்ஜுனகன் என்ற அந்த வேடன் சொன்னான்: ‘‘வேறு ஒருவனால் ஏவப்பட்டு நீ இந்தக் காரியத்தைச் செய்திருந்தாலும் கூட, நீயும் குற்றவாளிதான். ஒரு மண்பாண்டத்தைச் செய்வதற்கு ஒருவன் சக்கரத்தைச் சுழற்றுகிறான். அப்பொழுது மண்பாண்டத்தைச் செய்தது அவன் மட்டுமல்ல, அந்தச் சக்கரமும் கூடத்தான். ஆகையால் இவ்விஷயத்தில் நீயும் பாவம் செய்தவனே!”

வேடனின் வாதத்தைக் கேட்ட பாம்பு மீண்டும் கூறியது: ‘‘மண்பாண்டம் செய்வதற்குப் பயன்படும் சக்கரம் தானாக இயங்க முடியாது. அதை ஒருவன் சுழற்றினால்தான் அது இயங்கும். ஆகையால் மண்பாண்டத்தைச் செய்வது அந்தச் சக்கரம் அல்ல, அந்தத் தொழிலாளிதான். அதேபோல என்னை நடத்தியவன் எமன் நடத்தப்பட்டவன் நான். ஆகையால் என் மீது குற்றமில்லை.”

இவ்வாறு பாம்பும், வேடனும் வாதப் பிரதிவாதங்களைச் செய்து கொண்டிருந்த போது, எமன் அங்கே வந்து, பாம்பைப் பார்த்துச் சொன்னான்: ‘‘நான் உன்னை ஏவியதற்குக் காரணம் காலத்தினால் நான் ஏவப்பட்டதுதான். இந்த குழந்தை இறந்ததற்கு நீயும் காரணம் அல்ல, நானும் காரணமல்ல, காற்றினால் இழுக்கப்படும் மேகங்கள் எப்படித் தங்கள் விருப்பம் இல்லாமலே பல திசைகளிலும் செல்கின்றனவோ, அப்படிக் காலத்தினால் இழுக்கப்பட்டு நான் இயங்கிக் கொண்டிருக்கிறேன். இவ்வுலகில் எல்லாச் செயல்களும் காலதேவனின்

ஆணைக்குட்பட்டவையே. ஆகையால் காலதேவனுக்கு உட்பட்டுச் செயலாற்றிக் கொண்டிருக்கும் என் மீது குற்றம் கிடையாது.”

எமனுடைய சொல்லைக் கேட்ட பாம்பு அவனைப் பார்த்து, ‘‘உன் மீது குற்றம் இருக்கிறதா, இல்லையா என்பது பற்றி எனக்குப் பெரிய அக்கறை இல்லை. நான் உன்னால் ஏவப்பட்டவன் என்று மட்டும்தான் நான் கூறுகிறேன். நீ என்னை ஏவியதற்கு என்ன காரணம் என்று ஆராய்ச்சி எனக்குத் தேவை இல்லை” என்று கூறி விட்டு, வேடனைப் பார்த்து, எமன் பேசியதைக் கேட்ட பிறகும் கூட, நீ என் மீது குற்றம் சொல்வது நியாயமல்ல. நான் ஏவப்பட்டவன், என்னைத் துன்புறுத்தாதே என்று கூறியது.

எமனுக்கும், பாம்புக்குமிடையே நடந்த உரையாலைக் கேட்ட பிறகும் கூட கோபம் தணியாத வேடன், அந்தப் பாம்பைப் பார்த்து, ‘‘நீ ஏவப்பட்டவன் என்பதால் நீ நிரபராதி ஆகிவிட்டாய் என்று நான் ஏற்கவில்லை. இந்தச் சிறுவன் இறந்ததற்கு எமனோடு சேர்ந்து நீயும் காரணம்தான். ஒரு பாவமும் அறியாதவர்களின் உயிரை முடிக்கும் எமனையும் நான் இகழ்கிறேன். உன்னையும் கொல்லத்தான் போகிறேன்’ என்று தீர்மானமாகச் சொன்னான்.

இதைக் கேட்ட எமன், வேடனைப் பார்த்து, ‘‘நடந்த நிகழ்ச்சியின் தன்மையை நீ நன்றாக ஆராய்ந்து பார்த்தால் என் மீதோ, இந்தப் பாம்பின் மீதோ தவறில்லை என்றும் – எல்லாமே காலத்துக்குட்பட்டு நடக்கும் செயல்கள்தான் என்றும் நீ புரிந்து கொள்வாய்’ என்று கூறினான்.

இப்படிப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் போது, காலதேவன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் அந்த வேடனைப் பார்த்துச் சில விவரங்களை எடுத்துரைத்தான். ‘‘குழந்தை இறந்ததற்குப் பாம்போ, எமனோ அல்லது நானோ காரணமல்ல. ஒரு நிகழ்ச்சி நடக்கும் பொழுது, அதற்கு யார் பொறுப்பு என்று அறிய வேண்டுமானால், அந்த நிகழ்ச்சி நடப்பதற்கு முதற் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இந்த சிறுவன் இறந்ததற்குக் காரணம் அவனுடைய முன்வினைப் பயன். முன் பிறவியில் அவன் செய்த செயல்களின் பயன் இன்று அவனை வந்தடைந்திருக்கிறது. நாங்கள் அனைவருமே ஜீவராசிகளின் செயல்களுக்கு உட்பட்டவர்கள். சகல ஜீவராசிகளும் அவற்றின் செயல்களுடைய பலனை அனுபவிக்கின்றன.

அந்தச் செயல்களின் பலனைக் கொண்டு வந்து சேர்ப்பிப்பவர்களே நாங்கள். ஆனால் மூல காரணம் அந்தச் செயல்கள்தான்! செயல்கள் என்ற அந்தக் கர்மங்கள் எங்களை ஏவுகின்றன. அதன்படி நாங்கள் செயல்படுகிறோம். ஆகையால், இந்தக் குழந்தை இறந்ததற்கு அதனுடைய பூர்வஜென்ம செயல்களே காரணம். இதை நீ புரிந்து கொண்டால் என்னையோ, எமனையோ, இந்தப் பாம்பையோ குற்றம் சொல்ல மாட்டாய் என்றான்.”

இவ்வாறு காலதேவன் பேசிய பிறகு, கௌதமி என்ற அந்தப் பெண்மணி, வேடனிடம் தன்னுடைய மகன் இறந்ததற்கு அவனுடைய முன் ஜென்மச் செயல்களும், தன்னுடைய பூர்வ ஜென்மச் செயல்களும் கூட காரணம் என்பதை விளக்கி, பாம்பை விடுதலை செய்ய சொன்னாள். அவனும் அவ்வாறே செய்தான்.

## ஓர் அழகிய புறா

ஒரு பருந்தினால் துரத்தப்பட்டு, சிபி என்ற அரசனை சரணடைந்தது. பயந்து போய் தன்னுடைய மடியில் விழுந்த புறாவை அரசன் தேற்றினான். “நீ யாரிடத்தில் பயந்து இப்படி வருகிறாய்? உனக்கு அச்சத்தை ஏற்படுத்தியது யாராக இருந்தாலும், நீ பயப்படத் தேவையில்லை. உனக்கு நான் அபயம் தந்தேன்! நீ கவலையின்றி இரு” என்று கூறினான்.

அப்போது புறாவைத் துரத்தி வந்த பருந்து அங்கே வந்தது. அது அந்த அரசனைப் பார்த்துச் சில வார்த்தைகளைக் கூறியது. ‘‘அரசனே! இந்தப் புறாவானது இயற்கையின் நியதிப்படி எனக்கு உணவாகிற ஜீவன். இது என்னிடமிருந்து தப்பி உன்னை அடைந்து இருக்கும்பொழுது, நீ அதைக் காப்பாற்றுவது முறையல்ல. இதனுடைய மாமிசம் எனக்கு உரியது. அது தெய்வத்தின் கட்டளை. என்னால் துரத்தப்பட்டு, எனது நகங்களால் காயப்படுத்தப்பட்டு, தன்னுடைய இயலாமையால் உன்னை நாடி வந்திருக்கும் அந்தப்புறாவை நீ காப்பாற்றுவது என்னுடைய உணவை நீ பறிப்பது போல் ஆகிறது. அந்த காரியம் உன்னால் செய்யத் தகுந்தது அல்ல. என் உணவை நீ பறிக்காதே. உன்னுடைய சொத்தை யாராவது அபகரித்தால் அப்போது உன்னுடைய வீரத்தை நீ காட்டுவது முறையாக இருக்கும். ஆனால் என்னுடைய உணவாகிய இந்தப் புறாவை நீ

அபகரித்து உன்னுடைய பராக்கிரமத்தைக் காட்டாதே” என்று அந்தப் பருந்து கூறியது.

பருந்து சொல்வதைக் கேட்ட அரசன் அதற்குப் பதில் சொல்லலுற்றான்: ‘‘இந்தப் புறாவை விட்டால் உனக்கு வேறு உணவு கிடையாது என்பதை ஒப்புக் கொள்வதற்கில்லை.

உன் பசியை நீ தீர்த்துக் கொள்வதற்காக இன்னமும் எத்தனையோ ஜீவராசிகள் இருக்கின்றன. அவற்றை நீ ஏற்கலாம். என்னைச் சரணமடைந்தவனைக் கைவிடுவது என்னால் முடியாது. அடைக்கலம் என்று வந்தவனைக் காப்பாற்றுவது நான் ஏற்றிருக்கும் விரதம். ஆகையால், இந்தப் புறாவைக் காப்பாற்றுவது என்னுடைய தர்மம் என்றான்.”

இப்படிக் கூறிய அரசனைப் பார்த்துப் பருந்து, “சிபிச் சக்ரவர்த்தியே! வேறு ஜீவராசிகளை ஏற்குமாறு நீ எனக்கு அறிவுரை கூறத் தேவையில்லை. இந்தப் புறாவைக் காப்பாற்றுவதில் உன் மனதில் அவ்வளவு உறுதி இருந்தால், அந்தப் புறாவின் மாமிசத்திற்குச் சமமாக உன் உடலிலிருந்து மாமிசத்தை எடுத்து ஒரு தராசில் வைத்து, அதை எனக்குக் கொடுத்து விடு அப்பொழுது இந்தப் புறாவை நான் விட்டு விலகி விடுகிறேன்” என்று கூறியது.

‘‘இதைக் கேட்ட சிபி, சிறிதும் தயங்காமல் ஒரு தராசை எடுத்து, அதில் தன் உடலில் இருந்து மாமிசத்தை அறுத்து வைக்கத் தொடங்கினான். இந்தச் செய்தி அறிந்த அந்தப்புரத்திலிருந்து அவனுடைய மனைவிமார்களும், மற்றும் மந்திரிகளும், வேலைக்காரர்களும் ஓடி வந்து அவனைத் தடுக்கும் முயற்சியில் இறங்கினார்கள். பெரும் ஓலம் எழுந்தது. பூமியே நடுங்கியது.

‘‘அரசனோ இவற்றையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல், தராசின் ஒரு தட்டில் புறாவை வைத்து விட்டு, தன்னுடைய விலாப்புறங்களிலிருந்தும், தொடைகளிலிருந்தும், கைகளிலிருந்தும் மாமிசத்தை அறுத்து அறுத்துத் தராசின் மற்றொரு தட்டில் வைத்துக் கொண்டிருந்தான். எவ்வளவுதான் அவன் உடலில் இருந்து மாமிசத்தை வெட்டி வைத்தாலும், அது அந்தப் புறாவின் எடைக்குச் சமமாகவில்லை. அப்பொழுது ஒரு முடிவுக்கு வந்த சிபிச் சக்கரவர்த்தி, இனி மாமிசத்தை வெட்டி வைப்பதில் அர்த்தமில்லை

என்று தீர்மானித்து, புறாவுக்குச் சமமாக தன்னையே நிறுத்திக் கொடுக்க எண்ணி, தானே தராசின் மறுதட்டில் ஏறி நின்றான்.

இதைக் கண்டு இந்திரனும், அவனைத் தொடர்ந்து மற்ற தேவர்களும் அவன் முன் வந்தார்கள். தேவ வாத்தியங்கள் முழங்கின. சிபி சக்கரவர்த்தியின் மீது அமிர்தம் பொழியப்பட்டது. பூமாரி பொழிந்தது. அப்சரஸ்கள் கூடி நின்று நடனமாடினர். ரிஷிகள் வந்து நின்று வாழ்த்தினர். தேவ லோகத்திலிருந்து ஒரு விமானம் வந்து சிபி சக்கரவர்த்தியை அவனுடைய மனித உடலுடனேயே மேலுலகம் அழைத்துச் சென்றது. அழிவில்லாத சொர்க்கத்தை அவன் அடைந்தான்.''

இவ்வாறு சிபிச் சக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறிய பீஷ்மர், தர்மபுத்திரரைப்பார்த்து, ''யுதிஷ்டிரா! சரணடைந்தவர்களுக்குப்பாதுகாப்பை அளிப்பவன், சிபிச் சக்கரவர்த்தி போலவே மேன்மையுறுகிறான். தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பாற்றி, எல்லா ஜீவராசிகளிடமும் கருணை காட்டுகிறவன் நற்கதியை அடைகிறான். மூவுலகிலும் புகழ் பெற்ற சிபிச் சக்ரவர்த்தி போலவே மேன்மையுற வேண்டுமானால், அவரைப் போலவே சரணடைந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த சரித்திரத்தைக் கேட்பதனாலேயே மனிதனுக்கு புண்ணியம் கிட்டுகிறது என்றும் கூறப்படுகிறது'' என்று விளக்குகிறார்.

## ராமாயணம் பகீரத பிரயத்னம்

## கங்கா வந்தனம்

*பகீரதன் கடும் தவம் புரிந்து, ப்ரம்ம தேவனிடம் வரம் பெற்று, கங்கையை பூமிக்குக் கொண்டு வந்தது; கங்கையைத் தன் தலையில் தாங்க பரமசிவன் சம்மதித்தது; கங்கை சிவபெருமானின் தலையில் விழுந்து, பின்னர் பூமியில் பாய்ந்தது; ஜான்ஹு மஹரிஷியின் கோபம்; கங்கைக்கு பாகீரதி என்ற பெயர் வந்தது; பாற்கடல் கடையப்பட்டு அமிர்தம் வெளியாகிய விவரம்;*

### விசாலை நகரின் சரித்திரம்...

''கங்கை நதி பூமிக்குக் கொண்டு வரப்படாத நிலையிலேயே, காலமாகிய ஸகர மன்னனின் பேரன் அம்சுமான் பட்டத்திற்கு வந்தும்

கூட, தன்னுடைய மகன் திலீபனிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு கடும் தவத்தை மேற்கொண்டான். ஆனால், கங்கை நதியைக் கீழே பூமிக்குக் கொண்டு வர முடியவில்லை. அதன் பின்னர், அவனுடைய மகன் திலீபன் எவ்வளவோ முயற்சித்தும், கடும் விரதங்களை மேற்கொண்டும், கங்கை நதியை பூமிக்குக் கொண்டு வரமுடியாமல் காலம் சென்றான். அவனுக்குப் பின் பட்டம் எய்திய பகீரதன், மகப்பேறு இல்லாத காரணத்தினால், ராஜ்ய பாரத்தை மந்திரிகளிடத்தில் ஒப்படைத்து விட்டு, ஐந்து தீக்களுக்கு இடையே நின்று கடும் தவத்தைச் செய்ய தொடங்கினான். அவனுடைய தவத்தின் வலிமையைக் கண்டு ப்ரம்ம தேவர் மகிழ்ச்சி அடைந்து, அவனைப் பார்த்து "உன்னுடைய தவத்தினால், நான் பெரும் சந்தோஷமடைந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்" என்று கூறினார்.

"ஸகர மன்னனுடைய மகன்கள் 60,000 பேருக்குத் தர்ப்பணநீரை நான் செலுத்த வேண்டும். அவர்களுடைய சாம்பல் கங்கை நீரினால் நனைக்கப்பட வேண்டும். எனக்கும் மக்கள்பேற்றை அளித்து எங்கள் சந்ததி வளர்வதற்கும் நீங்கள் அருள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

ப்ரம்ம தேவர் "கடுமையான தவம் புரிந்தவனே, பகீரதா! இக்ஷ்வாகு வம்சம் விருத்தி அடையும் வகையில், உனக்கு மக்கள் பேறு உண்டாகட்டும், கங்கை ஹிமவானுக்குப் பிறந்தவள். அவளைத் தாங்குவது என்றால், அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அவள் பூமிக்கு வந்தால் தாங்கக் கூடிய சக்தி யாருக்கும் கிடையாது. சிவபிரானைத் தவிர அந்தக் காரியத்தைச் செய்யக் கூடியவர் எவரும் இல்லை. அப்படி சிவ பெருமானால் தாங்கப்படாமல் கங்கை பூமியை அடைந்தால், பூமாதேவியினால் அதைத் தாங்க முடியாது. ஆகையால் கங்கையைத் தாங்க, சிவனுடைய சம்மதத்தை நீ பெற்றாக வேண்டும். அப்படிப் பெற்றால் கங்கையை நீ பூமிக்குக் கொண்டு வந்து விடலாம். உனக்கு மங்களம் உண்டாகட்டும்" என்று ஆசீர்வதித்தார்.

இதையடுத்து பகீரதன், பரமசிவனை மனதால் நினைத்து கடும் தவம் புரிந்தான். உள்ளம் குளிர்ந்த சிவபிரான், அவன் முன் தோன்றி, "உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். மலைகளின் அரசனாகிய ஹிமவானின் மகள் கங்கை பூமிக்கு வரும்போது, அவளை நான் என் தலையில் தாங்குகிறேன். கவலையை விடு" என்று வரம் அளித்தார்.

ப்ரம்மன் ஏற்கனவே கூறியதற்கு இணங்க, தாங்க முடியாத வேகத்துடன் கங்கை, பிரவாகமாக ஆகாசத்தில் இருந்து பூமிக்கு இறங்கினாள். தன்னைத் தாங்குவதற்காக, தயாராக நின்ற சிவனையும் அடித்துக் கொண்டு போகும் வேகத்துடன் வீழ்வது என்ற எண்ணத்தோடு, கங்கை பாய்ந்து வந்த போது, பரமசிவன் அவளுடைய இறுமாப்பை அடக்க நினைத்தார். கங்கை அவருடைய தலையில் வீழ்ந்தாள். ஆனால் அதன் பின்னர் அவள் எவ்வளவோ முயற்சித்தும், அவருடைய ஜடை முடியிலிருந்து, தப்பிக் கீழே இறங்க இயலவில்லை.

இப்படி கங்கை நதி சிக்குண்டதைக் கண்ட பகீரதன், மேலும் தவம் புரிந்தான். மீண்டும் அவனுக்கு அருள விரும்பிய சிவபிரான், தன் முடியில் இருந்து கங்கையை விடுவித்து, ப்ரம்மனால் சிருஷ்டி செய்யப்பட்ட பிந்து, சரஸ் என்னும் நீர் நிலையில் விட்டார். அப்போது கங்கை நதியில் ஏழு நீரோட்டங்கள் உண்டாயின. அவற்றில் மூன்று கிழக்கு திசையை நோக்கிச் சென்றன. மேலும் மூன்று மேற்கு திக்கை நோக்கிப் பாய்ந்தன. ஏழாவதான நீரோட்டம், பகீரத மன்னனைப் பின் தொடர்ந்து சென்றது.

‘‘இந்த அற்புதக் காட்சியைக் காண தேவர்களும், ரிஷிகளும், கந்தவர்களும், யட்சர்களும் கூடினார்கள். இப்படி தேவ கணங்களால் சூழப்பட்ட வானம், ஆயிரக்கணக்கான சூரியன்களையுடைய பிரதேசமாகப் பிரகாசித்தது. பரமசிவனின் தலையில் விழுந்து, அங்கிருந்து பூமியில் பாய்ந்ததால், கங்கை நீர் பாவங்களைப் போக்க வல்ல புனிதத் தன்மை உடையதாக ஆயிற்று. சில சாபங்களின் காரணமாக, சொர்க்கலோகத்திலிருந்து பூமியை அடைந்திருந்த பலர், அப்பொழுது அந்த நதியில் நீராடி பாவங்களை நீக்கியவர்களாகி, நல்ல உலகங்களை அடைந்தார்கள்.

உலகமே கங்கை நீரால், புனிதமடைந்தது. பகீரதன் முன் செல்ல, அவனைப் பின் தொடர்ந்து கங்கை செல்ல, தேவர்களும் ராட்சர்களும், கின்னரர்களும், கந்தர்வர்களும், ரிஷிகளும், அப்சரஸ்களும் – அதைத் தொடர்ந்து சென்றார்கள்.

‘‘போகிற வழியில் கங்கை நதி, ஜான்ஹு என்ற பெயருடைய ஒரு பெரும் முனிவருடைய யாக பூமியை அழித்து விட்டது. இதைக் கண்டு கோபமுற்ற ஜான்ஹு முனிவர் தன்னுடைய மாபெரும் யோக சக்தியின் மூலமாக, அந்த கங்கை நதி நீரையே அப்படியே குடித்து விட்டார். தேவர்களும், ரிஷிகளும் இதைக் கண்டு திகைத்தனர்.

பின்னர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கோபம் தணிந்தவராக, ஜான்ஹு மஹரிஷி, கங்கை நீரை மீண்டும் வெளியெ விட்டார். அதிலிருந்து கங்கை, ஜான்ஹு மஹரிஷிக்கு மகள் முறை ஆவாள் என்று தேவர்களும் முனிவர்களும் வாழ்த்த, அதன் காரணமாக கங்கைக்கு 'ஜான்ஹவி' என்ற பெயரும் உண்டாயிற்று. மீண்டும் கங்கை, பகீரதனைப் பின் தொடர்ந்து சென்று, பாதாள லோகத்தை அடைய, அங்கே சாம்பலாகிக் கிடந்த ஸகரனின் மகன்கள் மீது அவள் பாய்ந்தாள். அதன் காரணமாக அவர்கள் சொர்க்க லோகத்தை அடைந்தார்கள்.

ப்ரம்ம தேவர் இந்த மாபெரும் சாதனையைப் புரிந்த பகீரத மன்னனைப் பார்த்து, ''மனிதர்களில் சிறந்தவனே! உன்னுடைய சாதனையின் காரணமாக ஸகரனின் மக்கள் 60,000 பேரும் நல்லுலகை எய்தினார்கள். உன்னால் பூமிக்குக் கொண்டு வரப்பட்ட கங்கை, உனக்கு மகள் ஆகிறாள். ஆகையால் அவள் பெயர் 'பாகீரதி' என்று விளங்குவதாக! தேவலோகத்தில் பாய்ந்து கொண்டிருந்த கங்கை, உன் முயற்சியின் காரணமாக பூவுலகிலும், பாதாள உலகிலும் பாய்கிறாள். இப்படி மூன்று வழியாகப் பாய்வதால் 'த்ரிபதகை' என்றும் அவள் போற்றப்படுவாள். உன் முன்னோர்களால் செய்ய முடியாத காரியத்தை நீ செய்து முடித்தாய். இதனால் உன் புகழ் பூமியில் என்றும் அழியாமல் இருக்கும்" என்று ஆசீர்வதித்தார்.

## அஹிம்சையின் மேன்மை

*தர்மபுத்திரர் பீஷ்மரிடம் கேட்டுத்தெளிவு பெற்ற கதை இது.*

தர்மபுத்திரர், ''வேதத்தில் கூறப்பட்டிருப்பதே தர்மநெறி என்று சொல்லப்படுகிறது. அதே சமயத்தில், பெரியோர்கள் செல்லும் வழி தர்மத்தின் பாதை என்றும் கூறப்படுகிறது. ஆனால், யார் பெரியோர் என்று அறிவதற்கே, அவர்கள் தர்மத்தின் பாதையில் செல்கிறார்களா இல்லையா என்பதைத்தான் கவனிக்க வேண்டி இருக்கிறது. அப்படியிருக்க, எது தர்மம் என்று அறிந்தால் அல்லவா எவர் பெரியோர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்? எவர் பெரியோர் என்பதைப் புரிந்து கொண்டால்தானே அவர்கள் செய்வதை வைத்து இது தர்மம் என்று தெரிந்து கொள்ள முடியும்? இது முடிவில்லாத வட்டமாக இருக்கிறதே? இதைத் தவிர, சாதாரண நிலையில்

கடைப்பிடிக்க வேண்டிய தர்மம் ஒன்று; ஆபத்துக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மமோ வேறொன்று, நான்கு யுகங்களிலும் தர்மம் மாறுபாடு அடைகிறது என்றும் அறிகிறோம். வேதங்களின் அடிப்படையில்தான் தர்ம நெறிமுறைகளை வகுக்கும் 'ஸ்மிருதி'கள் செய்யப்பட்டிருக்கின்றன. வேதங்களும், ஸ்மிருதிகளும் ஒன்றோடு ஒன்று முரண்படும்போது தர்மம் என்று எதை எடுத்துக் கொள்வது?

காலப்போக்கில் வறண்டு போகும் சிறிய நீர்க் குட்டைகள் போல, ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட தர்மங்கள் கலியுகத்தில் மறைந்து அழிந்து போகவும் செய்கின்றன. ஒரு நேரத்தில் ஒருவனுக்குச் செல்லுபடியாகக் கூடிய தர்மம், மற்றொரு நேரத்தில் மற்றொருவனுக்குப் பொருந்தாததாக இருக்கிறது. இது பற்றிய விளக்கத்தையும் எனக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.'' எனக் கேட்டார்.

இவ்வாறு கேட்ட தர்மபுத்திரரைப் பார்த்து பீஷ்மர், ''தர்மத்தின் பாதை பற்றி 'ஜாஜலி' என்ற முனிவருக்கும், 'துலாதாரன்' என்கிற வியாபாரிக்கும் இடையே ஒரு விவாதம் நடந்தது. அதை உனக்குச் சொல்கிறேன்'' என்று கூறித் தனது விளக்கத்தை ஆரம்பித்தார்.

''ஒரு காட்டில் ஜாஜலி என்ற பெயருடைய ஒரு பிராமணர், பெரும் தவங்களைச் செய்து கொண்டிருந்தார். கடுமையான விரதங்களின் மூல மாகவும், தவத்தின் மூலமாகவும் முனிவர் என்ற தகுதியையும் அவர் அடைந்தார். சூறைக் காற்று, கடும் வெயில், பெருமழை – எல்லாவற்றையும் ஒன்று போல் பாவித்துத் தனது தவத்தை அவர் செய்து கொண்டிருந்தார். அவர் உடல் துரும்பாக வற்றியது. அவர் நிறம் கறுத்தது. அவருடைய தலைமுடி சிக்குற்று சடை ஆகியது. அதில் இரண்டு குருவிகள் கூடு கட்டி விட்டன. ஆண் குருவியும், பெண் குருவியும் அந்தக் கூட்டிலே வசிக்கத் தொடங்கி, அங்கேயே முட்டையிட்டு குஞ்சுகளும் பொரித்தன. இவ்வளவு நடந்தும் ஜாஜலி இதைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல், அந்தக் குருவிகளையும் விரட்ட நினைக்காமல், தனது தவத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார். குருவிகள் இரை தேடப் போவதும் திரும்பி வருவதுமான அவர் தலையிலேயே வாசம் செய்தன.''

பீஷ்மர் தொடர்ந்தார், ''குஞ்சுகள் பெரிதானவுடன் அவை அந்தக் கூட்டை விட்டுப் பறந்து போய் விட்டன. ஆண் குருவியும், பெண் குருவியும் கூட

வெளியேறி விட்டன. பல நாட்கள் கழித்தும் அவை திரும்பவில்லை. இதை ஜாஜலி பார்த்தார். ‘எனது தலை முடியில் இரண்டு பறவைகள் கூடு கட்டி, முட்டையிட்டு குஞ்சு பொரித்து அவையும் பெரிதாகி, தங்கள் விருப்பப்படி பறந்து செல்லும் வரை, நான் அப்பறவைகளுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறேன்.

இப்படி நடந்து கொண்டதால், நான் தர்மத்தையும் முழுமையாக நடத்தி முடித்து விட்டேன். இனி நான் அடைய வேண்டிய பெருமை எதுவும் இல்லை’ என்று நினைத்து, அவர் பெரும் கர்வம் கொண்டார். நதியில் நீராடி, சூரியனை நோக்கி ஜபம் செய்து, ‘என்னால் தர்மம் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு விட்டது. நான் உயர்நிலை அடைந்து விட்டேன்’ என்று தனது உடலைத் தட்டிக் கொண்டே கூறினார் அவர்.

‘‘ஜாஜலி இப்படிக் கூறியபோது வானத்திலிருந்து ஓர் ஒலி உண்டாயிற்று. ‘ஜாஜலி! காசியில் வசிக்கும் துலாதாரனுக்குச் சமமாக நீர் ஆக மாட்டீர். அப்படிப்பட்ட தர்மவானாகிய அவன் கூட, நீர் சொல்லிக் கொள்வது போல் சொல்லிக் கொள்ள மாட்டான். உமக்கு இந்த கர்வம் தகாது’ என்று அந்த அசரீரி வாக்கு கூறியது.

‘‘இதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற ஜாஜலி, துலாதாரன் என்பவனைக் கண்டு பிடிக்கும் தீர்மானத்துடன் காசிக்குச் சென்றார். அங்கு விசாரித்து, துலாதாரன் என்பவன் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு வைசியன் என்று தெரிந்து கொண்டார்.

அவனை அவர் அடைந்தபோது, அவன் அவரை வரவேற்று, ‘பெரும் தவம் செய்து, தலையிலேயே கூடு கட்டிய குருவிகளையும் பாதுகாத்து, கிடைப்பதற்கரிய புண்ணியத்தைப் பெற்றவரே! அசரீரியின் வாக்கைக் கேட்டதனால் அல்லவா நீர் என்னை நாடி வந்திருக்கிறீர்’ என்று கேட்டான்.

‘‘ஜாஜலி வியப்பு மேலும் அதிகமாயிற்று. ‘வர்த்தகனே! பலவிதமான பொருட்களை விற்று நீ வாழ்க்கை நடத்துவதை நான் பார்க்கிறேன். ஆனால் நீயோ பெரும் ஞானம் உடையவனாக இருக்கிறாய். இது எப்படி? என்று அவர் கேட்டார்.

‘‘வர்த்தகனாகிய துலாதாரன் சொன்னான் : ‘‘நான் இந்தத் தொழிலை நேர்மையாகச் செய்கிறேன். எனது என்ற எண்ணத்தை அகற்றி

இருக்கிறேன். நீரில் மிதக்கிற ஒரு மரக்கட்டையுடன் வேறு ஒரு கட்டையும் சேர்கிறது; சிறிது நேரத்தில் பிரிகிறது; இலைகளும், குப்பைக் கூளங்களும் அந்த மரக்கட்டையுடன் வந்து ஒட்டிக் கொள்வதும் உண்டு; பிறகு பிரிவதும் உண்டு. இதே போல்தான் மனிதனுக்கும் வாழ்க்கை எனும் நதியில் பல தொடர்புகள் ஏற்படவும் செய்கின்றன; பிறகு விலகவும் செய்கின்றன, இதில் 'எனது' என்ற எண்ணம் அர்த்தமற்றது. இதைத் தவிர, நான் எந்த ஒரு ஜீவனுக்கும் தீங்கு இழைக்கவில்லை; எவனைக் கண்டு, எந்த ஒரு ஜீவனும் பயப்பட வேண்டியதில்லையோ, அவன் எதற்கும் அச்சப்பட வேண்டியதில்லை. எவனைக் கண்டு மற்றொரு ஜீவனுக்குப் பயம் இருக்கிறதோ, அவனுக்கு நிம்மதியும் இல்லை, உயர்வும் இல்லை. பெரியவர்கள் சென்ற பாதையில் போகும்போது கூட, அவர்கள் சில தவறுகளைச் செய்திருந்தாலும், அதை விலக்குவது அறிவு உள்ளவனின் கடமை.

பிறருக்கு துன்பம் விளைவிக்காமல் இருப்பதுதான் எல்லாத் தர்மங்களிலும் உயர்ந்த தர்மம். கடும் தவங்கள், பெரும் யாகங்கள், சத்தியம் தவறாமை, தாரளமான கொடைகள் – போன்ற எல்லாவற்றின் மூலம் அடையக் கூடிய மேன்மையை, அஹிம்ஸை ஒன்றினால் மட்டுமே அடைந்து விட முடியும்.

அதே சமயத்தில், ஒரு பலனைக் கருதி, எந்த தர்மத்தையும் கடைப்பிடிப்பவன் மேன்மை பெறுவதில்லை. தர்மத்தைக் கடைப்பிடிப்பது கடமை என்ற நினைப்பில் மட்டுமே தர்மத்தின் பாதையில் செல்பவனே மேன்மை அடைகிறான். நீ கடும் தவங்களைப் புரிந்தாலும், அதன் பலனை எதிர்பார்த்ததால், நீ அடைய வேண்டிய மேன்மை உனக்கு இன்னமும் கிட்டவில்லை. நான் உன்னைப் போன்று கடும் தவங்கள் புரிந்தவனல்ல. ஆனால் பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பதால், நான் காப்பாற்றப்படுவதாக நினைக்கிறேன். தர்மங்களில் உயர்ந்தது அஹிம்சை. பலனை எதிர் நோக்காமல் அதைக் கடைப்பிடிப்பவன் தெய்வங்களால் விரும்பப்படுகிறான். இது எனது கொள்கை.'

# 13. வாகனங்கள்

## விஷ்ணு - கருட வாகனம்

காசியப ரிஷியின் புதல்வன் கருடாழ்வார் என்ற கருடன். காசியபருக்கு இரு மனைவிகள் வினதா மற்றும் கத்ரு. இவர்கள் பிரஜாபதி தக்ஷாவின் குழந்தைகள். வினதாவிற்கு இரு புதல்வர்கள். கத்ரு விரும்பியவண்ணம் 1000 பாம்பு குழந்தையாக வேண்டினாள். இருவரும் முட்டையிட்டார்கள். கத்ருவின் முட்டைகள் அடைகாத்த பிறகு 1000 பாம்புகளாக முட்டை களிலிருந்து வெளியே வந்தன. வினதா ஈன்ற இரண்டு முட்டைகள் அடை காக்க தேவையான கால அவகாசத்திற்கு முன்பே ஒரு முட்டையை உடைத்த பொழுது அது பாதி மேல்பாகம் மனிதனாக உருக்குலைந்த நிலையில் வெளியே வந்தது. பாதி உருக்குலைந்த நிலையில் உள்ள பிள்ளை, தன் தாயை "உன் சகோதரி கத்ருவிற்கு அடிமையாக இருக்கும்படி" சாபமிடுகிறான். "உனக்கு எப்பொழுது இரண்டாவது குழந்தை பிறக்கிறதோ அவன் உன்னை சாபத்திலிருந்து விடுவிப்பான்" என்று கூறிய முதல் பிள்ளை அருணன் பறந்து சென்று சூரிய பகவானின் தேரோட்டியாகிறான். வினதா வேறொரு சந்தர்ப்பத்தில் தன் சகோதரியிடம் ஒரு பந்தயத்தில் தோற்று அடிமையாக இருக்கிறபொழுது அவளுக்கு இரண்டாவது குழந்தை பிறக்கிறது. இரண்டாவது முட்டை பொரிந்து அதிலிருந்து மிக அழகான பளபளப்பான தோற்றத்தில் கருடன் அவதரித்தான். பறவைகளுக்கெல்லாம் ராஜாவாக விளங்கினான். கருடன் தன் தாயார் வினதா செய்த முட்டாள்தனமான பந்தயத்தில் தோற்ற அடிமையான அவளை விடுதலை செய்ய என்ன வேண்டும் என கத்ரு புதல்வர்களான பாம்புகளிடம் கேட்டான். அவர்களோ "எங்களுக்கு ஆகாயத்திலுள்ள அமிர்தத்தை கொடுத்தால் உன் தாயாரை விடுவிக்கிறோம்" என்று அதிகார முறையில் கட்டளையிட்டார்கள். மேற்படி அமிர்தம் ஆகாயத்தில் ஒரு வட்டவடிமான நெருப்பு வளைக்குள் இருந்தது. அதன் உள்ளே சுற்றும் நிலையில் கூரான கத்திகள் வட்டமடித்துக்கொண்டே இருந்தன. அதையும் கடந்து உள்ளே சென்றால் இரண்டு கொடிய விஷத் தன்மையுடைய பாம்புகள் அரணாக இருந்து காவல்காத்து வருகின்றன. இதன்பிறகு கருடன் அமிர்தத்திற்கு வெளியே பாதுகாப்புக்கு இருந்த கடவுளுடன் சண்டையிட்டு பிறகு பல புண்ணிய நதிநீர்களை

தன் வாயில் குடித்து (சேர்த்து வைத்து) வந்து நெருப்பு வளையத்தின் மீது உமிழ்ந்தது. அதன் மூலம் நெருப்பு அணைக்கப்பட்டது. பிறகு தன் உருவத்தை சுருக்கி சுழற்சி முறையில் இருந்த கத்திகளில் அகப்படாமல் உள்ளே சென்று இரண்டு விஷப்பாம்புகளுடன் சண்டையிட்டு அழித்தது. பிறகு அமிர்தத்தை எடுத்து வரும் வழியில் பகவான் விஷ்ணுவால் வழிமறிக்கப்பட்டார். மஹாவிஷ்ணு அமிர்தத்தை கருடன் விழுங்காதபடி இருக்க யோசனை கூறியதோடு தனக்கு வாகனமாக இருக்கவும் கூறுகிறார். இதற்கு சம்மதித்த கருடன் மீண்டும் ஆகாயத்திலிருந்து சென்ற பொழுது இந்திரன் வழிமறிக்கிறார். இந்திரன் கருடனிடம் மீண்டும் அமிர்தத்தை இருந்த இடத்தில் சேர்க்க வேண்டும், எனக்கு உணவாக சில பாம்புகளை தர வேண்டும் என்று கூறுகிறான். கருடன் தன் தாயை மீட்பதற்காக கொண்டுவந்த அமிர்தத்தை அங்கிருந்த புல்வெளியில் உமிழ்ந்தது. அங்கிருந்த கத்ருவின் குழந்தைகளான பாம்புகளிடம் உங்கள் நித்ய கர்மபூஜைகளை முடித்து எடுத்துக்கொள்ளுமாறு கூறியது. பாம்புகள் உடனடியாக பூஜைக்கு சென்ற தருணத்தில் இந்திரன் வந்து அமிர்தத்தை உறிஞ்சி எடுத்தான். உறிஞ்சும்பொழுது சில துளி அமிர்தம் புல்லில் சிந்தியது. பூஜை முடித்து அவசரமாக வந்த பாம்புகள் சில துளி அமிர்தம் இருப்பதை கண்டு வேகமாக நக்கின. அந்தப் புல்தான் தர்ப்பை (துர்ப்பை புல்) என்று சொல்லப்படுகிறது. பாம்பின் நாக்கில்பட்டு நாக்கு பிளவுபட்டு இரண்டானது. கருடன் முன்பு கூறியபடி மஹாவிஷ்ணுவிற்கு வாகனமாகியது. பாம்புக்கும் கருடன் எதிரியானது.

## லஷ்மி – யானை

ஒரு சிலையின் வடிவமைப்பை வைத்து இது லஷ்மி சிலை (அ) விக்ரகம் என்று அளவிட்டு சொல்லலாம். இது சம்ஸ்கிருத மொழியிலிருந்து மருவி, ஸ்தூலமானது என்று கூட சொல்லலாம். லஷ்மியின் நான்கு திருக்கரங்களும் மனிதனுக்கு நான்கு அருள்குணங்களை வெளிப்படுத்தும் வகையில் அமையப்பெற்றுள்ளன.

## லஷ்மி விக்ரகத்தின் அமைப்பு

சாதாரணமாக தாமரைப்பூவில் அமர்ந்திருப்பது போலவும், இரண்டு கைகளில் தாமரைப் பூவை தாங்கிய வண்ணமும் இருக்கும் கோலம்

இந்துக்களின் கலாச்சாரத்தை பிரதிபலிப்பதாக அமையப்பட்டுள்ளது. மேலும், இந்து தர்மத்தின் அடிப்படை சித்தாந்தமான கருத்துக்களை தன்னிச்சையாக உணருதல் போன்ற கருத்துக்களை ஸஹஸ்ர நாமத்தில் தெளிவுபடுத்துகிறது. தாமரைப்பூ சுத்தமான அல்லது தெளிவில்லாத தண்ணீரில் பூக்கிறது. எந்த சூழ்நிலையிலும் அது வெண்மையாக, பூ வருகிறது என்பதிலிருந்து நாம் எந்த நிலையிலும் தூய்மையாக இருக்க அது உணர்த்துகிறது. மேலும், சில லக்ஷ்மி விக்ரகங்களில் ஒரு யானை அல்லது இரு யானை அமைப்புடன் ஓர் ஆந்தையும் சேர்ந்து இருக்கும். இந்தியாவின் கிழக்கு பிராந்தியத்தில் ஆந்தையை பீசக்கா என்று அழைப்பதுண்டு. அதன் சிறப்பு குணம் பகலில் அதற்கு கண் தெரியாது, இரவில் மட்டும்தான் கண் தெரியும். லக்ஷ்மியின் ஒரு திருக்கரத்தில் இடைவிடாது செல்வம் கிடைக்கிற மாதிரியும், சில விக்ரகத்தில் ஒரு ஜாடியில் செல்வத்தை படித்த மாதிரி இருக்கும். இந்த குறியீடு பல அர்த்தங்களை தெரிவிக்கிறது. லக்ஷ்மியின் முகம் மற்றும் கைகள் காட்டும் முத்திரை மற்றவர்களுக்கு ஆதரவு தருவது போல் இயல்பாக அமைந்துள்ளது. லக்ஷ்மியின் உடைகள் சிவப்பு அல்லது பச்சை நிறத்துடன் எல்லாவகை செல்வங்களையும் அணிந்த நிலையில் அழகாக வடிவமைக்கப்பட்டிருக்கும். தன் கணவனான ஸ்ரீ மஹா விஷ்ணுவின் மார்பில் குடியிருந்தபடி மனித வாழ்க்கைக்கு தேவையான, அறம், பொருள், அமைதி, நியாயம் எப்பொழுதும் கிடைக்க அருள் புரிந்து கொண்டு இருப்பாள்.

## சிவன் – நந்தி

## சிலாத முனிவர் செய்த தவம்

வியாஸ முனிவர், ஸனத்குமாரரை வணங்கி, ‘ஸ்வாமி! நந்தி தேவர் என்பவர் யார்? அவர் யாருடைய புத்திரர்? அவர் சிவபெருமானை எவ்வாறு பூஜித்து அத்தகைய உயர் பதவியை அடைந்தார்? இவ்விவரங்களைத் தாங்கள் எனக்கு விரிவாகச் சொல்லவேண்டும்," என்று கேட்டார். ஸனத்குமாரர் சொல்லத் துவங்கினார்.

“முன்பு ஜிதேந்திரியனாகவும் தர்மசீலனாகவும் சிவபக்தனாகவும் ஒரு முனிவர் இருந்தார். அவர் பெயர் சிலாதர். அவர் சிவலோகத்தை நாடிச்

செல்லும்போது, தனது பித்ருக்கள் சிலர் நரகத்திலிருந்து துன்பமடைவதைக் கண்டார். அவர் அப்பித்ருக்களை நோக்கி ‘நீங்கள் யார்?’ என்று கேட்க, அதற்கு அவர்கள் ‘நாங்கள் சிலாதனுடைய பித்ருக்கள். அவன் தவம் செய்து சுவர்க்கத்திற்கு வந்தான். ஆனால் அவன் புத்திரர்களைப் பெற்றிலன்!'' என்று சொன்னார்கள். அதற்கு அவர், ‘நான்தான் சிலாதன், எனக்குப் புதல்வர்கள் உண்டாகவில்லையே!’ என்றார். அதற்கு பித்ருக்கள், ‘நீ மஹாதேவனை ஆராதித்து ஒரு புதல்வனைப் பெறுவாயாக!'' என்றார்கள். அதைக் கேட்டதும் சிலாத முனிவர் பூவுலகிற்குத் திரும்பி சிவபெருமானைக் குறித்து ஆயிரம் தேவவருஷங்கள் தவம்செய்தார். சிவபெருமான், அவரது தவத்திற்கு இரங்கி அவர் முன்பு காட்சியளித்து, ‘சிலாத! உனக்கு வேண்டும் வரம் யாது?’ என்று கேட்க சிலாத முனிவர் அவரைப் பணிந்து எழுந்து ‘பரமதேவனே! மகேசா! படைப்பு முதலான ஐந்தொழில்களுக்கும் கர்த்தனே! பிராமணபதியே! மன்மதனை எரித்தவரே! ஞான தேஜஸ்வரூபியே! தேவ தேவா! வரதா! சர்வவியாபியே! தேஜஸ்பதியே! கங்காதரா! சந்திரசேகரரே சரணாகத வத்ஸவரே! அடியேனுக்கு சத்புத்திரனாக ஒருவனைத் தந்தருள வேண்டும்,’ என்று பிரார்த்தித்து மீண்டும் பணிந்து, ‘சுவாமி! அத்தகைய மைந்தனைத் தாங்கள் எனக்குக் கொடுப்பீர்களாயின், அவன் அயோநிஜனும், மரணம் அற்றவனும் சர்வசக்திமானும் தங்களுக்கு சமானனும் தங்களைத் தரிசிப்பவர்களால் தரிசிச்கத்தக்கவனுமாக இருக்கும்படித் தயைபுரியவேண்டும்!’ என்று கேட்டார். முக்கண்ணரான சிவபெருமான் மகிழ்ச்சி அடைந்து ‘சிலாத, நீ விரும்பியவரம் தந்தேன். நீ செய்த இந்த தோத்திரத்தைத் துதி செய்தவர்கள் துர்மரணமடையமாட்டார்கள், பூத பிரேத பைசாச ராட்சஸ துன்பங்களையும் அடைய மாட்டார்கள்!’ என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். அதற்குப் பிறகு சிலாத முனிவர், மகிழ்ச்சியுடன் தம் ஆசிரமத்திற்குச் சென்று நடந்தவற்றை அங்கிருந்தவர்களிடம் சொல்லி, சில காலஞ்சென்று பிறகு ஒரு வேள்வி இயற்ற நினைத்துப் பூமியை உழுவித்தபோது அந்தக் கலப்பையின் படைச்சாலில் கோடி மன்மதனுக்கு இணையான அழகும் அக்கினியைப் போன்ற காந்தியும் கொண்டு ஒரு குழந்தை இருப்பதைக் கண்டார். அப்போது அங்கிருந்த சில முனிவர்கள் இது அரக்கர்களின் மாயையாக இருக்குமென்று போய்விட முயன்றனர். அப்பொழுது அந்தக் குழந்தை

'அப்பா! அப்பா!' என்று வாய்விட்டுக் கூப்பிட்டுக் கொண்டே மெல்ல நடந்து சிலாத முனிவரை அணுகியது. சிலாதர் அந்தக் குழந்தையின் குரலைக் கேட்டும், அதை நம்பாமல், அரக்கமாயை என்றே அவரும் நினைத்து அங்கிருந்து போக முயன்றார். அப்பொழுது வானிலிருந்து ஒரு ஒலி 'சிலாதனே! இவன் உன் புதல்வன், சிவபெருமான் முன்பு உன் தவத்திற்கு இரங்கி மைந்தனைத் தந்திருக்கிறார். நீ இந்தக் குழந்தையை எடுத்து வளர்ப்பாயாக! இதனால் உனக்கும் உன் பித்ருக்களுக்கும் மகிழ்ச்சி உண்டாகியதால் இவனுக்கு "நந்தி" எனப் பெயருண்டாகும்.' என்று முழங்கியது. அதைக் கேட்ட சிலாதமுனிவர் அந்தக் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு, தம் ஆசிரமத்தை அடைந்தார். ஜாதகர்மம், சவுளம், உபநயனம் முதலிய கிரியைகளை அந்தந்த காலத்தில் செய்தார். ரிக், யஜுர் சாம, அதர்வண வேதங்களான சிக்ஷை, வியாகர்ண, சந்தஸ், நிருத்தியம், ஜோதிடம், கற்பகங்கள் வேதத்திற்குரிய சொற்பதக்கிரமங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், சிற்பம், சகுனம், சர்ப்பவிந்தை, பரகாயப் பிரவேசம், அஷ்டவியாகரணம், உபபுராணங்கள், இதிகாசங்கள் தேவயாகம், பித்ருயாகம், மானுடயாகம், பூதயாகம், பிரமயாகம் என ஐந்து, நல்ல முறைகளையும் மந்திரங்கள் மாத்ருதத்வம், யோகம் முதலியவற்றையும் அந்த நந்தி பகவான் ஐந்தே வயதில், தம் தந்தையிடம் அறிந்து யாவற்றிலும் சாமர்த்தியமும், கம்பீரமும், பிரியவசனமும், பொறாமை இன்மையும் கொண்டு மனதிற்கும் விழிக்கும் ஆனந்தம் ஏற்படச் செய்பவராக வளர்ந்து ஏழு வயதடைந்தார்.

அப்போது மித்ராவருணன் என்ற தேவர்கள், தவமுனிவர் வடிவில், சிலாதரின் ஆசிரமத்தை அடைந்தனர். சிலாதர் அவர்களை வரவேற்று உபசரித்து, உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தினார். அப்போது அத்தேவர்கள் சிலாத முனிவரை நோக்கி, "நீங்கள் நலமா? இவ்வாசிரமத்தில் யாவரும் சுகமா? உன் புதல்வன் சரியாக வேத அத்தியயனம் செய்கிறானா? நியமம் தவறாமல் அனுஷ்டானங்களைச் செய்கிறானா?" என்று கேட்டனர். அதற்குச் சிலாத முனிவர், "நலம்! அவனே என் வம்சத்தை விருத்தி செய்யத் தக்கவன்!" என்று சொல்லி, அவனை வரவழைத்து அவர்களை நமஸ்கரிக்கச் செய்தார். அப்போது தேவர்கள், நந்தியை

நோக்கி, “நீ குரு பணிவிடை செய்து அழியாத பதவியை அடைவாயாக!" என்று வாழ்த்தினார்கள். அதைக் கேட்ட சிலாத முனிவர், சிறிது பயந்து, தன் மைந்தனை அனுப்பிவிட்டு, அவர்களை நோக்கி, “முனிவர்களே! நீங்கள் மஹாதவசிகள் சர்வக்ஞர்கள்! திரிகால ஞானிகள். இப்படியிருக்க என் மகனைத் தீர்க்கமான ஆயுள் உடையவனாக இருப்பாயாக என்று அவனை நீங்கள் வாழ்த்தவில்லையே! பெரியோர்களாக இருப்பவர்கள் தம்மைச் சேவித்த இளைஞர்களை தீர்க்க ஆயுளுடன் வாழ்வாயாக என்று வாழ்த்துவதே முறையாக இருக்க நீங்கள் என் புதல்வனை அவ்வாறு வாழ்த்தாமல் இருந்ததைக் குறித்து நான் சந்தேகிக்கிறேன், அதற்குக் காரணம் என்ன என்பதைத் தங்களிடமிருந்தே அறிந்து கொள்ள விரும்புகிறேன்” என்று கேட்டார். அதற்கு முனிவர் வடிவில் வந்த மித்திரா வருணர்கள் அவரை நோக்கி, “சிலாதரனே! உன் மகனுக்கு ஆயுட்காலம் எட்டே வயது தான், ஆகவே நாங்கள் அவ்வாறு வாழ்த்தவில்லை," என்றார்கள். அதைக்கேட்ட சிலாத முனிவர் மிகவும் துக்கம் கொண்டு மயங்கித் தரையில் சாய்ந்தார். அப்போது அம்முனிவர்கள் சிலாதரைத் தேற்றி, “வினைக்கு என்ன செய்வது?” என்று சமாதானம் சொல்லி விட்டு அங்கிருந்து அவரிடம் விடைபெற்றுச் சென்றார்கள்.

வியாச முனிவரே! மித்திரா வருணர்கள் இவ்வாறு சொல்லிச் சென்றதும் சிலாத முனிவர் அவர்கள் கூறிய சமாதானப் பேச்சுக்களால் மனம் தேறாமல் கூக்குரலிட்டு அழுதார். அதைக் கண்ட நந்திதேவர், விரைந்து வந்து தந்தையைப் பணிந்து, ‘நீங்கள் துக்கப்படுவதற்குக் காரணம் என்ன? அதை எனக்குச் சொல்ல வேண்டும்!” என்று கேட்க, சிலாதர் ‘மகனே! நமது ஆசிரமத்திற்கு வந்திருந்த மித்திரா வருணர்கள் சொன்ன சொல் ஒரு போதும் தவறாது, அவர்கள் நீ இன்னும் ஓராண்டுக்குள் இறந்து விடுவாய் என்று என்னிடம் சொல்லிப் போய்விட்டார்கள். அதனால் என் மனம் தாளாது நான் வருந்துகிறேன்" என்றார். இவ்வாறு தன் தந்தை விசனப்படுவதைக் கண்ட நந்திதேவர், “தந்தையே! தேவதானவ யட்சர்களுடன் அந்த யமனே வந்தாலும் என் உயிரை அவர்களில் ஒருவருமே கொண்டு செல்ல முடியாது. இதற்காக நீங்கள் வருந்தவேண்டாம்” என்றார். சிலாத முனிவர் நந்தியை நோக்கி, ‘மைந்தனே! நீ என்ன தவஞ் செய்திருக்கிறாய்! எத்தனையோ ஆண்டுகள்

தவமிருந்து உன்னை என் மகனாக அடைந்தேன். இன்றுவரை நீ யாரை உபாசனை செய்திருக்கிறாய்? உனக்கு வரவிருக்கும் ஆபத்தை எப்படி உன்னால் தடுத்து நிறுத்த முடியும்? யாராலுமே தடுக்க முடியாத மிருத்யுவை (மரணத்தை) உன்னால் எப்படித் தடுக்க முடியும்? நீ எப்படித் தடுப்பாய்?" என்று கேட்டார். அதற்கு நந்திதேவர் "தந்தையே நான் அந்த யமனை தவம் தானம் முதலியவற்றால் வென்றுவிடலாம் என்பதை நானே நம்பவில்லை. பிநாகபாணியான மஹாதேவரை விடச் சிறந்தவர்களில்லை. அவரே ம்ருத்யுஞ்ஜயர். அவர் பெயர் கூடத் தங்களுக்கு மறந்து விட்டதோ? அவரே யமனை வெல்வார்!" என்றார். அதைக் கேட்ட சிலாத முனிவர், "அந்தோ மகனே! நான் ஆயிரம் தேவ வருஷங்கள் வரை அந்தச் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் செய்து தானே உன்னை என் மகனாகப் பெற்றேன். நீ இன்னும் உனக்கு இருக்கும் ஒரே ஆண்டு மானுட ஆயுள்காலத்திற்குள் அரனாரை நான் தரிசித்து ம்ருத்யுவை வென்றுவிடுவேன் என்று எந்தத் தைரியத்தால் நீ சொல்லுகிறாய்!'' என்றார். அதற்கு நந்திதேவர், "தந்தையே! சிவபெருமான் தானம், தவம், வித்தை முதலியவற்றைக் கண்டு சந்தோஷிப்பவர் அல்லர். தூய்மையான பக்திக்கே திருவுளம் களிப்பவர். அத்தகைய சிவபெருமானைப் பக்தியுடன் துதித்து, மிகவும் எளிதாக எந்தவிதத் தடையுமின்றி அவரைத் தரிசிப்பேன். நீங்கள் புத்திரவாஞ்சையை விடுத்து, என்னை அனுப்புங்கள் – தைரியமாக! உங்கள் மனம் விரைவில் மகிழ்ச்சி அடையும்படி, நான் பக்தி செய்து மீள்வேன். நான் நின்றும் திரிந்தும் ஓடியும் காட்டில் இருந்தும் எந்த நிலையில் இருந்தாலும் என்னை நீங்கள் அஞ்சும் ம்ருத்யு ஆனவன் பார்க்கக்கூட முடியாமல் தவிப்பான். நீங்கள் இந்த விஷயத்தில் மிகவும் தைரியமாக இருக்கலாம். "மிருத்யுக்கள் ஆயிரவரும் யமதருமர் கோடியரும் தண்டசூல பாசபாணிகளாய் மகா கோபத்துடன் ஒன்று கூடிவந்தாலும் என் உடலிலுள்ள ஒரு ரோமத்தைக்கூட அசைக்க மாட்டார்கள். அவர்களால் எனக்கு எந்தவிதமான பயமும் இல்லை. வீணாக நீங்களே என்னைப் பயமுறுத்த வேண்டாம். நான் இங்கிருந்து சென்றவுடன் நீங்கள் செய்யவேண்டிய சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கள் நீரில் இறங்கி பாவசக்தியுடன் சதருத்திரீயத்தை, ஜெபித்து, மஹாதேவனைத் தியானித்துக் கொண்டிருங்கள். நானும் அவ்வாறே செய்வேன். அப்படி நான் செய்யும்பொழுது யாரும் என்னை

வெல்ல வல்லவர்களல்லர் மிருத்யுவை வெல்ல பசுபதியை அன்றிப் பிறருக்கு அரிது. நீங்கள் என்னை விரைவில் அனுப்புங்கள்" என்றார். சிலாத முனிவர் நந்திதேவர் கூறிய வார்த்தைகளை நம்பி, சிறிது மனதிடத்துடன், "ம்ருத்யுவை வென்று வருக!" என்று வாழ்த்திவிட்டு, 'மகனே! நீ இடையூறின்றி தவஞ்செய்வாயாக!" என்று சொன்னார். நந்திதேவர் தம் தந்தையை வணங்கி வலம் வந்து அவரது கால்களைப்பற்றிக் கொண்டு, "நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும்" என்று வேண்டி அவரிடம் விடைபெற்றுக் கொண்டார். பிறகு, ஏழு வயதேயுடைய நந்திதேவர் சிவத்தியானத்துடன் மிருத்யுவை வென்று வரும்படித் திடங்கொண்டு, கம்பீரமாக நடந்து, தவஞ்செய்யும் விருப்பத்துடன் சென்றார்.

## நந்திதேவர் வரம் பெறுதல்

சிலாத முனிவரிடம் விடைபெற்றுச் சென்ற நந்திதேவர் நதிகளில் சிறந்த புவனைநதியில்மூழ்கிநின்றுசித்தத்தைச்சிவம்பால்வைத்துருத்திரமந்திரம் ஜெபித்து, மிருத்யுவை (மரணத்தை) வெல்ல வேண்டும் என்ற கருத்தோடு, தட்பவெப்பங்களைக் கருதாமல் உலகத்தை மறந்து, பரசிவத்தில் ஐக்கியம் ஆனவரைப் போல விளங்கினார். ருத்திர மந்திர ஜபத்தை ஒரு கோடிவரை ஜெபித்து முடிக்கும்போது, பரமசிவன் அவருடைய தியானத்திற்கு மகிழ்ந்து காட்சியளித்து, "நந்தி! உன் ஜெபத்திற்கு நான் மகிழ்ந்தேன், நீ விரும்பிய வரத்தைக் கேள்!" என்றார். நந்திதேவர் தமது தியானத்தை நிறுத்திச் சிவபெருமானை வணங்கி, "ம்ருத்யுஞ்சய மூர்த்தியே! நான் மீண்டும் ஒரு கோடி தரம் உருத்திர ஜெபம் செய்து முடிக்கும்படி அருள் பாலிக்க வேண்டும்," என்றார். "அவ்வாறே ஆகுக!" என்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். நந்திதேவர் மீண்டும் நீரிலிருந்து ஒரு கோடி ருத்திர ஜெபம் செய்து முடித்தார். அப்பொழுது சிவபெருமான் ரிஷப வாகனத்தில் காட்சி தந்து "நந்தி! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க நந்திதேவர், "இறைவா நான் மீண்டும் இன்னும் ஒரு கோடி முறை ஜெபம்ஜெபிக்கும்படி அருள் செய்ய வேண்டும்" என்றார். "அவ்வாறே ஆகுக!" என்று வரமளித்து சிவபெருமான் மறைந்தார்.. இதுபோலவே ஏழுகோடி தரம் ஜெபம் முடித்துப் பிரளய காலாக்கினியைப் போன்ற தேஜஸோடு நந்திதேவர் ஜொலித்தார். அவரது தேஜஸை காணமுடியாத தேவர்களும், யமதர்மன் முதலிய அஷ்டதிக்குப் பாலகர்களும் பயந்து

நடுங்கினார்கள். சிவபெருமான் நந்தியின் திடசித்தத்தைக் கண்டு, திருவுளம் மகிழ்ந்திருக்கையிலேயே நந்திதேவர் எட்டாவது கோடியையும் முடிக்கக் கருதி, உறுதியுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார். நந்தியின் ஜெபம் முடியும் தருணத்தின் சிவபெருமான் காளகண்ட சதுர்ப்புஜ நாகபூஷண வியாக்கிரசர்மாம்பரதாரியாக வேதங்கள் நான்கும் புடைசூழ்ந்து முழக்கம் செய்யவும் பிரமனும் விஷ்ணுவும் இருபுறமும் நிற்கவும், கணபதி கந்தர்கள் தம்முடன் இருக்கவும் பார்வதிதேவியாருடன் நந்திதேவரின் முன்பு காட்சி அளித்துத் தம் திருக்கரத்தால், அவரது கையைப் பற்றி, புவனை நதிக் கரைக்குக் கொண்டு சென்று அவர் உடலை ஆசையுடன் தடவிக் கொடுத்து, "சிலாத புத்திரனே! உன்னுடைய திட வைராக்கிய ஜெபத்தைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ந்தேன். நீ நல்ல தவத்தைச் செய்தாய், உன் மனதில் யாது உள்ளதோ அதைச் சொல், சிறிதும் அஞ்சற்க!'' என்றார். நந்திதேவர் சிவபெருமானைப் பணிந்து "மகாதேவரே, அடியேன் இனிமேலும் ஒரு ஜெபம் செய்யவேண்டும் என்று விரும்புகிறேன்" என்றார். அதற்கு சிவபெருமான், "நந்தி! இதுவரையில் நீ செய்த ஏழு கோடி ஜெபத்திற்கே உனக்கு எல்லாப் பதவிகளையும் கொடுத்திருக்க வேண்டும். இனி நீ ஜெபம் செய்ய வேண்டாம். மீண்டும் ஜெபம் செய்து யாது வரம் பெறுவாய்? பிரமத்வம், விஷ்ணுத்வம், இந்திரத்வம், சூரியத்வம், உருத்திரத்வம் அல்லது எனக்குச் சமானதவம் இவற்றில் எதை விரும்பினாலும் கொடுப்பேன்'' என்றார். நந்திதேவர், ஜெபம் செய்வதை நிறுத்தி சிவபெருமானின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி அவர் எதிரே நின்று பலவாறு துதித்து 'சுவாமி! எனக்கு இந்திரத்வம் பரமத்வம் லோக பாலகத்வம் சூரியத்வம் முதலிய எதுவும் வேண்டியதில்லை. அடிக்கடி பிறப்பது இறப்பதும் ஆன ஜனன மரண துக்கங்களை அனுபவியாது இருக்க வேண்டுகிறேன். மேலும், தாங்கள் தேவி மைந்தர்களுடன் எழுந்தருளியிருக்கும் அந்தப்புரத்தில் நானும் உடன் இருக்கவேண்டும். பஹிர்முகத்தில் தங்களைத் தரிசித்துக் கொண்டே இருக்க வேண்டும். தாங்களே எனக்குக் கதி! எனக்கு குருநாதன் நீரே! தங்கள் திருவருளை அடையாதவர்கள் அழிவார்கள். ஆகையால் மரணத்தை ஒழிக்கும் வல்லமை இல்லாத கடவுளை நான் விரும்பவே மாட்டேன். நிலையான சுகத்தைத் தரவல்ல பரம்பொருளை நான் பார்த்துவிட்டேன். அடியேன் உம்மிடம் நீங்காத அன்பும் பக்தியும் பெற்று தங்களையே வணங்குபவனாகி ஜனனமரண

துக்கங்களை ஒழிக்கும் ஆற்றலும் என்னால் நற்கதியை அடைய விரும்பி, என்னை பிறப்பித்த, எனது பித்ருவர்க்கத்திற்கு அழியாத சிவபதவியும் என்னால் ஸ்துதி செய்யப்பட்ட ஸ்தோத்திரத்தை வாசித்தவர்களுக்கு கைலாயவாசமும் சதுர்தசி திதியில் இந்த நாமங்களால் அர்ச்சித்து சதருத்திரீயம் ஜெபித்தவர்களுக்கு காணாபத்தியமும் தந்தருள வேண்டும்," என்று விண்ணப்பம் செய்தார். தன்னைப் பணிந்து நின்று, இத்தகைய வரங்களைக் கேட்டுக் கண்களில் பெருகிய ஆனந்தக் கண்ணீரால் தம் திருவடிகளை அபிஷேகித்து இரு கரங்களாலும் பற்றி நின்றார், நந்திதேவர். அவரைச் சிவபெருமான் தம் திருக்கரத்தால் எடுத்து விபூதியைப் பூசி அலங்கரிக்கப்பட்ட தேகத்துடன் அணைத்து தழுவி தாமரை மலர் போன்ற தம் திருக்கரங்களால் அவர் உடலை ஸ்பரிசித்து, 'இவன் எம்மை ஆனந்தபாஷ்பத்தால் ஓர் அபிஷேகம் செய்தான் ஆகையால் இவனுக்கு இரண்டு அபிஷேகங்களைச் செய்யவேண்டும்' என்று கடைக்கண் பார்வையாலும் வாக்காகிய அமுதத்தாலும் அபிஷேகம் செய்தார். திருக்கண்சாத்தி, (திருவாய் மலர்ந்தருளினர் என்ப) பிறகு நந்தியை நோக்கி "மகனே! என்னைத் தரிசித்தவர்கள் ஒருபோதும் ம்ருத்யு (மரண) பயம் அடைவது இல்லை. என்னிடம் உனக்கு நிலையான பக்தி இருப்பதை நான் அறிவேன். நீ கேட்டவாறு மூப்பு, சாக்காடு தாபத்திரயங்கள் இவற்றை ஒழித்து உன்னுடைய பித்ருக்களுடன் என்னுடைய பாதாரவிந்தத்தில் வாழக்கடவாய், உன்னைத் தரிசித்தவர்களும் என்னைத் தியானித்தவர்களும் என் சிவலோகத்தில் வாழ்வார்கள். நீ எனக்கு இஷ்டனாகவும், என் கணங்களுக்கு அதிபனாகவும் எனக்கு இணையாக பராக்கிரமமும் யோகவலிமையும் பெற்று என் அருகிலேயே வாழ்வாயாக. எல்லா வளங்களும் நிறைந்துள்ள கீஞரசாகர மத்தியில் விளங்கும் தீபத்தினையும், எப்பொழுதும் கிழியாமல் பரிமளத்துடன் விளங்கும் வெண்பட்டு ஆடையும், ஆயிரம் தாமரை மலர்களாலான மாலையையும் உனக்குத் தருகிறேன்!'' என்று அந்த ஆடையை உடுத்தி, அந்த மாலையைக் கழுத்தில் அணிவித்தார். அதனால் நந்திதேவர் முக்கண்ணரைப் போல விளங்கினார். அப்போது சிவபெருமான் நந்தியைக் கையில் எடுத்துக் கொண்டு, 'நந்தி! உன்னால் பூஜிக்கப் பெற்ற க்ஷேத்திரம் ஜப்யேஸ்வரம் (ஜெபஞ்செய்யப்பட்ட இடம்) என்ற பெயரால் வழங்கப்பெறும். இதற்கு நாற்புறமும் ஓர் யோசனை விஸ்தீரணம் வரையில் சித்தக்ஷேத்திரம் என்று பிரசித்தம்.

❖❖❖❖

# வகுப்பு-IX

## 1. கலிங்கத்துப் பரணி

ஒரு மலை மத்து வலத்து உலவு கயிற்றினும், மற்று
உலகு பரித்த பணத்து உரக வடத்தினும்
பருமணி முத்து நிரைத்து, உருமணி அதத்த இணைப்
பரிபுரம் வைத்த, தளிர்ப்பத உகளத்தினளே.

அரவொடு திக்கயம் அப்பொழுது பரித்த இடத்து
அடிஇட, உட்குழிவுற்று அசைவுறும் அப்பொழுதில்
தரணி தரித்ததெனபட பரணி பரித்த புகழ்ச்
சயதரனைப் பரவிச், சதிகொள் நடத்தினளே.

## 2. திருக்குறள்

### கொல்லாமை

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று.

கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை அவர்.

**நாடு**

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.

## 3. ஐம்பெருங்காப்பியங்கள்

### அ. சீவகசிந்தாமணி

மரவ நாக மணங்கமழ் சண்பகம்
குரவங்கோங்கங் குடம்புரை காய் வழை
விரவு பூம்பொழில் வேறிருந் தாய் பொருள்
உருவ மாத ருரைக்குமி தென்பவே.

## 4. அரிச்சந்திரபுராணம்

வாழை பூகம் மகிழ் மருதாசினி
தாழை கேசரம் சம்பகம் சன்மலி
ஞாழன் மாதுளை நாகம் மலிந்ததன்
சூழன் சேரத் தொலைத்தது தோயமே

## 5. ஐஞ்சிறுங் காப்பியங்கள்

### அ. சூளாமணி

கொன்றை யுங்குருந் துங்குலைக் கோடலும்
முன்றிலேறிய முல்லையம் பந்தரும்
நின்று தேனிரந் தூத விரிந்தரோ
மன்றே லாமண நாறு மருங்கினே.

தலைமகன் தாள் தனக் காகச் சாகைய
நிலைமை கொள் மனைவியா நிமிர்ந்த பூந்துணர்
நலமிகு மக்களா முதியர் தேன்களாக
குலமிகு கற்பகம் குளிர்ந்து தோன்றுமே

நாகம் புயத்திற்கட்டி நஞ்சு கழுத்திற் கட்டிக்
காக மணுகாமலே காடு தாங்கியும் கட்டிப்
பாகந் தனிலொரு பெண்பச்சைக் கிளிபோல் வைத்து
மோகமாய் ஒரு பெண்ணை முடியில் வைத்தார்.

பஞ்சவர் தூதனாய்ப் பாரத  கைசெய்து
நஞ்சு உமிழ நாகங் கிடந்த நல் பொய்கைபுக்கு
அஞ்சப் பணத்தில் மேல் பாய்ந்திட்டு அருள்செய்த
அஞ்சனவண்ணனே! அச்சோ அச்சோ
ஆயர் பெருமானே!
காயு நீர் புக்குக் கடம்பு ஏறிக் காளியன்
தீய பணத்தில் சிலம்பு ஆர்க்கப் பாய்ந்து ஆடி
வேயின் குழல் ஊதி வித்தகனாய் நின்ற
ஆயன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே! ஆப்பூச்சி காட்டுகின்றான்

முன் வாயின் முகமெல்லா முத்தடுத்துத்
தாமரை வெண் முளைகள் பாய்த்தி
மின்வாய  மணிக்கமலம் பொற்செந்நெற்
கதிர் சூட்டி விளங்க வைத்துப்
பொன்வாழை மரகதப்பைங் கமுகொடுதோ
ரணவாயில் புணர நாட்டி
மன் வாயில் வளநகரார் மணிமாலை
தொடர்ந் தொலிப்ப வகுத்தாரன்றே

## 6. பதினென் கீழ்க்கணக்கு

### அ. ஆசாரக்கோவை

அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுரை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றன வென்றெண்ணி
இகழின் இழுக்கம் தரும்

## 7. பத்துப்பாட்டு

### அ. சிறுபாணாற்றுப்படை

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
கரும்பு உண

நறு வீ உறைக்கும் நாக நெடு வழிச்
சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்சுரும்பு உண
நறு வீ உறைக்கும் நாக நெடு வழிச்
சிறு வீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும் (87-91)

......................................கறங்கு மணி
வால் உளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நல் மொழி இரவலர்க்கு ஈந்த
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடு வேல்
கழல் தொடித் தடக்கை காரியும் (91-95)

ஆய் அண்டிரன்
............................நிழல் திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆல அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
தாங்கிய சாந்து புலர் திணி தோள்
ஆர்வ நன் மொழி ஆயும் (95-99)

மால் வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த
உரவுச் சினம் கனலும் ஒளி திகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகனும் (99-103)

கரவாது
நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கை
துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு
நளி மலை நாடன் நள்ளியும் கல் நாடன் பேகனும்
ஓங்கு திரை
நளி
சினை
நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்து
குறும் பொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
கரை அடிக்
குன்று உறழ் யானை மருங்குல் ஏய்க்கும்
வண்தோட்டுத் தெங்கின் வாடு மடல் வேய்ந்த
மஞ்சள் முன்றில் மணம் நாறு படப்பை
தண்டலை உழவர் தனி மனைச் சேப்பின்
தாழ்கோட் பலவின் சூழ் சுளைப் பெரும்பழம்

வீழ் இல் தாழைக் குழவித் தீம்நீர்
கவை முலை இரும்பிடிக் கவுள் மருப்பு ஏய்க்கும்
குலை முதிர் வாழைக்  கூனி வெண்பழம்
திரள் அரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பல் தாரம் முனையின் சேம்பின்

முளைப்புற முதிர் கிழங்கு ஆர்குவிர்

## ஆ. திருமுருகாற்றுப்படை

வைந்நுதி பொருத வடு ஆழ் வரி நுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வர,
படு மணி இரட்டும் மருங்கின், கடு நடை
கூற்றத்தன்ன மாற்று அரு மொய்ம்பின்,
கால் கிள ர்ந்தன்ன வேழம் மேல்கொண்டு78-83

# 8. எட்டுத்தொகை

## அ. பரிபாடல்

### திருப்பரங்குன்றத்தின் அமைப்பும் சிறப்பும்

மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புள்மிசைக கொடியோனும், புங்கவம் ஊர்வோனும்,
மலர்மிசை முதல்வனும், மற்று அவனிடைத் தோன்றி
உலகு இருள் அகற்றிய பதின்மரும், இருவரும்

மருந்து உரை இருவரும், திருந்து நூல் எண்மரும்,
ஆதிரை முதல்வனின் கிளந்
நாதர் என்னொருவரும், நன் திசை காப்போரும்,
யாவரும், பிறரும், அமரரும், அவுணரும்,
மேஅரு முதுமொழி விழுத் தவமுதல்வரும்

பற்றாகின்று, நின் காரணமாக
பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்
இமயக் குன்றில் சிறந்து
ஈன்ற நிரை இதழ்த் தாமரை
மின் ஈன்ற விளங்கு இணர் ஊழா

ஒருநிலைப் பொய்கையோடு ஒக்கும் நின் குன்றின்
அருவி தாழ் மாலைச் சுனை
முதல்வ! நின் யானை முழக்கம் கேட்ட
கதியிற்றே காரின் குரல்
குரல் கேட்ட கோழி குன்று அதிரக்கூவ.

மத நனி வாரணம் மாறுமாறு அதிர்ப்ப,
எதிர்குதிர் ஆகின்று அதிர்ப்பு, மலை முழை.

## ஆ. புறநானூறு

## பகை நாடு அழிவு !

புலவுவாள் புலர்சாந்தின்
முருகன் சீற்றத்து உருகொழு குருசில்!
மயங்குவளை மலர்ஆம்பல்
பனிப்பகன்றைக் கனிப்பாகல்
கரும்பு அல்லது காடுஅறியாப்

## செல்வம் பெற்றார் பெருமை!

பாணம் சூடிய பசும்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டு அசை இ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்
யாரீ ரோஎன வினக லானாக்

காரென் ஒக்கல் கடும்பசி இரவல!
வென்வேல் அண்ணல் காணா ஆங்கே
நின்னினும் புல்லியே மன்னே இனியே;
இன்னேம் ஆயினேம் மன்னே என்றும்
உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅ மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின்று அவன்கைவண் மையே.

## பார்வைமானின் கூடல்

முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலாத்தூங்கு நீழல்,
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்,
பார்வை மடப்பிணை தழீஇப், பிறிதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்துவிளை யாட,

இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி, யாவதும்
இல்வழங் காமையின், கல்லென ஒலித்து,
மான்அதட் பெய்த உணங்குதினை வல்சி

கானக் கோழியோடு இதல்கவர்ந்து உண்;டென,
ஆர நெருப்பின், ஆரல் நாறத்
தடிவஆர்ந் திட்ட முழுவள் ரம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குஇனிது அருந்தித்
தங்கினை சென்மோ, பாண! தங்காது

வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே.

## 9. பாரதியார் கவிதைகள்

## விருட்சம் (6, பிழைத்த தென்னந்தோப்பு)

வயல்இடையினிலே – செழுநீர் மடுக் கரையினிலே
அயல் எவருமில்லை – தனியே ஆறுதல் கொள்ள வந்தேன்
காற்றடித் ததிலே – மரங்கள் கணக்கிடத் தகுமோ?
நாற்றி னைப் போல – சிதறி நாடெங்கும் வீழ்ந்தனவே
சிறிய திட்டையிலே – உளதோர் தென்னஞ் சிறு தோப்பு
வறியவன்உடைமை – அதனை வாயு பொடிக்கவில்லை
வீழ்ந்தன சிலவாம் – மரங்கள். மீந்தனபலவாம்
வாழ்ந்திருக்க என்றே அதனை வாயு பொறுத்துவிட்டான்,

## பாரதியார் பாடல்கள்

## புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்.
இளைத்தல் இகழ்ச்சி
ஈகை திறன்
உடலினை உறுதிசெய்
ஊண்மிக விரும்பு
எண்ணுவது உயர்வு
ஏறுபோல் நட
ஐம்பொறி ஆட்சிக்கொள்
ஒற்றுமை வலிமையாம்.
ஓய்தல் ஒழி.
ஔடதம் குறை.

கற்றது ஒழுகு.
காலம் அழியேல்.
கிளைபல தாங்கேல்.
கீழோர்க்கு அஞ்சேல்.
குன்றென நிமர்ந்து நில்.
கூடித் தொழில் செய்.
கெடுப்பது சோர்வு
கேட்டிலும் துணிந்து நில்.
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்.
கோல்கைக் கொண்டுவாழ்
கவ்வியதை விடேல்.

சரித்திரச் தேர்ச்சி கொள்
சாவதற்கு அஞ்சேல்
சிதையா நெஞ்சு கொள்.
சீறுவோர்ச் சீறு.
சுமையினுக்கு இளைத்திடேல்.
சூரரைப் போற்று
செய்வது துணிந்து செய்
சேர்க்கை அழியேல்.
சைகையில் பொருளுணர்.
சொல்வது தெளிந்து சொல்
சோதிடந் தனை யிகழ்.
சௌரியம் தவறேல்.
ஞமலிபோல் வாழேல்.
ஞாயிறு போற்று
ஞிமறென இன்புறு.
ஞெகிழ்வது அருளின்.
ஞேயம் காத்தல்செய்.
தன்மை இழவேல்.
தாழ்ந்து நடவேல்.
திருவினை வென்று வாழ்.
தீயோர்க்கு அஞ்சேல்.
துன்பம் மறந்திடு
தூற்றுதல் ஒழி.
தெய்வம் நீ என் றுணர்.
தேசத்தைக் காத்தல் செய்.
தையலை உணர்வு செய்.
தொன்மைக்கு அஞ்சேல்.
தோல்வியில் கலங்கேல்.
தவத்தினை நிதம் புரி.
நன்று கருது.
நாளெலாம் வினை செய்;
நினைப்பது முடியும்
நீதிநூல் பயில்.
நுனியளவு செல்.
நூலினைப் பகுத்துணர்.
நெற்றி சுருக்கிடேல்.
நேர்படப் பேசு.
நையப் புடை.
நொந்தது சாகும்.
நோற்பது கைவிடேல்.
பணத்தினைப் பெருக்கு.
பாட்டினில் அன்பு செய்.
பிணத்தினைப் போற்றேல்.
பீழைக்கு இடங்கொடேல்.
புதியன விரும்பு.
பூமி இழந்திடேல்.
பெரிதினும் பெரிது கேள்.
பேய்களுக்கு அஞ்சேல்.
கொய்மை இகழ்.
போர்த் தொழில் பழகு.
மந்திரம் வலிமை.
மானம் போற்று.
மிடிமையில் அழிந்திடேல்.
மீளுமாறு உணர்ந்துகொள்.

முனையிலே முகத்து நில்.
மூப்பினுக்கு இடங் கொடேல்.
மெல்லத் தெரிந்து சொல்.
மேழி போற்று.
மொய்ம்புறத் தவஞ் செய்.
மோனம் போற்று.
மௌட்டியந் தனைக் கொல்.
யவனர்போல் முயற்சிகொள்.
யாரையும் மதித்து வாழ்.
யௌவனம் காத்தல் செய்.
ரஸத்திலே தேர்ச்சிகொள்.
ராஜஸம் பயில்.
ரீதி தவறேல்.
ருசிபல வென்றுணர்.
ரூபம் செம்மை செய்.

ரேகையில் கனி கொல்.
ரோதனம் தவிர்.
ரௌத்திரம் பழகு.
லவம் பல வெள்ளமாம்.
லாகவம் பியற்சி செய்.
லீலை இவ் வுலகு.
(உ)லொக நூல் கற்றுணர்.
லௌகிகம் ஆற்று.
வருவதை மகிழ்ந்துண்.
வான நூற் பயிற்சி கொள்.
விதையினைத் தெரிந்திடு.
வீரியம் பெருக்கு
வெடிப்புறப் பேசு.
வேதம் புதுமை செய்.
வையத் தலைமை கொள்.
வௌவுதல் நீக்கு.

## பாரதியாரின் வசன கவிதை

### காற்று

ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல். ஓலைப் பந்தல், தென்னோலை.

குறுக்கும் நெடுக்கமாக ஏழு எட்டு மூங்கில் கழிகளைச் சாதாரணக் கயிற்றால் கட்டி மேலே தென்னம் கிடுகுகளை விரித்திருக்கிறது.

மூங்கில் கழியிலே கொஞ்சம் மிச்சக் கயிறு தொங்குகிறது. ஒரு சாண் கயிறு இந்தக் கயிறு. ஒரு நாள் சுகமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. பார்த்தால் துளிகூடக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. சில சமயங்களில் அசையாமல் 'உம்' என்றிருக்கும். கூப்பிட்டால் கூட ஏனென்று கேட்காது.

இன்று அப்படியில்லை 'குஷால்' வழியில் இருந்தது. எனக்கும் இந்தக்

கயிற்றுக்கும் ஸ்நேஹம். நாங்கள் அடிக்கடி வார்த்தை சொல்லிக் கொள்வது உண்டு.

“கயிற்றினிடத்தில் பேசினால் அது மறுமொழி சொல்லுமா? பேசிப்பார், மறுமொழி கிடைக்கிறதா இல்லையா என்பதை?

ஆனால் அது சந்தோஷமாக இருக்கும் சமயம் பார்த்து வார்த்தை சொல்ல வேண்டும். இல்லா விட்டால், முகத்தைத் தூக்கிக் கொண்டு சும்மா இருந்துவிடும், பெண்களைப்போல.

எது எப்படி இருந்தாலும், இந்த வீட்டுக் கயிறு பேசும். அதில் சந்தேகமே யில்லை. ஒரு கயிறா சொன்னேன்? இரண்டு கயிறு உண்டு. ஒன்று ஒரு சாண்; மற்றொன்று முக்கால் சாண்.

ஒன்று ஆண்; மற்றொன்று பெண்; கணவனும் மனைவியும் அவை இரண்டும் ஒன்றை ஒன்று காமப்பார்வைகள் பார்த்துக் கொண்டும், புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டும், வேடிக்கைப் பேச்சுப் பேசிக்கொண்டும் ரசப் போக்கிலே இருந்தன.

அத்தருணத்திலே நான் போய்ச் சேர்ந்தேன். ஆண் கயிற்றுக்குக் ‘கந்தன்’ என்று பெயர். பெண் கயிற்றுக்குப் பெயர் ‘வள்ளியம்மை’

*(மனிதர்களைப் போலவே துண்டுக் கயிறுகளுக்கும் பெயர் வைக்கலாம்)*

கந்தன் வள்ளியம்மை மீது கையைப்போட வருகிறது. வள்ளியம்மை சிறிது பின் வாங்குகிறது. அந்த சந்தர்ப்பத்திலே நான் போய்ச் சேர்ந்தேன்.

“என்ன, கந்தா, சௌக்கியம் தானா? ஒரு வேளை, நான் சந்தர்ப்பம் தவறி வந்துவிட்டேனோ, என்னவோ! போய், மற்றொரு முறை வரலாமா?” என்று கேட்டேன்.

அதற்குக் கந்தன்:- “ அட போடா வைதிக மனுஷன்! உன் முன்னே கூட லஜ்ஜையா? என்னடி வள்ளி, நமது சல்லாபத்தை ஐயா பார்த்ததிலே உனக்குக் கோபமா?” என்றது.

“சரி. சரி, என்னிடத்தில் ஒன்றும் கேட்க வேண்டாம்” என்றது வள்ளியம்மை.

அதற்குக் கந்தன், கடகட வென்று சிரித்துக் கைதட்டிக் குதித்து, நான் பக்கத்தில் இருக்கும் போதே வள்ளியம்மையைக் கட்டிக்கொண்டது.

வள்ளியம்மை கீச்சுக் கீச்சென்று கத்தலாயிற்று. ஆனால் மனதுக்குள்ளே வள்ளியம்மைக்கு சந்தோஷம். நாம் சுகப்படுவதைப் பிறர் பார்ப்பதிலே நமக்கு சந்தோஷம் தானே?

இதை வேடிக்கை பார்ப்பதிலே எனக்கும் மிகவும் திருப்திதான். உள்ளதைச் சொல்லி விடுவதிலே என்ன குற்றம்?

இளமையின் சல்லாபம் கண்ணுக்குப் பெரியதோர் இன்பமன்றோ?

வள்ளியம்மை அதிகக் கூச்சல் இடவே, கந்தன் அதை விட்டுவிட்டது.

சில க்ஷணங்களுக்குப் பின் மறுபடி போய்த் தழுவிக் கொண்டது.

மறுபடியும் கூச்சல், மறுபடியும் விடுதல்; மறுபடியும் தழுவல்; மறுபடியும் கூச்சல், இப்படியாக நடந்துகொண்டே வந்தது. "என்ன, கந்தா, வந்தவன் இடத்தில் ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேன் என்கிறாயே? வேறொரு சமயம் வருகிறேன். போகட்டுமா?" என்றேன்.

"அட போடா! வைதிகம்! வேடிக்கை தானே பார்த்துக்கொண்டு இருக்கிறாய். இன்னும் சிறிதுநேரம் நின்றுகொண்டு இரு. இவளிடம் சில விவரகாரங்கள் தீர்க்க வேண்டி இருக்கிறது. தீர்ந்த உடன் நீயும் நானும் சில விஷயங்கள் பேசலாம் என்று இருக்கிறேன். போய்விடாதே, இரு" என்றது.

நின்று மேன்மேலும் பார்த்துக் கொண்டு இருந்தேன்.

சிறிது நேரம் கழிந்தவுடன், பெண்ணும் இன்ப மயக்கத்திலே நான் நிற்பதை மறந்து நாணத்தை விட்டுவிட்டது.

உடனே பாட்டு, நேர்த்தியான துக்கடாக்கள். ஒரு வரிக்கு ஒரு வர்ணமெட்டு.

இரண்டே 'சங்கதி'. பின்பு மற்றொரு பாட்டு. கந்தன் பாடி முடிந்த உடன், வள்ளி, இது முடிந்த உடன், அது மாற்றி மாற்றிப் பாடி–கோலாஹலம்.

சற்றுநேரம் ஒன்றை ஒன்று தொடாமல் விலகி நின்று பாடிக் கொண்டே இருக்கும். அப்போது வள்ளியம்மை தானாகவே போய்க் கந்தனைத் தீண்டும்.

அது தழுவிக் கொள்ளவரும். இது ஓடும். கோலாஹலம்! இங்ஙனம் நெடும்பொழுது சென்ற பின் வள்ளியம்மைக்குக் களியேறி விட்டது.

நான் பக்கத்து வீட்டிலே தாகத்துக்கு ஜலம் குடித்துவிட்டு வரப் போனேன்.

நான் போவதை அவ்விரண்டு கயிறுகளும் கவனிக்கவில்லை.

நான் திரும்பிவந்து பார்க்கும்போது வள்ளியம்மை தூங்கிக் கொண்டு இருந்தது, கந்தன் என் வரவை எதிர்நோக்கி இருந்தது.

என்னைக் கண்டவுடன், ‘‘எங்கடா போய் இருந்தாய் வைதிகம்! சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டாயே’’ என்றது.

‘‘அம்மா நல்ல நித்திரை போல் இருக்கிறதே?’’ என்று கேட்டேன்.

ஆஹா! அந்த க்ஷணத்திலே கயிற்றில் இருந்து வெடித்து வெளிப்பட்டு என் முன்னே நின்ற தேவனுடைய மகிமையை என்னென்று சொல்வேன்!‘

காற்றுத்தேவன் தோன்றினான். அவன் உடல் விம்மி விசாலமாக இருக்கும் என்று நினைத்திருந்தேன். வயிர ஊசிபோல் ஒளி வடிவமாக இருந்தது. ‘நமஸ்தே வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம்

ப்ரஹ்மாஸி’’ காற்றே, போற்றி, நீயே கண்கண்ட பிரமம்.

அவன் தோன்றிய பொழுதிலே வானமுழுதும் ப்ராண சக்தி நிரம்பிக் கனல்வீசிக் கொண்டிருந்தது.

ஆயிரம் முறை அஞ்சலி செய்து வணங்கினேன்.

காற்றுத் தேவன் சொல்வதாயினன்:– ‘‘மகனே, ஏதடா கேட்டாய்? அந்தச் சிறிய கயிறு உறங்குகிறதா என்று கேட்கிறாயா? இல்லை. அது செத்துப் போய்விட்டது, நான் ப்ராண சக்தி.

என்னுடனே உறவுகொண்ட உடல் இயங்கும். என் உறவில்லாதது சவம். நான் ப்ராணன். என்னாலேதான் அச்சிறு கயிறு களைப் பெய்திய உடனேயே அதை உறங்க–இறக்க–விட்டு விட்டேன்.

துயிலும் சாவுதான். சாவும் துயிலே. நான் விளங்குமிடத்தே அவ்விரண்டும் இல்லை. மாலையில் வந்து ஊதுவேன்.

அது மறுபடி பிழைத்துவிடும்.

நான் விழிக்கச் செய்கிறேன். அசையச் செய்கிறேன். நான் சக்தி குமாரன், என்னை வணங்கி வாழ்க. என்றான்.

‘‘நமஸ்தே வாயோ, த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம வதிஷ்யாமி.’’

## 10. மூதுரை அல்லது வாக்குண்டாம்

### பயனை எதிர்பார்க்காமல் நற்செயல்களைச் செய்யுங்கள்

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர் தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

### மன்னர்கள் மனம் தளரமாட்டார்கள்

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது ஆதலால் - தம்தம்
தனம்சிறியர் ஆயினுந் தார்வேந்தர் கேட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று.

### அறிவு உடையார் இயல்பு

சாம்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆம்தனையும் காப்பர் அறிவு உடையோர் - மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

## 11. வாகனங்கள்

### ஐயப்பன் - புலி

கேரளாவில் பந்தள மகாராஜா குழந்தையில்லாமல் மனம் வருந்தி வாழ்ந்து வந்தார். அதே சமயத்தில் காட்டில் இருந்த ரிஷிகளை மகிஷி என்ற அரக்கி பல வகையில் இடையூறு செய்து அவர்களின் தவத்தையும் பூஜையையும் தடுத்துவந்தாள். மகிஷியை வதம் செய்ய எண்ணி திருமால் மோகினியாக அவதாரம் எடுத்து சிவனுடன் ஐக்கியம் ஆனதால் பிறந்த குழந்தைதான் ஸ்ரீஐயப்பன். குழந்தையாக பிறந்த ஸ்ரீஐயப்பனை காட்டில் ஒரு மரத்திற்கு அடியில் விட்டு விட்டு சென்று விட்டனர். பக்திமானான பந்தள மகாராஜாவின் பிள்ளையில்லாக் குறையை தீர்க்க சிவனும், மகாவிஷ்ணுவும் சேர்ந்து செய்த திருவிளையாடல். பகவான் ஸ்ரீஐயப்பன் அவதார நோக்கம்

மகிஷியை வதம் பண்ணுவது மட்டும்தான். காட்டில் வேட்டைக்குவந்த பந்தள மன்னன் குழந்தையின் அழகுரல் கேட்டு குரல் வந்த திசையை நோக்கி சென்றான். முடிவில் ஒரு மரத்தடியில் நல்ல தேஜஸுடன் இருந்த பாலகனை எடுத்துக் கொண்டு அரண்மனை சென்றான். அரசியாரும் மகிழ்ச்சி அடைந்தாள். குழந்தையின் தேஜஸ்ஸை பார்த்த அரண்மனை ஜோதிடர்கள் இக்குழந்தை தெய்வ அம்சம் பொருந்தியது என்றார்கள். மேலும் கழுத்தில் மணியுடன் இருந்ததால் குழந்தைக்கு மணிகண்டன் என்று பெயர் சூட்டலாம் என்று ஜோதிடர்கள் முன் மொழிந்தார்கள்.

ஸ்ரீஐயப்பன் பாலகன் பருவம் வந்த பொழுது குருகுலத்திற்கு அனுப்பி அவனைப் படிக்கவைத்தனர். குருகுலத்தில் ஒரு சிறந்த மாணவனாக அனைத்தையும் கற்று வெளிவரும் பொழுது குருவை வணங்கி விடை பெறுமுன் குரு காணிக்கை என்ன தர வேண்டும் என்றார். ஸ்ரீஐயப்பன் மகிமையை அறிந்த குரு தன் மகன் கண் தெரியாமல், வாய் பேச முடியாமல் இருந்த நிலையை ஸ்ரீஐயப்பனிடம் தெரிவித்தார். ஸ்ரீஐயப்பன் உடனே தன் குருவின் மகனை ஆசீர்வதிப்பது போல் தலையில் தன் கையை வைத்தார். என்ன அதிசயம் குருவின் மகனுக்கு கண் பார்வை வந்து உடனே பேசத் துவங்கினார். இதைக்கண்ட ஸ்ரீஐயப்பனின் குரு கண் கலங்கி நின்றார். அந்த சந்தோஷத்தில் அவரால் பேச வார்த்தை கூட வரவில்லை. இதில் ஸ்ரீஐயப்பனின் குரு பக்தி எந்த அளவிற்கு இருந்தது என்று தெரிந்தது. பிறகு ஸ்ரீஐயப்பன் குருகுல கல்வி முடிந்து அரண்மனை வந்த நேரம் மகாராணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை வளர்ந்ததும் சிலரது துர்போதனைகள் அரசியின் மனதில் சஞ்சலத்தை உண்டாக்கியது.

அரசருக்கு பிறகு ஸ்ரீஐயப்பனே அடுத்த அரசராக வாய்ப்பு உள்ளது என்றும் தங்கள் வயிற்றில் பிறந்த மகனுக்கு அந்த பாக்யம் கிடைக்காமல் போகலாம் என்றும் துர் எண்ணத்தை அரசியின் மனதில் விதைத்தனர். அரசியும் மனது மாறி தான் தலைவலியால் அவதிப்படுவது போலவும், அதைக் குணப்படுத்த புலிப்பாலால் தான் முடியும் என்பதை அரண்மனை வைத்தியர் மூலம் விஷயத்தை பரப்பினார். உடனே யார் போய் புலிப்பால் எடுத்து வருவது என எழுந்த பிரச்சனையின்போது ஸ்ரீஐயப்பன் தான்

எடுத்து வருகிறேன் என்று கூறி கானகம் சென்றார். கானகம் சென்று தான் எடுத்த அவதார நோக்கமான மகிஷியை தேடி சண்டையிட்டு அவனை அழித்தார். தேவர்கள் அனைவரும் இந்த யுத்தத்தைக் கண்டு பூமாரி பொழிந்தனர். உடனே தேவேந்திரன் அங்கு தோன்றி அவனே புலியாக மாற, மற்ற தேவர்களும் புலியாக மாற, ஸ்ரீஐயப்பன் புலி மேல் அமர்ந்து காட்டிலிருந்து பந்தளத்திற்கு வந்து சேர்ந்தான். புலியுடன் ஸ்ரீஐயப்பனை பார்த்த மகாராணி உண்மையை கூறி மன்னிப்பு கேட்டாள். மகாராணி விருப்பத்திற்கு இணங்க தன்னுடன் வந்த புலியை காட்டிற்கு திருப்பி அனுப்பினார். தான் வந்த வேலை முடிந்து விட்டது என்றும் காட்டில் தவம் செய்யப் போவதாகவும் கூறி விடைபெற்று கானகம் சென்றார். ஸ்ரீஐயப்பனை எல்லா ஆலயங்களிலும் தவக் கோலத்தில் மட்டுமே காண முடியும். எருமேலி(கேரளா) தர்ம சாஸ்தா கோயிலில் மட்டும் வேட்டைக்கு செல்வது போல் இருப்பார். குளத்துப் புழையில் பாலகனாகவே காட்சி தருகிறார்.

❖❖❖❖

# வகுப்பு-X

## 1. ஐஞ்சிறுங் காப்பியங்கள்

### அ. சூளாமணி

கணுகை நீரனான்ற கதிரிளந்
திணுகளாற் றேடிப் பட்டது சேக்கர்வான்
மணுகை மார்பிறப் மும்மட மாதரிந்
நணுகை யாற்றேடிப் பாடு நவின்றசூத

வானவர் மருள நர்சின்
மற்றிது மடுத்து மாற்றார்
சூதனம ரகல மேன்னு
சேறுகூசே சால்கள் சூபாக்கி
ஊனமர் குடிம்மு போணுக
கூடிதிட்டு வேன்றி வித்தி
ஏனவர் சேவிக  ளார
விரும்முகடி விளைப்ப னேன்றான்

வயெரத்த மிடைவடித்துக் கருணுகண்ணாணு
சேம்போன்னால் வளைத்த ஆரற்
கோயெரத்த மேல்விரலாற் கோண்டரசர்
குலவரகூ கோடிக்கு நீராண்
முயெரக்கும் பணுகண்ணி ரித்சூதர்
சூவந்தர்தமை முறையளக் காட்பெ
பயெரக்கும் பாவைக்குப் பையசூவ
யினையமோடி பகரா நின்றான்.

மாண்டன மாற்றலர் நாள்கள் மூமகள்
ஈண்டுவந்திவனோடு திளைக்க லுற்றனள்
காண்டு மிக்காளை தன் கன்னிப் சூபாரேனா
ஈண்னெர் விண்ணிடை யமர ரேன்பவசூவ

கணுகைறா சிந்துகூ மேன்று மாநதி
தணுகு நீ ரேனையகூந் தந்து தாமரை
போணுகிய முகத்த போற் குடணுகளாற் பல
மணுகல மரபினாள் மன்ன ராட்னொர்

## 2. கலிங்கத்துப் பரணி

இகெகின்ற மதில்? எரிகின்ற பதி
எடீகின்ற முகை போடில் எல்லாம்
மகின்றன குகேடுகின்றனம் இனி
வளைகின்றன படைபகை என்சூற
உலகுக்கு ஒரு முதல் அவயற்கு  இடிதிரை
உரை தப்பியது எமது அரசூச.

## 3. திருக்குறள்

### வான் சிறப்பு

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

சிறப்பொடு பூசனை செல்லாதுவி வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

## 4. ஐம்பெருங்காப்பியங்கள்

### அ. சீவக சிந்தாமணி

அங்கு நின் றகன்றபின் ஐயைங் காவதம்
வெங்களி விடுமத வேழப் பேரினம்
தங்கிய காடது தனிச் செல்வாரிலை
கங்கையின் கரையது கடலிற் றோன்றுமே
பதுமையார் இலம்பகம்

### ஆ. வளையாபதி

**கங்கா வந்தனம் - ஆறு**

வாரி பெருகப் பெருகிய காதலை
வாரி சுருங்கச் சுருக்கி விடுதலின்
மாரி பெருகப் பெருகி அற அறும்
வார்புனல் ஆற்றின் வகையும் புரைப.

செங்குணக்கு ஒழுகியச் சம்பா பதியயல்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற
ஆங்கினி திருந்த அருந்தவ முதியோள்
ஓங்குநீர்ப் பாவையை உவந்தெதிர் கொண்டாங்கு
ஆஹ விசும்பின் ஆகாய கங்கை!
வேணவாத் தீர்த்த விளக்கே! வாஙவென

பாடசால் சிறப்பின் பரதத் தோங்கிய
கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி
கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்தமிழ்ப் பாவை;

## 5. பத்துப்பாட்டு

### அ. திருமுருகாற்றுப்படை

வேறு பல் துகிலின் நுடங்கி, அகில் சுமந்து,
ஆர முழு முதல் உருட்டி, வேரல்
பூவுடை அலங்கு சினை புலம்ப, வேர் கீண்டு,
விண் பொரு நெடு வரைப் பரிதியின் தொடுத்த
தண் கமழ் அலர் இறால் சிதைய, நன் பல

ஆசினி முது சுளை கலாவ, மீமிசை
நாக நறு மலர் உதிர, யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்ப, பூ நுதல்
இரும் பிடி குளிர்ப்ப வீசி, பெருங் களிற்று
முத்துடை வான் கொடு தழீஇ, தத்துற்று

நான் பொன் மணி நிறம் கிளர, பொன் கொழியா,
வாழை முழு முதல் துமிய, தாழை
இளநீர் விழுக் குலை உதிர, தாக்கி,
கறிக் கொடிக் கருந் துணர் சாய, பொறிப் புற
மட நடை மஞ்ஞை பலவுடன் வெரீஇ,

கோழி வயப் பெடை இரிய, கேழலொடு
இரும் பனை வெளிற்றின் புன் சாய் அன்ன
குரூஉ மயிர் யாக்கைக் குடா வடி உளியம்
பெருங் கல் விடர்அளைச் செறிய, கருங் கோட்டு
ஆமா நல் ஏறு சிலைப்ப, சேண் நின்று
இழுமென இழிதரும் அருவி,

## ஆ. பெரும்பாண் ஆற்றுப்படை

### அரசனது முற்றச் சிறப்பு

அளியும் தெறலும் எளியஆகலின்,
மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ் பட,
நயந்தோர் தேஎம் நன் பொன் பூப்ப,
நட்புக் கொளல் வேண்டி, நயந்திசினோரும்,
துப்புக் கொளல் வேண்டிய துணையிலொரும்,
கல் வீழ் அருவி கடல் படர்ந்தாங்கு,
காவிரி புரக்கும் நாடு கிழவோனே

## இ. பட்டினப் பாலை

### காவிரியின் சிறப்பு

வசை இல் புகழ், வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்,
தற் பாடிய தளி உணவின்
புள் தேம்பப் புயல் மாறி,
வான் பொய்ப்பினும், தான் பொய்யா,
மலைத் தலைய கடல் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்
பொன் கொழித்து இழிதரும், போக்கு அருங் கங்கைப்
பெரு நீர் போகும் இரியல் மாக்கள்
ஒரு மரப் பாணியில் தூங்கியாங்கு
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ,
செவ்வி பார்க்கும் செழு நகர் முற்றத்து.

## ஈ. மதுரைக் காஞ்சி

### இயற்கை வளம்

மருத நில வளப்பம்
வலைஞர் இயல்பு
அதனால், குண கடல் கொண்டு குட கடல் முற்றி,
இரவும் எல்லையும் விளிவு இடன் அறியாது,
அவலும் மிசையும் நீர் திரள்பு ஈண்டி,
கவரை அம் குழும்பின் அருவி ஒலிப்ப
கழை வளர் சாரல், களிற்றினம் நடுங்க,
வரை முதல் இரங்கும் ஏறொடு வான் ஞெமிர்ந்து,
சிதரல் பெரும் பெல் சிறத்தலின், தாங்காது,
குண கற்கு இவர்தரும் குரூஉப் புனல், உந்தி
நிவந்து செல் நீத்தம் குளம் கொளச் சாற்றி,
களிறு மாய்க்கும் கதிர்க் கழனி;
ஒளிறு இலஞ்சி; அடை நிவந்த
முள் தாள சுடர்த் தாமரை,
கள் கமழும் நறு நெய்தல்,
வள் இதழ் அவிழ் நீலம்,
மெல் இலை அரி ஆம்பலொடு,
வண்டு இறைகொண்ட கமழ் பூம் பொய்கை;
கம்புள் சேவல் இன் துயில் இரிய,
வள்ளை நீக்கி, வய மீன் முகந்து,
கொள்ளை சாற்றிய கொடு முடி வலைஞர்
வேழப் பழனத்து நூழிலாட்டு,
கரும்பின் எந்திரம், கட்பின், ஓதை
மருத நிலத்தில் எழும் பற்பல ஓசைகள்
அள்ளல் தங்கிய பகடு உறு விழுமம்
கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே,
ஒலிந்த பகன்றை விளைந்த கழனி

வன் கை வினைஞர் அரிபாறை, இன் குரல்
தளி மழை பொழியும் தண் பரங்குன்றில்
கலி கொள் சும்மை, ஒலி கொள் ஆயம்
ததைந்த கோதை தாரொடு பொலியப்
புணர்ந்து உடன் ஆடும் இசையே; அனைத்தும்
அகல் இரு வானத்து இமிழ்ந்து, இனிது இசைப்ப,
குருகு நரல, மனை மரத்தான்
மீன் சீவும் பாண் சேரியோடு,
மருதம் சான்ற தண் பணை சுற்றி, ஒரு சார்
முல்லை நிலக் காட்சிகள்
சிறு தினை கொய்ய, கவ்வை கறுப்ப
கருங் கால் வரகின் இருங் குரல் புலர,
ஆழ்ந்த குழும்பில் திரு மணி கிளர,
எழுந்த கடற்றில் நன் பொன் கொழிப்ப
பெருங் கவின் பெற்ற சிறு தலை நௌவி
மடக் கண் பிணையொடு மறுகுவன உகள,
சுடர்ப் பூங் கொன்றை தாயஅய நீழல்,
பாஅயன்ன பாறை அணிந்து,
நீலத்து அன்ன பைம் பயிர் மிசை தொறும்
வெள்ளி அன்ன ஒள் வீ உதிர்ந்து,
சுரி முகிழ் முசுண்டையொடு முல்லை, தாஅய்,
மணி மருள் நெய்தல், உறழ, காமர்
துணி நீர் மெல் அவல், தொய்யிலொடு மலர,
வல்லோன் தைஇய வெறிக்களம் கடுப்ப,
முல்லை சான்ற புறவுஅணிந்து, ஒரு சார்

## குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளம்

நறுங் காழ் கொன்று, கோட்டின் வித்திய
குறுங் கதிர்த் தோரை, நெடுங் கால் ஐயவி,
ஐவன வெண்ணெலொடு அரில் கொள்பு நீடி;
இஞ்சி, மஞ்சள், பைங் கறி, பிறவும்

பல் வேறு தாரமொடு, கல்கத்து ஈண்டி
தினை விளை சாரல் கிளி கடி பூசல்,
மணிப் பூ அவரைக் குரூஉத் தளிர் மேயும்
ஆமா கடியும் கானவர் பூசல்,
சேணோன் அகழ்ந்த மடி வாய்ப் பயம்பின்
வீழ் முகக் கேழல் அட்ட பூசல்,
கருங் கால் வேங்கை இருஞ் சினைப் பொங்கர்
நறும் பூக் கொய்யும் பூசல், இருங் கேழ்
ஏறு அடு வயப் புலிப் பூசலொடு, அனைத்தும்,
இலங்கு வெள் அருவியொடு சிலம்பகத்து இரட்ட,
கருங் கால் குறிஞ்சி சான்ற வெற்பு அணிந்து,
அருங் கடி மா மலை தழீஇ, ஒரு சார்

## பாலை நில இயல்பு

இரு வெதிப் பைந் தூறு கூர் எரி னைப்ப,
நிழத்த யானை மேய் புலம் படர,
கலித்த இயவர் இயம் தொட்டன்ன,
கண் விடுபு உடையூஉத் தட்டை கவின் அழிந்து,
அருவி ஆன்ற அணி இல் மா மலை,
வை கண்டன்ன புல் முளி அம் காட்டு,
கமஞ் சூழ் கோடை விடரகம் முகந்து,
கால் உறு கடலின் ஒலிக்கும் சும்மை;
இலை வேய் குரம்பை உழை அதள் பள்ளி,
உவலைக் கண்ணி, வன் சொல் இளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப;
நிழல் உரு இழந்த வேனில் குன்றத்து,
பாலை சான்ற, சுரம் சேர்ந்து, ஒரு சார்

## நெய்தல் நில இயல்பு

முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்,
அரம் போழ்ந்து அறுத்த கண் நேர் இலங்கு வளை,

பரதர் தந்த பல் வேறு கூலம்,
இருங் கழிச் செறுவின், தீம் புளி, வெள் உப்பு,
பரந்து ஓங்கு வரைப்பின் வன் கைத் திமிலர்
கொழு மீன் குறைஇய துடிக் கண் துணியல்,

விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந் தலைத் தேஎத்து நல் கலன் உய்ம்மார்
புணர்ந்து, உடன் கொணர்ந்த புரவியொடு, அனைத்தும்
வைகல்தோறும் வழிவழிச் சிறப்ப,
நெய்தல் சான்ற வளம் பல பயின்று, ஆங்கு,
ஐம் பால் திணையும் கவினி அமை வர.

## 6.பாரதியார் கவிதைகள்

### கங்கா வந்தனம் (ஆறு)

### பாரத தேவியின் திருத்தசாங்கம்

வன்னக் கிளி வந்தே மாதரமென் றோது வரை
இன்னலறக் காப்பா ளியாறுரையாய் – நன்னர்செயத்
தான்போம் வழியெலாம் தன்ம மொடு பொன் விளைக்கும்
வான்போந்த கங்கையென வாழ்த்து,

### கடல்

கடலே காற்றைப் பரப்புகின்றது. விரைந்து சுழலும் பூமிப்பந்தில் பள்ளங்களிலே தேங்கியிருக்கும் கடல் நீர் அந்தச் சுழற்சியிலே தலைகீழாகக் கவிழ்ந்து திசை வெளியில் ஏன் சிதறிப் போய்விடவில்லை?

பராசக்தியின் ஆணை. அவள் நமது தலைமீது கடல்வீழ்ந்து விடாதபடி ஆதரிக்கிறாள்.

அவள் திருநாமம் வாழ்க. கடல் பெரிய ஏரி; விசாலமான குளம்; பெருங் கிணறு; கிணறு நம் தலையிலே கவிழ்கிறதா? அதுபற்றியே கடலும் கவிழவில்லை. பராசக்தியின் ஆணை.

அவள் மண்ணிலே ஆகர்ஷணத் திறமையை நிறுத்தினாள். அது பொருள்களை நிலைப்படுத்துகின்றது. மலை நமது தலைமேலே புரளவில்லை. கடல் நமது தலைமேலே கவிழவில்லை. ஊர்கள் கலைந்து போகவில்லை. உலகம் எல்லா வகையிலும் இயல் பெறுகின்றது. இஃதெல்லாம் அவளுடைய திருவருள். அவள் திருவருளை வாழ்த்துகின்றோம்.

வெம்மை மிகுந்த பிரதேசங்களிலிருந் வெம்மை குன்றிய பிரதேசங்களுக்குக் காற்று ஓடிவருகின்றது. அங்ஙகனம்,ஓடி வரும்போது காற்று மேகங்களையும் ஓட்டிக் கொண்டு வருகிறது. இவ்வண்ணம் நமக்கு வரும் மழை கடற் பாரிசங்களிலிருந்தே வருகிறது.

காற்றே, உயிர்க் கடலிலிருந்து எங்களுக்கு நிறைய உயிர் மழை கொண்டுவா. உனக்குத் தூபதீபங்கள் ஏற்றிவைக்கிறோம். வருணா, இந்திரா, நீவிர் வாழ்க இப்போது நல்ல மழை பெய்யும்படி அருள் புரிய வேண்டும்.

எங்களுடைய புலங்களெல்லாம் காய்ந்து போய்விட்டன. சூட்டின் மிகுதியால் எங்கள் குழந்தைகளுக்கும் கன்று காலிகளுக்கும் நோய் வருகிறது.அதனை மாற்றியருள வேண்டும்.

பகல் நேரங்களிலே அனல் பொறுக்க முடியவில்லை. மனம் ‘ஹா ஹா’ வென்று பறக்கிறது.

பறவைகளெல்லாம் வாட்டமெய்தி நிழலுக்காகப் பொந்துகளில் மறைந்து கிடக்கின்றன. பல தினங்களாக, மாலைதோறும் மேகங்கள் வந்து கூடுகின்றன.

மேக மூட்டத்தால் காற்று நின்றுபோய்,ஓரிலை கூட அசையாமல், புழுக்கம் கொடிதாக இருக்கிறது. சிறிது பொழுது கழிந்தவுடன் பெரிய காற்றுக்கள் வந்து மேகங்களை அடித்துத் துரத்திக்கொண்டு போகின்றன. இப்படிப் பல நாட்களாக ஏமாந்து போகிறோம்.

இந்திரா, வருணா, அர்யமா, பகா, மித்திரா, உங்கள் கருணையைப் பாடுகிறேன். எங்கள் தாபமெல்லாந் தீர்ந்து, உலகம் தழைக்குமாறு, இன்ப மழை பெய்தல் வேண்டும்.

# புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்

ஆண்மை தவறேல்.

இளைத்தல் இகழ்ச்சி

ஈகை திறன்

உடலினை உறுதிசெய்

ஊண்மிக விரும்பு

எண்ணுவது உயர்வு

ஏறுபோல் நட

ஐம்பொறி ஆட்சிக்கொள்

ஒற்றுமை வலிமையாம்.

ஓய்தல் ஒழி.

ஔடதம் குறை.

கற்றது ஒழுகு.

காலம் அழியேல்.

கிளைபல தாங்கேல்.

கீழோர்க்கு அஞ்சேல்.

குன்றென நிமர்ந்து நில்.

கூடித் தொழில் செய்.

கெடுப்பது சோர்வு

கேட்டிலும் துணிந்து நில்.

கைத்தொழில் போற்று

கொடுமையை எதிர்த்து நில்.

கோல்கைக் கொண்டுவாழ்

கவ்வியதை விடேல்.

சரித்திரச் தேர்ச்சி கொள்

சாவதற்கு அஞ்சேல்

சிதையா நெஞ்சு கொள்.

சீறுவோர்ச் சீறு.

சுமையினுக்கு இளைத்திடேல்.

சூரரைப் போற்று

செய்வது துணிந்து செய்

சேர்க்கை அழியேல்.

சைகையில் பொருளுணர்.

சொல்வது தெளிந்து சொல்

சோதிடந் தனை யிகழ்.

சௌரியம் தவறேல்.

ஞமலிபோல் வாழேல்.

ஞாயிறு போற்று

ஞிமறென இன்புறு.

ஞெகிழ்வது அருளின்.

ஞேயம் காத்தல்செய்.

தன்மை இழவேல்.

தாழ்ந்து நடவேல்.

திருவினை வென்று வாழ்.

தீயோர்க்கு அஞ்சேல்.

துன்பம் மறந்திடு

தூற்றுதல் ஒழி.

தெய்வம் நீ என் றுணர்.

தேசத்தைக் காத்தல் செய்.

தையலை உணர்வு செய்.

தொன்மைக்கு அஞ்சேல்.

தோல்வியில் கலங்கேல்.

தவத்தினை நிதம் புரி.

நன்று கருது.

நாளெலாம் வினை செய்;

நினைப்பது முடியும்

நீதிநூல் பயில்.

நுனியளவு செல்.

நூலினைப் பகுத்துணர்.

நெற்றி சுருக்கிடேல்.

நேர்படப் பேசு.

நையப் புடை.

நொந்தது சாகும்.

நோற்பது கைவிடேல்.

பணத்தினைப் பெருக்கு.

பாட்டினில் அன்பு செய்.

பிணத்தினைப் போற்றேல்.

பீழைக்கு இடங்கொடேல்.

புதியன விரும்பு.

பூமி இழந்திடேல்.

பெரிதினும் பெரிது கேள்.

பேய்களுக்கு அஞ்சேல்.

கொய்மை இகழ்.

போர்த் தொழில் பழகு.

மந்திரம் வலிமை.

மானம் போற்று.

மிடிமையில் அழிந்திடேல்.

மீளுமாறு உணர்ந்துகொள்.

முனையிலே முகத்து நில்.

மூப்பினுக்கு இடங் கொடேல்.

மெல்லத் தெரிந்து சொல்.

மேழி போற்று.

மொய்ம்புறத் தவஞ் செய்.

மோனம் போற்று.

மௌட்டியந் தனைக் கொல்.

யவனர்போல் முயற்சிகொள்.

யாரையும் மதித்து வாழ்.

யௌவனம் காத்தல் செய்.

ரஸத்திலே தேர்ச்சிகொள்.

ராஜஸம் பயில்.

ரீதி தவறேல்.

ருசிபல வென்றுணர்.

ரூபம் செம்மை செய்.

ரேகையில் கனி கொல்.

ரோதனம் தவிர்.

ரௌத்திரம் பழகு.

லவம் பல வெள்ளமாம்.

லாகவம் பியற்சி செய்.

லீலை இவ் வுலகு.

(உ)லொக நூல் கற்றுணர்.

லௌகிகம் ஆற்று.

வருவதை மகிழ்ந்துண்.

வான நூற் பயிற்சி கொள்.

விதையினைத் தெரிந்திடு.

வீரியம் பெருக்கு

வெடிப்புறப் பேசு.

வேதம் புதுமை செய்.

வையத் தலைமை கொள்.

வௌவுதல் நீக்கு.

# 7. எட்டுத்தொகை

## அ. புறநானூறு

### சோற்று வளம்

தூங்குகையான் ஓங்குநடைய
உறழ்மணியான் உயர்மருப்பின
பிறைநுதலால் செறல்நோக்கின
பாவடியால் பணைஎருத்தின
தேன்சிதைந்த வரைபோல
மிஞிறுஆர்க்கும் கமழ்கடாஅத்து
அயறு சோரும் இருஞ்சென்னிய
மைந்துமலிந்த மழகளிறு
கந்துசேர்பு நிலைஇடவழங்க
பால்நின்று கதிர்சோரும்

மிசைஅலங்கு உளைய பனைப்போழ் செரீஇச்
சினமாந்தர் வெறிக்குரவை
ஓத நீரில் வையர்பு பொங்க
வாய்காவாது பரந்துபட்ட
வியன்பாசறைக் காப்பாள!

வேந்துதந்த பணிதிறமையால்
சேர்ந்தவர் கடும்புஆர்த்தும்
ஓங்குகொல்லியோர் அடுபொருந!
வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்
வாழிய பெருமநின் வரம்பில் படைப்பே

நின்பாடிய அலங்குசெந்நாப்
பிறர்இசை நுவலாமை
ஓம்பாது ஈயும் ஆற்றல் எங்கோ!

மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஓம்பியநாடே
புத்தேள் உலகத்து அற்றெனக் கேட்டுவந்து

இனிது கண்டிசின் பெரும முனிவலை
வேறு புலத்து இறுக்கும் தனையொடு
சோறுபட நடத்திநீ துஞ்சாய் மாறே.

## வானநூல் அறிவு

செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றுஅளந்து அறிந்தோர் போல என்றும்

யாங்கனம் பாடுவர் புலவர்? கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந்த தகாஅர்ஸ
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடல்பல் தாரத்த நாடுகிழ வோயே!

## கங்கையாறு

நீண்டொலி அழுவம் குறைபட முகந்துகொண்டு;
ஈண்டுசெலல் கொண்மூ வேண்டுவயின் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்பு,
உரும்உரறு கருவியொடு, பெயல்கடன் இறுத்து,
வளமழை மாறிய என்றூழ்க் காலை,

## பறம்புமலைச் சுனைகள்

ஓரை ஆயத்து ஒண்தொடி மகளிர்
கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்,
யாமை ஈன்ற புலவுநாறு முட்டையைத்
தேன்நாறு ஆம்பல் கிழங்கோடு பெறூஉம்
இழுமென ஒலிக்கும் புனலம் புதவின்,

பெருமா விலங்கைத் தலைவன், சீறியாழ்
இல்லொர் சொன்மலை நல்லியக் கோடனை
உடையை வாழி, யெற் புணர்ந்த பாலே!
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
ஒரூர் உண்மையின் இகந்தோர் போலக்,

## வரிசையாக நீர் முகத்தல்

களிறுநீ றாடிய விடுநில மருங்கின்,
வம்பப் பெரும்பெயல் வரைந்துசொரிந்து இறந்தெனக்
குழிகொள் சென்னீர் குராஅல் உண்டலின்,
சேறுகிளைத் திட்ட கலுழ்கண் ஊறல்
முறையின் உண்ணும் நிறையா வாழ்க்கை.

முளைவுமாத் தொலைச்சிய முழுச்சொல் ஆடவர்
உடும்பிழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச்
சீறில் முன்றில் கூறுசெய் திடுமார்
கொள்ளி வதைத கொழுநிண நாற்றம்
மறுகுடன் கமழும் மதுகை மன்றத்து.

அலந்தலை இரத்தி அலங்குபடு நீழல்,
கயந்தலைச் சிறாஅர் கணைவிளை யாடும்
அருமிளை இருக்கை யதுவே வென்வேல்
வேந்துதலை வரினும் தாங்கும்
தாங்கா ஈகை, நெடுந்தகை பூமி.

## 8. நன்னெறி

### எதிர்பார்க்காமல் உதவி செய்க

என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதுஅற்றோர் – துன்றுசுவை
பூவில் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து.

## 9. வெற்றிவேற்கை

நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

எழுநிலை மாடம் கால்சாய்ந்து உக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொன்தொடி மகளிரும் மைந்தருங் கூடி
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

## 10. மூதுரை அல்லது வாக்குண்டாம்

அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

### நல்லவர்களால் அனைவருக்கும் நலம் விளையும்

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

## உண்மையான உறவினர்கள்

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்திற்
கொட்டியுமம் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

# 11. கதை

## ஞானத்தை அடைவது

'தர்மங்களை அறிந்த யது, விவேகியாகிய அந்த அந்தணரைப் பார்த்து "தர்மங்கள் என்று எதையும் செய்து கொண்டிராத நீங்கள் ஞானத்தை அடைந்தது எப்படி? நீங்கள் எதையும் செய்வதில்லை; எதையும் விரும்புவதுமில்லை, மூடன் போலவும், பைத்தியம் போலவும் அலைகிறீர். அதே சமயத்தில் பெரும் வல்லமை படைத்தவர் போலவும் காட்சியளிக்கிறீர். பந்துக்கள், மனைவி, செல்வம், நண்பர்கள் ... என்று எதையும் அனுபவிக்காமல், நீங்கள் ஆனந்தத்தில் திளைத்திருப்பது எவ்வாறு? எனக்கு நீங்கள் இதை விளக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

'அந்த அந்தணர் யதுவைப் பார்த்து "நான் இருபத்திநான்கு பேர்களை எனது ஆச்சார்யர்களாக என் மனதில் ஏற்றுக் கொண்டேன். அவர்களிடமிருந்து பல விஷயங்களை நான் தெரிந்து கொண்டேன். அதைச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு, தான் பெற்ற அனுபவத்தையும், அதன் மூலம் கற்ற பாடத்தையும் விவரித்தார் :

**'பூமி; காற்று;** ஆகாயம்; நீர்; அக்னி; சந்திரன்; சூரியன்; மாடப்புறா; மலைப்பாம்பு; கடல்; விளக்கு – விட்டில் பூச்சி; தேனீ; யானை; வேடன்; மான்; மீன்; பிங்களை என்ற பெயருடைய தேவதாசி; குராரம் என்ற பெயருடைய பறவை; ஒரு சிறுவன்; ஒரு சிறுமி; அம்பு செய்கிற ஒரு கொல்லன்; பாம்பு; பட்டுப்பூச்சி; குளவி – ஆகிய ஆச்சார்யர்களே அந்த 24 பேர். இவற்றின் குணங்கள், மற்றும் நடத்தையிலிருந்து, எதை கிரஹித்துக் கொள்ள

வேண்டுமோ, அதை நான் கிரஹித்தேன். எல்லா பிராணிகளினாலும் மிதிக்கப்பட்டு, மற்றும் பல வகைகளில் துன்புறுத்தப்படுகிற பூமி, அந்த ஹிம்சையை எப்படி சகித்துக் கொள்கிறதோ – அதே போல, மற்றவர்களால் பாதிக்கப்படுகிறபோது, விதியினால் தூண்டப்பட்டே அவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று நினைத்து, அந்த உபத்திரவங்களை நாம் ஏற்க வேண்டும். பூமியில் உள்ள மலை, அருவி போன்றவை பிறருக்குத்தான் உபயோகப்படுகிறது; அது போலவே பூமியில் இருக்கும் மரங்கள், பிறருக்கே பயன்படுகின்றன. இதைப் போல பிறருக்கு பயன்படுகிற வகையில் வாழ வேண்டும் என்பதை பூமியிடமிருந்தும். அதை சார்ந்த மலை, மரம் போன்றவற்றிலிருந்தும் மனிதன் கற்க வேண்டும்.

**காற்று,** காட்டுத் தீயின் போது வீசினாலும், அது தீயினுடன் கலப்பதில்லை; அதே போல பல்வகைப்பட்ட குணங்களுடன் தொடர்பு ஏற்பட்டாலும் மனிதன், அவற்றில் கலக்கக் கூடாது. வாசனை போன்றவற்றுடன் காற்று கலந்து விடுவதில்லை. இதிலிருந்து – ஆன்மா, ஒரு உடலில் பிரவேசித்தாலும், அந்த உடலுக்கு ஏற்படுகிற குழந்தை பருவம், இளமை, முதுமை போன்றவை, ஆத்மாவுக்கு ஏற்படுவதில்லை என்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும்.

**ஆகாயம்,** எங்கும் வியாபித்திருக்கிறது; அது அளவிட முடியாதது; ஆனால் எதனுடனும் அதற்குத் தொடர்பு இல்லை. ஆன்மாவும் இது போலவே எல்லா ஜீவராசிகளிடமும் மறைந்திருந்தாலும், அது எதிலும் சேர்ந்து விடுவதில்லை என்பதை மனிதன் உணர வேண்டும்.

**நீர்,** எல்லாவற்றையும் சுத்தப்படுத்துவது போல, ஞானமுடையவன் தன்னுடன் தொடர்பு உள்ளவர்களை தூய்மைக்குகிறான்.

**அக்னி,** எல்லாவற்றையும் எரித்தாலும் அதற்கு ஒரு பாதிப்பும் இல்லை; அது போல எல்லாவற்றையும் உட்கொண்டாலும் யோகிக்கு எந்தப் பாவமும் வந்து சேராது. ஒரு கட்டையில் பற்றுகிற போது, அந்தக் கட்டையின் வடிவமே உடையது போல அக்னி காட்சியளிக்கிறது. ஆனால், உண்மையில் அது அக்னியின் வடிவம் அல்ல. இதைப் போல், இந்த உலகத்தில் பிரவேசித்து பல வகையில் செயல்பட்டாலும், ஆன்மாவிற்கு வெவ்வேறு தன்மை என்பது கிடையாது. அது ஒன்றே.

# 12. வாகனங்கள்

## விஸ்வகர்மா - யானை

விஸ்வகர்மா என்பவர் சர்வசக்தியுள்ள உயரிய குணம் உள்ள உதாரண புருஷராக கடவுளால் படைக்கப்பட்டார் என்கிறது ரிக் வேதம். இவர் தெய்வத்தன்மை பொருந்திய கட்டிட கலை மற்றும் வடிவமைப்பில் தலைசிறந்த சிற்பி ஆவார். இந்த பிரபஞ்சத்தின் கட்டிய கலைக்கு தலையாசிரியர் என்று இவர் அழைக்கப்படுகிறார். பிரம்ம புருஷ உபநிஷத்திற்கு பாதை வகுத்தவர். ரிக் வேதத்தின்படி விஸ்வகர்மா பிரம்மாவின் நாபிக் கமலத்திலிருந்து வந்ததாக கூறப்படுகிறது. யஜுர் வேத புருஷ சமூகத்தில் தெய்வீக சக்தி படைத்தவர் என்று சொல்லப் படுகிறது. பண்டைய புராணங்களில் இவரை பத்மநாபன் மற்றும் சதாசிவம் என்றும் அறிந்ததாக கூறப்படுகிறது.

வேதகாலத்தில் முதலில் வந்ததாக இந்திரா, சூர்யா மற்றும் அக்னி என்று சொல்லப்பட்டது. இந்த நேரத்தில் பிரம்மாவின் தாமத படைப்பின் ஒரே அம்சமாக வாஸ்தேரபதி மற்றும் பிரகஸ்பதி அல்லது பிரம்மனஸ்பதி என்பவர் வேத காலத்தின் இறுதியில் ஒரே கடவுள் விஸ்வகர்மாதான் கடவுளுக்கும் மேலான ஒரு சக்தி என்றும் மற்ற கடவுளின் பல உருவங்களுக்கு ஒரு வடிவம் என்ற உயிர் கொடுத்து உருவாக்கியவர் என்ற பெருமை பெற்றவர். இவர் தனக்குத்தானே இந்த பரந்த உலகத்தில் புருஷ அல்லது நாராயண என்று சொல்லப்படுகிறார். விஸ்வகர்மா பண்பை தெரிவிக்கும் வாசஸ்பதியுடன் தொடர்புடைய குருவின் கடவுளாகிய பிரகஸ்பதி யுடனும் திரும்பவும் யஜுர் வேதத்தில் பிரஜாபதி என்றும் அதர்வண வேதத்தில் பசுபதி என்றும் சொல்லப்படுகிறார். ஸ்வேதாச்வதர உபநிஷத் விரிவாக இவரை 'ருத்ர சிவா' வாழும் எல்லா உயிரினத்தின் வாசஸ்தலம் என்று கூறுகிறது.

நாபூமிர் நாஜாலம் சைவநா தேஜோ

நச வாயாவாஹ நா சாகஸம் நா

ஸித்தஷா நா பட்ஹி கர்ணா

கோசரம் நாச பிரம்மா நா விஷ்ணுச்ச

நா ருத்ரச்ச தாரகாஹ ஸர்வசூன்யா

நிரலம்பம் ஸ்வம்பூ விஸ்வகர்மனா.

மூலஸ்தம் புராணத்திலுள்ள நசதீய சமூகத்தில் இந்த பிரபஞ்சம் மற்றும் திருமூர்த்திகள் இவர்களுக்கு பிறகு வேத காலத்தில் விஸ்வகர்மா ரிஷியாகவும் சில்பியாகவும் அவதரித்ததாக கூறுகிறது. யஜுர் வேதத்தில் ஐந்து ரிஷிகளில் ஒருவராக கருதப்படுகிறார்.

கால சக்ரமாகிய சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிரை உடைய சூரியனை விஸ்வகர்மா என்று கூறுவார்கள். புவன விஷ்வகர்மா என்ற வேத ரிஷி ரிக் வேத காரணகர்த்தா 10-81,82, ஸமூக்கத்தில் இவர் சில்பி பிரபாஸ் என்பவரின் மகன் என்றும் எட்டாவது துறவியான இவர் அஸ்தம் வாசு மற்றும் யோக சித்தா பிரகஸ்பதியின் சகோதரி. இவருடைய வெளிப்பாடு ஸ்தபாட்ய வேதாயிவாஸ்து சாஸ்த்ரம் அல்லது நாலாவது உப வேதா மற்றும் 64 ஆய கலைகளும் அடங்கும்.

❖❖❖❖

# வகுப்பு-XI

## 1. ஐஞ்சிறுங் காப்பியங்கள்

### அ. சூளாமணி

### சுஹாசினி வந்தனம்

எரிபடு விடுசுட ரிலங்கு பூணினன்
திருவடி தொழுதுபோந் துரும காந்தனும்
வரிபடு மதுகர முரல வார்சினைச்
சொரிபடு பதுமலர் சோலை நண்ணினான்

நாம நல்லொளி வேனம்பி நங்கையாய்
ஏம நல்லுல கின்னிழந் தந்நகைத்
தாம மல்லிகை மாலைச் சுயம்பவை
காம வல்லியுங் காமுற தோன்றினாள்

### சுஹாசினிவந்தனம்

ஆவியாய வயக்கரீவற்
கமிழ் தம் பூத்த வஞ்சாயற்
றேவி மரர்கள் கலன் கழித்துச்
சேணி யுலகஞ் சென்றெய்தி
வீவில் காமன் வருவீதி
கற்பு வேலியால் விலக்கித்
தாவினிறையின் றாழதனாற்
பொறியின் வாயிறாழ்ப் பெய்தா

# 2. நீதி நூல்கள்

## அ. கொன்றை வேந்தன்

### இன்னிலை

மனைக்கொளி சேய் நாற்பணியோன் நாரப் புலக்கார்
வினைக் கொளியாங் கட்கா மலை முனைக் கஞ்சா
வீரரொளியா மடமே யரிவையர்க்காம்
ஏரொளியா மில்லுடையான் றுப்பு

### நல்வழி

நீறில்லா நெற்றிபாழ்; நெய்யில்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் – மாறில்
உடன் பிறப்பில்லா உடம்பு பாழ் ; பாழே
மடக்கொடி இல்லா மனை

# 3. ஐம்பெருங்காப்பியங்கள்

## அ. சீவக சிந்தாமணி

### கன்யா வந்தனம்

மன்னிய புகழி னான் மேல்
　　வாங்குவிற் புருவமாக
மின்னவிர் பகழி கண்ணாப்
　　புரிசை வெண் மாடமாகத்
துன்னிய சால வாயிற்
　　றுளைகளே துளைகளாகக்
கன்னிய ரெய்து தத்தங்
　　கடிநகர் காவல் கொண்டார்

## ஆ. சிலப்பதிகாரம்

### கங்கா வந்தனம்

ஆங்கு,
ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமால் அடி ஏத்தத்
துவித்துறைப்படியப் போயினள் மேவிக்
குரவை முடிவிலொர் ஊர்அரவம் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்.

## 4. பதினென் கீழ்க்கணக்கு

### சிறுபஞ்ச மூலம்

கொண்டான் வழிஒழுகல் பெண்மகன் தந்தைக்குத்
தண்டான் வழியொழுகல் தன் இளையஃது
அண்டாதே
வேல்வழி வெம்முனை வீடாது வன்னாடு
கோல்வழி வாழ்தல் குணம்.

## 5. எட்டுத்தொகை

## அ. புறநானூறு

"இப்வே பீலியணிந்து மாலைசூட்டிக்
கண்திரள் நோங்காழ் திருத்தி நெய் அணிந்து
கடியுடை வியன் நகரவே அவ்வே
பகைவர்க் குத்திக் கொடு நுதிசிதைந்து
கொல்துறைக் குற்றி மாதோ என்றும்
உண்டாயின் பதங்கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லொர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எம் கோமான் வைந்நுதி வேலே"

## கருணை கைவேல்

மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர
அவிர்அறல் கடுக்கும் அம்மென்
குவையிரம் கூந்தல் கொய்தல் கண்டே.

## பாரி மகளிரைக் கொள்க!

பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந்து உண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்து, சேண் விளங்கி,
மழைமிசை அறியா மால்வரை அடுக்கத்துக்,
கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப!
கறங்குமணி நெடுந்தேர் கொள்க!" எனக் கொடுத்த
பரந்துஓங்கு சிறப்பின் பாரி மகளிர்;
யானே, பரிசிலன், மன்னும் அந்தணன்; நீயே
வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்;
நினக்குயான் கொடுப்பக் கொண்மதி; சினப்போர்

## 6. மங்கையர்க்கரசியார் புராணம்

மங்கையர்க்குத் தனியரசி யெங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக்கொழுந்து வளக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்;கள் பிரான் சண்பையர் கோனருனினாலே
இருந்தமிழ் நாடுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொற்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே

# 7. பாரதியார் கவிதைகள்

## பெண்கள் விடுதலைக் கும்பி (பெண்ணுரிமை)

நல்ல விலை கொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார் பழி கூட்டி விட்டார்! (கும்மி)

கற்பு நிலையென்று சொல்லவந்தார். இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும். சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுகிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி (கும்மி)

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்; தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்

## பெண் விடுதலை

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்;
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட்டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்.
விடுதலையென் பீர்கருணை வெள்ள மென்பீர்.
பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை,

## தாய் மாண்பு

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவளென் றறியீரோ? உணர்ச்சிகெட்டீர்?
பண்டாய்ச்சி ஔவை அன்னை யும்பி தாவும்
பாரிடை "முன் னறிதெய்வம்" என்றாள் அன்றோ?
தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வ முண்டோ?
தாய்பெண்ணே யல்லளோ? தமக்கை. தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?
மனைவியொருந் தியையடிமைப் படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
"தாயைப்போ லேபிள்ளை" என்று முன்னோர்
வாக்குளதன் றோபெண்மை அடிமையுற்றார்
மக்களெலாம் அடிமையுறல் வியப்பொன் றாமோ?

# 8. திருக்குறள்

## வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

## பெண்வழிச் சேறல்

மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று.

## 9. சப்தமாதர்

1. பிரம்மி
2. மகேஸ்வரி
3. வைஷ்ணவி
4. குமரி
5. இந்த்ராணி
6. வரா‘ஹி
7. சாமுண்டி

# 10. கதை

# பெண்மையை பேணுதல்

பெண்களைப் பற்றிப் பேசத் தொடங்குகிற மனுஸ்ம்ருதி – 'ஒரு பெண் தனது குழந்தைப் பருவத்தில் தந்தையிடமும், இளமையில் கணவனிடமும், வயோதிகத்தில் மகனிடமும் கட்டுப்பட்டு வாழ்கிறாள்;;

மேலும் 'கணவனிடம் மாறாத அன்பு வைப்பதை விட மேலான ஒரு விரதம் கிடையாது. மனம், வாக்கு, சரீரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி, கணவனிடம் உண்மையான அன்பு கொண்டு, தனது கடமைகளைச் செய்யும் பெண் இவ்வுலகில் மேன்மை அடைவாள்; மரணத்திற்கு பின் நல்ல உலகை அடைகிறாள்...'.

பெண்ணிற்கு மனுஸ்ம்ருதி சில கடுமையான நிபந்தனைகளை விதித்தாலும், அவளுக்கு ஒரு உயர்ந்த இடத்தை அளிக்கிறது.

யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே
ரமந்தே தத்ர தேவதா:
யத்ரைதாஸ்து ந பூஜ்யந்தே
ஸர்வாஸ்தத்ர அபலா: க்ரியா:

பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகிற இல்லங்களில் தெய்வங்கள் மகிழ்கின்றன; பெண்கள் கௌரவமாக நடத்தப் படாத இல்லங்களில், எல்லாக் காரியங்களும் பயனற்றுப் போகின்றன.

## மனு ஸ்ம்ருதி மேலும் சொல்கிறது :

பெண்கள் துன்பத்திற்கு ஆளாகாத இல்லங்களில், நலம் கொழிக்கிறது; பெண்கள் துன்பத்திற்கு உள்ளாகிற இல்லங்களில், நாசம் விளைகிறது.

மேலும் பெண்கள் வாழ்வைப் பற்றி மனுஸ்ம்ருதி, பின்னர் இவ்வாறும் கூறியிருக்கிறது:

ஒருவனுடைய அம்சமே அவனுடைய மகன் ; மகளும், மகனைப் போலவே ஆவாள்; ஒருவனுடைய மகள் உயிருடன் இருக்கும்போது, அவனுடைய சொத்துக்கு வேறு யார் உரிமை கோர முடியும்?

பெண்ணானவள், மக்களைப் பெறுகிற பாக்கியசாலி; பெண்கள் குடும்பத்தின் ஒளி விளக்குகள்; மங்களகரமானவர்கள்; அவள் கௌரவத்திற்கு உரியவள். பெண்களுக்கும், செழிப்புக்கும், எந்த பேதமும் இல்லை.

மனுஸ்ம்ருதி பெண்களை மிகவும் இழிவான நிலையில் வைத்து விட்டது என்ற கருத்து தவறானது என்பது மேற்கண்ட பகுதிகளைப் படித்தால் புரியும்.

## பத்திரகிரியார் பாடல்

பட்டினத்தாரிடம், நடந்ததைக் கூறி வணங்கி நின்றார் பத்திரகிரியார். பட்டினத்தார் இறைவன் அருளை வேண்டிக் கொள்ள, அங்கே ஒரு பெருஞ்ஜோதி தோன்றியது. அதில் பத்திரகிரியாரும், அந்த பெண்ணும் சேர்ந்தனர். ஜோதி மறைந்தது. அவ்விருவரும்

நற்கதி அடைந்தனர். பத்திரகிரியார் பல ஞானப் பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றுக்கு 'மெய்ஞ்ஞான புலம்பல்' என்ற பெயர் வழங்குகிறது :

பேய்போல எங்கும் திரிந்து, நடைப்பிணம் போல ஒரு ஆசையின்றி இருந்து, எல்லாப் பெண்களையும் தாயாகவே கருதி தவ வடிவம் பூண்டு திகழ்வது, எக்காலம்? பேய்போல ;திரிந்து, பிணம்போல் கிடந்து பெண்ணைத் தாய்போல் நினைத்துத் தவம்முடிப்பது எக்காலம்?

விக்கிரங்களை வெறும் கல்லாகப் பார்க்காமல் அவற்றில் உறைவது ஈசனே என்று நெஞ்சார உணர்வது பற்றி இவ்வாறு சொல்கிறார்

### பத்திரகிரியார் :

உளியினால் செதுக்கப்பட்ட சிலை; வண்ணக் கலவைகளை சாந்து போலச் செய்து வடிக்கப்படுகிற உருவம்;
புளியைத் தேய்த்து வைக்கப்படுகிற செம்பினால் ஆன விக்கிரகம் ஆகியவற்றில் எல்லாம் இறைவன் குடிகொண்டுள்ளான் என்பதை உணர்வது எக்காலம்?

> உளியிட்ட கல்லும், உருப்பிடித்த செஞ்சாந்தும்,
> புளியிட்ட செம்பும், பொருளாவது எக்காலம்?

ஐம்புலன்களை அடக்குவது மிகவும் கடினமான காரியம்; ஆனால் அதைச் சாதித்தால்தான், மேன்மை கிட்டும். இது பற்றி பத்திரகிரியார் சொல்வது:

யாராவது வருவதைப் பார்த்தால், தன்னுடைய உறுப்புகளை எல்லாம் ஓட்டினுள்ளே இழுத்துக் கொள்கிற

ஆமை போல, என்னுடைய ஐம்புலன்களை ஒடுக்கி,
அமைதி பெறுவது, எக்காலம்?

ஆமை வருமாட்கண்டு ஐந்தடக்கம் செய்தாற்போல்,
ஊமை உருக்கொண்டு ஒடுங்குவதும் எக்காலம்?

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூன்று ஆசைகளுக்கு அடிமையாவது பற்றி பத்திரகிரியார் கூறுவது:

மூன்று ஆசைகள், ஒவ்வொரு பிறப்பிலும் தொடர்;ந்து வந்து என்னைப் பீடிக்காமல், இவற்றிற்கு வேர் ஆகிற, தான் என்ற ஆணவத்தை நான் அறுத்தெறிவது எக்காலம்?

தோன்றாசை மூன்றும் தொடர்ந்து வந்து சுற்றாமல், ஊன்றாசை வேரையாடி ஊடறுப்பது எக்காலம்?

மன்னராக இருந்து, அரசையே துறந்து, பட்டினத்தாரை நாடி, சித்தராக உயர்ந்தவர் பத்திரகிரியார்.

## 11. வாகனங்கள்

### சரஸ்வதி – அன்னப்பறவை

கல்விக்கு அதிபதியான கடவுளாகிய சரஸ்வதிதேவி தூய்மையான வெள்ளை உடையணிந்து வெள்ளை தாமரை மலர்மேல் அமர்ந்து அறிவு உண்மை குறிக்கும் நிலையில் அமர்ந்துள்ளார். இவரின் சிலை வடிவமைப்பு வெள்ளை உடை, வெள்ளைத்தாமரை, வெள்ளை நிறமுடைய அன்னப்பறவை ஸத்வ குணத்தையும், உண்மை, அறிவு, புத்தி ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. சரஸ்வதி சிலைக்கு நான்கு கரங்களும், சில விக்கிரகங்களில் இரண்டு கரங்களும் அமைந்துள்ளது. நான்கு கரம் உள்ள சரஸ்வதி தேவியின் கணவர் பெயர் பிரம்மனை(நான்கு தலையை பிரதிபலிப்பதாக) எடுத்துச் சொல்ல மனது,

புத்தி, படைப்பு, தன் நிலை உணருதல் என்ற கருத்துக்கேட்ப சரஸ்வதியின் செயல் உண்மையாக உள்ளது.

இவளது நான்கு திருக்கரங்களின் ஒன்றில் புஸ்தகம், மற்றொரு கையில் ஜபமாலை மற்றொரு கையில் தண்ணீர் நிரம்பிய பானை மீதமுள்ள கையில் வீணை என்ற இசைக்கருவியும் சேர்ந்து உருவமாக அமைந்துள்ளது. சரஸ்வதி கையிலுள்ள வேத புஸ்தகம் சார்ந்து இப்பிரபஞ்சம், முழுதும் மருவி நிரத்தமான நிலையிலுள்ள உண்மை, அறிவு ஆகியவற்றை தெரிந்து கொள்ளும் நிலையை உணர்த்துகிறது. கையிலுள்ள ஜபமாலை யோக நிலையை ஆன்மீக முறையில் அடைவதை உணர்த்துகிறது. மற்றொரு கையிலுள்ள பானையிலுள்ள தண்ணீர் அருந்துவதன் மூலம் அறிவை விருத்தியடையச் செய்யும். மற்றொரு கையிலுள்ள வீணை என்ற இசைக்கருவி மூலம் தெய்வீக சம்மந்தமான பாடலை இசைக்கும் பொழுது அந்தந்த பாடல் சம்மந்தமான இறையருள் கிடைப்பதோடு மனதிற்கு ஒரு சாந்தமும் அமைதியும் கிடைக்கிறது. வீணை இசைக்கருவியை தூங்கி எழுந்தவுடன் பார்த்தால் அன்றைய பொழுது இனிமையாக கழியும் என்று சாஸ்திரம் கூறுகிறது. மேலும் வீணையை இசைக்கும் பொழுது வாயால் பாடிக்கொண்டே வீணையை மீட்டுவதால் குரல் சாீரம் நன்றாக வரவாய்ப்புள்ளது.

அன்னபட்சியானது சரஸ்வதிதேவி காலடியில் அமைந்துள்ளது. அன்ன பட்சி சிறப்பு அம்சம் என்ன வென்றால் பால், தண்ணீர் இரண்டையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் எடுத்துக்கொள்ளும் குணமுடையது. இது எது குறிக்கின்றது என்றால் வாழ்க்கையில் நல்லது மட்டுமே எடுத்துக் கொள்ளும் சுபாவம் வேண்டும். சாதாரணமாக சரஸ்வதி அமர்ந்திருக்கும் இடத்தில் பக்கத்தில் நீரோடை இருக்கும்.

❖❖❖❖

# வகுப்பு-XII

## 1. ஐஞ்சிறுங்காப்பியங்கள்

### அ. சூளாமணி

காட்சியு ஞானமுங் கதிந்த்துத் தன்பொறி
மாட்சியை வெலீஇமணந் தூயனயபின்
நாட்செய்து நவிற்றிய தியான விதியான்
மீட்சியில் வீட்டுல கெய்தும் வீரனே.

### பூமிவந்தனம்

மாண்டன மாற்றலர் நாள்கள் பூமகள்
ஈண்டுவந்திவனொடு திளைக்க லுற்றனள்
காண்டு மிக்காளை தன் கன்னிப் போரெனா
ஈண்டினர் விண்ணிடை யமர ரென்பவவே

## 2. கலிங்கத்துப்பரணி

வெருவர வரிசிலை தெரித்த நாண்
விசைபடு திசைமுகம் வெடிக்கவே
செருவிடை அவரவர் தெரித்தது ஓர்
தெழி உலகுகள் செவிடு எடுக்கவே.

வெயில் தரைமேல் சூழவும் தைக்க
மண்மேல் விழாநீர், வேழம்பர் தம்
கயிற்றால் இழுப்புண்டு, சாயாது நிற்கும்
கழாய் ஒத்தல் காண்மின்களோ!
இருப்புக் கவந்தத்தின் மீது ஏறலும்
சூரர் எஃகம் புதைக்க இறகைப்ப
பரப்பச் சுழன்று இங்கொர் பாறு ஆட,
ஈதுஓர் பருந்து ஆடல் காண்மின்களோ!

## 3. நீதி நூல்கள்

### அ. கொன்றை வேந்தன்

சீரைத் தேடின் ஏரைத்தேடு
தொழுது ஊண் சுவையின் உழுதுஊண் இனிது
நாடு எங்கும் வாழ கேடு ஒன்றும் இல்லை
மேழிச் செல்வம் கோழை படாது
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.

## 4. பாரதியார் கவிதைகள்

### எங்கள் நாடு

பன்னரும் உபநிடநூ லெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல் இதுபோலே?
பொன்னொளிர் பாரதநா டெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கில்லை ஈடே
மாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
புஜ்ரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரதநாடு பழம்பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே

### பாரத மாதா

முன்னை இலங்கை அரக்கர் அழகிய
முடித்தவில் யாருடைவில்? டீ எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவி நல்
ஆரிய ராணியின் வில்

இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடை வில்? – எங்கள்
மந்திரத் தெய்வம் பாரத ராணி
பயிரவி தன்னுடைய வில்
ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்
உலகின்பக் கேணி என்றே – மிக
நன்று பல்வேதம் வரைந்தகை பாரத
நாயகி தன்திருக் கை,

## தேசப்பக்திப்பாடல் (சுதந்திரப் பெருமை)

விண்ணில் விரவிதனை விற்று விட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கை தட்டிப் பிழைப்பாரோ ?

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ

'வந்தே மாதரம்' என்று வணங்கிய பின்
மாயத்தை வணங்குவரோ ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ ?

# 5. எட்டுத்தொகை

## அ. புறநானூறு

### மக்கள் தொண்டர்கள்

உண்டால் அம்ம, இவ்வுலகம், இந்திரர்;
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவலர்;
துஞ்சலும் இலர்;பிற அஞ்சுவது அஞ்சிப்,
புகழ்எனின், உயிருங் கொடுக்குவர்; பழியெனின்,

உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்,
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

### பிள்ளைகளோடு போர் வேண்டா

அமர்வெங் காட்சியொடு மாறுஎதிர்பு எழுந்தவர்;
நினையுங் காலை, நீயும் மாற்றவர்க்கு
அனையை அல்லை; அடுமான் தோன்றல்!
பரந்துபடு நல்லிசை எய்தி; மற்று நீ
உயர்ந்தோர் உலகம் எய்திப்; பின்னும்

நின்பெரும் செல்வம் யார்க்களஞ் சுவையே?
அமர்வெஞ் செல்வ! நீஅவர்க்கு உலையின்,
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே;
அதனல், ஒழிகதில் அத்தை,நின் மறனே! வல்விரைந்து
எழுமதி; வாழ்க,நின் உள்ளம்! அழிந்தோர்க்கு

## பாட்டனும் பேரனும்

இவற்ஈந்து உண்மதி, கள்ளே; சினப்போர்
இனக்களிற்று யானை இயல்தேர்க் குருசில்!
நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை,
எடுத்துஎறி ஞாட்பின் இமையான், தச்சன்
அடுத்துஎறி குறட்டின், நின்றுமாய்ந்த தனனே,

# 6. திருக்குறள்

## நாடு

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு;.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து.

உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.

ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்தமைவு இ;ல்லாத நாடு.

## அரண்

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.

சிறுகாப்பிற் பேரிடத்தது ஆகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

கொளற்குஅரிதாய்க், கொண்டகூழ்த்தாகி, அகத்தார்
நிலைக்குஎளிதாம் நீரது அரண்.

எல்லாப் பொருளும் உடைத்தாய், இடத்துதவும்
நல்லார் உடையது அரண்.

முனைமுகத்து மாற்றலர் சாய விளைமுகத்து
வீறெய்தி மாண்டது அரண்.

ஏனைமாட்சித்து ஆகியக் கண்ணும், விளைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

## படைச்செருக்கு

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

சுழலும் இசைவேண்டி, வேண்டாஉயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

உறின்உயிர் அஞ்சா மறவர், இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.

# 7. 63 நாயன்மார்கள்

| வ. எண் | 63 நாயன்மார்கள் | பிறந்த மாதம் | பிறந்த நட்சத்திரம் | பிறந்த ஊர் |
|---|---|---|---|---|
| 1 | அதிபத்தர் | ஆவணி | ஆயில்யம் | நாகப்பட்டினம் |
| 2 | அப்பூதியடிகள் | தை | சதயம் | திங்களூரில் |
| 3 | அமர்நீதி நாயனார் | ஆனி | பூரம் | பழையாறை |
| 4 | அரிவட்டாயர் | தை | திருவாதிரை | கணமங்கலம் |
| 5 | ஆனாய நாயனார் | கார்த்திகை | அஸ்தம் | திருமங்கலம் |
| 6 | இசைஞானியார் | சித்திரை | சித்திரை | திருநாவலூர் |
| 7 | இடங்கழி நாயனார் | ஐப்பசி | கார்த்திகை | கொடும்பாளூர் |
| 8 | இயற்பகை நாயனார் | மார்கழி | உத்திரம் | சாய்க்காடு |
| 9 | இளையான்குடிமாறார் | ஆவணி | மகம் | இளையான்குடி |
| 10 | உருத்திர பசுபதி நாயனார் | புரட்டாசி | அசுவினி | தலையூர் |
| 11 | எறிபத்த நாயனார் | மாசி | அஸ்தம் | கருகூர் |
| 12 | ஏயர்கோன் கலிகாமர் | ஆனி | ரேவதி | பெருமங்கலம் |
| 13 | ஏனாதி நாதர் | புரட்டாசி | உத்திராடம் | ஏனநல்லூர் |
| 14 | ஐயடிகள் காடவர்கோன் | ஐப்பசி | மூலம் | காஞ்சிபுரம் |
| 15 | கணநாதர் | பங்குனி | திருவாதிரை | சீர்காழி |
| 16 | கணம்புல்லர் | கார்த்திகை | கார்த்திகை | தில்லை |
| 17 | கண்ணப்பர் | தை | மிருகசீரிஷம் | திருக்காளத்தி |
| 18 | கலிய நாயனார் | ஆடி | கேட்டை | ஒற்றியூர் |
| 19 | கழறிற்றறிவார் | ஆடி | சுவாதி | திருவஞ்சைக்களம் |
| 20 | கழற்சிங்கர் | வைகாசி | பரணி | திருக்கச்சி |
| 21 | காரி நாயனார் | மாசி | பூராடம் | திருக்கடவூர் |
| 22 | காரைக்கால் அம்மையார் | பங்குனி | சுவாதி | திருவாலங்காடு |
| 23 | குங்கிலியகலையனார் | ஆவணி | மூலம் | திருக்கடவூர் |
| 24 | குலச்சிறையார் | ஆவணி | அனுஷம் | மதுரை |
| 25 | கூற்றுவர் | ஆடி | திருவாதிரை | களந்தை |
| 26 | கலிக்கம்ப நாயனார் | தை | ரேவதி | திருப்பெண்ணாகடம் |
| 27 | கோச்செங்கட் சோழன் | மாசி | சதயம் | தில்லை |
| 28 | கோட்புலி நாயனார் | ஆடி | கேட்டை | திருநாட்டியத்தான்குடி |
| 29 | சடைய நாயனார் | மார்கழி | திருவாதிரை | திருநாவலூர் |
| 30 | சண்டேஸ்வர நாயனார் | தை | உத்திரம் | ஆப்பாடி |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | சக்தி நாயனார் | ஐப்பசி | பூரம் | வரிஞ்சையூர் |
| 32 | சாக்கியர் | மார்கழி | பூராடம் | திருச்சங்கமங்கை |
| 33 | சிறப்புலி நாயனார் | கார்த்திகை | பூராடம் | ஆக்கூர் |
| 34 | சிறுதொண்டர் | சித்திரை | பரணி | திருச்செங்காட்டங்குடி |
| 35 | சுந்தரமூர்த்தி நாயனார் | ஆடி | சுவாதி | திருநாவலூர் |
| 36 | செருத்துணை நாயனார் | ஆவணி | பூசம் | ஆரூர் |
| 37 | சோமசிமாறர் | வைகாசி | ஆயில்யம் | ஆரூர் |
| 38 | தண்டியடிகள் | பங்குனி | சதயம் | ஆரூர் |
| 39 | திருக்குறிப்புத் தொண்டர் | சித்திரை | சுவாதி | திருக்கச்சி |
| 40 | திருஞானசம்பந்தமூர்த்தி | வைகாசி | மூலம் | சீர்காழி |
| 41 | திருநாவுக்கரசர் | சித்திரை | சதயம் | திருவாமூர் |
| 42 | திருநாளை போவார் | புரட்டாசி | ரோகிணி | தில்லை |
| 43 | திருநீலகண்டர் | தை | விசாகம் | தில்லைப்புலீச்சரம் |
| 44 | திருநீலகண்ட யாழ்ப்பாணர் | வைகாசி | மூலம் | புலியூர் பெருமணம் |
| 45 | திருநீலநக்க நாயனார் | வைகாசி | மூலம் | நல்லூர்ப்பெருமணம் |
| 46 | திருமூலர் | ஐப்பசி | அசுவினி | திருவாவடுதுறை |
| 47 | நமிநந்தியடிகள் | வைகாசி | பூசம் | ஆரூர் |
| 48 | நரசிங்க முனையர் | புரட்டாசி | சதயம் | திருநாவலூர் |
| 49 | நின்றசீர் நெடுமாறன் | ஐப்பசி | பரணி | மதுரை |
| 50 | நேச நாயனார் | பங்குனி | ரோகிணி | ஆரூர் |
| 51 | புகழ்சோழன் | ஆடி | கார்த்திகை | கருகூர் |
| 52 | புகழ்த்துணை நாயனார் | ஆவணி | ஆயில்யம் | அரிசிற்கரைப்புத்தூர் |
| 53 | பூசலார் | ஐப்பசி | அனுஷம் | திருநின்றகூர் |
| 54 | பெருமிழலைக் குறும்பர் | ஆடி | சித்திரை | மிழலை/ஆரூர் |
| 55 | மங்கையர்க்கரசியார் | சித்திரை | ரோகிணி | மதுரை |
| 56 | மானக்கஞ்சாற நாயனார் | மார்கழி | சுவாதி | கஞ்சாறூர் |
| 57 | முருக நாயனார் | வைகாசி | மூலம் | நல்லூர்ப்பெருமணம் |
| 58 | முனையடுவார் நாயனார் | பங்குனி | பூரம் | நீடூர் |
| 59 | மூர்க்க நாயனார் | கார்த்திகை | மூலம் | திருவேற்காடு |
| 60 | மூர்த்தி நாயனார் | ஆடி | கார்த்திகை | மதுரை |
| 61 | மெய்ப்பொருள் நாயனார் | கார்த்திகை | உத்திரம் | திருக்கோவலூர் |
| 62 | வாயிலார் நாயனார் | மார்கழி | ரேவதி | திருமயிலை |
| 63 | விறன்மிண்ட நாயனார் | சித்திரை | திருவாதிரை | ஆரூர்/ வண்டாம்பாளை |

# 8. ஆழ்வார்கள்

| வ. எண் | 12 ஆழ்வார்கள் | பிறந்த மாதம் | பிறந்த நட்சத்திரம் | பிறந்த ஊர் |
|---|---|---|---|---|
| 1 | பொய்கையாழ்வார் | ஐப்பசி மாதம் | திருவோணம் | காஞ்சிபுரம் |
| 2 | பூதத்தாழ்வார் | ஐப்பசி மாதம் | அவிட்டம் | மாமல்லபுரம் |
| 3 | பேயாழ்வார் | ஐப்பசி மாதம் | சதயம் | திருமயிலை |
| 4 | திருமழிசையாழ்வார் | தை | மகம் | திருமழிசை |
| 5 | நம்மாழ்வார் | வைகாசி | விசாகம் | ஆழ்வார்திருநகரி |
| 6 | மதுரகவி ஆழ்வார் | சித்திரை | சித்திரை | திருக்கோவிலூர் |
| 7 | குலசேகர ஆழ்வார் | மாசி | புனர்பூசம் | திருவஞ்சிக்களம் |
| 8 | பெரியாழ்வார் | ஆணி | சுவாதி | திருவில்லிபுத்தூர் |
| 9 | ஆண்டாள் | ஆடி | பூரம் | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 10 | தொண்டரடிப்பொடி-யாழ்வார் | மார்கழி | கேட்டை | திருமண்டங்குடி |
| 11 | திருப்பாணாழ்வார் | கார்த்திகை | ரோகிணி | உறையூர் |
| 12 | திருமங்கையாழ்வார் | கார்த்திகை | கிருத்திகை | திருக்குரையலூர் |

# 9. வாகனங்கள்

## காளி – சிங்கம்

காளி என்றும் காளிகா இந்து சமயத்தின் சாக்த பிரிவினர் வணங்கும் பெண் கடவுள் சக்தியின் அம்சமாக கருதப்படுகிறார்.

காளி என்ற பெயர் வடமொழியில் உள்ள ‘காலா’ என்ற வார்த்தையில் இருந்து எடுக்கப்பட்டதாகும். காளி தேவியாகபட்டவள் காலத்திற்கும், மாறுதல்களுக்கும் தேவியாக கருதப்படுகிறார். காளி என்பதற்கு ‘காலம்’ மற்றும் ‘கருப்பு’ என்று பொருள். காளனின் (ஈசன்) துணைவி தான் காளி. இவரே ஆதி பராசக்தி என்றும் அழைக்கப்படுகிறார். ஆவாள். இவரைப் பற்றிய செய்திகள் அதர்வண வேதங்களிலும், தேவி மகாத்மியதிலும் விரிவாக வழங்கபட்டுள்ளது. இவரை வழிபடும் முறைகள் பல தந்திரங்களிலும் கூறபட்டுள்ளது. காளி தேவி காலங்களை கட்டுபடுத்தக்கூடியவர் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

தாந்திரீகர்கள் பெரும்பாலும் காளி தேவியையும், காளி தேவியின் யந்திரத்தையும் வைத்து வழிபடுகின்றனர். வங்காளத்தில் காளி வழிபாடு அனைத்து ஊர்களிலும் உள்ளது.

காளி வாகனம், காளி தேவி இரண்டு வகையில் உருவம் அமைந்திருக்கும். நான்கு கரங்களுடன் ஓர் அமைப்பு. பத்து கரங்களுடன் மஹாகாளி போன்ற அமைப்பு. பத்து கரங்களுடன் மஹாகாளி போன்ற அமைப்பு. சாதாரணமாக உருவம் கருப்புகலருடன், பெரும்பாலும் இந்திய ஓவியக் கலைஞர்கள் காளியை நீலக்கலரில் வடிவமைத்திருப்பார்கள். தேவியின் கண்கள் சிவப்பு நிறத்திலும், தலைமுடி கிரிடத்துடன் கூடிய நிலையில் காளி அருள் அளிக்கிறார் பக்தர்களுக்கு.

சில காளி சிலையில் ஒரு கையில் வாளுடன் மற்றொரு கையில் ஒரு அசுரனின் தலை மட்டும் துண்டிக்கப்பட்டு காளி அதன் தலையை பிடித்தபடி இருப்பாள். மஹிஷாசுரமர்த்தினி சிலையில் கையில் திரிசூலம் மற்றும் திருவடியின் கீழ் ஒரு அசுரனின் உடல் இருக்கும் சிம்ம வாகனத்தில் மேல் அமர்ந்த நிலையில் உக்ரமாக இருந்து தீய, அசுர குணங்களை உடையவர்களை வதம் செய்து துன்பத்திலிருந்து காத்தருளுகிறார்.

❖❖❖❖

# பழமொழிகள்

## வகுப்பு - I

1. ......................... அழகு முகத்தில் தெரியும் அறத்தின் அழகு ......................... தெரியும். (அகத்தின், கரத்தில்)
2. அடக்கம் ......................... இன்பம் பெறுவார் அடக்கம் இல்லார் ......................... பெறுவார். (உள்ளார், துன்பம்)
3. ......................... அன்று கொல்லும் தெய்வம் ......................... கொல்லும். (அரசு, நின்று)
4. ......................... தெரியாமல் காலைவிடாதே காலம் தெரியாமல் ......................... கொடாதே (ஆழம், கடனைக்)
5. ஆலும் வேலும் ................ குறுதி நாலும் இரண்டும் ......................... குறுதி (பல்லுக், சொல்லுக்)
6. ஆறு ......................... கிழக்கு அரசன் சொல்வதே ......................... (போவதே, வழக்கு)
7. ஈசன் தெரிவான் ........................., ......................... தெரிவான் குருவை. (கருவை, சீஷன்)
8. குற்றமுள்ள நெஞ்சு ......................... ......................... காது தினவெடுக்கும். (குறுகுறுக்கும், குறும்பிக்)
9. சொன்னதைச் சொல்லும் ......................... ......................... செய்யும் குலப்பிள்ளை. (கிளிப்பிள்ளை, சொல்வதைசி)
10. தானம் செய்யின் ......................... வானம் ......................... குறையாது (அழியாது, பெய்யின்)
11. தானாக் கெடுத்தது ........................., ......................... கெடுத்தது பாதி. (பாதி, தம்பிரான்)
12. ................ வேண்டுவது ஒழுக்கம் இருக்க வேண்டுவது .................... (படிக்க, அடக்கம்)
13. பட்ட .............. படும் ................... குடியே கெடும். (இடமே, கெட்ட)

## பொது பழமொழிகள்

14. உண்ட வயிறு .................... தின்ற பாக்கு ....................(கேட்கும், சிவக்கும்)
15. உப்பு இருந்தால் .................... இராது பருப்பு இருந்தால் .................... இராது. (பருப்பு, உப்பு)
16. .................... ஒருபக்கம் இடி மத்தளத்துக்கு .................... இடி (உரலுக்கு, இருபக்கம்)
17. உலகத்துக்கு .................... பேய் ஞானத்துக்கு .................... பேய். (ஞானம், உலகம்)
18. ................ வார்க்க ஆளில்லை கச்சை கட்ட .................... (கஞ்சி, ஆளுண்டு)

## வகுப்பு - II

1. அசைந்து தின்பது ........................, ........................ தின்பது வீடு (மாடு, அசையாமல்)
2. அரவம் ........................ நோகும் ........................ விதியை நோகும். (பசியை, தவளை)
3. அழுக்குக்குள் இருக்கும் ........................ ........................ இருக்கும் ஆதிக்கம். (மாணிக்கம், அரசுக்குள்)
4. அழுத பிள்ளையும் ........................ ........................ பாலையும் குடித்தது (சிரித்தது, கழுதைப்)
5. எதுவேனும் உரைப்பது ........................ அதுபோல ........................ அரிது. (எளிது, நடப்பது)
6. எருது ................. நினைக்கும் .............. வாழ்வை நினைக்கும். (நோவை , காக்கை)
7. ........................ செயினும் நன்றே செய் நன்றே செய்வதும் ........................ செய் (ஒன்றே, இன்றே)
8. கற்கையில் கல்வி ........................, ........................ அதுவே இனிப்பு (கசப்பு, கற்றபின்)

9. நன்மை செய்தார் ........................, ........................ செய்தார் தீமையடைவார். (நன்மையடைவார், தீமை)

10. ........................ விரலால் பாடுபடு ஐந்து விரலால் ........................ (பத்து, அள்ளியிடு)

11. பயிர்மேலாவது ........................, ........................ மேலாவது ஞானத்தால். (வானத்தால், உயிர்)

12. ........................ அழகு வெண்மை சொல்லின் அழகு ..................... (பல்லின், உண்மை)

13. ........................ பழுத்தால் கிளிகள் விரும்பும் வேம்பு பழுத்தால் ........................ விரும்பும். (மாமரம், காக்கை)

## பொது பழமொழிகள்

14. அளக்கிற நாழியும் ........................ சோதிக்கும் ........................ பொட்டை (பொட்டை , நாழியும்)

15. ........................கொடுத்தால் இனாம் அளந்து கொடுத்தால் ........................(அள்ளிக், கடன்)

16. எல்லார் தலையிலும் ........................, ........................தலையிலே பத்தெழுத்து. (எட்டெழுத்து, பாவி)

17. ஏழைக் குழந்தை ........................குடிக்கும் ........................குழந்தை பாலைக் குடிக்கும் (கூழைக் , யோகக்)

18. ஐப்பசி மாதம் அழுகைத் ........................, ........................மாதம் கனத்த மழை. (தூற்றல், கார்த்திகை)

19. ........................மரமும் தூணாமா ஓட்டாங் ........................காசாமா (ஓதிய, கிளிஞ்சல்)

20. ஒருவன் அறிந்தால் ........................, ........................அறிந்தால் அம்பலம். (ரகசியம், இருவர்)

21. ........................வீட்டில் கன்று சாகும் பிறக்கும் வீட்டில் ..................... சாகும். (கறக்கும், பிள்ளை)

22. காக்கை ........................அறியும் ........................டப்பு அறியும். (நோக்கு, கொக்கு)

23. ........................என்றால் வாயாடும் கடிவாளம் என்றால் வாய்........................(காணம், மூடும்)
24. சாகும்பிள்ளை ........................, ........................பிள்ளை மடியாது. (பிழையாது, ஆகும்)
25. சிந்தின வீட்டில் ........................குறையும் ........................வீட்டில் வாழ்வு குறையும். (செல்வம், மங்கிய)
26. ........................நாலுகால் திருடன் இடைக்குட்டி ........................கால் திருடன். (நரிக்குட்டி, இரண்டு)
27. நாய்விற்ற காசு ........................? ........................காசு மணக்குமா? (குரைக்குமா, பூவிற்ற)
28. ........................வழி கேட்பான் கொட்டைப்பாக்கு ........................ சொல்வான். (பட்டுக்கோட்டை, விலை)
29. பட்டுப் புடவை ........................ பழைய ........................தொட்டியிலே (பெட்டியிலே, கந்தை)

## வகுப்பு - III

1. உத்தமன் வாய்வாக்கு ........................ உடும்புக்கும் ........................ இருநாக்கு. (ஒருவாக்கு, பாம்புக்கும்)
2. இளங்கன்று ........................ அறியாது ..................குழையறியாது. (பயம், இளமறி)
3. குங்குமக் கோதைக்கு ........................பணம் ........................ கண்ணிக்கு நாலு பணம். (ஏழு, குருட்டுக்)
4. ........................ மாங்காய் கொண்டாட்டம் குரங்குக்கு .................... கொண்டாட்டம். (கூழுக்கு, தேங்காய்)
5. ........................ வரையில் கொண்டாட்டம் கொண்டபிறகு ................. (கொள்ளும், திண்டாட்டம்)
6. வயசு முடிந்தவர் ........................அடைவார் ........................ புரிந்தவர் சரணம் அடைவார். (மரணம், தபசு)
7. ........................ போது மகிழ்ச்சி யாகும்
8. காடுக்கும் போது ........................ (வாங்கும், எரிச்ச லாகும்)
9. வாயுள்ள பிள்ளை ........................, ........................ பிள்ளை உழைக்கும். (பிழைக்கும், வலுவுள்ள)

10. வாயிலூட்டுவது ........................., ......................... சொல்லமுது (நல்லமுது, காதிலூட்டுவது)
11. விட்டுச் சொன்னால் கட்டுக் .........................
12. விரித்து டுத்தினால் ......................... படியும். (குலையும், அழுக்குப்)
13. வில்லில் வல்லவன் ........................., ......................... வல்லவன் கீரன். (சேரன், சொல்லில்)

## பொது பழமொழிகள்

14. மூத்தார்க் குண்டு .........................சக்தி ......................... குண்டு ஏழு சக்தி. (மூன்று, இளையார்க்)
15. மூலத்தின் மாமியார் ........................., ......................... அல்லது மாறுதலே. (மூலையிலே , மூலையில்)
16. மூன்று முழமும் .................. சுற்று ..................... முழமும் ஒரு சுற்று. (ஒரு, முப்பது)
17. ..................... தோணியி லேறும் ...................... வண்டியி லேறும். (வண்டி, தோணி)
18. ................... வேலையை மறவாதே பந்தக் காலைப் ...................... (வந்த, பிடியாதே)

## வகுப்பு - IV

1. ஆற்றுக்கு அவசியம் ......................... , ......................... அவசியம் ஏணி. (தோணி, வீட்டுக்கு)
2. இல்லாரை எல்லாரும் ........................., ......................... எல்லாரும் உள்ளுவர். (வள்ளுவர், உள்ளாரை)
3. இறைத்த கிணறு ........................., ......................... கிணறு நாறும். (ஊறும், இறையாத)
4. இன்சொல் கோபம் ........................., ......................... கோபம் விளைக்கும். (தணிக்கும், வன்சொல்)
5. இன்பத்தின் முடிவு ......................... துன்பத்தின் முடிவு ..................... (துன்பம், இன்பம்)
6. .......... அழலா யெறியும் உதடு பழமாய்ச் ......... (உள்ளம், சொரியும்)

7. உறவு ........................ கெட்டது ........................ உடுக்காமல் கெட்டது. (உண்ணாமல், உடம்பு)

8. கடிக்கும் நாய் ......................... ......................... நாய் கடியாது. (குரையாது, குரைக்கும்)

9. ......................... போவது ஆராய்வார் சுளகு போவது ......................... (கடுகு, ஆராயார்)

10. கலையை வளர்ப்பான் ......................... வீரன் மலையைத் ......................... வேல் வீரன். (நூல், துளைப்பான்)

11. ....................... பாட்டு தெளிவு படாது வல்லார் பாட்டு ..................... படாது. (கல்லார், இழிவு)

12. ........... போதே தூற்றிக்கொள் கரும்புள்ள போதே ......................... (காற்றுள்ள ,ஆட்டிக்கொள்)

13. ...................... முகமும் வாடக்கூடாது குதிரில் நெல்லும் ................ (குழந்தை, குறையக்கூடாது)

14. ......................... எதிர்ப்பது பலமுறை வீரன் எதிர்ப்பது ....................... (கோழை, ஒருமுறை)

15. ......................... வார்த்தால் தீர்த்தம் செம்பிலே வார்த்தால் ................... (சங்கிலே, தண்ணீர்)

16. சம்பா விளைந்து ......................... ........................ மாடு மேய்ந்தது. (சாய்ந்தது, தானாக)

17. சுண்டைக்காய் ................... பணம் ......................... முக்கால்பணம். (கால், சுமைகூலி)

18. ......................... இயற்கை மேல் நோக்கும் நீரின் இயற்கை ................ நோக்கும். (தீயின், கீழ்)

19. தைமாதப் பனி ......................... துளைக்கும் ......................... மாதப் பனி மச்சைத் துளைக்கும்.(துரையைத், மாசி)

20. நடிக்கவேண்டுவது ........................., ......................... வேண்டுவது ஆடகம் (பொன்). (நாடகம், நகைக்கு)

21. நமக்கு ......................... யுமில்லை ......................... நேரமுமில்லை. (வேலை, இருக்க)

## பொது பழமொழிகள்

22. ................... மானால் ஏகி நெருங்கு துஷ்டனானால் தூர............ (இஷ்ட, ஒதுங்கு)
23. ........................ காலில் மூதேவி நடந்த காலில் ........................ (இருந்த, சீதேவி)
24. உள்ளது சொல்ல .................. அல்ல ................... சொல்ல நாடும் அல்ல. (ஊரும், நல்லது)
25. கடன் வாங்கியும் ........................, ........................ மாகியும் பிரம்மச்சாரி. (பட்டினி, கல்யாண)
26. ........................ பட்டாலும் பட்டது கிடாரம் பட்டாலும் ........................ (கிண்ணி, பட்டது)
27. குறையும் செல்வம் ........................ தெரியும் ........... செல்வம் வழியில் தெரியும்.(கொடையில், அழியும்)
28. கூட்டிக் கொடுக்கும் ........................ வாரம் ........................ கொடுக்கும் சனிவாரம். (குரு, காட்டிக்)

## வகுப்பு - V

1. அம்பாள் பாக்கியம் சம்பா விளைந்து பாவி பாக்கியம் .................. விளைந்தது (பதராய்)
2. ........................கூத்தைப் பழிப்பான் செவிடன் ........................ பழிப்பான். (குருடன், பாட்டைப்)
3. பாலானால் .............. விடு ........................ அங்கே விடு (மோரானால், இங்கே)
4. .................... எடுப்பார் பெருமாள் பிடுங்கித் தின்பார் .................... (பிச்சை, அநுமார்)
5. பிடித்த கொப்பும் ........................, .................... கொப்பும் முறிந்தது. (ஒடிந்தது, மிதித்த)
6. ................ பிறந்தது விசாகபட்டினம் காமாச்சி பிறந்தது ................ (மீனாட்சி, காயல்பட்டினம்)
7. ..................... கற்றவன் புலவன் முதன்மை பெற்றவன் .............. (முத்தமிழ், தலைவன்)

## பொது பழமொழிகள்

8. அரசன் இட்டது .........................
.........................இட்டது திட்டம். (சட்டம், அமைச்சர்)
9. .........................பாதம் சிந்திப்போம் ஆனால் நம்பாபம் சிந்திப்போம் (ஆண்டவன்)
10. ......................எடுப்பார் பெருமாள் பிடுங்கித் தின்பார்......................... (பிச்சை, அநுமார்)
11. பிடித்த கொப்பும் .........................
.........................கொப்பும் முறிந்தது. (ஒடிந்தது, மிதித்த)
12. புகையிலை ......................... போச்சு பொற்றொடி ......................... போச்சு (விரித்தால், சிரித்தால்)
13. புல்லுள்ள இடத்தில் .........................
......................... இடத்தில் போகவிடாது (மேயவிடாது, பொருளுள்ள)
14. .........................கொன்ற பாபம் உனக்கு பிடிவெல்லம் .................... பாபம் எனக்கு. (பூனையைக், தின்ற)
15. பெற்றதெல்லாம் பிள்ளையா கற்றதெல்லாம் .................... (வித்தையா)
16. மதயானை வருவது .........................,  ......................... வருவது முன்னே. (பின்னே, மணியோசை)
17. ..................... பிறந்தது விசாகபட்டினம், காமாச்சி பிறந்தது ................ (மீனாட்சி, காயல்பட்டினம்)
18. .................... கற்றவன் புலவன் முதன்மை பெற்றவன் ................... (முத்தமிழ், தலைவன்)
19. வீட்டு மனைவி .........................,  ......................... மனைவி கரும்பாகும். (வேம்பாகும், நாட்டு)
20. வெல்லும் காலம்.........................காலம்
21. ......................... காலம் பொல்லாத காலம். (செல்லுங், வெல்லாத)
22. வெளியில் சொன்னால் ......................... மனதில் வைத்தால் ......................... (வெட்கம், துக்கம்.)
23. வேண்டு மென்றால் ......................... நலம் வேண்டா மென்றால் ......................... நலம்.( வீடே, காடே)
24. வேலை செய்தால் .........................,  ......................... போட்டால் காசு (கூலி, வேஷம்)

## வகுப்பு - VI

1. ஊசியைக் ................... இழுக்கும் ...................... சிநேகம் இழுக்கும் (காந்தம், உத்தமனைசி)
2. ......................... ஒத்தது உபசாரம் ஆளுக்கு ஒத்தது ......................... (ஊருக்கு, ஆசாரம்)
3. ஊர் நஷ்டம் ............., ............ நஷ்டம் தெருவிலே (ஊரிலே, தேர்)
4. நாட்டு வாசம் ................. குரியது ................... வாசம் துறவிக் குரியது. (பிறவிக், காட்டு)

## பொது பழமொழிகள்

5. ஊமை .............. கெடுக்கும் .............. வீட்டைக் கெடுக்கும். (ஊரைக், பெருச்சாளி)
6. .............. பழம் புளிக்கும் எட்டிய பழம் .............. (எட்டாத, இனிக்கும்)
7. நிரம்பப் படிப்பவன் .............. பயில்வான் ............. படிப்பவன் கோவில் பயில்வான். (நூலில், சிலம்பம்)
8. பங்குனியென்று .............. மில்லை ............. யென்று சிறுத்தது மில்லை. (பருத்தது, சித்திரை)

## வகுப்பு - VII

1. ......................... மேவியது வாரிதி அதையும் தாவியது ......................... (அகலம், மாருதி)
2. அடுத்தவர்.........................எடுப்பதும் கஷ்டம் அவரது .................... கிடைப்பதும் கஷ்டம். (துத்து, சொத்து)
3. .........................பிள்ளை கஞ்சிக் கழுகிறது அருமைப் பிள்ளை .........................கழுகிறது (அஞ்சாறு, சோற்றுக்)
4. .........................அவசர மாகாது பத்து வரினும் ......................... மாகாது. (அஞ்சுவரினும், பதட்ட)
5. ஆண்டவனுக்குண்டு பல ................. அதிலொன்று முருகன் ......................... (நாமம், திருநாமம்.)
6. ஆதுலர் தெய்வம் ......................... ......................... தெய்வம் குருநாதன். (நிதிநாதன், மாணவர்)

7. ...................... முன்னறி தெய்வம் இறைவனும் ........................ பின்னறி தெய்வம். (ஈன்றோ ரிருவரும், குருவும்)

8. ........................ தாண்ட ஆளுமில்லை கால்வாயைத் தாண்ட ........................ . (கடலைத், காலுமில்லை)

9. ........................ ஞானமும் குறையே முதலில்லார்க்கு .................. குறையே (குருவில்லார்க்கு, லாபமும்)

10. தந்தை தேடிக் ........................ கெட்டி ........................ வீணா யழிப்பதில் கெட்டி (குவிப்பதில், மைந்தன்)

11. திட்டியதாலே ........................ இல்லை ................. வாழ்ந்தாரும் இல்லை (கெட்டாரும், வாழ்த்தினதாலே)

12. திருவிளக் கிட்டால் .................... அறியும் நெய்யமு திட்டால் ........................ அறியும். (தெய்வம் , நெஞ்சம்)

13. தினையை விதைத்தால் ........................ விளையும் ..................... விதைத்தால் வினையே விளையும். (தினையே, வினையை)

14. தேவருக்கிறைவன் ........................, ........................ குமரேசன். (அமரேசன், காவடிக்கிறைவன்)

15. பட்சக்காரன் ........................ ........................ இருப்பறியான். (வழக்கறியான் , பிச்சைக்காரன்)

16. பட்டப்பகலில் ................. களவு ............... எட்டுக் களவு ( ரட்டைக், இருட்டுக்காலம்)

17. படுக்கப் படுக்கப் ..................... பகை புசிக்கப் புசிக்கச் ........................ பகை (பாயும், சோறும்)

## பொது பழமொழிகள்

18. .................பிள்ளை கஞ்சிக் கழுகிறது அருமைப் பிள்ளை ............. கழுகிறது (அஞ்சாறு, சோற்றுக்)

19. .................அவசர மாகாது பத்து வரினும் ................. மாகாது. (அஞ்சுவரினும், பதட்ட)

20. ஆண்டவனுக்குண்டு பல ........... அதிலொன்று முருகன் ................. (நாமம், திருநாமம்.)

21. ஆளைப் பார்த்தால் .................போல வேலையைப் பார்த்தால் ................. போல (அழகு , இழவு)

22. ..................தண்ணீர் வாதம் போக்கும் அருவித் தண்ணீர்..................
போக்கும். (ஆற்றுத், பித்தம்)

23. ..................எட்டின மட்டும் பாயும் பணம் .................. மட்டும் பாயும்.
(ஈட்டி, பாதளம்)

24. உடல்படு காயம் ............ கொடுக்கும்.................. காயம் வாசனை
கொடுக்கும். (வேதனை, கறிபடு)

25. .................. வார்த்தை வாய்க்குக்கேடு ஒட்டுப் பருக்கை ..................
கேடு (உபசார, வயிற்றுக்குக்)

26. உருக்கும்.............. உலைபடும் .............. கனியும் உலைபடும்.
(பொன்னும், பழுக்கும்)

27. உப்பு மிஞ்சினால் விடு.................., .................. மிஞ்சினால்
உப்பே இடு (தண்ணீர், தண்ணீர்)

28. ............... மொழிவார் உவமானம் அறிவிலார் அடைவார் ...............
(உயர்வுளார், அவமானம்)

29. ..................ஊத ஞாதியு மில்லை அரிசியென் றள்ள..................
மில்லை (உமியென்று, தாதியு)

30. ......................... நட்பு குளமல ருறவாம் இழிந்தோர் நட்பு ..................
(உயர்ந்தோர், பறவையி னுறவாம்)

31. ஔவையார் வாக்குக் .................. ..................வாக்கில்
வழுவில்லை (கழிவில்லை, வள்ளுவர்)

32. ............... தாண்ட ஆளுமில்லை கால்வாயைத் தாண்ட .................. .
(கடலைத், காலுமில்லை)

33. குயவருக்குப் ............... வேலை முரடனுக்கு ............... வேலை
(பலநாள், தடியால்)

34. செல்வப்பிரியன் .................., .................. பரமேசன் (அழகேசன்,
வில்வப்பிரியன்)

35. எண்ணில்லார்க்குக் .................., .................. கருத்தில்லை
(கண்ணில்லை, எழுத்தில்லார்க்குக்)

36. செல்லுங்காலம் .................. செல்லாத காலம் .................. காலம்.
(வெல்லுங்காலம் , பொல்லாத)

37. சொல்கிறவனுக்கு .................., .................. தலைச்சுமை.
(வாய்ச்சொல், செய்கிறவனுக்கு)

38. சொன்னால் மெத்த .................., .................. அதிலும் துக்கக்கேடு (வெட்கக்கேடு, அழுதால்)

39. சோதிடமுடையார்..................சொல்வார் .................. வில்வேளை வெல்வார். (நல்வேளை, மாதவமுடையார்)

40. சோறு கண்டஇடம் .................., .................. கண்டஇடம் பிரம்மலோகம். (சுவர்க்கலோகம், பெண்கள்)

41. .............. சட்டையா? இட்டதெல்லாம் .................. ? (தைத்ததெல்லாம், முட்டையா)

42. பட்சக்காரன் ............., ................ இருப்பறியான். (வழக்கறியான், பிச்சைக்காரன்)

43. பட்டப்பகலில் .............. களவு .............. எட்டுக் களவு (ரட்டைக், இருட்டுக்காலம்)

44. படுக்கப் படுக்கப் .................. பகை புசிக்கப் புசிக்கச் .............. பகை (பாயும், சோறும்)

## வகுப்பு - VIII

1. ......................... இட்டவர் குடும்பம் பெருகும் கன்னம் இட்டவர் குடும்பம் .......................... (அன்னம், அருகும்)
2. ................ பொறுத்தது ஆறப் பொறாதா? பொங்கப் பொறுத்தது ...................... பொறாதா? (ஆக்கப் , போடப்)
3. ஏறச் சொன்னால் ......................... கோபம் ......................... சொன்னால் முடவதற்குக் கோபம். (எருதுக்குக், இறங்கச்)
4. ........................ நழுவிப் பாலில் விழுந்தது அதுவும் நுபஜீ ......................... விழுந்தது (பழம் , வாயில்)
5. வீடுகாத்த ........................ பலன் பெறும் ......................... நரியும் பலன் பெறும். (நாயும், காடு காத்த)

## பொது பழமொழிகள்

6. அரிசிப் ......................... குறையக் கூடாது ......................... முகமும் வாடக் கூடாது. (பானையும், மக்கள்)
7. அருந்ததிப் பெருமை ........................ காட்டும் ........................ சிறுமை மண் காட்டும். (விண், அகலிகைச்)

8. ......................... வறுவலும் அழகா யமைந்தது துவையலும் பொரியலும்................... யமைந்தது (அவியலும், சுவையா)

9. .................... நட்பு வளரும் பிறைபோல் அறிவிலார் நட்பு குறையும் ......................... (அறிவுளார் , பிறைபோல்)

10. ......................... பெருமை உயரும் மடியுளான் பெருமை ........... (அறிவுளான், தளரும்)

11. .........................ஆசை அருள்மனைக்கிழுக்கும் அறிவிலார் ஆசை ......................... மனைக்கிழுக்கும். (அறிவுளார், பொருள்)

12. ......................... யுடையான் சபைக்கு அஞ்சான் வாளை யுடையான்.........................அஞ்சான். (ஆடை, வழிக்கு)

13. ......................... பயிரைக் காட்டும் ஆவரை ......................... காட்டும். (ஆட்டுரம், நெல்லைக்)

14. எதிலும் நல்லது உயிர் ......................... அதிலும் நல்லது ................ சொல்லாமை (கொல்லாமை, பொய்)

15. எழுதினவன் ......................... கெடுத்தான் ......................... பாட்டைக் கெடுத்தான். (ஏட்டைக் , படித்தவன்)

16. எள்வந்த போதே ......................... ......................... போதே ஏற்றிக்கொள். (ஆட்டிக்கொள் , இருள்வந்த)

17. ஏர்ப் பிடித்தவன் ......................... செய்வான் ......................... பிடித்தவன் பாக்கியம். (என், பானை)

18. ........................ யாட்டாத செக்குண்டா? வெள்ளை காட்டாத .........................? (எள்ளை , கொக்குண்டா)

19. ஒழுக்கில்லாமல் ஒரு ........................., ................ கால்வயிற்றுக் கிரை (முழக் குச்சு, கவலையில்லாமல்)

20. ஒன்றோடொன்று ......................... ......................... கட்டத் துணியில்லை. (குறையில்லை, உடுத்திக்)

21. ஓடம் ஏறிடில் ......................... சேர்க்கும் ......................... ஏறிடில் நற்சபை சேர்க்கும். (அக்கரை , பாடம்)

22. ஓடின வனுக்கு ஒன்பதின் ......................... அகப்பட்டவனுக்கு ......................... சனியன். (வியாழன் , அட்டமசி)

23. ஓட்டை பாத்திரம் ......................... காட்டும். உயர்ந்தோர் ................ ஒழுக்கங் காட்டும். (ஒழுக்கைக், வார்த்தை)

24. ........................ கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் ......................... காணோம். (கல்லைக் , கல்லைக்)

25. ......................... உறவும் உறவல்ல, காசா விற்கும் ........................ (கள்ளன், விறகல்ல)

26. கள்ளிக்குத் தண்ணீர் ......................... ......................... தண்ணீர் இமையிலே. (கண்ணிலே , நீலிக்குத்)

27. கற்றுள பெரியார் கற்பாரை ......................... ............. கற்பாறை யுடைப்பார். (மதிப்பார், சிற்றுளி யுடையார்)

28. கறுப்பி போனால் ......................... வருவாள்

29. கட்டச்சி போனால் ......................... வருவாள் (சிவப்பி, நெட்டச்சி)

30. கார் ......................... கலந்து கெட்டது பிசானம் நடுகை .......... கெட்டது. (நடுகை, நெருங்கிக்)

31. ......................... பின் மழையுமில்லை கர்ணனுக்குப் பின் ............... (கார்த்திகைக்குப் , கொடையுமில்லை)

32. காவடிப் பாரம் ......................... அறிவான்.........................தூரம் நடப்பவன் அறிவான். (சுமப்பவன் , பாதையின்)

33. சன்மார்க்கமுடையார் ......................... போலுரைப்பார் ..................... நாய்போல் குரைப்பார். (தாய், துன்மார்க்கமுடையார்)

34. சாண்பிள்ளையாயினும் ......................... பிள்ளை வேண்டும் பேய்ப்பிள்ளையாயினும் .................. வேண்டும். (ஆண், பெற்றது)

35. சாதுமனது .........................தங்கும் .................... துன்மார்க்கம் தொங்கும். (சன்மார்க்கம், சூதுமனது)

36. நமனார் அறியாத ......................... ? ......................... யறியாத குளமுண்டா? (உயிருண்டா, நாரை)

37. ......................... பிள்ளை மெய்யே சொல்லும் கெட்டபிள்ளை ......................... சொல்லும். (நல்ல, பொய்யே)

38. ................ கண்டால் நாய்போல பொல்லாரைக் கண்டால் ............... போல (நல்லாரைக், பேய்)

39. ......................... தாலும் பகவான் சித்தம் ரட்சித் தாலும் .................. சித்தம். (பட்சித், பகவான்)

40. பட்சி பார்ப்பவனோடு ......................... ......................... பார்ப்பவனோடு சருகாதே. (பகையாதே, சரம்)

41. பணக்காரர்க்கிடுவது சிறந்த ....................... எளியவர்க்கிடுவது ....................... தடுக்கு. (தடுக்கு , கிழிந்த)

42. ....................... யோகமுமில்லை உன்னியேறச்....................... (பல்லக்கிலேற, சீவனுமில்லை)

43. பவனிக்கு பல்லக்கு .......................அழகு ....................... பல்லக்கு சேர்த்தால் அழகு. (பார்த்தால் , சிவனுக்கு)

## வகுப்பு - IX

1. ஆட்டைப் ....................... வேங்கைக் காசை ....................... கேட்க பாம்புக் காசை. (பார்க்க, பாட்டைக்)
2. ....................... இறக்கவும் கூடாது கசப்பென்று ....................... கூடாது. (இனிப்பென்று , துப்பவும்)
3. குடம் எத்தனை .......................கண்டதோ? குளம் எத்தனை ................ கண்டதோ? (குளத்தைக், குடத்தைக்)
4. ....................... கட்டி யிருப்பது குலைவாழை பின்னால் வைத்து வளர்ப்பது ....................... (முன்னால், மலைவாழை)
5. மேய்ந்த மாடு ....................... கிழுக்கும் ....................... மாடு காட்டுக் கிழுக்கும். (வீட்டுக் , மேயாத)

## பொது பழமொழிகள்

6. குண்டுணி யாளர் .................. செய்வார் கொடுவெட்டி யாளர் .................. செய்வார். (உயிரக்கேடு, பொருட்கேடு)
7. .................. நின்றது குலைச்சல் அத்தோடே நின்றது .................. . (கொட்டோடே, அலைச்சல்)
8. .................. கொண்டவன் கெடுவான் மேட்டிலே .................. இட்டவன் கெடுவான். (மேல்மினுக்கியை , பயிர்)
9. வந்த சண்டையை ..................மில்லை .................. சண்டைக்குப் போவது மில்லை. (விடுவது, வலியச்)
10. .................. கடனைக் கொடுப்பதுமில்லை கொடுத்த கடனைக் .................. (வாங்கிய, கேட்பதுமில்லை)

# வகுப்பு - X

1. ......................... விளைவு நாட்டுக்குறுதி பிறன்மனை விழைவு ......................... . (இடுபயிர், கேட்டுக்குறுதி)
2. .................போல கொடுப்பா னில்லை கேதைப் போல ..................... னில்லை. (இராகைப் , கெடுப்பா)
3. இலங்கை ......................... குற்றவாளி இராகவன் தொடுத்தான் ....................... (இராவணன், ஒற்றைவாளி)
4. இனிய சொல்லால் ......................... தணியும் ......................... சொல்லால் பாபம் விளையும். (கோபம், கொடிய)
5. உழுவார்க் கேற்றது ........................., ......................... கேற்றது தொழு. (கொழு , ஊரார்க்)
6. ......................... தேய்ந்து உளிப்பிடியானது கழுதை தேய்ந்து ......................... (உலக்கை, கட்டெறும்பானது)
7. உள்ளூரான் ......................... அஞ்சான் ......................... பேய்க்கு அஞ்சான். (நீர்க்கு , அயலூரான்)
8. உற்றார் தின்றால் ......................... விளையும் ......................... தின்றால் போராய் விளையும். (புற்றாய், ஊரார்)
9. ஊணுக்கு என்றால் ........................., ......................... என்றால் நோயாளி. (வாயாளி, வேலைக்கு)
10. கடலின் தீவு ......................... லறியலாம் ......................... தீவு மழையினா லறியலாம். (கப்பலா, வயலின்)
11. கடுங்காற்று ......................... காட்டும் கடு ......................... பகையைக் காட்டும். (மழையைக் , நட்பு)
12. ......................... ஒரு வீடு கட்டாதவனுக்கு ......................... வீடு (கட்டினவனுக்கு , பல)
13. கணபதி கடலை ......................... நாதன் ......................... கடலை யுண்ட நாதன். (தின்ற , குறுமுனி)
14. ......................... கேட்டது சொல்லாதே காட்டில் ......................... சொல்லாதே (கண்டது, தனியே)

15. கண்டு ........................ முறை சொல்கிறது ........................ பெயர் சொல்கிறது. (கொண்டால், காணாதிருந்தால்)

16. கண்ணிற் பட்டால்........................? ........................ பட்டால் கரிக்குமா? (கரிக்குமா, புருவத்தில்)

17. கரைப்பவன் கரைத்தால் ........................ கரையும் ................. உரைத்தால் ஓரணுக் குறையும். (கல்லும், உரைப்பவன்)

18. ........................ வீட்டுக்கும் போயறியான் மேளச் சத்தமும் ......................... (கலியாண, கேட்டறியான்)

19. கிடந்து உருள்வது ........................, ........................காண்பது மச்சு மாளிகை (குட்டிச்சுவர், கனாக்)

20. ....................எவர்க்கும் மகிழ்ச்சி யளிக்கும் லாதம் எவர்க்கும் .................... யளிக்கும். (கீதம், இகழ்ச்சி)

21. ......................... தண்ணீர் குடும்பத்துக்குதவி குளத்துத் தண்ணீர் .......................... (குடத்துத், நகருக்குதவி)

22. கோழித்திட்டு ........................, ........................ மந்தையில் (குப்பையில், மாட்டுத்திட்டு)

23. சடைச்சாமிக்கு ........................, ......................... ச்சாமிக்கு மோரில்லை. (சோறில்லை, மொட்டை)

24. ........................ அருமை வெயிலில் தெரியும் நெருப்பின் அருமை .....................தெரியும். (செருப்பின், குளிரில்)

25. தெற்கடித்த காற்று ........................ யடியாதா? .........................காற்று மாறியடியாதா? (திரும்பி, வடக்கடித்த)

26. நஞ்சுக்குள்ளிருந்தாலும் ......................... ......................... குள்ளிருந்தாலும் குன்றிமணி. (நாகமணி, குப்பைக்)

27. நிலத்தின் தன்மை ........................ காட்டும் ......................... தன்மை மொழியே காட்டும். (முளையே , குலத்தின்)

## பொது பழமொழிகள்

28. உழவும் .................. ஓர் இடத்திலே ஊமையும் செவிடும் ஓர் .................. (தரிசும், மடத்திலே)

29. .................. பையன் கீழே பார்ப்பான் கூலிக்காரன் .................. பார்ப்பான். (கூத்தாடும், மேலே)

30. .................. குளித்துக் குடி கந்தையானாலும் ..................கட்டு. (கூழானாலும், கசக்கிக்)

## வகுப்பு - XI

1. ......................... வாழ்க்கை அல்லலை யாக்கும் சமர்த்தன் வாழ்க்கை ......................... ஆக்கும். (அமர்த்தன், சௌக்கியம்)

2. ......................... கிணங்கிய பொன்னும் பெருமை மாமிக் கிணங்கிய ......................... பெருமை. (ஆணிக், பெண்ணும்)

3. ......................... கூழுக் கழுகிறது கொண்டை ......................... கழுகிறது. (கும்பி, பூவுக்)

4. பாத்திர மறிந்து ......................... யிடு ......................... மறிந்து பெண்ணையெடு. (பிச்சை, கோத்திர)

5. ......................... மிஞ்சிய சுவையு மில்லை பஞ்சணைக்கு மிஞ்சிய......................... மில்லை. (பாலுக்கு, சுகமு)

6. பாலொடு சேர்ந்த ......................... பணங் காட்டும் ......................... சேர்ந்தநார் மணங் காட்டும். (நீர், பூவோடு)

7. பிச்சைக் காரனை .........................
......................... போட்டு உடைத்தானாம். (அடித்தானாம், செம்பைப்)

8. பிச்சையிட்டுக் ......................... மில்லை ......................... பெற்றுக் கெட்டது மில்லை. (கெட்டது, பிள்ளை)

9. பிறந்தகமிருப்பது ......................... வரும்
......................... வாழ்வு வரும். (தாழ்வு, புகுந்தகமிருப்பது)

10. ......................... நாட்டில் கவனம் கவியரசர்க்கு ......................... கவனம். (புவியரசர்க்கு, பாட்டில்)

11. பெண்களுக்கழகு .........................
.........................அடக்கம். (அடக்கம், பிள்ளைகட்கழகு)

12. பொறுமையுடையவர் ...................... யோசிப்பார் வறுமையுடையவர் தாழ்ந்து .................... (ஆழ்ந்து, யாசிப்பார்)

13. போன மாட்டைத் .........................

......................... மாட்டைக் கட்டுவாரில்லை. (தேடுவாரில்லை, வந்த)

14. மாமி மெச்சிய .........................

..................... மெச்சிய மாமியில்லை (மருமக ளில்லை, மருமகள்)

15. மாமியா ருடைத்தால் ..................... குடம் மருமக ளுடைத்தால் ..................... குடம். (மண், பொன்)

16. ......................... பருத்தால் தூணாமா? முள்முனை ......................... வேலாமா? (முருங்கை, கனத்தால்)

17. வீட்டுப்பெண்ணை ......................... போல் பார்ப்பது ....................... பெண்ணை ஒருகண் போல் பார்ப்பது (இருகண், நாட்டுப்)

18. வெள்ளம் தட்டாத ......................... இல்லை

......................... தட்டாத உள்ளம் இல்லை (பள்ளம், கள்ளம்)

19. வேளை யறிந்து ......................... கொள் ......................... யறிந்து பயணம் கொள். (உணவைக், நாளை)

## பொது பழமொழிகள்

20. .................. தரித்திரம் தாயார் வீடு அதிலும் தரித்திரம் .................. வீடு. (அட்டத், மாமியார்)

21. குத்திப் பார்த்தால் ஒரே .................. கூடி.................. ஒரே சத்தம். (ரத்தம், அழுதால்)

22. .................. கொண்டாட்டம் கிழவியானால் ................... (குமரியானால், திண்டாட்டம்)

23. பிறக்கிற பொழுதே .................., .................. படைத்துக் கடனாச்சு (முடமாச்சு, பேய்க்குப்)

## வகுப்பு - XII

1. ஊர்மெச் சாமல் ............... மெச்சுமா நகர்மெச் சாமல் ........... மெச்சுமா (உலகம், நாடு)
2. ஊதத் தெரிந்தவன் .........................
   ......................... தெரிந்தவன் தவயோகி. (ரசவாதி , உப்புத்)
3. எட்டினால் ......................... பிடிப்பான் ......................... காலைப் பிடிப்பான் (குடுமியைப், எட்டாவிட்டால்).
4. ................. நடந்தவன் அரவக் கொடியோன் பணிந்து நடந்தவன் ......................... கொடியோன். (நிமிர்ந்து, முரசுக்)
5. ......................... யானையை முதலை யிழுக்கும் ...................... யானது முதலை யிழுக்கும். (நீராசை, பேராசை)
6. பறவை நாடுவது ......................... மரத்தை ....................... நாடுவது செழித்த இடத்தை. (பழுத்த, அரசர்)
7. ......................... நிழலும் நிழலாமோ? பகைவன் ......................... உறவாமோ? (பனையின், உறவும்)

# விடுகதைகள்

## வகுப்பு - I

1. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை? அது என்ன?
   விடை : தீக்குச்சி
2. அமைதியான பையன் அடிக்காமல் அழுவான் அவன் யார் ?
   விடை : ஐஸ்
3. எங்க அம்மா போட்ட சிக்கலை யாராலும் பிரிக்க முடியாது அது என்ன?
   விடை : இடியாப்பம்
4. எங்க அக்கா சிவப்பு. குளித்தால் கருப்பு அது என்ன?
   விடை : அடுப்புக்கரி
5. சின்ன சின்ன பாப்பா, குழியிலே விழுந்தா அடிபடாம எழுந்துருவா அது என்ன?
   விடை : குழிபணியாரம்
6. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் இராது அவர்கள் யார்?
   விடை : தராசு
7. எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவன்?
   விடை : செல்பேசி (அலைபேசி)
8. உடல் சிவப்பு வாய் அகலம், உணவு காகிதம் நான் யார்?
   விடை : தபால் பெட்டி (அஞ்சல் பெட்டி)
9. கருப்பு சட்டைக்காரர் காவலுக்கு கெட்டிக்காரர் அது என்ன?
   விடை : பூட்டு
10. தொப்பி போட்ட காவல்காரன், இவனை உரசி விட்டால் சாம்பல் ஆவான்
    விடை : தீக்குச்சி

11. சின்னப் பையனுக்குப் படுக்க வீட்டளவு பாய் வேணும்
விடை : சிலந்தி வலை

12. பச்சை அக்கா, சிவப்பு தங்கை, வாயில் போனா கதற அடிச்சுடுவாங்க.விடை : பச்சை, வர மிளகாய்கள்

## பொது விடுகதைகள்

1. அகன்ற வாய் உடையவர், திறந்த வாய் மூடாதவர்
விடை : செக்கு
2. அங்கே சிலுக்குவாள், இங்கே பிலுக்குவாள், கதவு ஓரத்தில் ஒண்டிக் கொள்வாள்
விடை : விளக்குமாறு
3. அச்சு வண்டி ஓடுவது ஏன்? அக்காள் கணவன் மச்சான் ஆவது ஏன்?
விடை : அக்காளை முன்னிட்டு
4. அடித்த இடத்திலே இருப்பார். அனைவரும் தினமும் பார்ப்பார்
விடை : காலண்டர்
5. அடித்தாலும் ஓடாது சண்டிமாடு, குத்தினாலும் சாகாது நொண்டிமாடு
விடை: வீடு
6. அண்ணனும் தம்பியும் இரண்டு பேர். அவர்களைச் சுற்றிலும் பன்னிரண்டு பேர்
விடை: கடிகாரம்
7. அதிர் புதிர் போட்ட பொன்னன் தாய்க்கு முதுகிலே முந்நூறு அடி
விடை: சல்லடை
8. அந்தரத்திலே பறக்கும், பறவையும் அல்ல, அழகான வால் உண்டு, குரங்கும் அல்ல
விடை : பட்டம்
9. அநேகக் கொடியும் பூவும் இருக்கும். ஆனால் செடி அல்ல
விடை : ரூபாய் நாணயம்
10. அரிசியை மாவாக்குவது எப்படி? உறவினர் புத்தி சொல்லுவது எப்படி?
விடை : இடித்து இடித்து

11. அரைக் கீரைச் சிறுபாத்தி, அழகு உண்டு மணம் இல்லை
விடை : பச்சை குத்துதல
12. அலறி அலறிக் கூப்பிடுவான், அசந்தால் அடங்கி விடுவான்
விடை : தொலைபேசி
13. அலை கடலும் சிறு கடலும் பெருகி வரும். அலைகள் எல்லாம் தத்தளிக்கும்
விடை : உலையில் கொதிக்கும் சோறும், அகப்பையும்
14. அவிழ்த்து விட்ட மாடு படுத்து விட்டது.
விடை : கயிறு
15. அழுத்தி அழுத்தி மிதித்தால் அலறித் துடித்து ஓடும்
விடை : சைக்கிள்
16. ஆசாரி செய்த அவமானத்துக்கு ராஜாதி ராஜாக்கள் தலை குனிகிறார்கள்
விடை : வாசல்படி நிலை
17. ஆட்டி விட்டால் ஆடும். அந்தரத்தில் தொங்கும்
விடை : ஊஞ்சல்
18. ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்பு. அய்யங்காருக்கு மூன்று கொம்பு
விடை : நெற்றியில் போடும் 3 நாமம்
19. ஆடி ஓய்ந்ததும் அம்மணி வருவாள்
விடை : ஆவணி
20. ஆடும்போது சீறும். ஆடிக் குடத்தில் அடையும்
விடை : எண்ணெய்
21. ஆடை இல்லாத கறுப்பு அழகி, ஆடிச் சுழன்று பாடுகிறாள்
விடை : இசைத்தட்டு
22. ஆண்டுக்கு ஆண்டுக்கு அழகழகாய் உரு மாறி வரும்
விடை : காலண்டர்
23. ஆண்டுக்கு ஆண்டுக்கு வரும் வரி, அடுத்தடுத்து வரும் வரி
விடை : ஜனவரி, பிப்ரவரி
24. ஆதவன் உதித்தால் மறைந்திடும், ஆயிரம் விளக்கை அணைத்திடும்
விடை : இருள்

# வகுப்பு - II

1. அது ஓர் அழகு தேவதை. ஆடி ஓடும் தேவதை
விடை : மயில்

2. அதோ போகிறான் சின்னப் பயல். அவன் போகும் தடம் தெரியவில்லை
விடை : எறும்பு

3. அதோ ஓடுகிறான் ஒருவன். அவன் காலடி தெரியவில்லை
விடை : ஈ

4. அந்தரமான காட்டிலே நான்கு பேர் நனையாமல் நிற்கின்றார்
விடை : பசுவின் பால்மடி

5. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணன் அங்கம் முழுவதும் தங்க நிறம்
விடை : மயில்

6. அரக்குப் பட்டு அழகான பட்டு கண்பட்டு கலங்குதப்பா சின்னப்பட்டு
விடை : பட்டுப் பூச்சி

7. அரியகுடி பெரியாத்தா, அவள் கெட்டிக்காரி பால் கொடுக்காமல் பிள்ளை வளர்ப்பாள்
விடை : கோழி

8. அவள் ஒரு பாடகி ஆனால் அவள் பெண் அல்ல
விடை : குயில்

9. அறைகளோ அறுநூறு அத்தனையும் ஒரே அளவு
விடை : தேன்கூடு

10. ஆயிரம் பேர் கட்டிய மணிமண்டபம் ஒருவன் கண்பட்டால் அழியும் அந்த மண்டபம்
விடை : தேன்கூடு

11. ஆற்றோரம் போகும் கிடாவுக்கு கிள்ளிப் பிடிக்க மயிர் இல்லை
விடை : ஆமை

12. ஆனைக்கும் குதிரைக்கும் எட்டாத தண்ணீர் தொறை குதிரைக்கு தொடையளவு தண்ணீர்
விடை : தவளை

13. இசைத்தால் வணங்கும் இம்சை செய்தால் கடிக்கும்
விடை : நல்ல பாம்பு

14. இரண்டாம் புதிரிலே இடிவிழுந்த இடத்திலே நான் வைத்த பனியாரம் நனையவே இல்லை
விடை : தேன் கூடு

15. இருட்டான இருட்டிலே இங்கிலிஷ் ரோட்டிலே பாதாள லட்சுமி பந்து விளையாடுகிறாள்
விடை : ஈசல்

16. இருட்டிலே எழுவார் எங்கள் தாத்தா உருட்டிடுவார் பானையை எங்கள் தாத்தா
விடை : பூனை

17. இருட்டு வீட்டிலே குருட்டு எருமை மேயுது
விடை : பெருச்சாளி

18. இருந்தாலும் இறந்தாலும் பறந்தாலும் இறக்கை மடக்காதது எது?
விடை : தட்டாரப் பூச்சி

19. உச்சாணி மரத்திலே உயர்ந்த கிளையிலே பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது
விடை : அணில்

20. உத்தியோக சத்தியோகம் இல்லாமல் ஊரைச் சுற்றி ஓடி ஆடித் திரிகிறான்
விடை : நாய்

21. உருவத்தில் சிறியவன் உழைப்பிலே பெரியவன்
விடை : எறும்பு

22. உள்ளே இருந்தால் ஓடித் திரியும் வெளியே வந்தால் விரைவில் மடியும்
விடை : மீன்

23. ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு சொம்பு நீர் கொணர்ந்தேன்
விடை : பசுவின் மடி

24. ஊசி குத்திய வைத்தியர் ஊமை போல போகிறார்
விடை : தேள்

25. ஊசி போல வால், உருத்திராட்சம் போல் வயிறு பாசி போல ரெக்கை, பந்துபோல ஆட்டம்
விடை : தும்பி

26. இருகொம்புகள் உண்டு, மாடுஅல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல கால்கள் உண்டு மனிதனல்ல அது என்ன ?
விடை : சைக்கிள்

27. வெள்ளி கிணத்துல தண்ணி அது என்ன?
விடை : தேங்காய்

28. இவன் வலை பின்னுவான் ஆனால் மீன் பிடிக்க மாட்டான் அது என்ன?
விடை : சிலந்தி

29. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது. அவர்கள் யார்?
விடை : எறும்புக் கூட்டம்

30. ஒரு குகை, 32 வீரர்கள், ஒரு நாகம் அது என்ன?
விடை : வாய்

31. தொட்டித் தண்ணீரில் எட்டுக் கப்பல்கள் கிட்டப் போனால் எட்டி ஓடுது
விடை : தவளை

32. தொந்தி உடலிலே துவரங்காய்ப் பொட்டலிலே நாலு பேர் துரைமக்கள் நனையாமல் வாராங்க
விடை : பசுவின் மடி

33. நட்டேரி நடுவில் நடுத்தம்பி குழல் ஊதுகிறான்
விடை : தவளை

34. நடக்க மாட்டாதவன் வீட்டுக்கு உட்கார மாட்டாதவன் போகிறான்
விடை : மரமும் வௌவாலும்

35. நன்றாக சுமை தாங்கும் நன்றாக உதை வாங்கும்
விடை : கழுதை

36. நாலா வழியிலும் போகும் நம்பிக்கை துரோகமும் செய்யும்
விடை : பூனை

37. நிலத்தில் முளையாது நீண்ட கொடி வீசாது காய்க்காது பூக்காது கனியோடு சாப்பிடலாம்

விடை : தேன்

38. நீரிலே கொண்டாட்டம் நிலத்திலே திண்டாட்டம்

விடை : மீன்

39. நொய் நொடி இல்லாமல் முக்கி முனங்கித் திரிகிறான் ஒருவன்

விடை : பன்றி

40. பகலில் தூங்குவான் இரவில் அலறுவான்

விடை : ஆந்தை

41. பச்சையுடை அணிந்திருப்பாள் பசுந்தளிர் தின்றிடுவாள்

விடை : கிளி

42. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல்

விடை : கிளி

43. படுத்து உறங்காத மிருகம் பந்தயத்தில் ஒட்டம் அதிகம்

விடை : குதிரை

44. பலபேர் கட்டிய வீடு ஒருவன் கண்பட்டு உடைந்ததாம்

விடை : தேன்கூடு

45. பழகினால் மறக்காது பயந்தால் விடாது

விடை : நாய்

46. பள்ளத்தில் மேயும் குள்ளக் கிடேரிக்கு கிள்ளி எடுக்க மயிர் இல்லை

விடை : ஆமை

47. பாட்டுபாடி வருவார் பரதேசி அல்ல பட்டென்று அடித்தால் சாவார் பாம்பு அல்ல

விடை : கொசு

48. பாறையின் மேல் கோரை கோரைக்குள்ளே குறவன்

விடை : பேன்

49. பிள்ளை பிறந்தவுடன் எழுந்து நான்கு பேரை கடித்தது

விடை : கன்றுக்குட்டி (பால் குடித்தது)

50. பிள்ளை, பிள்ளையை பிடித்து பிள்ளையில் வைத்து தின்றது
விடை : கீரிப்பிள்ளை, அணில்பிள்ளை, தென்னம்பிள்ளை

51. பிறக்கும்பொழுது வால் இருக்கும் இறக்கும்பொழுது வால் இல்லை
விடை : தவளை

52. போகும் இடம் எல்லாம் கோடு கிழித்து விடுவான்
விடை : நத்தை

53. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல பட்டை முதுகிலே தீட்டியிருப்பான் யார்?
விடை : அணில்

54. வெள்ளிக் கிண்ணத்தில் தங்க காசு அது என்ன?
விடை : முட்டை

55. மரம் ஏறும் மங்காத்தாளுக்கு முதுகிலே மூன்று சூடு
விடை : அணில்

## பொது விடுகதைகள்

1. ஆதார ஊரில் ஆனை செத்துக் கிடக்குது அஞ்சு ஆள் போய் இரண்டு ஆள் இழுத்து வருது
விடை : மூக்குச்சளி

2. ஆயிரம் பணம் பெறும் குதிரைக்கு அது இல்லை அண்ணன் மனைவிக்கு இது இல்லை
விடை : கொம்பு, மீசை

3. ஆழக் குழிபறித்து நீள விதைபோட்டு ஆண்டு ஐந்தாகியும் முளைத்து வரவில்லை
விடை : பிணம்

4. ஆள் இறங்காத கிணற்றிலே மரம் இறங்கி கூத்தாடுது.
விடை : மத்து

5. ஆள் இறங்காத கிணற்றிலே மயில் இறங்கி தண்ணீர் குடிக்குது.
விடை : நீர் இறைக்கும் வாளி

6. ஆற்றிலே பத்து மரம் அசையுது பிடுங்க முடியவில்லை
விடை : விரல்கள்

7. ஆற்றுக்கு அக்கரையில் தென்னை மரம் காய்க்காது பூக்காது கண்ணுக்குத் தெரியாது
விடை : புருவம்

8. ஆனை போய் ஆறு மாதம் ஆய்தாரை அப்படியே இருக்கு
விடை : வாய்க்கால்

9. இங்கிருந்து பார்த்தால் இங்கிலீசுக் கோட்டை புட்டுப்புட்டுப் பார்த்தால் புளியங்கொட்டை
விடை : கற்றாழைக் காய்

10. இணைபிரிய மாட்டார்கள், நண்பர்கள் அல்ல, ஒன்று சேர மாட்டார்கள் பகைவர்கள் அல்ல
விடை : ரயில் தண்டவாளம்

11. இத்தினியூண்டு பூனைக்குட்டி வைத்தது எல்லாம் சுமக்குது
விடை : அடுப்பு

12. இதயம் போல் துடிதுடிக்கும் இரவு பகல் விழித்திருக்கும்
விடை : கடிகாரம்

13. இந்த ஊரிலே அடிபட்டவன் அடுத்த ஊரிலே போய்ச் சொல்லுவான்
விடை : தந்தி

14. இரண்டு ஒரு நிறம் பார்க்கிறது வெகுதூரம் அன்னம் தண்ணி அருந்தாது ஒரு கூட்டில் அடையாது
விடை : கண்;

15. இரண்டு வீட்டுக்கு ஒரு தண்டியம்
விடை : மூக்கு

16. இரத்தத்திலே வளர்வது இரத்தம் இல்லாதது
விடை : நகம்

17. இரவல் கிடைக்காதது இரவில் கிடைப்பது
விடை : தூக்கம்

18. இரவில் சுமந்திடுவான் பகலில் சுருண்டிடுவான்
விடை : பாய்

19. இரவும் பகலும் ஓய்வு இல்லை படுத்தால் எழுப்ப ஆள் இல்லை
விடை : இதயம்

20. இரு கைக்கு ஒரு வளையல் இழுத்து மாட்டும் பெரும் வளையல்
விடை : கை விலங்கு

21. இரைச்சலொடு செல்லும் விமானம் அல்ல இடியோசை தரும் வானமும் அல்ல
விடை : வான வெடி

22. இலை இல்லாத மரம் கல கல என்று ஆடுது பார்
விடை : கைத்தறி

23. இறந்த மாட்டை அலறஅலற அடிக்கிறான்
விடை : மத்தளம்

24. உடல் சிவப்பு வாய் சிவப்பு உணவோ காகிதம்
விடை : தபால் பெட்டி

## வகுப்பு - III

1. அட்டைக்கரிப் பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள்
விடை : பனங்காய்

2. அடிஅடி என்று அடித்து உரிஉரி என்று உரிப்பது எது?
விடை : புளியம்பழம்

3. அரைப் பணத்துக்குப் பெண்டாட்டிக் கட்டி அடிக்கப் போனால் சிரிக்க வருகிறாள்
விடை : தேங்காய்

4. அடித்தால் அழுவான் பிட்டால் சிரிப்பான்
விடை : தேங்காய்

5. அம்மிக் குழவி போல் பூ இருக்கும் அரிவாள் பிடிபோல் காய் இருக்கும்
விடை : வாழை மரம்

6. அவரோ பெரியவர் அவர் இலையோ சிறிது அவர் பெற்ற பிள்ளைகள் எல்லாம் கோணல்
விடை : புளிய மரம்

7. ஆடாத அழகிக்கு ஆடு என்று பெயர் வந்தது
விடை : ஆடு

8. ஈரடுக்கு மாளிகையில் இதமான நீருக்குள் இருக்கிறான் வெள்ளையப்பன்
விடை : தேங்காய்

9. ஈனாது புரளாது இழுத்துக் கட்டினால் குடத்து அளவு பாலைக் கொடுத்து உதவும்
விடை : பனைமரம்

10. உச்சாணிக் கொம்பிலே உரல் கட்டி தொங்குது
விடை : பலாக்காய்

11. ஆத்தாள் சடைச்சி, அப்பன் சொறியன், நானோ சர்க்கரைக் குட்டி
விடை : பலாப்பழம்

12. உமி போல் பூ பூக்கும் சிமிழ் போல் காய் காய்க்கும்
விடை : நெல்லிக்காய்

13. உள்ளே வெள்ளிப் பூட்டு வெளியே நார்ப் பூட்டு
விடை : தேங்காய்

14. ஏற முடியாத மரம் இலை விடும் மரம்
விடை : வாழை

15. ஏறினால் வழுக்கும், இனிய கனி தரும் காயைத் தின்றால் துவர்க்கும் விடை : வாழை

16. ஒரு பிள்ளை பெற்றதும் தன்னை (தாய்) செத்துப் போவாள்
விடை : வாழை

17. ஓ ஓ அண்ணா உயர்ந்த அண்ணா தோளிலே என்ன தொண்ணூறு முடிச்சு?
விடை : பனைமரம்

18. ஓகோ மரத்திலே உச்சாணிக் கிளையிலே டம்மார அம்மானுக்கு மகமாரி போட்டிருக்கு

விடை : பலாப்பழம்

19. ஓகோ தடியா உயர்ந்த தயாளா உடம்பைச் சுற்றி ஏன் நூறு தழும்பு

விடை : தென்னைமரம்

20. ஓகோ மரத்திலே உச்சாணிக் கிளையிலே ஓட்டுச் சட்டியிலே களிமண் இருக்கிறது

விடை : விளாம்பழம்

21. குண்டு சட்டியில் குதிரை ஓட்டறான் அது என்ன?

விடை :ஆட்டுக்கல்

22. கெணத்த சுத்தி அகத்தி கீரை அது என்ன?

விடை : கண்

23. காற்று வீசும் அழகான மரம் என்ன?

விடை : சாமரம்

24. கொம்பு நிறைய காம்பு அது என்ன?

விடை : மாதுளம்பழம்

25. தெரிந்து காய் காய்க்கும் தெரியாமல் பூப் பூக்கும்

விடை : அத்தி மரம்

26. தொட்டால் மணக்கும் குடித்தால் புளிக்கும்

விடை : எலுமிச்சம் பழம்

27. நாட்டாண்மைக்காரன் பெண்டாட்டியை ஓட்டிலே போட்டு மூடி யிருக்கும்

விடை : புளியம்பழம்

28. பச்சைக்கிளி பறக்க முடியாத கிளி கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி

விடை : மாங்காய்

29. பச்சை சன்னல் வெள்ளை தோப்ரா கருப்புப் பாதிரி உள்ளே உறங்குகிறார்

விடை : சீதாப்பழம்

30. பச்சை நிறப் பாப்பான் வயிறு வெடிக்க வெளுத்தான்
விடை : பருத்திக்காய்

31. பரட்டைத் தலை மாமியாருக்கும் பவழம் போல் மருமகள்
விடை : இலந்தைப் பழம்

32. பரந்த காட்டேறிக்கு பக்கமெல்லாம் சடை
விடை : ஆலமரம்

33. பார்த்தால் பசப்புக்காரி கடித்தால் கசப்புக்காரி
விடை : பாகற்காய்

34. பார்க்கப் பச்சை பழுத்தால் சிவப்பு பல்லிலே பட்டால் கண்ணிலே நீர்
விடை : மிளகாய்

35. பார்ப்பதற்கு ஐந்து கால் எண்ணுவதற்கு நான்கு கால்
விடை : யானை

36. பிறக்கும் பொழுது சுருண்டிருக்கும் பிறந்த பிறகு விரிந்திருக்கும்
விடை : வாழை இலை

37. பூவில் பிறக்கும் நாவில் சுவைக்கும்
விடை : தேன்

38. போருக்குப் போகாத வீரன் போர்க்களத்தையே விரட்டி விடுவான்
விடை : பாம்பு

39. போவான் வருவான் கறுத்தப்பன் தலைகீழாய் நிற்பான் கறுத்தப்பன்
விடை : வௌவால்

40. மக்குப் பிள்ளையாருக்கு மாரியம்மா வார்த்திருக்கிறது
விடை : பலாப்பழம்

41. மஞ்சள் குருவி ஊஞ்சலாடும் மாதேவனுக்குப் பூசைக்காகும்
விடை : வாழைப் பழம்

42. மஞ்சள் சட்டை மாப்பிள்ளை மணமணக்கிறார் வீட்டிலே
விடை : எலுமிச்சம் பழம்

43. மட்டை உண்டு கட்டை இல்லை பூவுண்டு மணமில்லை
விடை : வாழை

44. மண்டையிலே போட்டால் மகிழ்ந்து சிரிப்பான்

விடை : தேங்காய்

45. மாமன் வீட்டுத் தோட்டத்திலே மஞ்சள் குருவி ஊசலாடுது

விடை : எலுமிச்சம் பழம்

46. மாமியார் வீட்டுக்குப் போனேன் இலையை எடுத்துவிட்டுச் சாப்பிடச் சொன்னாள்.

விடை : கறுவேப்பிலை

47. முள்ளுக் கோட்டைக்குள் மோகினி உறங்குகிறாள்.

விடை : பலாக்கனி

48. மூக்கனுக்கு மூன்று முழுநீளம் மூக்கன் பெண்டாட்டிக்கு முறத்து அகலம்

விடை : வாழை மரம், வாழை இலை

48. யாரும் ஏற முடியாத மரத்தில் ஓரே பிள்ளை பெற்றாள்

விடை : வாழை

## பொது விடுகதைகள்

1. உடல் உண்டு உயிர் இல்லை ஓடி ஓடிப் போய்ச் சேர்ந்தான் ஊருக்கே

விடை : சைக்கிள்

2. உடைந்த வெள்ளிக்கு ஒக்கிட ஆசாரி இல்லை

விடை : அரிசி

3. உண்டுட்டு தின்னுட்டு உயரப் பற்றி ஏறுவான்

விடை : அகப்பை

4. உயர்ந்த பாப்பான் விழுந்து விழுந்து கும்பிடுகிறான்

விடை : ஏற்றம்

5. உயர்ந்த மரத்திலே உச்சாணிக் கிளையிலே மூணுகண்ணுப் பாப்பாத்தி முக்காடு போட்டிருக்காள்

விடை : நுங்கு

6. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நியாயம் சொல்லுகிறார்

விடை : தராசு

7. உயிர் இல்லாத பறவை ஊர்ஊராய்ச் போய்ச் சேரும்

விடை : ஆகாய விமானம்

8. உயிர் இல்லாமல் ஓடித் திரிவான் மூக்கு இல்லாமல் மூச்சு விடுவான்

விடை : புகைவண்டி

9. உருண்டிருக்கும் பாறை மேலே திரண்டு நிற்குது கோரைப்புல்

விடை : தலைமுடி

10. உருவம் உண்டு உயிர் இல்லை

விடை : சட்டை

11. உருவம் இல்லாதவன் சொன்னதைச் திருப்பிச் சொல்லுவான்

விடை : எதிரொலி

12. உருவிலே பெரியவன் ஊருக்கு உயர்ந்தவன்

விடை : கோபுரம்

13. உலகம் உறங்கினாலும் – அவன் ஓடி விளையாடுவான்

விடை : கடிகாரம்

14. உழைக்க உழைக்க உடம்பெல்லாம் தோன்றும்

விடை : வியர்வை

15. உள்ளூர் உத்தமிக்கு உள்ளங்கையில் ஓட்டை

விடை : வடை

16. உறைக்குள் இருக்கும் உயிரைப் பறிக்கும்

விடை : கத்தி

17. உன்னுடன் ஒருவன் ஓடிக்கொண்டே இருக்கிறான்

விடை : நிழல்

18. ஊருக்கு உழைக்கும் உத்தமன் உரக்க ஊதி எழுப்புவான்

விடை : சங்கு ஒலி

19. ஊருக்குப் பொதுவானவன் அடிக்கடி சலசலப்பான்

விடை : வானொலி

20. ஊரெல்லாம் சுற்றி வரும் தண்ணீர் குடிக்காது

விடை : செருப்பு

21. ஊரெல்லாம் மூடி இருக்கும் ஊறுகாய் பானை திறந்திருக்கும்

விடை : கிணறு

22. ஊளை இடும் ஊரைச் சுமக்கும்

விடை : புகைவண்டி

23. எங்க அம்மா சின்னம்மா சேலை கட்டாத பொன்னம்மா

விடை : படி

24. எங்க அம்மான்வீட்டுக் கொல்லையிலே மதயானை செத்துக் கிடக்கிறது

விடை : வைக்கோல் போர்

25. எங்க வீட்டு எருமைக்கு வருடம் ஒரு மேய்ச்சல்

விடை : கூரை

## வகுப்பு - IV

1. அடி காட்டில் நடு மாட்டில் நுனி வீட்டில் இருப்பது என்ன?

விடை : நெல்

2. அடித்தாலும் விலகாது அணைத்தாலும் நிற்காது

விடை : தண்ணீர்

3. அத்தாயக் காட்டுக்குள்ளே ஐயா குடை பிடிக்கிறார்

விடை : சோளக்கதிர்

4. அத்துவான காட்டுக்குள்ளே அம்மா பொரி பொரிக்கிறாள்

விடை : பருத்தி

5. அர்த்த ராத்திரியில் ஆட்டம் அஞ்சாறு பேர் வந்தால் ஓட்டம்

விடை : மழை

6. அலை அலையாய் ஆடிவரும் கடல் அல்ல நிலையாக இருக்காது நிலவும் அல்ல

விடை : மேகம்

7. அண்ணன் தோட்டத்திலே பச்சைப் பாய் விரித்திருக்கிறது

விடை : கீரை

8. அனலிலே பிறப்பாள் ஆகாயத்திலே பறப்பாள்

விடை : புகை

9. அனைவருக்கும் அடங்காதது ஆதவனுக்கு அடங்கும்

விடை : குளிர்;

10. ஆயா வீட்டுத் தோட்டத்திலே பச்சைப் பாம்பு தொங்குகிறது
விடை : புடலங்காய்

11. ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது
விடை : எலுமிச்சம்பழம்

12. ஆள் ஏறாத மலையில் ஆயிரம் பூப் பூத்திருக்கு
விடை : விண்மீன்

13. இந்தப் பிள்ளை பெரியவன் ஆனால் படிக்காமலேயே பலன் தருவான்
விடை : தென்னம் பிள்ளை

14. இத்தினியூண்டு சிட்டுக் குருவிக்கு ஏழு முழம் சித்தாடை
விடை : வெங்காயம்

15. இரவில் தோன்றும் இருளை வெட்டும்
விடை : மின்னல்

16. இரவெல்லாம் பூக்காடு பகலெல்லாம் வெறுங்காடு
விடை : வானம்

17. இலையுண்டு கிளை இல்லை பூ உண்டு, மணம் இல்லை
விடை : வாழை

18. உச்சாணி மரத்திலே உலக்கைகட்டி தொங்குது
விடை : முருங்கைக்காய்

19. உச்சிக் கிளையில் ஒரு முழக்குச்சி ஊசல் ஆடுது
விடை : முருங்கைக்காய்

20. உச்சி சலசலக்கும் உடலோ நீளம் நின்று பார்த்தால் கழுத்து வலிக்கும்
விடை : பனைமரம்

21. உப்பினை உண்டவன் உறங்காமல் அலைகிறான்
விடை : கடல்

22. உயர்;ந்த மரத்திலே உச்சாணிக் கிளையிலே மூணுகண்ணுப் பாப்பாத்தி முக்காடு போட்டிருக்காள்
விடை : நுங்கு

23. உயர்ந்த மனிதன் தோகை விரித்து ஆடுவான்
விடை : தென்னை

24. உயர்ந்த வீட்டில் இருக்கும் ஊரார் தாகம் தீர்க்கும்
விடை : மழை நீர்

25. உயர உயரச் சிறக்கும் உயர்ந்துவிட்டால் எரிக்கும்
விடை : சூரியன்

26. உயரத்திலே ஒரு ரோஜா உலகெங்கும் அதே ரோஜா
விடை : நிலா

27. உருவம் இல்லாத மனிதன் உலகம் எல்லாம் சுற்றுகிறான்
விடை : காற்று

28. உலகம் எல்லாம் திரிவான் அவனை ஒருத்தரும் கண்டது இல்லை
விடை : காற்று

29. உலகமெங்கும் படுக்கை விரித்து உறங்காமல் அலைகிறான்
விடை : கடல்

30. உன்னுடன் ஒருவன் ஓடிக்கொண்டே இருக்கிறான்
விடை : நிழல்

31. ஊசி நுழையாத காட்டில் ஒரு துரை போகிறான்
விடை : புகை

32. ஊசி நுழையாத கிண்ணத்தில் ஒரு ஆழாக்கு தண்ணீர்
விடை : தேங்காய்

33. ஊசி மூக்கன், உள்ளங்கை தட்டையன் ஊரெங்கும் செல்லப் பிள்ளை
விடை : வெற்றிலை

34. எங்க வீட்டுக் கிணத்திலே வெள்ளிக் கிண்ணம் மிதக்குது
விடை : நிலவு

35. எங்கள் தோட்டம் பெரிய தோட்டம் ஏறி விளையாட இடம் இல்லை
விடை : வானம்

36. எங்கள் வீட்டு தோட்டத்திலே மஞ்சள் குருவி ஊஞ்சல் ஆடுகிறது
விடை : எலுமிச்சம்பழம்

37. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன ?
விடை : பட்டாசு

38. மழையில் பூக்கும் பூ, அது என்ன?
விடை : நாய் குடை

39. வெள்ளி கிணத்துல தண்ணி அது என்ன?
விடை : தேங்காய்

40. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும் தான் அது என்ன?
விடை : வெங்காயம்

41. கடல் நீரில் வளர்ந்து மழைநீரில் மடிவது என்ன?
விடை: உப்பு

42. திரி இல்லாத விளக்கு திருலோகம் எல்லாம் தெரியுதாம்
விடை : சூரியன்

43. தீனிக்குத் குறைவில்லை தீர்த்தம் உண்டால் மரணம்
விடை : தீ

44. தோப்புத் துலாமரம் தொங்குது மாமரம் காய் கணத்த காய் கைப்பட்டால் கொட்டிப் போகும்
விடை : நெல்

45. நிரப்பலாம் பிடிக்க முடியாது உணரலாம் காணமுடியாது
விடை : காற்று

46. நிலம் நோக்கி வரும் நுரை கக்கிச் செல்லும்
விடை : கடல் அலை

47. நீல நிறத் தோட்டத்திலே மஞ்சள் பூ பூத்திருக்கும்
விடை : பௌர்ணமி நிலவு

48. நீரிலே பிறந்து நீராலே அழியும் நித்த நித்தம் சுகம்தரும் பொருள் எது?
விடை : உப்பு

49. நெருப்பிலே பிறந்து நீரிலே மூழ்கி வாயிலே தவழ்ந்து வானத்திலே போகிறவர்.
விடை : புகை

50. பகலிலே வெறுங்காடு இரவெல்லாம் பூக்காடு

விடை : வானம்

51. பட்டுக் குடைபோல் பூப் பூக்கும் பறிக்கப் போனால் எட்டாது

விடை : சந்திரன்

52. பாக்கு எண்ண முடியவில்லை பாயைச் சுருட்ட முடியவில்லை

விடை : விண்மீன் வானம்

53. பார்த்தால் கல் தான் பல் பட்டால் தண்ணீர்தான்

விடை : பனிக்கட்டி

54. பார்ப்பதற்கு உருவம் உண்டு எடுப்பதற்கு உடல் இல்லை

விடை : தண்ணீர்

55. பால் இல்லாமல் பருக்கிறது நோய் இல்லாமல் இளைக்கிறது

விடை : நிலா

56. பிடி இல்லாத குடையை தொட முடியவில்லை

விடை : வானம்

57. புட்டுக் கூடை போல பூ பூக்கும் பறிக்கப் போனால் எட்டாது

விடை : நிலா

58. புதைத்து வைத்த பொருள் பொத்துக்கிட்டு வருது

விடை : விதை முளைப்பது

59. பூமியிலே பிறக்கும் புகையாய்ப் போகும்

விடை : பெட்ரோல்

60. பூமியிலே பொன் மரப்பாச்சி புதைத்து வைஓத்திருக்கிறது

விடை : மஞ்சள்

61. பூவிலே வெள்ளைப் பூ பூமியை நோக்கும் பூ

விடை : எள்ளுப் பூ

62. பெயரில் புலி உண்டு உருவிலோ செயலிலோ அது இல்லை

விடை : அம்புலி (சந்திரன்)

63. பொரி பொரித்தேன், பெட்டியில் வைத்தேன் பொழுது விடிந்து பார்த்தால் காணவில்லை

விடை : விண்மீன்

64. பொழுது போனால் பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந் தோட்டம்
விடை : வானம்

65. மஞ்சள் உறைக்குள் மறைந்திருப்பான் மக்கள் இதயத்தில் மலர்ந்திருப்பான்
விடை : நெல்

66. மலைகள் பிறந்த நாட்டிலே இலைகள் கவிழ்ந்த மரம்
விடை : தென்னை மரம்

67. மாரி இல்லாமல் ஆமை கெட்டது ஆமை இல்லாமல் சீமை கெட்டது
விடை : வேளாண்மை

68. முக்காட்டுக்குள்ளே மூன்று பேர் வெய்யில் அடித்தால் வெவ்வேறு
விடை : ஆமணக்குக் காய்

69. முட்டிக் குதிரைக்கு முன்னூறு கால்
விடை : ஊமத்தங்காய்

70. முத்து முத்தாய் தோரணம் கரையில் விழுந்து ஒடுது
விடை : மழை

71. மூடியிருக்குது குண்டுக் கோட்டை மூட்டைக்குள் இருக்குது நெல் மூட்டை
விடை : சாத்துக்குடிப் பழம்

72. மேகத்தின் பிள்ளை அது தாகத்தின் நண்பன் அது
விடை : மழை

73. மேலே பூப் பூக்கும் கீழே காய் காய்க்கும்
விடை : வேர்க்கடலை

74. மொட்டைப் பாறையில் மூடிய கண்கள் மூன்று
விடை : தேங்காய்

75. மொட்டை மாடு உட்கார்ந்திருக்கிறது மூக்கணாங் கயிறு மேய்ந்து வருகிறது
விடை : பூசணிக்காய்

76. யானை படுக்க நிழல் உண்டு கடுகு மடிக்க இலை இல்லை
விடை : சவுக்கு மரம்

77. யானை விரும்பும் சேனை விரும்பும் அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும்

விடை : கரும்பு

78. ரத்தம் இல்லாத பூச்சி உத்தரத்தோடே போகுது

விடை : புகை

79. ராசா மகள் பூ இல்லாமல் சடைபோட மாட்டாள்

விடை : முருங்கை மரம்

80. வந்தும் கெடுக்கும் வராமலும் கெடுக்கும்

விடை : மழை

81. வரிசைக்கு வரும் முந்தி வெளியே போகும் பிந்தி

விடை : இலை

82. வரி வரி வண்ணக் கொம்பு வாடாத நுத்துக் கொம்பு

விடை : சோளம்

83. வாராத கிணற்று மேலே ஒளியில்லாத கண்கள் மூன்று

விடை : தேங்காய்

84. வாரி விட்டேன் கொட்டி விட்டேன் ஊரெல்லாம் புகைகிறது

விடை : சாம்பல்

85. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ

விடை : சிரிப்பு

86. வாலால் தண்ணீர் குடிக்கும் தலையால் முட்டையிடும்

விடை : கத்திரிக்காய்

87. விடிய விடியப் பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம்

விடை : விண்மீன்

88. வித்தில்லாமல் விளைவது என்ன? வெட்டாமல் சாயுதே அதுதான்

விடை : வாழை

89. விதைக்காத விதை விண்ணிலே அறுக்காத கதிர் மண்ணிலே

விடை : சூரியன்

90. விதையில் கிடைக்காத எண்ணெய் செக்கில் எடுக்காத எண்ணெய்

விடை : மண்ணெண்ணெய்

91. வெள்ளைக் கத்திரிக்காய் கள்ளக் கூக்குரல் போடுவது

விடை : சங்கு

92. வெள்ளைக்காரன் தோட்டத்திலே மேலே பச்சை கீழே வெள்ளை

விடை : முள்ளங்கி

93. வெள்ளைக்காரன் பூக்க வெகு பேர் காத்திருக்கிறார்கள்

விடை : சோறு

94. வெள்ளைக் குதிரையும் கறுப்பு குதிரையும் மாறி மாறி ஓடும் பிடிக்க முடியவில்லை

விடை : பகலும் இரவும்

95. வெள்ளைக் கொல்லை கறுப்பு விதை கை விதைத்துவரும் வாய் கொறித்து வரும்

விடை : காகிதம், மை, வாசித்தல்

## பொது விடுகதைகள்

1. எங்கள் அக்காள் நல்ல அக்காள் எதை வைத்தாலும் தாங்குவாள்

விடை : அடுப்பு

2. எங்கள் மாட்டுக்கு மூன்று கொம்பு அது பின்னால் பாயும்

விடை : ஊகமுள்

3. எட்டு மொட்டெலும்பு ஒரு கூடைச் சிறுகுடல்

விடை : கயிற்றுக் கட்டில்

4. எண்ணெய் வேண்டாத விளக்கு எடுப்பார் கைவிளக்கு

விடை : மெழுகுதிரி

5. எல்லோர் வீடும் சாத்திக் கிடக்க கங்கையம்மன் கோயில் திறந்து கிடக்குது

விடை : கிணறு

6. எல்லோருக்கும் கிடைக்காத மதி எல்லோரும் விரும்பும் மதி

விடை : நிம்மதி

7. எலும்பு இல்லாத மனிதன் எட்டு ஆறு நீந்துவான்

விடை : அட்டை

8. எழுந்திரு குண்டா ஊருக்குப் போகலாம்

விடை : கட்டுச்சோறு மூட்டை

9. என் தாயோ கடல், தந்தையோ சூரியன் என்னை விரும்பாத வீடே இல்லை

விடை : உப்பு

10. எந்நேரமும் கொட்டும் சத்தம் கேட்காது

விடை : கண் இமை

11. என்னோடு இருக்கும் சிறுமணி எனக்குத் தெரியாது ஆனால் உனக்குத் தெரியும்

விடை : கண்மணி

12. ஏரித் தண்ணீர் வற்ற வற்ற எருமைக் கடா உப்ப உப்ப

விடை : பணியாரம்

13. ஏழும் ஏழும் பதினான்கு சோலைத் தச்சர் செய்த வேலை

விடை : பல்லாங்குழி

14. ஏற முடியாத மரத்திலே எண்ணாயிரம் காய்கள்

விடை : கேழ்வரகு

15. ஏனை கோணல் மூணு கண் ஆறு கால் பந்து

விடை : கலப்பை

16. ஐந்து பேரில் இளையவன் கலியாணத்துக்கு மூத்தவன்

விடை : சுண்டுவிரல்

17. ஒரு கட்டுத்துறையில் முப்பத்திரண்டு வெள்ளைப் பசுக்கள்

விடை : பற்கள்

18. ஒரு குதி குதித்தான் திம்மப்பன் பல்லை இளித்தான் திம்மப்பன்

விடை : பொரி

19. ஒரு சாண் இரு பலகை இருநூறு தலைவாசல்

விடை : தேன்குழல் பிடி

20. ஒரு பக்கப் பல்லால் ஒன்றை ஒன்பதாக்கும்

விடை : ரம்பம்

21. ஒருவன் ஓட்டி வர இரண்டு இழுத்து வர-அது என்ன?

விடை : செக்கு

22. ஒருவன் சுழன்று உண்பான் ஒருவன் இருந்து உண்பான்

விடை : திரிகை

# வகுப்பு - V

1. அக்காள் விதைத்த முத்து அள்ள முடியாத முத்து
   விடை : கோலம்
2. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம்
   விடை : வளையல்
3. அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும்
   விடை : கோலம்
4. உருளும் வீட்டைச் சுற்றி கருப்பு வேலி அது என்ன?
   விடை : கண் இமை
5. வெள்ளி ஓடையிலே கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன?
   விடை :கண்
6. தாயின் வாயில் பிறக்கும் தரணி எங்கும் சிறக்கும்
   விடை : தாலாட்டு
7. திண்ணை மெழுகுகிற பெண்ணே உன் புருவத்தின் கீழ் இருபத்திரண்டு கண்ணே கண் இரண்டு
   விடை : நகக் கண் இருபது
8. மண்ணுக்குள் பிறக்கும், மங்கைக்கு அழகு தரும்
   விடை : மஞ்சள்
9. மணம் இல்லாத மல்லிகை மாலையில் மலரும்
   விடை : தீபம்
10. வாலினால் நீர் குடிக்கும் வாயால் பூச் சொரியும்
    விடை : விளக்கு

# பொது விடுகதைகள்

1. ஒளி தந்த உத்தமன் உருக்குலைவான் அதனாலே
   விடை : மெழுகுவர்த்தி
2. ஒற்றைக் காலில் ஆடுவான் ஓய்ந்து போனால் படுப்பான்
   விடை : பம்பரம்

3. ஓங்கி வளர்ந்தான் ஒரு பக்கம் சாய்ந்தான்
விடை : மூங்கில்

4. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு
விடை : இரத்த ஓட்டம்

5. ஓட்டைப் பிள்ளையார் கோவிலுக்கு பூட்டும் இல்லை சாவியும் இல்லை
விடை : அடுப்பு

6. ஓட்டிலே வீடு கட்டி உள்ளே உரி கட்டி நட்டாருக்கெல்லாம் நல்ல பொருள் எது?
விடை : புளி

7. ஓட்டை வாயனுக்கு விழுந்த பல் முளைக்கவில்லை
விடை : சீப்பு

8. ஓடுது குதிரை ஒளியுது குதிரை தண்ணீரைக் கண்டால் தவிக்குது குதிரை
விடை : செருப்பு

9. ஓடும் ஆனால் இருக்கும் இடத்தை விட்டு அசையாது
விடை : கடிகாரம்

10. ஓடுமாம் சாடுமாம் ஒற்றைக் காலில் நிற்குமாம்
விடை : கதவு

11. ஓடுவான் சாடுவான் ஒரு இடத்தில் நிற்க மாட்டான்
விடை : நிழல்

12. ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர்
விடை : கண்ணீர்

13. கட்டாமல் கறக்காமல் காடேறி மேயாமல் நின்ற இடத்திலே ஒரு படி பால்
விடை : இளநீர்

14. கடல்நீரில் வளர்வேன் மழைநீரில் மடிவேன்
விடை : உப்பு

15. கடலிலே முளைத்து இலையிலே புகுந்து குகையிலே அடையும் கட்டழகி யார்
விடை : கிளிஞ்சல் சுண்ணாம்பு

16. கடையிலே விற்கிற சாமான்களிலே அத்தை ஒன்று ஆணி ஒன்று
விடை : சித்தரத்தை, சாம்பிராணி

17. கண் உண்டு பார்க்காது கால் உண்டு நடக்காது
விடை : கட்டில்

18. கண்டது இருவர் எடுத்தது பத்துப் பேர் உண்டது ஒருவர்
விடை : கண்கள், கை விரல்கள், வாய்

19. கண்ணாடிக் குண்டு காற்றிலே பறக்குது கையாலே தொட்டால் காணாமல் போகுது
விடை : நீர்க்குமிழி

20. கண் இல்லாத நான் குருடருக்கு வழி காட்டுகிறேன்
விடை : கைத்தடி

21. கண்ணுக்கு தெரியாததை கணப் பொழுதில் காட்டிக் கொடுக்கும்
விடை : பூதக்கண்ணாடி

22. கண்ணுக்கு தெரியாதவன் கண்ணை மறைப்பான்
விடை : கண் இமை

23. கண்ணுக்குள்ளே குச்சி குத்தி கதறுதாம் காளைக் கன்று
விடை : தவில்

24. கறுத்த கட்டிலின் மீது காரிகையாம் விரிக்கும் எடுப்பாம் எடுக்கும் விரிப்பாம்
விடை : தோசை

25. கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்கு கெட்டிக்காரன்
விடை : பூட்டு

26. கறுப்புத் தாள் வெள்ளைக் குதிரை ஒருவன் ஏறுவான் ஒருவன் இறங்குவான்
விடை : தோசை

27. கல்லிலே மேய்ந்து கயத்திலே நீராடி புல்லிலே படுத்தான் புவனத்து ராசா விடை : துவைத்துக் காய வைக்கும் துணி

28. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன் பள்ளத்து நீரைக் கண்டு பதைக்கிறான்
விடை : செருப்பு

29. கல்லைத் தூக்கிச் சட்டியில் போடுகிறோம் கல் உடைகிறது சட்டி உடையவில்லை

விடை : உப்புக்கல்

30. கழுத்தை வெட்டுவார் கையை வெட்டுவார் அவரை ஏன் என்று கேட்பார் ஒருவரும் இல்லை

விடை : தையற்காரர்

## வகுப்பு - VI

1. உயரப் பறக்கும் ஊன்றுகோலில் நிற்கும்

விடை : கொடி

2. பறக்கும் ஆனால் பறந்து செல்லாது

விடை : கொடி

3. வீடு இல்லா நகரங்கள், நீர் இல்லா சமுத்திரங்கள்

விடை : தேசப்படம்

## பொது விடுகதைகள்

1. கள்ளமான் ஏரியிலே மான் வந்து நிற்கிறது கட்டடா பிடியடா கள்ளக் கயிறு போடடா

விடை : கப்பல்

3. கறுத்த சதுரக் கட்டை கறுத்துப் பூக்கும் குட்டை

விடை : சிலேட் (கறும் பலகை)

4. கறுத்த மேகம் கண்ணீர் விடும் போது கறுத்த காளான் கம்பியிலே படருது

விடை : குடை

5. கறுத்திருக்கும் அரங்கத்தில் வெண்பந்து விளையாடுது

விடை : கறும்பலகை-சாக்கட்டி (சாக் பீஸ்)

6. கனிக்கெல்லாம் கனி திகட்டாத கனி

விடை : பிள்ளைக் கனி

7. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் முக்காடு போட்டால் மூலையில் அமரும்

விடை : பேனா

8. காட்டிலே இருக்கிற கண்ணம்மாள் வீட்டிலே வந்து விளையாடுகிறாள்
விடை : துடைப்பம்

9. காட்டிலே கரும்புச் சோலையிலே வீட்டிலே புதுப் பானையிலே- அது என்ன?
விடை : வெல்லம்

10. காட்டு கருவ பிள்ளை வளைத்து ஒடிக்க முடியவில்லை
விடை : தலைமுடி

11. காடெல்லாம் சுற்றிவரும் கண்டலப் பசு கண்ட தண்ணீர் குடியாத வெண்டலப் பசு
விடை : செருப்பு

12. காண உருவம் உண்டு கட்டிப்பிடிக்க உடல் இல்லை
விடை : புகை

13. காணக்கா கோணக்கா கதையடா மைத்துனா கதையை விடுவித்தேன் சொல்லுடா மைத்துனா
விடை : காணம்

14. காத வழி போனாலும் கைகடுக்கச் சுமை-என்ன சுமை
விடை : வயிற்றுப் பிள்ளை

15. காலால் உதைத்தால் காற்றால் உருளும்
விடை : சைக்கிள்

16. காலை மாலை நெட்டை மற்ற நேரம் குட்டை
விடை : நிழல்

17. காற்றால் உயிர் பெறும் காதுக்கு இனிமை தரும்
விடை : நாதசுரம்

18. காற்றைக் குடித்து கைகளில் தவழும்
விடை : பலூன்

19. கிட்ட இருக்குது பட்டணம் எட்டிப் பார்க்க முடியவில்லை
விடை : முதுகு

20. கிளை இல்லாத சவுக்கு மரம் வெட்ட வெட்ட வளருது
விடை : தலை முடி

21. கீரை விதைப்பது ஏன்? கீழோர் செல்வரைச் சுற்றுவது ஏன்?
விடை : பிடுங்கித்தின்ன

22. குண்டன் வாயில் குள்ளன் புகுந்தால் குபேர பட்டணத்துக்கு வழி தெரியும்

விடை : பூட்டு-சாவி

23. குண்டு முத்தும் குண்டு முத்தும் குதிச்சு விளையாட வங்காளத்து ராசா வந்து மறிச்சுக்கிட்டாராம்

விடை : சோறு-அகப்பை

25. குதி குதித்தாள் பல் இளித்தாள்

விடை : சோளப் பொறி

26. குளிச்சு குளிச்சு குத்த வைக்கும் கோமாளிப் பயல் பிள்ளை

விடை : போகணி

27. குளிர் இல்லாமல் கூதல் இல்லாமல் குளிர் காய்பவர் யார்?

விடை : பொற்கொல்லர்.

28. குனிந்த கிழவிக்கு கூனெல்லாம் பல்லு

விடை : கருக்கரிவாள்

## வகுப்பு - VII

1. அம்மா சேலையை மடிக்க முடியாது? அப்பா காசை எண்ண முடியாது அது என்ன?

விடை : வானம், நட்சத்திரம்

## பொது விடுகதைகள்

1. வானத்தில் பறந்திடும் பறவை அல்ல வட்டமிட்டுச் சுற்றிடும் விமானம் அல்ல

விடை : பட்டம் (காற்றாடி)

2. வானத்திலிருந்து ஒரு குருவி வந்து வாலால் தண்ணீர் குடிக்கிறது

விடை : விளக்கு

3. விட்டம் போட்டு வீடு கட்டி விசிறி மாட்ட இடம் இல்லை

விடை : மூக்கு

4. விடிந்தபின் வேலை செய்வான் வேலை இல்லையானால் மூ லையில் கிடப்பான்

விடை : துடைப்பம்

5. விதையின்றி முளைக்கும் வேரின்றி வளரும்
விடை : கொம்பு

6. விரித்தால் தனக்கு அடக்கம் சுருக்கினால் நமக்கு அடக்கம்
விடை : குடை

7. விருந்துக்கு முந்திடுவாள் வீதிதோறும் கிடந்து அழிவாள்
விடை : எச்சில் இலை

8. விழித்துக் கொண்டு இருக்கும் போதே அடித்துக் கொண்டு இருக்கிறான்
விடை : கண் இமை

9. விழுந்தால் படுக்காது எழுந்தால் நிற்காது
விடை : தஞ்சாவூர் பொம்மை

10. வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆள் இல்லை
விடை : செருப்பு

## வகுப்பு - VIII

1. ஊருக்கு நாட்டாண்மைக்காரன் சாப்பிட்ட இலையை எடுக்கமாட்டான்
விடை : நாய்

2. எட்டாக் கொம்பிலே மிட்டாய்ப் பொட்டலம்
விடை : தேன்கூடு

3. எட்டாத தூரத்திலே தொட்டில் கட்டி ஆடுது
விடை : குருவிக்கூடு

4. எதிர் புதிர் போட்ட ஏகாலிப் பயலுக்கு முதுகிலே மூன்று சுழி
விடை : அணில்

5. ஒடுக்காமல் பறப்பது எது மந்திரி? சிமிட்டாமல் விழிக்கும் அது அரசே!
விடை : பட்டாம்பூச்சி

6. ஒற்றைக் கால் நாராயணன் ஓடையிலே மீன் பிடிக்கிறான்
விடை : கொக்கு

7. ஓடியாடிக் கத்தும் உடலைத் தேடிக் குத்தும்
விடை : கொசு

8. கணுக்கால் தண்ணீரில் கரடி நீச்சல் போடுது

விடை : தவளை

9. காட்டில் தொங்கும் பொட்டலம் காவல் நிறைந்த பொட்டலம்

விடை : தேன்கூடு

10. கால் ஆறும் கப்பல்கால் கண் இரண்டும் கீரை விதை

விடை : ஈ

11. கால் இல்லை கை இல்லை கண்கள் உண்டு வால் உண்டு சிறகு உண்டு வலிமையாக

விடை : மீன்

12. காலையில் ஊதும் சங்கு கறி சமைக்க உதவும் சங்கு

விடை : சேவல்

13. காலையிலே கூவும் பட்சி கந்தன் கொடியிலே காணும் பட்சி எது?

விடை : சேவல்

14. குட்டைத் தண்ணியில் எட்டுக் கப்பல்

விடை : தவளை

15. குடியிருக்கக் கோட்டை கட்டும் கோட்டையை உடைத்து வெளியே வரும்

விடை : வண்ணத்துப் பூச்சி

16. கொம்புக் காளை இறங்கி வருது பிடிக்கப் போனால் கொம்பைக் காணோம்

விடை : ஊறும் நத்தை

17. கோழிக் குஞ்சு பொரிப்பது எப்படி? தாழி நெய்யை எடுப்பது எப்படி

விடை : முட்டையிட்டு

18. சாந்து பூசின கோவிலுக்குள் பூந்து புறப்பட வழியில்லை

விடை : முட்டை

19. சிங்கார மண்டபத்திலே சங்கீதக் கச்சேரி அங்கே போனால் அடியும் உதையும் தப்பாது

விடை : தேன்கூடு

20. சுருங்காமல் பறப்பது என்ன மந்திரி? சிமிட்டாமல் விழிக்குதே அதுதான் ராசா!
விடை : தட்டாம் பூச்சி

21. சுறுக்கென்று முள் பொறுக்க முடியாது- அது என்ன?
விடை : தேள்

22. செக்கச் சிவந்த நிறம் தேங்காய் துறுவி அரம்
விடை : சேவல் கொண்டை

23. செடியை உலுக்குது ஒரு குருவி செடியோரம் போகுது ஒரு குருவி
விடை : வெள்ளாடு, செம்மறியாடு, எருமை, பசு

24. தண்ணீர் இல்லாத தடாகத்தில் தாவிப் பாயுது ஒரு கப்பல்
விடை : ஒட்டகம்

25. தண்ணீரில் நீந்தி வரும் தரையில் தாண்டி வரும்
விடை : தவளை

26. தலைமேல் முளைத்திருக்கும் இலையில்லா மரம்
விடை : மான் கொம்பு

27. ஆயிரம் தச்சர் கூடி அமைந்த மண்டபம் ஒருவர் கண் பட்டு உடைந்தது அது என்ன?
விடை : தேன் கூடு

28. டாக்டர் வந்தாரு ஊசி போட்டாரு காசு வாங்காமல் போனாரு அது என்ன?
விடை : கொசு

29. மழையின்றி மாரியின்றி பச்சை ஆவது என்ன? பூவின்றி காயின்றி பழம் பழுப்பது என்ன?
விடை : கிளி

30. மழையோடு வருகிற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு ரத்தம் வராது
விடை : ஈசல்

31. முதுகிலே மூட்டை சுமந்து மூன்று மணிக்கு முழம் போவான்
விடை : நத்தை

32. மூன்று தம்பியும் ஒருமுகம் மூத்த தம்பி ஆற்றிலே
விடை : முதலை, உடும்பு, பல்லி

33. யானைக்கும் குதிரைக்கும் அடங்காத தண்ணீர் தொண்டைமான் குதிரைக்கு தொடையளவு
விடை : தவளை

34. விடுகதை போடுகிற வேலப்பனுக்கு முதுகில் மூன்று நாமம்
விடை : அணில்

35. வரி வரியாய்ச் சேலைகட்டி வந்தாளாம் பொம்பளை வந்தவுடன் கடித்துவிட்டு போனாளாம் பொம்பளை
விடை : தேள்

36. விதையின்றி முளைக்கும் வேரின்றி வளரும்
விடை : கொம்பு

37. வெள்ளை மாளிகைக்கு வாசல் இல்லை வழியும் இல்லை
விடை : கோழி முட்டை

38. வெளியே வெள்ளிக் கட்டி உள்ளே தங்கக் கட்டி
விடை : முட்டை

39. அரையடிப் புல்லில் ஏறுவான் இறங்குவான்
விடை : பேன்

40. அறைகள் அறுநூறு; அத்தனையும் ஒரு அளவு
விடை : தேன்கூடு

41. ஆடு மேயுது: தோல் காயுது
விடை : பாம்பு

42. உச்சாணி வாதிலே மச்சான் குழல் ஊதுகிறான்
விடை : அணில்

43. எட்டாத தூரத்தில் தொட்டில் கட்டி ஆடுது
விடை : குருவிக்கூடு

44. ஒரு குப்பிக்குள்ளே இரண்டு எண்ணெய்
விடை : முட்டை

45. கருத்த பாறைக்கு வெளுத்த வேர்
விடை : யானைத் தந்தம்

46. கல்லுக்கு அடியில் வில்லு

விடை : தேள்

47. காட்டுக்கும் மேட்டுக்கும் ஒரே சங்கிலி

விடை : எறும்பு

48. குட்டியும் போடும் குவலயத்திலும் பறக்கும்

விடை : வௌவால்

49. காளைக்கு கழுத்து மட்டும் தண்ணீர் – அது என்ன?

விடை : தவளை

50. கொளிஞ்சிக் காட்டில் கொட்டாப் புளி

விடை : முயல்

51. சில்லாடை தண்ணியிலே வெள்ளாடு மேயுது

விடை : உள்ளான் குருவி

52. தண்ணீரீலே வெள்ளை–அது என்ன?

விடை : மீன்

53. பட்ட மரத்திலே சிவப்பு அதிலும் பச்சை

விடை : கிளி

54. மண்ணுக்குள்ளே மக்காத கயிறு

விடை : மண்ணுள்ளிப் பாம்பு

55. வெள்ளி ரூபாய் துள்ளிவிழும்

விடை : மீன்

## வகுப்பு - IX

1. ஓங்கி வளர்ந்தான் ஒரு பக்கம் சாய்ந்தான்

விடை : மூங்கில்

2. கண் உண்டு செவி இல்லை கண்டிடும் கேட்டிடும்

விடை : பாம்பு

3. காய் என்று கண்டது உண்டு கனி என்று தின்றது இல்லை

விடை :இலவங்காய்

4. காய் காய்க்காத மரம் பூப் பூக்காத மரம்
விடை : கிளுவமரம்

5. காய் காய்க்கும், பழம் பழுக்காத மரம் எது?
விடை : முருங்கை மரம்

6. கால் இல்லாதவன் கால் உள்ளவனைப் பிடித்தான் அதைப் பார்த்து தலை இல்லாதவன் சிரித்தான்
விடை : பாம்பு-தவளை-நண்டு

7. கிளை உண்டு இலை இல்லை- அது என்ன?
விடை : மான் கொம்பு

8. சட்டையைக் கழற்றியதும் சடக்கென்று உள்ளே விழும்
விடை : வாழைப் பழம்

9. சட சட மாங்காய் சங்கிலி ரோடு விழுந்தால் கறுப்பு, தின்றால் தித்திப்பு விடை : நாவல் பழம்

10. சுத்திச் சூரமுள்ளு நடுப்புற நல்ல வெல்லம்
விடை : பலாப்பழம்

11. செங்கல் அடுக்க செவ்வந்தி பூக்க இரத்தினம் பதிக்க பெட்டி திறக்க
விடை : மாதுளம்பழம்

12. சேவலை எருது பிடிக்கப் போனால் கொக்கி எருது குத்த வருது
விடை : இலந்தை

13. தாடிக்காரன் மீசைக்காரன் கோவிலுக்குப் போனால் வெள்ளைக்காரன்
விடை : தேங்காய்

14. ஆழக் குழி தோண்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?
விடை : தென்னை மரம்

15. இலை இல்லை பூ இல்லை, கொடி உண்டு அது என்ன?
விடை : கைரேகை

16. நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி அது என்ன?
விடை : தலைமுடி

17. அதி வேகக்குதிரை, ஆடியபடி செல்லும் குதிரை போட்ட கோட்டைத் தாண்டாமல் ஓடும் அது என்ன?

விடை : ரயில் பெட்டி

18. விரித்தால் தனக்கு அடக்கம் சுருக்கினால் நமக்கு அடக்கம்

விடை : மூங்கில்

19. வேலியைத் தாண்டி வெள்ளைக் குதிரை போய்விட்டது

விடை : பருத்தி

20. அடிப்பார் பிடிக்க மாட்டார் அது- என்ன?

விடை : தேள்

21. அடி மலர்ந்து நுனி மலராத பூ

விடை : வாழைப்பூ

22. அத்தையில்லா அத்தை என்ன அத்தை?

விடை : சித்தரத்தை

23. அந்தரத்தில் தொங்குவது செம்பும் தண்ணீரும்

விடை : இளநீர்

24. அந்தரான காட்டிலே பச்சைப் பாம்பு தொங்குது

விடை : புடலங்காய்

25. அரக்கன் தலை அந்தரத்திலே தெரியுது.

விடை : திருஷ்டிப் பூசணி

26. அரிசிபோல் பூப் பூக்கும் அம்மாடி என்ற காய் காய்க்கும்

விடை : மிளகாய்

27. காய்க்கும் பூப் பூக்கும் இலை இல்லை

விடை : சப்பாத்திக் கள்ளி

28. குடுக்கை நிறைய வயிரமணி

விடை : மாதுளம்பழம்

29. சாம்பல் ஆண்டி ஒமம் பண்ணுகிறான்

விடை : பூசணிக்காய்

30. சுற்றிலும் கல்கட்டு நடுவில் வெள்ளிக் கட்டு

விடை : தேங்காய்

31. செம்பு நிறைய சிவப்பு முத்து

விடை : மாதுளம்பழம்

32. செம்மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன்

விடை : சீனிக்கிழங்கு

33. சேற்றுக்குள்ளே செங்கோழி முட்டை

விடை : வெங்காயம்

## பொது விடுகதைகள்

1. மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையுது

விடை : சாம்பிராணி

2. மணி அடித்தால் மலைப்பாம்பு நகரும்

விடை : புகைவண்டி (ரயில்)

3. மதில் இல்லாத கோட்டை மக்கள் இல்லாத நாடு

விடை : மனம்

4. மதுரைச் சமுக்காளம் மடிக்க முடியவில்லை, புளியங்கொட்டை கடிக்க முடியவில்லை

விடை : வானம் – ரூபாய்

5. மாமரத்திலே அடித்த மாங்காய் மாத்தூரில் போய் விழுகிறது

விடை : மரத்தின் அடியில் கிடக்கிறது

6. மாரி இல்லாமல் ஆமை கெட்டது ஆமை இல்லாமல் சீமை கெட்டது

விடை : வேளாண்மை, வேளாண்மை

7. மாவில் பழுத்த பழம் மக்கள் விரும்பும் பழம்

விடை : அப்பளம்

8. முக்குறுணிச் சாலு முப்பது முழ வாலு கட்டினால் பேசும் கட்டாவிட்டால் பேசாது

விடை : செக்கு

9. முகத்தின் மீது முழு நீலம் பூத்தது உண்டு, கண்டது உண்டு, கேட்டது இல்லை

விடை : கண்

10. மூன்று காசுக் குதிரைக்கு பின்னால் கடிவாளம்

விடை : ஊசி

11. மூன்று கால் யானை தின்பதெல்லாம் கரும்பு

விடை : அடுப்பு

12. மேல் பலகை கீழ் பலகை நடுவில் நெளி பாம்பு
விடை : நாக்கு

13. மொட்டைத் தட்டிலே எட்டுப்பேர் பயணம்
விடை : படகு

14. மொட்டைப் பனையிலிருந்து பூச் சொரிகிறது
விடை : துருவு பலகை

15. வரிக் குதிரை ஓடியது வாய்ப்பாட்டு பாடியது
விடை : இசைத்தட்டு

16. வாய் இல்லாத பறவை ஊர் ஊராய் பறக்கிறது
விடை : ஆகாய விமானம் (வான ஊர்தி)

17. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ
விடை : சிரிப்பு

18. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை
விடை : அகப்பை

19. ஒரு கிணற்றில் ஒரே தவளை
விடை : நாக்கு

## வகுப்பு - X

1. எங்கள் வீட்டு கொல்லையிலே மொட்டையாண்டி எட்டிஎட்டி பார்க்கிறான்
விடை : நிலா

2. எரிப்பவன் ஆனால் அவன் எரியாதவன்
விடை : சூரியன்

3. என் குதிரை கறுப்புக் குதிரை குளிப்பாட்டினால் வெள்ளைக் குதிரை
விடை : உளுந்து

4. என் தகப்பன் பச்சை என் மகள் சிவப்பு என் மகன் கறுப்பு
விடை : தர்பூசணிப்பழம்

5. என் தாயோ கடல், தந்தையோ சூரியன் என்னை விரும்பாத வீடே இல்லை
விடை : உப்பு

6. என்னைச் சுற்றி ஒரு கோட்டை உண்டு நான் கிட்டப் போனால் அது எட்டப் போகும்
விடை : வானம்

7. ஏழை படுக்கும் பஞ்சணையை எடுத்துச் சுருட்ட ஆள் இல்லை
விடை : பூமி

8. ஏற முடியாத மரத்திலே எண்ணாயிரம் காய்கள்
விடை : கேழ்வரகு

9. ஒரு அகப்பை மாவாலே ஊரெல்லாம் கலியாணம்
விடை : நிலா

10. ஒரு கரண்டி மாவு ஊரெல்லாம் தோசை
விடை : நிலா

11. ஒரு முழக் குழியிலே கால்படி மல்லிகைப் பூ
விடை : நெருப்பு

12. ஓ ஓ உயர்ந்த மரமே உருவினால் பிடி காணாது
விடை : புகை

13. ஓடுமாம் குதிரை ஒளியுமாம் குதிரை தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம் குதிரை
விடை : நெருப்பு

14. ஓடும் ஓடும் சங்கிலி, உருண்டோடும் சங்கிலி பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி
விடை : தண்ணீர்

15. ஓடுவான் நிற்க மாட்டான் ஒளிந்துகொள்வான் வெளிவருவான்
விடை : நிலா

16. ஓயாது இரையும் இயந்திரம் அல்ல உருண்டோடி வரும் பந்தும் அல்ல விடை : கடல்

17. கட்டாமல் கறக்காமல் காடேறி மேயாமல் நின்ற இடத்திலே ஒரு படி பால் விடை : இளநீர்

18. கடலோரம் பச்சை மரம் கன்னி கழியா வன்னி மரம்
விடை : தாழம்பூ

19. கண் காண உருவம் உண்டு கட்டிப் பிடிக்க உடல் இல்லை
விடை : புகை

20. கண் சிமிட்டி, மணி அடித்து கண்ணீர் வடிப்பார்கள்
விடை : மின்னல், இடி, மழை

21. கண்டு காய் காய்க்கும் காணாமல் பூப் பூக்கும்
விடை : அத்தி மரம்

22. கண்டு பூப் பூக்கும் காணாமல் காய் காய்க்கும்
விடை : வேர்க்கடலை

23. கத்திபோல் இலை இருக்கும் கவரிமான்போல் பூப் பூக்கும்
விடை : கரும்பு

24. காண உருவம் உண்டு கட்டிப்பிடிக்க உடல் இல்லை
விடை : புகை

25. காட்டிலே சிரித்து நிற்பாள் கன்னியும் அல்ல கை பட்டவுடன் துவண்டு விடுவாள் பட்டும் அல்ல
விடை : தொட்டால் சிணுங்கிச் செடி

26. காயும் காய்க்கும் பூவும் பூக்கும் காசுக்கொரு இலை இல்லை
விடை : கள்ளி

27. கால் இல்லாத மான் வேர் இல்லாத புல்லைத் தின்னும்
விடை : மீன், பாசி

28. கால்வாயில் தண்ணீர் போக கன்னிக் கோழி முட்டையிட
விடை : கத்திரிக்காய்

29. காலால் தண்ணீர் குடிக்கும் கம்பங் கோழி கழுத்தால் முட்டையிடும் கம்பங் கோழி
விடை : கத்திரிச் செடி

30. கால் இல்லாத பந்தலைக் காணக் காண விநோதம்
விடை : வானம்

31. காலையில் வந்த விருந்தாளி மாலையில் மறைந்து விட்டார்
விடை : சூரியன்

32. கிண்ணி போல பூப்பூக்கும் கிள்ளி முடிக்க உதவாது
விடை : ஊமத்தம்பூ

33. கிணத்து நிறைய தண்ணி இருக்கு குருவி குடிக்க தண்ணி இல்லை விடை : இளநீர்

34. கிணற்றிலே அம்புகள் போடுவார்கள் எடுப்பார் இல்லை
விடை : மழை நீர்

35. கிளிகள் மூன்று நிறம் மூன்றும் கூட்டுக்குள்ளே போனால் ஒரே நிறம்
விடை : வெற்றிலை-பாக்கு-சுண்ணாம்பு

36. கிளியாள் கிளியாளே பிள்ளை பெற்றாள் தாங்கமாட்டாமல் சாய்ந்து போனாளே

விடை : நெல்

37. குடிக்க தண்ணீர் உண்டு குளிக்கத் தண்ணீர் இல்லை

விடை : தேங்காய்

38. கிண்ணம் போல் பூப் பூக்கும் பானை போல் காய் காய்க்கும்

விடை : பூசணிக்காய்

39. குள்ளமான கோழிக்கு குடலுக்குள் சதங்கை

விடை : வேர்க்கடலை

40. கோணல் எத்தனை இருந்தாலும் குணமும் குறியும் மாறாது

விடை : கரும்பு

41. கோயிலக்கு போனானாம் எங்க தம்பி தீர்த்தம் விட்டானாம் தங்கத் தம்பி

விடை : தேங்காய்

42. சினந்து சிவந்தவன் சிதைந்து போவான்

விடை : தீ

43. தங்க மாம்பழத்தை திங்க முடியவில்லை

விடை : நெருப்பு

44. தட்டுத் தட்டாய் மல்லாந்திருக்கும் – ஒரு சொட்டுத் தண்ணீர்கூட ஒட்டாது

விடை : தாமரை இலை

45. தலையில்லை இடையில்லை கையுண்டு விரலில்லை

விடை : வயல்

46. தாய் தரையில் கிடக்கிறாள் மகள் மகாராசா முடியில் இருக்கிறாள்

விடை : முத்துச்சிப்பி, முத்து

47. வட்ட வட்டக்குருவி, வாலில்லாத குருவி, ஊரைச் சுத்தும் குருவி அது என்ன?

விடை : சூரியன்

48. மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்?

விடை : மஞ்சள்

49. இரவு வீட்டிற்கு வருவான் இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டிருப்பான் அது என்ன?

விடை : நிலா

50. வந்தால் கொண்டாட்டம் வராவிட்டால் திண்டாட்டம் அது என்ன?

விடை : மழை

51. பூ கொட்ட கொட்ட ஒன்றையும் தனியே பொறுக்க முடியவில்லை அது என்ன?
விடை : மழை
52. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான் அவன் யார்?
விடை : கடல் அலை
53. மழையில் பிறந்து வெயிலில் காயுது அது என்ன?
விடை : காளான்
54. நீண்ட உடம்புக்காரன் நெடுந்தூரப் பயணக்காரன் அது என்ன?
விடை : ரயில்
55. வெளுத்த ஆளுக்கு கறுத்த தலைப்பாகை
விடை : தீக்குச்சி
56. வெறுங்காற்றில் பருத்தவன் வரும் காற்றில் பறந்திடுவான்
விடை : பலூன்
57. வேகாத வெய்யிலிலே வெண்ணெய் வைத்தேன் உருகவில்லை, ஓட்டவில்லை, உலர்ந்துவிட்டது
விடை : சுண்ணாம்பு
58. அள்ளலாம் கிள்ள முடியாது
விடை : தண்ணீர்
59. அறுக்க உதவாத கருக்க அரிவாள்
விடை : பிறைச் சந்திரன்
60. அள்ளவும் முடியாது கிள்ளவும் முடியாது
விடை : காற்று
61. ஆகாசத்துக்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி
விடை : மழை
62. ஆகாயத்தில் அரிவாள்கள் – அவை என்ன?
விடை : புளியங்காய்
63. ஆகாரத்திலேயும் ஆகாரம் என்ன ஆகாரம்?
விடை : நீராகாரம்
64. ஆயிரம்பேர் கூடிவரும் அழகர் மலை
விடை : தேர்
65. ஈக்கி ஈக்கி நெடும் நீக்கி
விடை : மழை

66. உடல் இல்லாதவன் ஊரெல்லாம் திரிவான்
விடை : புகை

67. உரசினால் போதும் அழிந்துவிடும்
விடை : தீக்குச்சி

68. உரசினால் போதும் ஒட்டிக்கொள்ளும்
விடை : நாயுருவி

69. உரிக்க உரிக்க தோல்
விடை : வெங்காயம்

70. உரிச்ச குருவி சந்தைக்குப் போகுது
விடை : தேங்காய்

71. உரித்த கோழி ஊரெல்லாம் சுற்றி வருது
விடை : பனைநார்

72. உரித்துவிட்ட குருவி ஊருக்கு போகிறது
விடை : புளி

73. உலகத்துக்கெல்லாம் ஒரே துப்பட்டி
விடை : வானம்

74. ஊசிபோல மரம் காசுபோல இலை - அது என்ன?
விடை : ஆலக்கீரை

75. ஊருக்கெல்லாம் ஒரே கல்
விடை : உப்புக்கல்

76. ஊளை மூக்கன் சந்தைக்குப் போறான்
விடை : நுங்கு

77. என்னைச் சுற்றித் தீ
விடை : சூரியன்

78. ஒரு சிமிழியில் மூன்று பெண்கள்
விடை : விடை : ஆமணக்கு

79. ஒரு அகப்பை மாவாலே ஊரெல்லாம் கலியாணம்
விடை : நிலா

80. சாண் குழியிலே மானப் பழம்
விடை : நெருப்பு

81. சிறிய சிட்டானுக்கு பெரிய உருமாலை
விடை : தீக்குச்சி

82. தச்சர் செதுக்காத மரம் என்ன மரம்

விடை : வாழை

83. தாய் குப்பையிலே மகள் சந்தையிலே

விடை : வைக்கோல், நெல்

84. திரி இல்லாத விளக்கு – எது?

விடை : சூரியன்

85. தீனிக்கு குறைவில்லை; தீர்த்தம் உண்டால் மரணம்

விடை : தீ

86. தொடையிலே தொடை என்ன தொடை?

விடை : ஆடா தொடை

87. தொட்டால் சுருங்கிக்கு தொண்ணூறு கால்

விடை : மரவட்டை

88. நட்டாற்றில் முட்டை மிதக்காது

விடை : பரிசில்

89. நடுக்காட்டில் வெள்ளைவேட்டி விரித்துக்கிடக்குது

விடை : குளம்

90. நரைத்த கிழவி ஊரெல்லாம் ஆடுகிறாள்

விடை : புகை

91. நரைத்த கிழவி குதித்து ஒடுகிறாள்

விடை : சாம்பல்

92. நாட்டார் மகளை ஓட்டால் மூடியிருக்கிறது

விடை : புளியம்பழம்

93. நீல நிலத்தில் நித்தில முளைகள்

விடை : விண்மீன்கள்

94. பகலில் தூங்கி இரவில் விழிப்பவன்

விடை : விண்மீன்

95. பச்சைப் பாம்பு கல்லைத் தூக்குது

விடை : புடலங்காய்

96. பட்டமரத்தைக் கண்டால் படைபடையாய் வரும்

விடை : மேகம்

97. பட்டுப்போவானுக்கு மேல் முழுவதும் பல்

விடை : சோளம்

98. பட்டுப்பை நிறையப் பவுன் காசு

விடை : மிளகாய் விதை

99. பட்டையிலே பட்டை என்ன பட்டை?

விடை : வாழைப் பட்டை

100. பந்தலைச் சுற்றி பாம்பு தொங்குது

விடை : புடலங்காய்

101. பலபேருக்கு ஒரு குடுமி

விடை : உள்ளிப் பூண்டு

102. பாரினிலே காய்ந்துப் பழுக்காத மரம்

விடை : இலவ மரம்

103. பழமாகாப் பழம் என்ன பழம்?

விடை : விபூதிப் பழம்

104. பிடிக்கவே முடியாத கள்ளன்-அவன் யார்?

விடை : புகை

105. பிள்ளையிலே ஏழு பிள்ளை- என்ன?

விடை : தென்னம்பிள்ளை, அணில்பிள்ளை, மாப்பிள்ளை, கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை, பிள்ளைப் பூச்சி, கறிவேப்பிலை

106. பூவாகாப்பூ என்ன பூ?

விடை : குங்குமப் பூ

107. பெட்டியைத் திறந்தால் பெருங்காயம் மணக்கும்

விடை : பலாப்பழம்

108. பெருங்காயம் தலையில் சிங்காரம்

விடை : பம்பரம்

109. பொடிப் பையனுக்கு பொட்டுருமால்

விடை : தீக்குச்சி

110. மடியிலை பறித்தால் பிடியிலை இல்லை

விடை : புகையிலை

111. மண்ணுக்குள்ளே பொன்னம்மாள்

விடை : மஞ்சள்

112. மண்ணுக்குள்ளே வெள்ளை மீன்

விடை : முள்ளங்கி

113. மூன்று காசில் ஒரு வீடு நிறையும்

விடை : விளக்கு

114. மூன்று போலீஸ்காரனுக்கு ஒரே தொப்பி

விடை : பனம்பழம்

115. மொட்டை மரத்தில் முன்னூறு காக்காய்

விடை : பரிசில்

116. வகை புகை தகை- அவை என்ன?

விடை : வாழைக்காய் புடலங்காய் தக்காளிக்காய்

117. வாடாதபயிர் என்ன பயிர்?

விடை : அறுகு

118. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கம்பி

விடை : மழை

119. வீட்டிலிருக்கிற அண்டாவுக்கு அடைப்பில்லை

விடை : கிணறு

120. வெள்ளிக்கட்டி மண்ணுக்குள்ளே

விடை : முள்ளங்கி

121. வெள்ளைக் குதிரை வேலியைத் தாண்டுது

விடை : சாம்பல்

## வகுப்பு - XI

1. தடுக்குப் போட்டேன் எடுக்க முடியவில்லை

விடை : கோலம்

2. அக்காள் வீட்டில் விளக்கு ஏற்றினால் தங்கை வீட்டில் தானே எரியும்.

விடை : கொடியடுப்பு

3. தங்கை தீட்டிய ஓவியம் தரையில் தவழுது

விடை : கோலம்

4. குரலொசை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே அது என்ன?

விடை : தொலைபேசி

5. வெள்ளை வேர் ஓடி கருந்தண்ணீர் பாய்ந்து செம்பூ பூக்கும்

விடை :தீபம்

6. ஒரு நெல் குத்தி வீடெல்லாம் உமியாச்சு
விடை : தீபம்

7. சின்ன வெங்காரம் வீடெல்லாம் சிங்காரம்
விடை : தீபம்

8. வருத்தம் இல்லாத சுமை என்ன சுமை?
விடை : குழந்தை சுமை

9. வாங்காத சுமை என்ன சுமை?
விடை : கர்ப்பம்

10. வாசலில் பூத்திருக்கும் வாழ்வரசி
விடை : கோலம்

## பொது விடுகதைகள்

1. வீடெல்லாம் நக்கிவிட்டு ஒடுங்கிக் கிடக்குது மூலையிலே
விடை : விளக்குமாறு

2. வெட்கம் கெட்ட புளிய மரம் வெட்ட வெட்ட வளருது
விடை : தலைமுடி

3. வெட்ட வெட்ட தொலையாத வீரமணிக் கட்டை
விடை : நிழல்

4. வெய்யிலிலே மலரும் காற்றிலே உலரும்
விடை : வியர்வை

5. வெள்ளிக் குண்டு வெண்கலக் குண்டு தண்ணீரில் போட்டால் மிதக்கும் குண்டு
விடை : வெண்ணெய்

6. வெள்ளைக் குதிரையும் கறுப்பு குதிரையும் மாறி மாறி ஓடும், பிடிக்க முடியவில்லை
விடை : பகலும் இரவும்

7. வெள்ளைக் கொல்லை கறுப்பு விதை கை விதைத்துவரும் வாய் கொறித்து வரும்
விடை : காகிதம், மை, வாசித்தல்

8. வெள்ளைச் சட்டைக்காரன் வேடிக்கைக்கு கெட்டிக்காரன்
விடை : கண்ணாடி

9. வெள்ளைத் தண்ணீரிலே வேசி ஆடுகிறாள்
விடை : மத்து

10. வெள்ளைத்துணி போர்த்திருப்பாள் சின்னப் பூவம்மாள்
விடை : கொழுக்கட்டை

11. வெள்ளைப் பிள்ளையார் கோவிலில் சள் சள் என்று குலைக்குது
விடை : மத்து

12. வெள்ளைப் பிள்ளையார் கோவிலில் விளக்கேற்ற முடியாது
கறுப்பு பிள்ளையார் கோவிலில் கால் வைக்க முடியாது
விடை : கண்

13. வெறுங்காற்றில் பருத்தவன் வரும் காற்றில் பறந்திடுவான்
விடை : பலூன்

14. வேகாத வெய்யிலிலே வெண்ணெய் வைத்தேன் உருகவில்லை,
ஓட்டவில்லை, உலர்ந்துவிட்டது
விடை : சுண்ணாம்பு

15. வேட்டையாடாத மான் ஆனால் வேடர்கள் நிறைந்த மான்
விடை : அந்தமான்

16. வேலைக்காரி கெட்டிக்காரி வெளியே தலைகாட்டமாட்டாள்
சொந்தக்காரி
விடை : நாக்கு

17. அடர்ந்த காட்டின் நடுவே ஒரு பாதை
விடை : வகிடு

18. அண்டாவில் அண்டா என்ன அண்டா?
விடை : மச்சாண்டா

19. அண்ணனும் தம்பியும் விர்னு போகிறார்கள்
விடை : வடக்கயிறும், வால்கயிறும்

20. அம்மைக்கு அதிசாரம் பிள்ளைக்கு தலை சுற்றல்
விடை : இயந்திரம்

21. ஆகாரத்திலேயும் ஆகாரம் என்ன ஆகாரம்?
விடை : நீராகாரம்

22. ஆயிரம்பேர் கூடிவரும் அழகர் மலை
விடை : தேர்

23. ஆருமில்லா இடத்தில் அங்கம்மா குடைபிடிக்கிறாள்
விடை : காளான்

24. ஆலிலை உதிர்வதேன் இராவழி நடப்பதேன்?
விடை : பறிப்பார் இல்லாமல்

25. ஆள் ஏறும் குதிரைக்கு அங்கமெல்லாம் கண்ணு
விடை : கட்டில்

26. ஆனை போகுது தாரை தெரியவில்லை
விடை : கரிசல்

27. ஆனையில்லா ஆனை என்ன ஆனை?
விடை : முந்தானை

28. இரண்டு கிணறுக்கு ஒரு பாலம்
விடை : மூக்கு

29. இரண்டு வீட்டுக்கு ஒரே விட்டம்
விடை : மூக்கு

30. இருட்டு அறையில் முத்து வரிசை
விடை : பற்கள்

31. இருட்டு அறையில் முரட்டுத் திருடன்
விடை : குதிர்

32. இருட்டு வீட்டில் முரட்டுச் சிப்பாய்
விடை : பூட்டு

33. இறந்த மாட்டை அலற அலற அடிப்பவன் – யார்?
விடை : மத்தளம்

34. உக்காந்து பேசறான்; நின்னால் பேசமாட்டான்
விடை : நாக்கு

35. உயர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ எது?
விடை : குடை

36. உயரப் பறக்குது ஊர்க்குருவி வான ஊர்தி
விடை : (ஆகாய விமானம்)

37. உயிர் இல்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்குது
விடை : கடிதம்

38. உரசினால் போதும் ஒட்டிக்கொள்ளும்
விடை : நாயுருவி

39. உரித்த கோழி ஊரெல்லாம் சுற்றி வருது
விடை : பனைநார்

40. உருவம் இல்லாத கல் ஐந்து அது என்ன?
விடை : கருக்கல், சருக்கல், விக்கல், வாங்கல், கொடுக்கல்

41. உன்னைப் பிடித்தவன் பெரியவன்
விடை : நிழல்

42. ஊருக்கெல்லாம் ஒரே கல்
விடை : உப்புக்கல்

43. எத்தனைபேர் ஏறினாலும் சலிக்காத குதிரை
விடை : திண்ணை

44. எந்நேரமும் கொட்டும் சத்தம் கேட்காது
விடை : கண் இமை

45. எழுந்திரு குண்டா ஊருக்கு போகலாம்
விடை : கட்டுச் சோற்று மூட்டை

46. என்னைப் பார்த்தால் உன்னை காட்டுவேன்
விடை : கண்ணாடி

47. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு
விடை : விரல்கள்

48. ஐந்து ஊருக்கும் ஒரே மந்தை
விடை : உள்ளங்கை

49. ஒட்டுத் திண்ணையிலே பட்டுக் காயுது
விடை : மூக்குத்தி

50. ஒரு கட்டுத்துறையில் முப்பத்திரண்டு வெள்ளைப் பசுக்கள்
விடை : பற்கள்

51. ஒரு கிணற்றில் ஒரே தவளை
விடை : நாக்கு

52. ஒரு சாண் கட்டைக்கு அரைச் சாண் மூடி
விடை : பேனா

53. ஒரு சாண் குட்டையிலே ஒரு முழு வால்
விடை : நாக்கு

54. ஒரு சிமிழியில் மூன்று பெண்கள்
விடை : ஆமணக்கு

55. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை
விடை : அடுப்பு

56. ஒரு மரத்திலே ஐந்து பூக்கள்
விடை : பால், தயிர், வெண்ணெய், மோர், நெய்

57. ஒரு முழு மூங்கிலில் ஒய்யாரக் கீதம் – அது எது?
விடை : புல்லாங்குழல்

58. ஒரே குருவிக்கு நான்கு இறக்கை ஒரே கால்
விடை : ஆரைக் கீரை

59. ஓடுகின்ற குதிரைக்கு விலாவெல்லாம் ஓட்டை
விடை : புகை வண்டி (ரயில்)

60. ஓடும் ஆனால் இருந்த இடத்தை விட்டு அசையாது
விடை : கடிகாரம்

61. ஓடும் குதிரைக்கு வால் தேய்கிறது
விடை : ஊசி நூல்

62. ஓடுமாம் சாடுமாம் ஒற்றைக்காலில் நிற்குமாம்
விடை : கதவு

63. கடக்கா முடக்கான் சந்தைக்குப் போறான்
விடை : வண்டி

64. கடித்தால் கடிபடாது பிடித்தால் பிடிபடாது
விடை : தண்ணீர்

65. கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும்
விடை : செருப்பு

## வகுப்பு – XII

1. உடலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்?
விடை : தபால் தலை

2. நுனி சிவப்பு அடி பச்சை நடு வெள்ளை அது நமது பிள்ளை
விடை : இந்திய தேசியக் கொடி

## பொது விடுகதைகள்

1. கல்லுக்கு கீழே கலச் சாம்பல்
விடை : கேழ்வரகு

2. கலம் பிடிக்கும் சாலு பதினாறு முழம் வாலு
விடை : செக்கு

3. களம் கிட்ட காணி எட்ட
விடை : உள்ளங்கை

4. கறுத்த காட்டில் துளி ரத்தம்
விடை : குன்றிமுத்து

5. காட்டிலே கந்தன் பந்தடிக்கிறான்

விடை : பஞ்சு

6. காம்பு இல்லாத காய் என்ன காய்?

விடை : பொரிவிளங்காய்

7. கிணற்றைச் சுற்றி வெள்ளைக்கல்

விடை : பல்

8. குண்டு சட்டியில் கெண்டை மீன்

விடை : நாக்கு

9. குண்டு மனிதனுக்கு இரண்டு முண்டாசு

விடை : பட்டாணிக் கடலை

10. குத்துக் குருவிக்கு முழம் வால்

விடை : அகப்பை

11. குதிரை ஓட ஓட வால் குறைகிறது

விடை : ஊசியும் நூலும்

12. கூடவே வரும் உதவி செய்யாது அது எது?

விடை : நிழல்

13. கையைப் பிடித்தார் காசு கேட்டார்

விடை : மருத்துவர்

14. சாடி மேலே குரங்கு

விடை : முந்திரிக் கொட்டை

15. சாண் குழியிலே மானப் பழம்

விடை : நெருப்பு

16. சாவடிக்குள்ளே சப்பட்டைக் கல்

விடை : நாக்கு

17. சிவப்புச் சட்டிக்கு கறுப்பு மூடி

விடை : குன்றி மணி

18. சின்னக் குதிரைக்கு நூறு கடிவாளம்

விடை : தறி

19. சின்னச் சாத்தான் வயிறு பெருத்துச் செத்தான்

விடை : பருத்திக் கொட்டை

20. சுட்டவன் சந்தைக்குப் போறான்

விடை : சட்டி

21. சுட்டுவிட்டுக் குருவி கப்பலேறுகிறது
விடை : வடை

22. தங்கை தலையிலே பாம்பு
விடை : பின்னல்

23. தச்சர் கொத்தர் செய்யாத தேர் எது?
விடை : புற்று

24. தடத்திலே போகிறவன் தடிக்கம்பை வீசினான்
விடை : சுருட்டு

25. தண்டு இல்லாத வட்டவட்ட இலை
விடை : அப்பளம்

26. தந்தைக்கு முன்னே தரணியில் நிற்பான்
விடை : பிள்ளையார்

27. தரக்கான் புரக்கான் சந்தைக்குப் போகிறான்
விடை : செருப்பு

28. தாய் குப்பையிலே மகள் சந்தையிலே
விடை : வைக்கோல், நெல்

29. தாய் பரட்டைச்சி மகள் உருட்டைச்சி
விடை : அம்மி, குழவி

30. தாய் தெருவிலே மகள் கொலுவிலே
விடை : வைக்கோல், நெல்

31. தானிருந்தால் பிறரை இருக்கவிடான்
விடை : ஒட்டை (துவாரம்)

32. துச்சனிச் சித்தன் கட்டையைப் பிளந்தான்
விடை : முள் இடுக்கி

33. தொட்டால் சுருங்கிக்கு தொண்ணூறு கால்
விடை : மரவட்டை

34. நட்டாற்றில் முட்டை மிதக்காது
விடை : பரிசில்

35. நடக்க முடியாது ஆனால் நகராமல் இருக்காது
விடை : கடிகாரம்

36. நாற்கால் காரி நடவாள் படுப்பாள்
விடை : கட்டில்

37. நித்தம் கொட்டும் சத்தம் இல்லை
விடை : இமை
38. நெட்டி இல்லாத வட்ட இலை
விடை : அப்பளம்
39. பட்டணத்து வேப்பமரம் வெட்டவெட்ட தளிர்க்கும்
விடை : மயிர்
40. பட்ட மரத்திலே பம்பரம் ஆடுது கமலை இறைக்கும்
விடை : உருளை
41. படியிலே படி என்ன படி
விடை : வாசற்படி
42. பத்து மாட்டுக்கு ஒரு தட்டு
விடை : மத்துக்கோல்
43. பறவையல்ல பறக்கிறது
விடை : வான ஊர்தி
44. பறிக்கப்பறிக்க பெரிதாகிறது
விடை : குழி
45. பாலாற்றில் கறுப்பு மீன் மேயுது
விடை : கண் – கருவிழி
46. பொடிப் பையனுக்கு பொட்டுருமால்
விடை : தீக்குச்சி
47. போகும்போது கிழவி வரும்போது குமரி தோல்
விடை : பறி (தண்ணீர் பறி)
48. மளிகைக் கடையில் இருக்கும் ராணி என்ன ராணி?
விடை : சாம்பிராணி
49. முகத்தைக் காட்டுவான் முதுகைக் காட்ட மாட்டான்
விடை : கண்ணாடி
50. மூன்று காசில் ஒரு வீடு நிறையும்
விடை : விளக்கு
51. மொட்டை மரத்தில் முன்னூறு காக்கா
விடை : பரிசில்
52. வயிற்றில் விரல், தலையில் கல்
விடை : மோதிரம்

53. வருத்தம் இல்லாத சுமை என்ன சுமை?
விடை : குழந்தை சுமை
54. வளைக்க முடியும் ஒடிக்க முடியாது
விடை : தலைமுடி
55. வாடாதபயிற் என்ன பயிற்?
விடை : அறுகு
56. வீட்டைச் சுற்றி வேலி
விடை : இமை
57. வீடு நிறைய ஊற்றுப்பட்டை
விடை : ஓடு
58. வெட்டவெட்ட தொலையாத வீரமணிக்கட்டை
விடை : நிழல்
59. வெள்ளைக்காரன் பூக்க வெகு பேர் காத்திருக்கிறார்கள்
விடை : சோறு
60. வெள்ளைக் குதிரையும் கறுப்பு குதிரையும் மாறி மாறி ஓடும், பிடிக்க முடியவில்லை
விடை : பகலும் இரவும்
61. வெள்ளைக் கொல்லை கறுப்பு விதை கை விதைத்துவரும் வாய் கொறித்து வரும்
விடை : காகிதம், மை, வாசித்தல்
62. வெள்ளைச் சட்டைக்காரன் வேடிக்கைக்கு கெட்டிக்காரன்
விடை : கண்ணாடி
63. வெள்ளைத்துணி போர்த்திருப்பாள் சின்னப் பூவம்மாள்
விடை : கொழுக்கட்டை
64. வெள்ளைப் பிள்ளையார் கோவிலுக்கு பூட்டும் இல்லை தொரப்பும் இல்லை
விடை : முட்டை
65. வெள்ளைப் பிள்ளையார் கோவிலில் சள் சள் என்று குலைக்குது
விடை : மத்து
66. கறுப்பு பிள்ளையார் கோவிலில் கால் வைக்க முடியாது
விடை : கண்
67. வெறுங்காற்றில் பருத்தவன் வரும் காற்றில் பறந்திடுவான்
விடை : பலூன்

68. வேகாத வெய்யிலிலே வெண்ணெய் வைத்தேன் உருகவில்லை ஓட்டவில்லை உலர்ந்துவிட்டது

விடை : சுண்ணாம்பு

69. வேட்டையாடாத மான் – ஆனால் வேடர்கள் நிறைந்த மான்

விடை : அந்தமான்

70. வேலைக்காரி கெட்டிக்காரி வெளியே தலைகாட்டமாட்டாள் சொந்தக்காரி

விடை : நாக்கு

71. வெள்ளைக்காரன் தொப்பி வெளுத்திருக்குமாம் அதிலே ஒரு செடி தளிர்த்திருக்குமாம்

விடை : முள்ளங்கி

## குறிப்புகள்

## IMCTF ORGANISING COMMITTEE

Convenor

**Smt. Sheela Rajendra,**
Deputy Dean, Director & Correspondent, PSBB Schools.,

Co-Convenors

**Sri. M.N.Venkatesan,**
Joint Secretary,
Vivekananda Educational Society

**Sri. R.J.Bhuvanesh,**
CEO, Kaligi Ranganathan
Group of Schools

**Sri. Rajendran,**
CEO, DAV School,
Adambakkam

Secretary

**Smt. Mohini Chordia**
AM Jain Group of Schools

Members

**Sri. Mukesh Mehta**
AB Parekh
Senior Secondary School

**Brother Vijayan,**
Amrita Vidyalayam

**Sri. Vikas Arya**
Vice President
Arya Samaj

**Sri. Sankar Ramakrishnan**
Sankara Group of Schools

**Sri. Atul Nangia**
Punjab Association Group of Schools

## IMCTF Co-ordinators

**Sri. Thyagaragan**
Member, Core Team
Mobile : 7299069730

**Sri. Swamy**
Member, Core Team
Mobile : 7299069731

**Sri. Venkat**
Member, Core Team
Mobile : 7299069732

## IMCTF Pledge

*I revere **"Trees"** as symbol of **Forests***

*I revere **"Snakes"** as symbol of **Wild Life***

*I revere **"Cows"** as symbol of all **Living Beings***

*I revere **"Ganga"** as symbol of **Nature***

*I revere **"Mother Earth"** as Symbol of **Environment***

*I revere my **"Parents"** as symbol of **Human Values***

*I revere my **"Teachers"** as symbol of **Learning***

*I revere **"Women"** as symbol of **Motherhood***

*I revere **"War Heroes"** as symbol of **Bharat***

# THE PLEDGE

I revere **"Trees"** as symbol of **Forests**
I revere **"Snakes"** as symbol of **Wild Life**
I revere **"Cows"** as symbol of **All Living Beings**
I revere **"Ganga"** as symbol of **Nature**
I revere **"Mother Earth"** as Symbol of **Environment**
I revere my **"Parents"** as symbol of **Human Values**
I revere my **"Teachers"** as symbol of **Learning**
I revere **"Women"** as symbol of **Motherhood**
I revere **"War Heroes"** as symbol of **Bharath**

**Initiative for Moral and Cultural Training Foundation [IMCTF]**
Head Office: 4th Floor, Ganesh Towers, 152, Luz Church Road,Mylapore, Chennai - 600 004.
Admin. Office : 2nd Floor, "Gargi", New No: 6 (Old 20), Balaiah Avenue, Luz, Mylapore, Chennai - 600 004.
E-Mail: imcthq@gmail.com Website : www.imct.org.in